# தமிழக வரலாறு கி.பி. 1336 முதல் கி.பி 1800 வரை

**அலகு - I**

விஜயநகரப் பேரரசின் அடித்தளம்- குமார கம்பனின் படையெடுப்பு- தமிழ்நாடு நிர்வாகம்- வலங்கை மற்றும் இடங்கைப் பிரச்சினைகளில் விஜயநகர ஆட்சியின் தாக்கம்.

**அலகு - II**

மதுரை நாயக்கர்கள் – விஸ்வநாத நாயக்கர் – திருமலை நாயக்கர் – ராணி மங்கம்மாள் – மீனாட்சி – மதுரை நாயக்கர் சாம்ராஜ்யத்தை பிரகடனப்படுத்துதல் – பொலிகரி அமைப்பு – நிர்வாகம் – சமூக மற்றும் பொருளாதார நிலை – கிறித்துவத்தின் பரவல் – தமிழ் கலாச்சாரத்திற்கு நாயக்கரின் பங்களிப்பு.

**அலகு - III**

தமிழ் நாட்டில் மராத்தியம் - நிர்வாகம் - மராத்தியர்களின் அரசியலமைப்பு - தமிழ் கலாச்சாரம் - ராமநாட்டின் சேதுபதிகள் - சேதுபதிகளின் ஆட்சியின் அம்சங்கள் - சமூகம், பொருளாதாரம், சமயம் மற்றும் கலாச்சாரம்.

**அலகு - IV**

கர்நாடக நவாப்கள் - நவாபின் கீழ் தமிழ்ச் சமூகம்- ஆங்கிலோ-மைசூர் அரசியல் உறவுகள்- நவாபின் கீழ் நிர்வாகம்- கர்நாடகப் போர்கள்- சமூகம், பொருளாதாரம், சமயம் மற்றும் கலாச்சாரம்.

**அலகு - V**

பாளையக்காரர்கள் கலகம் - கான் சாகிப் மற்றும் புலி தேவர்- வீரபாண்டியகட்டபொம்மன் - தென்னிந்தியக் கலகம் கி.பி. 1800-1801 - காரணங்கள், போக்கு மற்றும் விளைவு.

**குறிப்புகள்**


1. R. Kalidos, History and Culture of Tamils, Vijay Publishers, Dindigul, 1976.
2. K. Rajayyan, History of Tamil Nadu 1565-1982, Madurai Publishing House, Madurai, 1978.
3. N. Subramanian, Social and Cultural History of Tamilnadu (1336-1984), Koodal Publication, Madurai, 1976.
4. R.Sathiyanatha Aiyar, Ministry of Nayak of Madurai, OVP, 1924.
5. K.Rajayyan, South Indian Rebellion, Rao and Raghavan publishers, Mysore,1971.

CONTENTS

**அலகு - I**

விஜயநகரப் பேரரசின் அடித்தளம்

குமார கம்பனின் படையெடுப்பு

தமிழ்நாடு நிர்வாகம்

**அலகு – II**

மதுரை நாயக்கர்கள்

விஸ்வநாத நாயக்கர்

திருமலை நாயக்கர்

ராணி மங்கம்மாள்

மீனாட்சி

பொலிகரி அமைப்பு – நிர்வாகம்

சமூக மற்றும் பொருளாதார நிலை

தமிழ் கலாச்சாரத்திற்கு நாயக்கரின் பங்களிப்பு.

**அலகு – III**

தமிழ் நாட்டில் மராத்தியம்

நிர்வாகம் - மராத்தியர்களின் அரசியலமைப்பு

தமிழ் கலாச்சாரம் - ராமநாட்டின் சேதுபதிகள்

சேதுபதிகளின் ஆட்சியின் அம்சங்கள்

சமூகம், பொருளாதாரம், சமயம் மற்றும் கலாச்சாரம்

**அலகு – IV**

கர்நாடக நவாப்கள்

கர்நாடகப் போர்கள்

சமூகம், பொருளாதாரம், சமயம் மற்றும் கலாச்சாரம்.

**அலகு – V**

பாளையக்காரர்கள் கலகம்

கான் சாகிப் மற்றும் புலி தேவர்

வீரபாண்டியகட்டபொம்மன்

தென்னிந்தியக் கலகம் கி.பி. 1800-1801

UNIT- I

# விஜய நகர ஆட்சியின் கீழ் தமிழகம்

## (TAMIL NADU UNDER VIJAYA NAGAR PERIOD)

விஜய நகரப் பேரரசின் எழுச்சி இடைக்கால இந்திய வரலாற்றில் மிகச் சிறப்பிடம் வகிக்கும் நிகழ்ச்சியாகும். இப்பேரரசு சுமார் மூன்று நூற்றாண்டுகளாக நாட்டின் பழைய மதத்தையும், பண்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும், புதிய கருத்துக்களும் சக்திகளும் வேகமாக உட்புகுந்து இவற்றை விழுங்கிவிடாமல் பாதுகாப்பதற்காகவும் நிறுவப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. பாமினி ராஜ்யங்கள் தங்கள் செல்வாக்கைப் பரப்புவதை மறைமுகமாகத் தடுத்து வந்தது. டில்லி சுல்தானியர் ஆட்சியின் சீர்குலைவின் போது தோன்றிய சுதந்திரப் பேரரசே விஜய நகரப் பேரரசு ஆகும். இந்தப் பேரரசு அந்தக் காலத்து அரசியல் நிலைமைக்குத் திறவு கோலைக் கொண்டிருந்தது என்று கூறப்படுகிறது. வட இந்தியாவிலிருந்து பாய்ந்து வந்த முஸ்லீம் பிரளயம் தென்னிந்திய இந்து அரசுகளை அடித்துச் சென்ற பின் மீண்டும் இந்துப் பாண்பாடு அரசியல் வடிவில் புத்துயிர் பெற்று விஜய நகரப் பேரரசாக உருப்பெற்றது. இப்பேரரசு சுமார் மூன்று நூற்றாண்டுகள் தென்னிந்திய அரசியல், பண்பாட்டுத் துறைகளில் முழு ஆதிக்கம் செலுத்தியது . வடக்கேயிருந்து வரும் முஸ்லீம் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தவும், இந்து சமயப் பண்பாடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடனும் இப்பேரரசு தோற்றுவிக்கப்பட்டது என்றாலும், இந்த நோக்கங்களை நிறைவேற்ற விஜயநகர் போராட்டங்களை நிகழ்த்த வேண்டியிருந்தது. எனவே விஜய நகரப் பேரரசின் தோற்றத்தை இந்து அரசியல் சமய இயக்கங்களின் மறுமலர்ச்சி என்று கூறலாம். விஜய நகரம் தோன்ற ஆசீர்வதித்த பெரியவர் வித்யாரண்யர் என்று சொல்லப்படுகிறது.

### தோற்றம் பற்றிய பலவகையானகருத்துக்கள்

விஜய நகரப் பேரரசின் தோற்றத்தைப் பற்றி வரலாற்றறிஞர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றது. அதன் ஆரம்ப கால வரலாறு இன்னும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. பல அறிஞர்களின் கருத்துக்களை இனி காணலாம். ஹிராஸ் பாதிரியாரின் (Rev.Father Heras) கருத்துப்படி விஜய நகரப் ராபர் சீவல் (Rober Sewell) என்ற வரலாற்று ஆசிரியர் தனது 'மறைந்து போன பேரரசு (Forgotten Empire) என்ற நூலில் விஜய நகரப் பேரரசின் தொடக்கத்தைப் பற்றி நியாயமான விளக்கம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் கூறுவதாவது: “சங்கமா என்பவரின் ஐந்து புதல்வர்களில் மிகச் சிறந்த இருவரான ஹரிஹரர், புக்கர் ஆகிய இரு சகோதரர்கள் வாரங்கல் காகத்திய மன்னர் இரண்டாம் பிரதாப ரூத்ரனிடம் கருவூலக் காப்பாளர்களாக பணியாற்றினர். கிபி.

1323-ல் அந்த நகர் சுல்தானியப் படையெடுப்பிற்கு உள்ளான போது இருவரும் கர்நாடகப் பகுதியிலுள்ள கம்பிலிக்கு ஓடி அங்குள்ள குறுநில மன்னரிடம் பணியாற்றினர். கி.பி.1332-ல் இந்த நகரமும் தாக்குதலுக்குள்ளான போது இந்த இரு சகோதரர்களும் கைதியாக்கப் பட்டு டில்லி கொண்டு செல்லப்பட்டனர். அங்கு கட்டாயப்படுத்தி முஸ்லீமாக்கப்பட்டனர்".

"கர்நாடக முஸ்லீம் ஆளுநர் மாலிக் நாயீப் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்ட போது முஸ்லீம்களாக மதமாற்றம் செய்யப்பட்ட ஹரிஹரரும், புக்கரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க அங்கு அனுப்பப்பட்டனர். பிறந்த மண்ணை அடைந்தவுடன் அங்கு பரவியிருந்த உரிமைப் போராட்டம் அவர்கள் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த சமய உணர்வைத் தட்டி எழுப்பியது. அந்தக் காலத்தில் சிறப்புற்றிருந்த பிராமண முனிவரும் அறிஞருமான 'மாதவவித்யாரண்யர்' அவரது சகோதரரும் வேதத்திற்குப் புகழ்பெற்ற உரை எழுதியவருமான 'சாயனர்'ஆகியோருடன் தொடர்பு கொண்டதின் விளைவாக மீண்டும் இந்து சமயத்தைத் தழுவினர்". "புதிய ஊக்கம் பெற்ற ஹரிஹரரும், புக்கரும் துங்கபத்திராவின் வடகரையிலுள்ள ஆனகுண்ட என்ற கோட்டைக்கு எதிர்ப்புறத்தில் அந்நதியின் தென்கரையில் விஜயநகரப் பேரரசினை நிறுவினர்". சீவலின் இந்தக் கருத்து நியாயமானதாகவும், பொதுவான மரபை ஒப்புக் கொள்வதாகும் அமைந்துள்ளது.

மரபுவழிச் செய்தியின்படி, ஹரிஹரரும் புக்கரும் துங்கபத்திரை நதிக்கரையில் வேட்டையாடச் சென்ற போது முயல்கள், வேட்டை நாயைத் துரத்திய விந்தை நிகழ்ச்சியைக் கண்டனர். அதுபற்றி வித்யாரண்யருடன் கலந்தாலோசித்தனர். அந்த இடம் வீரம் விளைவுமிடமாகக் கருதி அதில் ஓர் நகரை நிர்மாணிக்க முடிவு செய்தனர். அதன்படி நிர்மாணிக்கப்பட்ட நகரே விஜய நகர் ஆகும். விஜய நகரை நான்கு அரச மரபுகள் ஆட்சி செய்தன.

விஜய நகரப் பேரரசு 1336- ம் வருடத்திலிருந்து 1562-ம் ஆண்டு வரை தென்னாட்டிலேயே தன்னிகரில்லாத வல்லரசாக விளங்கியது. இந்தக் காலம் முழுவதும் தமிழகம் விஜய நகரப் பேரரசுக்கு உட்பட்டே இருந்தது. 1565-க்குப் பிறகும் தமிழகத்தில் ஆண்ட அரசர்கள் விஜய நகரப் பேரரசின் அரசப் பிரதிநிதிகளாக இருந்த நாயக்கர்களே ஆவர். இக்கால வரலாற்றை அறிந்து கொள்ள இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உதவுகின்றன. குமாரகம்பணனின் மனைவி கங்காதேவி எழுதிய காவியமான மதுராவிஜயம், ராஜநாததிண்டிமர் எழுதிய சாளுவாப்யுதம் ஆகிய நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி, நீலகண்ட சாஸ்திரியார்,

வெங்கடரமணய்யா ஆகியோரும் விஜய நகர வரலாற்றுக்குத் தேவையான ஆதாரங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

**தமிழகத்தில் விஜய நகரப் பேரரசு விரிவடைதல்**

விஜய நகரின் முதல் அரச மரபு சங்கமரின் பெயரால் சங்கம வமிசம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வம்சத்தைச் . சேர்ந்த அரசர்களில் ஹரிஹரர் முதல் அரசர் ஆவார். விஜய நகரில் ஹரிஹரரின் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் இரு அரசுகள் ஏற்படலாயின. அவற்றில் ஒன்று சம்புவராயப் பேரரசு மற்றொன்று மதுரை - சுல்தானியம் ஆகும். சம்புவராயர் ஆட்சிப் பகுதியில் சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள், செங்கல்பட்டு, வட மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்கள் அடங்கும். கொள்ளிடம் நதிக்கரையிலிருந்து இராமேஸ்வரம் வரை உள்ள பகுதிகள் மதுரை சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

**முதலாம் ஹரிஹரரின் கீழ் தமிழகம்**

பேராசிரியர் S.கிருஷ்ணசாமியின் கருத்துப்படி விஜய நகர அரசு 1344 – 1356-ம் ஆண்டுகளுக்கிடையே முதன் முதலாக தமிழகத்தில் படையெடுத்திருக்க வேண்டும். முதலாம் ஹரிஹரர் காலத்திலேயே விஜய நகர அரசனின் ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்பட்டது. ஹரிஹரரின் தம்பி புக்கர் மதுரை மீது படையெடுத்து வெற்றி கண்டார். இந்த வெற்றிக்குப் பிறகு ஹரிஹரர் கோமல்சாசனத்தை வெளியிட்டார். இந்த சாசனம் மாயூரம் தாலுகாவில் கிடைத்தது. ஹரிஹரர் வெற்றி பெற்றதும் நிர்வாகத்தில் கவனம் செலுத்தியதாகவும், கிராம நிர்வாகப் பொறுப்பிலிருந்து வேளாண் குடியினரையும், பொற்கொல்லர்களையும் அகற்றிவிட்டு அந்த இடங்களில் பிராமணர்களை அமர்த்தியதாகவும் நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். ஹொய்சாள அரசன் மூன்றாம் பல்லாளன் 1341-ல் இறந்ததும் அவரது பகுதிகளையும் ஹரிஹரர் கைப்பற்றினார்.

**குமாரகம்பணரின் தென்னிந்தியப் படையெடுப்பு-**

ஹரிஹரர் தம்பி முதலாம் புக்கர் விஜய நகர் அரசரானதும் தனது மகன் குமாரகம்பணரை அனுப்பி தென்னகத்தைக் கைப்பற்ற நினைத்தார். அதன்படி, மதுரை சுல்தானியத்தை அழித்து தமிழகத்தைக் கைப்பற்றும்படி ஆணையிட்டார். குமாரகம்பணர் சம்புவராயரது நாட்டைக் கைப்பற்றி விட்டு, மதுரை சுல்தானியத்தையும் வீழ்த்தினார். குமாரகம்பணரின் இந்த தென்னிந்தியப் படையெடுப்பைப் பற்றி அவரது மனைவி கங்காதேவி எழுதிய மதுராவிஜயம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**a) ராஜகம்பீரராஜ்யத்தின்மீது படையெடுப்பு**

ராஜகம்பீர ராஜ்யம் என்பது செங்கல்பட்டு, வட, தென் ஆற்காடு, சித்தூரின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இந்த ராஜ கம்பீர ராஜ்யத்தை ஆண்ட சம்புவராயர்கள் முதலில் சோழர்களின் கீழ்ப்பகுதியில் இருந்தார்கள். முஸ்லீம்கள் தமிழகத்தைத் தாக்கிய போது இந்த சம்புவராயர்கள் தங்கள் பகுதியை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டனர். குமாரகம்பணர் படையெடுத்த போது இப்பகுதியை ராஜநாராயண சம்புவராயர் ஆட்சி செய்து வந்தார்.

தனது விசுவாசமிக்க தளபதிகளான கோப்னா, சளுவமாங்கு ஆகியோருடன் குமாரகம்பணர் முதலில் காஞ்சியில் புகுந்து தாக்கினார். சம்புவராயரின் படைகள் 1363-64 -ல் தோற்கடிக்கப்பட்டன. இப்போரில் ராஜநாராயண சம்புவராயர் கொலை செய்யப் பட்டதாக மதுரா விஜயத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இவர் கொலை செய்யப்படவில்லை என்றும், குமாரகம்பணரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார் என்றும் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இந்தப் போரின் போது குமாரகம்பணருக்கு மாரப்ப நாயக்கர் பெரிதும் உதவி செய்தார். இந்த வெற்றிக்குப் பிறகு தொண்டை மண்டலம் விஜய நகர ஆட்சியின் கீழ் வந்தது. இதற்குப் பிறகு கொங்கு தேசமும், திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள பகுதிகளும் விஜயநகரத்துடன் இணைக்கப்பட்டது.

**குமாரகம்பணரின்மதுரைப்படையெடுப்பு 1871-73**

தொண்டை மண்டலத்தை வென்ற பிறகு, எட்டு ஆண்டுகள் கழித்து குமாரகம்பணர் மதுரையைத் தாக்கினார். மதுரையை மீட்பதற்காக பெண் தேவதை ஒன்று அகஸ்தியரிடமிருந்து பெற்ற வாள் ஒன்றை குமாரகம்பணருக்கு அளித்ததாகக் கூறப்படுகிறது. மதுரை சுல்தானியம் 1338-ல் முகமதுபின் துக்ளக் காலத்தில் ஜலாலுதீன் அச்ன்ஷாவினால் அமைக்கப்பட்டது. மதுரை சுல்தான் ஆட்சியில் இந்துக்கள் பெரிதும் துன்பப்பட்டனர். இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன. இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை சகிக்க முடியாத விஜய நகர் அரசர் புக்கர் தனது மகன் குமாரகம்பணரை மதுரையைக் கைப்பற்ற ஆணையிட்டார். அப்போது மதுரையை முபாரக்ஷா என்ற சுல்தான் ஆட்சி செய்து வந்தார்.

குமாரகம்பணர் தனது தளபதிகளான கோபனா, சளுவமாங்கு ஆகியோருடன் 1370-ல் தென் ஆற்காட்டிலுள்ள செஞ்சியிலிருந்து புறப்பட்டார். திருவரங்கம் அருகிலுள்ள சமயபுரம் என்ற இடத்தில் சுல்தானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பின்னர்,

சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்த கண்ணனூர் குப்பம் கைப்பற்றப்பட்டது. அதன் பிறகு திருச்சிக்கும் மதுரைக்கும் இடையில் நடைபெற்ற கடுமையான போரில் முபாரக்ஷா கொல்லப்பட்டார். ஆனாலும் போர் தொடர்ந்து நடந்தது. குமாரகம்பணர் மதுரையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றினார். முபாரக்ஷாவின் உறவினர் சிக்கந்தர்ஷா மதுரையை விட்டு ஓடிவிட்டார்.

மதுரை கைப்பற்றப்பட்ட பிறகு, விஜய நகரப் பேரரசு தமிழகத்தில் இராமேஸ்வரம் வரையுள்ள தென்னகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. குமாரகம்பணர் மதுரையின் ஆளுநராகப் பதவி ஏற்றார்.

**தமிழகத்தில்குமாரகம்பணரின்ஆட்சி**

குமாரகம்பணரின் ஆட்சிக் காலம் தமிழகத்தில் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது. குமாரகம்பணர் பெரும் வெற்றி வீரர், மட்டுமல்லாது விஜயநகரின் லட்சியங்களை தமிழகத்தில் சிறப்பாக நிறைவேற்றினார். குமாரகம்பணர் தமிழகம் உள்ளிட்ட தென் மண்டலத்தில் விஜய நகரத்தின் மகா மண்டலேசுவரனாக விளங்கினார். காஞ்சி துணை இருக்கையாக ஆக்கப்பட்டது. சுல்தானிய ஆட்சிக்குப் பிறகு பதவியில் அமர்ந்த கம்பணர் இந்து ஆலயங்களை வழிபாட்டுக்கு மீட்பதில் கவனம் செலுத்தினார். புதிய இந்து ஆலயங்கள் கட்டப்பட்டன. பழைய ஆலயங்கள் சீரமைக்கப்பட்டன. கோவில் பணியாளர்களுக்கும், பிராமணர்களுக்கும் உணவும், உறைவிடமும் வழங்கினார். தனது சொந்த சார்பில் ஆலயங்களுக்கு நிலம், ஆபரணங்கள் போன்ற கொடைகளை வழங்கினார் என்று சாசனங்கள் மூலம் அறிகிறோம். பழைய பணியாளர்கள் அகற்றப்பட்டு புதிய ஆலயப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். கைகோலர்கள் என்பவர்கள் ஆலயத்தில் கட்டயாப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவ்வளவு பெருமையும், சிறப்பும் வாய்ந்த புகழ் பெற்ற இளவரசர் குமாரகம்பணர் தனது தந்தையின் வாழ்நாளிலேயே 1374-ல் இறந்து விட்டார். எனவே அவரது புகழ்மிக்க ஆட்சியும் இடையிலேயே முடிவுற நேர்ந்தது. கி.பி.1363 முதல் 1463 வரை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் விஜய நகர ஆட்சி தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்றது. முக்கியமாக இரண்டாம் ஹரிஹரர், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர் போன்றோர்களால் தமிழகத்தில் வேரூன்றியது. ஆனால் மாலிக் அர்ஜுன், விருப்பாஷா போன்ற திறமையற்றவர்கள் காலத்தில் விஜய நகரின் பிடி தமிழகத்தில் தளரலானது.

**இரண்டாம்ஹரிஹரர்காலத்தில்தமிழகம்**

குமாரகம்பணருக்குப் பிறகு 1378-ல் இரண்டாம் புக்கர் மதுரையின் மீது படையெடுத்து அதன் சுல்தான் அலாவுதீன் சிக்கந்தரை வென்று மதுரையில்

முஸ்லீம்களின் ஆட்சியை இறுதியாக ஒழித்தார். பின்னர் 1377 முதல் 1404 வரை ஆட்சி புரிந்த இரண்டாம் ஹரிஹரர் ஆட்சிக் காலத்தில் விஜய நகரம் தமிழகத்தில் விரிவடைந்தது. அந்தப் பகுதிகள் எல்லாம் சேர்த்து முக்கியமாக வேலூர், செஞ்சி, தஞ்சை மற்றும் மதுரை போன்ற நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அங்கே விருப்பாட்சி உடையார் மகா மண்டலாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் இராமேஸ்வரத்தில் துலாபார விழா எடுத்தார் என்று அறியப்படுகிறது.

**இரண்டாம்தேவராயர்காலத்தில்தமிழகம் கி.பி. 1402- 1448**

இரண்டாம் தேவராயர் காலத்திலும் தமிழகத்தின் மீது விரிவான படையடுப்பு நடைபெற்றது. தமிழகத்திலும், இலங்கையிலும், மகரளத்திலும், வடக்கிலும் அவர் வெற்றி கண்டார் என்று நூனிஸ் (Nunis) என்ற ஆசிரியர் கூறுகிறார். இரண்டாம் தேவராயர் ஆட்சிக் கால்த்தில் மதுரையில் லக்கண நாயக்கரும், தஞ்சையில் மாடன நாயக்கரும், முதல் வரை ஆளுநர்களாக இருந்தனர். இரண்டாம் தேவராயர் கேரளா மீது படையெடுத்து கொல்லத்தை வசப்படுத்தினார். இவரது இலங்கைப் படையடுப்பு மதுரையில் இருந்த லக்கண நாயக்கரின் உதவியுடன் நடைபெற்றதாக அப்துல் ரசாக் கூறுகிறார். தென்னிந்தியா முழுவதும் தேவராயரின் தலைமையை ஏற்றுக் கொண்டது. இவரது ஆட்சிப் பகுதி இலங்கை முதல் குல்பர்கா வரையிலும், வங்காளம் முதல் மலபார் வரையிலும் பரவியிருந்தது..

**தமிழகத்தில்விஜய நகர ஆட்சி முறை**

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்ட விஜய நகரப் பேரரசு பரந்து விரிந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்தது. விஜய நகரத்தின் ஆட்சி தமிழகத்தில் பரவியது. இதன் விளைவாக, தமிழகத்தில் இருந்த சுல்தான் ஆட்சி ஒழிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் விஜய நகரப் பேரரசின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டது. இத்தகைய பெரிய அரசை நிர்வகிப்பதற்கு புதிய அரசியல் முறைகள் பின்பற்றப்பட்டன. தங்கள் ஆட்சியின் கீழ் இருந்த தமிழகத்தை சில மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து தம் இராணுவ அதிகாரிகளான நாயக்கர்களிடம் ஒப்படைத்தனர். ஆனாலும் அப்பகுதிகள் மீது தங்கள் இறையாண்மையைச் செலுத்தி வந்தனர். தமிழகத்தில் விஜய நகர ஆட்சி ஏற்பட்டதிலிருந்தே அது அப்போது மத்திய காலத்தில் நிலவிய நிலமானிய முறை அடிப்படையில் செயல்பட்டது. அந்த முறை நாயங்கார (Nayankara) முறை என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஆட்சி முறையைப் பற்றி கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜயம் செய்த டோமிங்கோ பேயஸ் (Domingos Paes), அச்சுதராயர் காலத்தில் விஜயம் செய்த பெர்னோ

நூனிஸ் (Femao Nuniz) ஆகியோர் எழுதிய குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். தமிழகத்தில் விஜய நகர ஆட்சி முறையின் பல்வேறு அம்சங்களை இனி காணலாம்

**அரசர் (King)**

தென்னகத்தின் பெரும் பகுதிகளைக் கொண்டிருந்த விஜய நகரப் பேரரசின் தலைமைப் பொறுப்பு அரசரிடமே இருந்தது. அவரது மத்திய அரசு வலிமையாக விளங்கியது. அரசன் தேசிய அதிகார மையத்தின் சின்னமாக விளங்கினார். அரசன் மரபுரிமை அடிப்படையில் ஆட்சி புரிந்தார். விஜய நகர அரசர்கள் முஸ்லீம்களுடனும் பிறருடனும் தொடர்ந்து போர் புரிய வேண்டிய கட்டாயம் இருந்ததாலும், மிகப் பெரிய நிலப்பரப்பை வேண்டியிருந்ததாலும் ராணுவத்தையே நம்பி இருந்தனர்

அரசன் ஆட்சி இயந்திரத்தின் மையமாக விளங்கினார். ஒரு வல்லாட்சியாளராக விளங்கவில்லை. ஒரு சில மரபுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்பட்டே செயல்பட்டார் மன்னர். முக்கிய கடமைகளாக வெளிநாட்டு படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பதும், மக்கள் குறைகளைத் தீர்ப்பதும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதும் ஆகும்.

நிர்வாகத்தில் மன்னருக்கு ஆலோசனை கூறுவதற்கு, அமைச்சர் தூதுகுழு ஒன்று செயல்பட்டது. அமைச்சர் குழுவின் ஆலோசனையை ஏற்பதா அல்லது மறுப்பதோ என்பது மன்னரின் விருப்பமாகும். அமைச்சர் குழுவில் பிரதான தல அதிகாரி, சமந்தசிகாரி போன்ற பல உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் திறமை அடிப்படையிலும், மன்னரின் நம்பிக்கை அடிப்படையிலும் தொடர்ந்து பதவி வகித்தனர்.

மத்திய அரசின் தலைமைச் செயலகம் சிறப்பாக அமைக்கப் பட்டிருந்தது. தலைமைச் செயலகம் (Secretariat) அரண்மனைக்கு அருகிலேயே செயல்பட்டு வந்தது. இதன் கீழ் பல அலுவலகங்கள் செயல்பட்டது. ஒவ்வொரு துறையும் ஒரு அதிகாரியால் மேற்பார்வை செய்யப்பட்டது. நாட்டின் முக்கிய அதிகாரிகள் தலைமை அமைச்சர், அதிகாரி, கணக்கர், அரண்மனைப் பாதுகாவலர், தளபதி போன்றோர்கள் ஆவர். இவர்கள் தவிர அரசரின் ஆணைகளை எழுதும் ராயசம் என்ற அதிகாரி இருந்தார்.

**மாநில அரசாங்கம்**

பரந்து விரிந்த விஜய நகரப் பேரரசு நிர்வாக வசதிக்காக சாயங்கள் அல்லது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றும் ஒரு மகா மண்டலாதிபதியின் கீழ் வைக்கப்பட்டது. மகாமண்டலாதிபதிகள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்களை அரசரே நியமிப்பார். இவர்கள் தற்கால

மாநில ஆளுநர் போல் இவர்களுக்கு ஸ்தல பிரதானி, தண்ட நாயக்கர், ராயசம் போன்ற அதிகாரிகள் இருந்தனர்.

இந்த மண்டலாதிபதிகள் சிவில், ராணுவ, நீதித்துறை அதிகாரங்களை மைய அரசின் இடையூறின்றி செயல்படுத்தினர். தங்கள் பகுதியின் நிரந்தர வருவாய் கணக்கை காட்ட வேண்டும். மேலும் மைய அரசுக்குத் தேவைப்படும் போது இராணுவ உதவியும் அளிக்க வேண்டும். வருவாயில் குறிப்பிட்ட அளவு பணத்தை பேரரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டும்.

**ஆயகார் முறை**

சபா, ஊர், நாடு போன்ற ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் சோழர் காலத்தில் உன்னத நிலையை அடைந்திருந்தன. ஆனால், விஜய நகர ஆட்சிக் காலத்தில் உருவான மாநில ஆட்சி அமைப்புகளாலும், நாயங்கார முறையினாலும் ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் செயலிழந்து வலுவிழந்தன. இதற்கு முக்கிய காரணம் பேரரசர்களால் தமிழக நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்ட மகாமண்டலேஸ்வரர்களும், நாயக்கர்களும் தமிழக மக்களின் பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் தெலுங்கு பேசிய ஆட்சியாளர்களின் ஏவலாளர்கள் ஆவர். எனவே அவர்கள் தமிழகப் பண்பாட்டையும், பெரிதும் பாதுகாக்கப்பட்டு வந்த ஸ்தல ஆட்சி நிறுவனங்களான ஊர், சபாவைப் பற்றி அக்கரைப்படவில்லை. எனவே ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் தங்கள் சிறப்பை இழந்தன.

ஆனால், ஊர்களிலும் கிராமங்களிலும் 'ஆயகார் முறை' என்ற ஆட்சியமைப்பு புகுந்தது. இதன்படி, ஒவ்வொரு கிராமமும் தனிப் பகுதியாகக் கருதப்பட்டது. முக்கிய அலுவல்கள் 12 பேர் கொண்ட ஒரு குழுவால் நடத்தப்பட்டது. இவர்கள் 'ஆயகார்' என்று பொதுவாக அழைக்கப்பட்டனர். இந்த ஆயகார்கள் மாநில அரசின் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். இவர்களுள் போட்டைல் (Potal), கர்ணம், தலையாரி, தோட்டி, நிர்கந்தி ஆகியவர்கள் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

போட்டைல் நிதி நிர்வாகியாகவும், கர்ணம் பதிவாளராகவும், தலையாரி கிராமப் பாதுகாவலராகவும், தோட்டி பயிர்களின் காவலனாகவும், நிர்கந்தி பாசனப் பொறுப்பாளராகவும் இருந்தனர். அவர்களுக்கு ஊதியம் நிலமானியமாக கிடைத்தது. அவர்கள் ஊர்கள் மற்றும் கிராமத்தின் பாதுகாவலர்களாக இருந்தாலும் கீழ்மட்ட நிர்வாகிகளாகவே இருந்தனர். பல ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் பொதுவாக சாவடி என்ற அரசு அலுவலகம் இருந்தது.

**நாயங்கார முறை (Nayangara System)**

தமிழகத்தில் விஜய நகர ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்தே ஆட்சியாளர்கள் முஸ்லீம்களுடனும், பிறருடனும் போர் தொடுக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தனர். மேலும் அவர்கள் மிகப் பெரிய நிலப்பரப்பை ஆட்சி செய்ய வேண்டியதிருந்தது. தமிழகத்தில் அவர்கள் வெளி ஆட்சியாளர்களாகவே கருதப்பட்டனர். எனவே தமிழகத்தில் ஆதிக்கம் ஏற்பட்ட போது தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்களைக் கொண்ட ஒரு அமைப்பு தேவைப்பட்டது. இதனால் தமிழகத்தை சில மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து ராணுவ அதிகாரிகளான நாயக்கர்களிடம் ஒப்படைத்தனர். இந்த முறை நாயங்கார முறை (நாயக்கர் முறை) அல்லது அமர நாயங்கார முறை என்று அழைக்கப்படுகிறது. இது அப்போது ஐரோப்பாவில் நடைமுறையில் இருந்த நிலமானிய முறை போன்று செயல்பட்டது.

நாயங்கார முறையைப் பற்றி டொமிங்கோ பேயஸ், பெர்னோ நூனிஸ் ஆகியோர் எழுதிய குறிப்புகளிலிருந்து விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**நாயங்கரா என்பதின் பொருள் விளக்கம்**

விஜய நகர ஆட்சியாளர்களின் கல்வெட்டுகளில் 'நாயங்கரா' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் இது அமர நாயங்கரா என்பதின் சுருக்கமே ஆகும். இந்த வார்த்தையை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். 'அமரா' (Amara) என்பதற்கு நாயக்கர்களின் இராணுவ சேவைக்காக அவர்களுக்கு அரசனால் வழங்கப்பட்ட நிலம் என்று பொருள்படும். ‘நாயக்கா' (Nayaka) என்பதற்கு அரசனிடமிருந்து 'நாயங்கரா' முறையின் அடிப்படைக் கூறுகள் பல உள்ளன.z

நிலங்களைப் பெற்றுக் கொண்ட ராணுவ தலைவர்கள் என்று பொருள்படும். 'காரா' (Kara) என்பதன் பொருள் பதவி (office) ஆகும். இவ்வாறு அமர நாயங்கார என்பதற்கு ‘விஜய நகர அரசரால் ஒரு ராணுவத் தலைவருக்கு கொடுக்கப்பட்ட நிரந்தர வருமானம் கொடுக்கும் ஒரு நிலம்' என்று பொருள் படும். இதுவே நாயங்கரா அல்லது நாயக்கர் முறை என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

நாயக்கர்களுக்கு நிலங்களை பிரித்துக் கொடுத்த முறையானது. மத்திய கால கோட்பாடான ‘நாட்டிலுள்ள நிலங்கள் அனைத்தும் அரசருக்குச் சொந்தம். அந்த நிலங்களை தன்னைச் சார்ந்திருந்தவர் களுக்கு பிரித்துக் கொடுக்க அரசருக்கு உரிமை உள்ளது' என்பதின் அடிப்படையில் செயல்பட ஆரம்பித்தது.

இதன்படி விஜயநகர அரசர்கள் நாட்டிலுள்ள தமக்குச் சொந்தமான நிலங்களை நாயக்கர் என்ற ராணுவத் தலைவர்களுக்கு பிரித்துக் கொடுத்தனர். இப்படிக்

கொடுக்கப்பட்ட பகுதி 'அமரம்' என்று அழைக்கப்பட்டது. இந்த நாயக்கர்கள் மூலம் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அரசர்கள் அதிகாரம் செலுத்தினர். நாயக்கர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட நிலங்களுக்கு ஈடாக வீரர்களைத் தேவையான காலத்தில் பேரரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் இவர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை பேரரசுக்கு அனுப்ப வேண்டும்.

நாயக்கர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களின் அளவிலிருந்தும், அவைகளிலிருந்து அவர் பெரும் வருமானத்திலிருந்தும் அந்த நாயக்கர் எவ்வளவு படை வீரர்களை அனுப்ப வேண்டும், எவ்வளவு வருமானம் தர வேண்டும் என்பதை அரசரே நிர்ணயிப்பார். விஜய நகரப் பேரரசு 200 நாயக்கர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டதாக நூனிஸ் கூறுகிறார்.

இந்த நாயக்கர்கள் அரசனுக்கும், விவசாயிகளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துபவர்களாக இருந்தனர். தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதியை மத்திய அரசுக்குச் செலுத்தி விட்டு, மீதியை தன்னிடம் இருக்கும் படை பராமரிப்பு செலவுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாயக்கர்கள் தங்கள் ஆட்சித்துறை உட்பட்ட பகுதிகள் தொடர்பான விஷயங்களில் முழுசுதந்திரம் கொடுக்கப் பட்டிருந்தனர். பொதுவாக அரசர் தலையீடு செய்ததில்லை. நாயக்கர்கள் தங்கள் பகுதிகளில் கோட்டைகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். தமிழகத்தில் சந்திரகிரி, திரிசிராபுரா, குண்ணத்தூர், வள்ள கோட்டை, மதுரை, பாளையம்கோட்டை, நாராயணவண்ணம், மாட்டூர், சோணகிரி ஆகிய பகுதிகளில் இருந்த நாயக்கர்கள் கோட்டைகள் கட்டிக் கொண்டனர்.

இந்த நாயக்கர் முறை குமாரகம்பணரின் காலத்திலிருந்தே நிலவி வந்தது. விஜய நகரப் பேரரசர்களின் கல்வெட்டுகளில் பல நாயக்கர்களின் பெயர்கள் காணப்படுகிறது. இரண்டாம் ஹரிஹரர் காலத்தில் ஆளவந்தா நாயக்கர், பாபுநாயக்கர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர், முதலாம் தேவராயர் காலத்தில் நாகையா நாயக்கர், தங்கா நாயக்கர் ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. விருப்பாக்சர் காலத்தில் பல நாயக்கர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் ராமப்ப நாயக்கர், சதாசிவ நாயக்கர், ஹரிஹர நாயக்கர், சின்னப்ப நாயக்கர் போன்றோர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நாயக்கர்களின்கடமைகளும் அதிகாரங்களும்**

1. முதலாவதாக நாயக்கர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட வருவாயிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தொகையை வருடந்தோறும் அரசருக்குச் செலுத்த வேண்டும் என்று பேயஸ் குறிப்பிடுகிறார். கொடுக்கப்பட வேண்டிய தொகையை அரசரே நிர்ணயம்

செய்தார். இந்த பனம் நேரடியாக விஜயநகரத்திலிருந்த கருவூலத்தில் உடப்பட்டதா அல்லது மாநில ஆளுநர்கள் மூலம் செலுத்தப்பட்டதா என்று தெரிய வில்லை. நூனிசின் கூற்றுப்படி நாயக்கர்கள் தங்களுக்குக் கிடைத்த வருவாயில் பாதியை அரசருக்கு செலுத்தினர். ஆனால், நாயக்கர்கள் தங்கள் நிலங்களிலிருந்த குத்தகைதாரர்களிடமிருந்துபத்தில் ஒன்பது பங்கு வருவாயை செலுத்தினர்.

2. இரண்டாவதாக, நாயக்கர்கள் அரசருக்கு போர்க்காலங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய காலாட்படை, குதிரைப்படை மற்றும் யானைப் படையை கொடுத்து உதவ வேண்டும். உதாரணமாக, கிருஷ்ண தேவராயரின் ரெய்ச்சூர் படையெடுப்பின் போது நாயக்கர்கள் 3,22,000 காலாட்படை வீரர்கள், 21500 குதிரைப்படை, 235 யானைப்படை ஆகியவற்றை அளித்ததாக நூனிஸ் கதிப்பிடுகிறார். நன்றாக பயிற்சி அளிக்கப்பட்ட திறமையான படைவீரர்களையே அனுப்ப வேண்டும். மேலும் இந்தப் படை வீரர்கள் எப்போதும் போருக்குத் தயார் நிலையிலேயே வைத்திருக்கப்பட வேண்டும். நாயக்கர்கள் தங்களுக்குத் தேவைப்படும் குதிரைகளை அரசரிடமிருந்தே விலைக்கு வாங்க வேண்டும் என்று நூனிஸ் குறிப்பிடுகிறார்.

3. அரசருக்கு மகன் அல்லது மகள் பிறப்பு சமயத்தில் நாயக்கர்கள் விலை மதிப்புமிக்க பொருட்களைப்பரிசாக வழங்க வேண்டும். மகா நவமி திருவிழாவுக்கு பணம் அனுப்ப வேண்டும். மேலும் அரிசி, கோதுமை இறைச்சி போன்றவற்றையும் அனுப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர்.

4. நாயக்கர்களுக்கு தங்கள் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலை காட்ட வேண்டிய கடமை உண்டு. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு மரண தண்டனை வழங்கி குற்றங்களைத் தடுக்க வேண்டும். இதற்குப் பாடிக்காவல் அல்லது அரசுக்காவல் என்று பெயர்.

5. நாயக்கர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்ய வேண்டும். இதற்காக தரிசு நிலங்கள் திருத்தப்பட்டு சாகுபடிக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பொதுவாக தங்கள் பகுதியின் முன்னேற்றத்திற்கு நாயக்கர்களே பொறுப்பாவர்.

மேற்கண்ட மரபுகளையும் கடமைகளையும் மீறும் நாயக்கர்கள் தண்டிக்கப்பட்டனர். அவர்களது நிலங்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டன. பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

**பேரரசில் நாயக்கர்களின்பிரதிநிதிகள்**

பேரரசின் தலைநகரில் நாயக்கர்களின் பிரதிநிதிகள் இரண்டு பேர் இருந்தனர்.

1. முதலாவது பிரதிநிதி ஒரு ராணுவ அதிகாரி ஆவார் (Military Agent). இவர் தலைநகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாயக்கரின் படைக்கு பொறுப்பாளர் ஆவார். இவர் அரசரின் அவையில் கலந்து கொள்வார். ராணுவம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அரசர் இந்த ராணுவப் பிரதிநிதி மூலமே நாயக்கர்களுக்கு ஆணையிட்டார்.

2. நாயக்கரின் இரண்டாவது பிரதிநிதி ஸ்தானாதிபதி (Sthanapati) என்று அழைக்கப்பட்டார். இவர் ராணுவம் தொடர்பில்லாத சிவில் பணிகளை மேற்கொண்டார். இவர் தினமும் அரசவைக்குச் சென்று அங்கே எடுக்கப்படும் ஆட்சித்துறை முடிவுகளை நாயக்கருக்கு அவ்வப்போது அறிக்கை மூலம் செய்தி அனுப்பினார்.

இவ்வாறு மேற்கண்ட இரண்டு அதிகாரிகள் மூலம் அரசர் தூர இடங்களிலிருந்த மாநிலங்களைக் கட்டுப்படுத்தி வந்தார். இந்த இரண்டு அதிகாரிகளும் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பாலமாக செயல்பட்டனர். முக்கியமாக நாயக்கர் முறை செம்மையாக நடைபெற இந்த இரண்டு அதிகாரிகளும் முக்கியப் பங்கு வகித்தனர்.

**தமிழகத்தில்நாயக்கர் ஆட்சிப் பகுதிகள**

விஜய நகரப் பேரரசு மொத்தம் இரு நூறு நாயக்கட்டிணங்களாகப் (Nayakkattanam) பிரிக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் நாயங்கார முறை கிருஷ்ண தேவராயர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகம் மூன்று நாயக்கட்டிணங்களாகப்பிரிக்கப்பட்டிருந்தது. வேலூரை உள்ளடக்கிய நெல்லூரிலிருந்து கொள்ளிடம் வரை உள்ள பகுதி செஞ்சி நாயக்கரின் கீழும், காவிரிப் பாசனப் பகுதிகள் அனைத்தும் தஞ்சை நாயக்கரின் கீழும், கொள்ளிடத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலான பகுதி மதுரை நாயக்கரின் கீழும் வைக்கப்பட்டது.

**மகா மண்டலேஸ்வரர்களுக்கும்நாயக்கர்களுக்கும்உள்ள வேறுபாடுகள்**

1. மகா மண்டலேஸ்வரர் அரசரின் பிரதிநிதியாக இருந்து அந்தப் பகுதிகளை ஆட்சி செய்வார். அவர் அரசரின் வைசிராய் ஆவார், ஆனால் நாயக்கரோ அரசருக்கு வருவாய் மற்றும் ராணுவக் கடமைகளை ஆற்றும் ஒரு அதிகாரி போன்றே செயல்பட்டார்.

2. நாயக்கர் தனக்குட்பட்ட பகுதிகளிலிருந்து வரும் மொத்த வருவாயில் பாதியை அரசருக்குச் செலுத்த வேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் காலாட்படை, குதிரைப்படை யானைப் படையையும் போரின் போது அரசருக்குக் கொடுக்க வேண்டும். மகா மண்டலேஸ்வரருக்கு இந்தப் பொறுப்பு எதுவும் இல்லை. அத்துடன் நாயக்கர்கள் தங்களது கப்பங்களை ஒழுங்காகக் கட்டுகிறார்களா, படைகளை

ஒழுங்காகப் பராமரித்து வருகிறார்களா என்று மேற்பார்வையிடும் உரிமை உண்டு. நாயக்கர், அரசருக்கு விசுவாசமாக இருக்கிறாரா என்றும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

3. மாநில ஆளுநர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசால் நியமிக்கப்படுவார். அவ்வப்போது அவர் இடமாற்றம் செய்யப்படுவார். ஆனால் நாயக்கருக்கு நிலப்பகுதி (Amaram) கொடுக்கப்பட்டு அந்தப் பகுதிகள் தொடர்பான விஷயங்களில் நாயக்கர்கள் முழுச் சுதந்திரம் பெற்றிருந்தனர். ஆனால் நாயக்கர்களோ தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் தங்ககள் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டனர்.

**நாயங்கார முறையும் நிலமானிய முறையும்**

விஜய நகர ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாயங்கார முறை அப்போது ஐரோப்பாவில் பின்பற்றப்பட்ட நில மானிய முறையைப் போலக் காணப்பட்டது. நிலமானிய முறையின் பல அம்சங்கள் இந்த நாயங்கார முறையில் காணப்பட்டது. நிலத்தை அனுபவிக்கும் உரிமை, அரசருக்குப் பணம் மற்றும் படையை அளித்தல், நீதித்துறை மற்றும் ஆட்சித்துறை அதிகாரங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் இரண்டு முறைகளிலும் ஒற்றுமை காணப்பட்டது. ஆனால் நிலமானிய முறையில் பிரபுக்கள் பெற்றிருந்த அரசியல் முக்கியத்துவத்தை நாயக்கர்கள் பெற்றிருக்கவில்லை. காரணம் நாயக்கர்கள் ஒரு ராணுவத் தலைவர்கள் போன்றே நடத்தப்பட்டனர். எப்போது வேண்டுமானாலும் அரசரால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆனால் டி.வி.மகாலிங்கம் என்பவர் நாயங்கார முறை ஐரோப்பிய நிலமானிய முறையிலிருந்து மாறுபட்டிருந்தது என்றே கருதுகிறார். காரணம் ஐரோப்பிய நிலமானிய முறையால் அனைத்து மக்களும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர் ஆனால் நாயக்கர் முறையின் கீழ் ஒரு பகுதி மக்கள் மீது மட்டுமே கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடிந்தது.

**நாயங்காரா முறையின் நிறைகள்**

நாயங்கார முறையில் நன்மைகளும் தீமைகளும் காணப்பட்டன

1. நாயங்கார முறையினால் மத்திய அரசின் அதிகாரச் சுமை குறைந்தது. மத்திய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டது.
2. நாயக்கர்கள் தங்கள் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பானவர்களாக இருந்ததால் விவசாய உற்பத்திக்கு அதிக முயற்சி எடுத்தனர். நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்பட்டது. பல புதிய கிராமங்களும் நகரங்களும் தோன்றின.

3. மத்திய அரசின் நிதிநிலை வளமாக இருக்க நாயங்கார முறை உதவியது. ஏனெனில் நாயக்கர்கள் தங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் பாதியை அரசர்களுக்கு அனுப்பினர். மேலும் படைப் பிரிவுகளையும் மைய அரசுக்கு அனுப்பியதால் அரசர்களின் படை திரட்டும் பொறுப்பும் குறைந்தது.

**நாயங்கார முறையின் குறைகள்**

1. நாயங்கார முறையில் பல குறைபாடுகளும் காணப்பட்டன. முதலாவது நாயக்கர்கள் தங்களுக்குட்பட்ட பகுதிகளில் சுதந்திரமாகவே செயல்பட முற்பட்டனர். இதனால் பேரரசு பலவீனமடைந்தது.
2. நாயக்கர்கள் வருவாயைப் பெருக்கக் கடுமையான வழிகளை மேற்கொண்டனர். உற்பத்தியில் பத்தில் ஒன்பது பங்கை விவசாயிகளிடத்திலிருந்து பிடுங்கிக் கொண்டனர். இதனால் மக்கள் அவதிப் பட்டனர், ஆனால் நாயக்கர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தனர்.
3. நாயக்கர்கள் பெரிய நிலப்பரப்பைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் தங்களுக்கு உதவியாக துணை நாயக்கர்களை வைத்துக் கொண்டனர். இவர்கள் பாளையக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். பாளையக்காரர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் பாளையங்கள் எனப்பட்டன. இந்தப் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தியவர் விஸ்வநாத நாயக்கர் ஆவார். இந்தப் பாளையக்காரர்கள் நாயக்கர்களுக்கே விசுவாசமாக இருந்தனர். அரசருக்கு விசுவாசமாக இருக்கவில்லை. இதனாலும் பேரரசு பலவீனமடைந்தது.

நாயங்கார முறையில் இப்படிச் சில குறைபாடுகள் இருந்த போதிலும், விஜய நகர அரசர்களால் உருவாக்கப்பட்ட நாயங்கார முறை அது உருவாக்கப்பட்ட நோக்கங்களை நல்ல முறையில் செயல்படுத்தியது. மேலும், பேரரசர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பெரிய நிலப்பரப்பை நாயக்கர் முறை மூலமே சிறப்பாக ஆட்சி செய்ய முடிந்தது. விஜய நகரப் பேரரசு பலவீனமடைந்த போது தமிழகத்திலிருந்த மதுரை, செஞ்சி, தஞ்சை நாயக்கர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக பிரகடனப்படுத்திக் கொண்டனர்.

## 2. மதுரை நாயக்கர்கள் (MADURAI NAYAKS)

கிபி.1336-ல் விஜய நகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது இந்தப் பேரரசின் பெருமன்னர்கள் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா ஆகிய பகுதிகளை தங்கள் ஆதிக்கத்தின்

கீழ் கொண்டு வந்தார்கள். இந்தப் பகுதிகளை நாயக்கதானங்களாகப் பிரித்து நாயங்கரா (நாயக்கர்) முறையை ஏற்படுத்தினர். வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய மண்டலங்களாக தமிழகம் பிரிக்கப்பட்டு நாயக்கர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டது. இந்த நிர்வாக அமைப்பின் வழி தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. விஜயநகரத்தில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டியின் விளைவாக, அரசு பலவீனமடைந்த போது நாயக்கர்களின் சுயாட்சி ஏற்பட்டது.

மதுரை நாயக்கர் ஆட்சி கி.பி. 1529-ல் விஸ்வநாத நாயக்கர் காலம் முதல் தொடங்கி கி.பி.1736 மீனாட்சி என்ற கடைசி அரசி ஆட்சிக் காலத்துடன் முடிவடைந்தது. மொத்தம் 13 அரசர்கள் 207 ஆண்டு காலம் ஆட்சி செய்தனர். மதுரை நாயக்கர்கள் காலம் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

**மதுரை நாயக்கர் ஆட்சியின் ஆரம்பம்**

மதுரை நாயக்கர்களின் ஆட்சிக்கு எப்போது அடித்தளம் இடப்பட்டது என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலர் விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியான நாகமநாயக்கர் காலமே மதுரை நாயக்கர் ஆட்சியின் ஆரம்பம் என்கின்றனர். வேறுசிலர் நாகமநாயக்கர் மகன் விஸ்வநாத நாயக்கர் 1529-ல் மதுரையின் ஆளுநராக நியமிக்கப்பட்டது முதல் கணக்கிடுகின்றனர். ஏனெனில், விஸ்வநாத நாயக்கர் காலம் முதல் தான் மதுரையின் ஆளுநர்களான நாயக்கர்கள் அரசியல் துறைக்கும் ஆட்சித்துறைக்கும் நியமிக்கப்பட்டனர். பேராசிரியர் சந்தியநாதய்யர் இதே கருத்தைக் கூறியுள்ளார்.

**1. விஸ்வநாத நாயக்கர் (1529-1564)**

விஸ்வநாத நாயக்கரை பேரரசின் மதுரைப் பிரதிநிதியாக 1529-ல் கிருஷ்ணதேவராயர் நியமித்தார். சீரிய ஒழுக்கமும், போதிய ஆட்சித் திறனும், பெரும் வீரமும், உலகியல் அறிவும் கொண்ட விஸ்வநாத நாயக்கர் 35 ஆண்டுகள் ஆட்சி செய்தார். விஸ்வநாதரின் ஆட்சியில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, சேலம், திருவாங்கூர் ஆகிய பகுதிகள் அடங்கியிருந்தன. இவர் தனது ஆட்சிக் காலத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து புகழ் பெற்றார் செம்மையான ஆட்சி முறையை நிறுவ பாளையக்காரர் முறையைப் புகுத்தினார். இவர் தமது வாழ்வின் இறுதி வரை விஜயநகரப் பேரரசர்கள் அச்சுதராயருக்கும், சதாசிவராயருக்கும் உண்மையான ஊழியராகவே பணியாற்றி வந்தார். மதுரை நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்து, அது வேரூன்றி நிலைப்பதற்குக் காரணமாக இருந்தவர் விஸ்வநாத நாயக்கர் ஆவார்.

**விஸ்வநாதநாயக்கர்பதவிக்குவருதல்**

பேரரசர் கிருஷ்ணதேவராயர் அவையில் பெரும் புகழ் பெற்று விளங்கியவர் நாகமநாயக்கர் என்பவர் ஆவார். இவரைப் பேரரசின் தென்பகுதிகளைக் கண்காணிக்கும் பொருட்டு தமது பிரதிநிதியாக மதுரையில் நியமித்தார். அப்போது பாண்டிய மண்டலத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாகமநாயக்கர் கிருஷ்ண தேவராயருக்கு எதிராகத் திரும்பினார். இந்த நிலையில் நாகமநாயக்கர் மகன் விஸ்வநாத நாயக்கர் ஒரு படையுடன் பாண்டிய மண்டலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விஸ்வநாதர் கலகத்தை அடக்கி அமைதியை ஏற்படுத்தினார். எனவே, நாகம நாயக்கர் நீக்கப்பட்டு விஸ்வநாத நாயக்கர் கி.பி. 1529-ல் பேரரசின் மதுரைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இவர் மதுரை நாட்டின் நேரடி ஆட்சியை கி.பி.1529-ல் மேற்கொண்டார், மதுரையைச் சீர்படுத்தி, பாதுகாவலைப் பலப்படுத்தி, மதுரையில் எதிர்ப்பற்ற நிர்வாகியாக அமர்ந்தார். விஸ்வநாத நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரியநாதர் என்பவரின் உதவியுடன் சிறப்பாக ஆட்சி புரிந்தார்

**விஸ்வநாதநாயக்கரின்பணிகள்**

**1) திருச்சியில்சீர்திருத்தங்கள்**

விஸ்வநாத மதுரை ஆட்சியை ஏற்றதும் சோழ மண்டல ஆட்சியாளர் செவப்பநாயக்கருடன் கலந்து பேசி பாண்டிய நாட்டுக்கு உரிய வல்லம் என்ற ஊரை தஞ்சையுடன் இணைத்தார். தஞ்சைக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளியை மதுரை நாட்டுடன் இணைத்தார் திருச்சி மதுரை நாட்டின் எல்லை நகரமாக மாறிவிட்டதால் விஸ்வநாதர் திருச்சியில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். இப்பொழுது உள்ள தெப்பக்குளத்தை வெட்டினார். தாயுமானவர் கோவிலை செப்பனிட்டார். காவிரியின், இருகரைகளிலும் கள்ளர்களுக்கு உறைவிடமாக இருந்த அடர்ந்த காடுகளை அழித்து கள்ளர்களின் கொட்டத்தை அடக்கினார். திருவரங்க ஆலயத்தில் சீரமைப்புப் பணிகள் செய்து அக்கோவிலைச் சுற்றி தெருக்கள் அமைத்து, வீடுகள் கட்டி மக்களைக் குடியேற்றினார். இங்கே திருப்பணிக்காக மூன்று லட்சம் பொன் செலவிட்டதாக ‘கோவிலொழுகு’ என்ற நூல் கூறுகிறது.

**2) பாண்டியர்கலகத்தைஅடக்குதல்**

திருச்சிராப்பள்ளியில் சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிருந்த போது தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் பாண்டியர் கலகத்தில் ஈடுபட்டிருந்தனர். எனவே அக்கலகத்தை அடக்க தளவாய் அரியநாதரை அனுப்பி

வைத்தார் விஸ்வநாதர். கயத்தாரைச் சுற்றி சிற்றரசர்களாக ஆட்சி செய்து வந்த பஞ்ச பாண்டியர்கள் அரியநாதருடன் போர் புரிந்தனர். ஆனால், நீண்ட காலமாகியும் போர் முடிவடைய வில்லை, எனவே, விஸ்வநாதர் ராஜதந்திர முறையைப் பின்பற்றி இந்த சிற்றரசர்களை பாளையக்காரர்கள் பட்டியலில் சேர்த்து திருநெல்வேலிப் பகுதியில் அமைதியை நிலைநாட்டினார். மேலும் திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகளை வெட்டி சாலைகளை அமைத்துக் கொடுத்தார். இதனால் கள்ளர்கள் தொல்லை ஒழிந்தது. அத்துடன் போக்குவரத்தும் மேம்பட்டது. நெல்லையப்பர் கோவில் பழுதுபார்க்கப்பட்டது. நெல்லை நகரம் விரிவாக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகளும் செய்யப்பட்டன.

**3) கம்பத்தைக்கைப்பற்றுதல்**

கம்பம், கூடலூர் ஆகிய அரசுகள் சோழர் உறவைக் கூறிக் கொண்டு வரி செலுத்த மறுத்தன. எனவே விஸ்வநாதர் தனது நம்பிக்கைக்குரிய ராமபத்திரநாயக்கர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்படை எதிரிகளை வென்று கம்பம், கூடலூர் பகுதி ஆட்சியாளர்களை கப்பம் கட்டுமாறு செய்தது. ராமபத்திரநாயக்கரின் சேவைக்கு வடகரைபாளையம் பரிசாக வழங்கப்பட்டது.

**4) வேணாட்டைக்கைப்பற்றுதல்**

விஜயநகரத்து அரசர் இராமராஜ்யம் காண முயன்று கொண்டிருந்த போது வேணாட்டுத் திருவடிகள் கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவினான். பேரரசுக்கு செலுத்த வேண்டிய திறையையும் செலுத்தவில்லை. எனவே, வித்திலராயர் தலைமையில் பேரரசர் ஒரு படையை அனுப்பினார். அப்படைக்குத் துணையாக விஸ்வநாத நாயக்கர் படையும் சென்றது. கோட்டடாறு, சுசீந்திரம் முதலிய பகுதிகள் கைப்பற்றப்பட்டது திருவடிகள் சரணடைந்தார்.

**5) விஸ்வநாதர்அறிமுகப்படுத்தியபாளையக்காரர்முறை**

இப்போதுள்ள மதுரை, திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களும், திருவாங்கூரின் ஒரு பகுதியும் விஸ்வநாதர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இந்த பரந்த நாட்டில் சிறப்பாக ஆட்சி செய்வதற்காக விஸ்வநாதர் 'பாளையக்காரர் முறையை அறிமுகப்படுத்தினார். இந்த முறையானது விஜயநகர நிர்வாக அமைப்பு முறையைப் போன்று காணப்பட்டது. இதன்படி நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒரு படைத் தலைவரே நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இந்தப் புதிய ஆட்சி முறையை அமைக்க

அரியநாத முதலியார் பேருதவி புரிந்தார். இந்தப் புதிய முறையின் மூலம் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது

**6) விஸ்வநாதரின்ஆட்சித்திறன்**

விஸ்வநாதர் காலத்தில் ஆட்சியில் அவருக்கு உதவியாக இருந்தவர்கள் தளவாய் அரியநாதரும், ராமபத்திர நாயக்கர் என்பவரும் ஆவர். இவர்கள் விஸ்வநாதரிடம் விசுவாசமாகவும், அன்பாகவும் இருந்தனர். நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட உதவி செய்தனர்.

விஸ்வநாதர் காலத்தில் உழவுவரி, தறிவரி, பாளையக்காரர் கொடுத்துவந்த வரி, முத்தெடுத்தல், மீன்பிடித்தல், சங்கு எடுத்தல் ஆகிய தொழில்களில் இருந்து கிடைத்த வரிகள் ஆகியவை நாட்டின் முக்கிய வருவாயாக இருந்தது. இவர் நாணயங்களை வெளியிட்டார். இதன் மூலம் விஸ்வநாதர் முழு அதிகாரம் செலுத்தும் பொறுப்பு பெற்றிருந்ததை அறியலாம்.

விஸ்வநாதர் கோவில் திருப்பணிகளையும் மேற்கொண்டார். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை தம் கைப்பொருளை செலவிட்டு செப்பனிட்டார். அங்குள்ள ஆயிரங்கால் மண்டபம் இவர் ஆட்சிக்காலத்தில் எழுப்பப்பட்டதாகக்கருதப்படுகிறது.

இவ்வாறு 35 ஆண்டுகள் ஆட்சி செய்த விஸ்வநாத நாயக்கர் 1564-ல் தனது 69-ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் இறுதி வரை விஜயநகரப் பேரரசர்களுக்கு விசுவாசமாகவும், உண்மை ஊழியருமாகச் செயல்பட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் மதுரை நாட்டில் அமைதி நிலவியது. குழப்பம் ஒழிந்தது. பொதுமக்களுக்கு பாதுகாப்பு கிடைத்தது. பயிர்த்தொழிலும், கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்து நாடு செழிப்பாக இருந்தது.

## திருமலைநாயக்கர் (1623-1659)

மதுரையை ஆண்ட நாயக்க மன்னருள் மக்கள் மனதில் இன்னும் நிலைத்து நிற்பவர் பெரும் புகழ் கொண்ட திருமலை நாயக்கர் ஆவார். இவர் மதுரை நாயக்கர் பரம்பரையில் ஏழாவது மன்னராக தனது முப்பத்தொன்பதாம் வயதில் ஆட்சியில் அமர்ந்தார் மதுரை தாயக்கர் வரலாற்றில் முதன் முதலில் முழு உரிமை பெற்ற மன்னராக ஆட்சி செய்தவர் திருமலை நாயக்கரே ஆவார். இவர் செய்த அறப்பணிகளும், கலைப் பணிகளும், சமயப் பணிகளும் பிற நாயக்க மன்னர்களைக் காட்டிலும் விஞ்சி நிற்பவையாக உள்ளன,

**திருமலைநாயக்கரின்பண்புநலன்கள்**

திருமலை நாயக்கர் 1584-ம் ஆண்டு முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் திருமலை சவுரி நாயினு அய்யிலுகாரு ஆகும். இவரது தேவியார் பெயர் தோணியம்மை, உருத்திராபதி ஆகும்.

திருமலை நாயக்கர் வீர உணர்வு மிக்கவர். எதிலும் தொடர்ந்து போரிடும் மனவலிமை வாய்ந்தவர். போர்க்கோலம் பூண்டு போர்க்களம் சென்றவர். மேலும் இவர் சிறந்த சமய நெறியாளர். நாட்டில் நிலவி வந்த பண்புக்கும், மரபுக்கும் மதிப்பளித்தார். இறைவனிடம் இடைவிடாத ஈடுபாடு காட்டிய பக்தியாளர். வெளிநாட்டு கிறிஸ்தவ சமயமும் வளர இடம் கொடுத்த சமயப் பொறையாளர். திருமலை மன்னர் அறிவும், ஆற்றலும், சுறுசுறுப்பும் கொண்டவர். சிறந்த அறநெறியாளர். நாட்டில் அவ்வப்பொழுது எழுந்த சிக்கல்களுக்கு உடனுக்குடன் தீர்வு கண்டார்.

சிறந்த அன்புள்ளம் கொண்டவர் திருமலை மன்னர். தனது அதிகாரிகளிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்களது தீரச் செயலை உரிய வேளையில் பாராட்டி பரிசுகள் அளித்தார். சிறந்த கலை ரசிகரான திருமலை மன்னர் கலையை வளர்த்தார். கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். மேலும் இவர் ஒரு சிறந்த கட்டிடக் கலைஞர். இவர் எழுப்பிய ராய கோபுரங்களும், மண்டபங்களும், கோவில்களும் இன்றும் அவரது புகழை பறைசாற்றித் திகழ்கின்றன.

**திருமலைநாயக்கரின்பணிகள்**

**1) ஆட்சிஎல்லை**

திருமலை மன்னரின் காலத்தில் மதுரை பெருநாடு, திண்டுக்கல் மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட பெரும் பரப்புடையதாக விளங்கியது. சேதுபதி முதலானோர் திருமலைக்கு உட்பட்டே ஆட்சி செய்தனர். அரசின் நிர்வாகத்தை பல்வேறு அதிகாரிகள் இருந்து கவனித்து வந்தனர். இவர்கள் தளவாய், பிரதானி, இராயசம், தானாதிபதி, ஆளுநர் என்று அழைக்கப்பட்டனர். திருமலை மன்னரின் புகழ் பெற்ற படைத் தலைவர் இராமப்பையன் என்பவராவார். இவர் திருமலை நாயக்கர் நடத்திய போர்களில் எல்லாம் பெரும் பங்கு கொண்டு மாபெரும் வெற்றி தேடித்தந்தார்.

**2) தலைநகர்மாற்றம்**

முத்துவீரப்ப நாயக்கர் 1616-ல் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றியிருந்தார். மதுரையில் 1623-ல் முடிசூட்டிக் கொண்ட திருமலை 1634-ல் தலைநகரை மறுபடியும் மதுரைக்கு மாற்றிவிட்டார். இதற்குப் பல காரணங்கள்

கூறப்படுகிறது. திருமலை நாயக்கருக்கு மண்டைச்சளி நோய் ஏற்பட்டது. மருந்துகள் அருந்தியும், நேர்த்திக் கடன் செய்தும் தீரவில்லை. மதுரை மீனாட்சி அம்மன், சோமசுந்தரப் பெருமாள் அருளால் நோய் தீர்ந்ததால் மதுரையில் நிலையாகத் தங்கி ஆட்சி செய்வேன் என்று வேண்டிக் கொண்டார். அதன்படி நோய் தீர்ந்ததாகவும், எனவே மதுரையைத் திரும்பவும் தலைநகர் ஆக்கியதாகவும் சொல்லப் படுகிறது.

மேலும் பல காரணங்கள் சொல்லப்படுகிறது. விஜயநகரப் பேரரசிலிருந்து விடுபட்டுக் கொண்ட திருமலை நாயக்கர், விஜயநகர அரசர் ஸ்ரீரங்கன் எளிதில் தலைநகர் திருச்சியை வெற்றியடைந்துவிட வாய்ப்பு இருப்பதாக கருதினார். அத்துடன் மதுரை நாட்டின் மைய இடத்தில் இருந்தது. நல்ல முறையில் ஆட்சி செய்ய வேண்டுமானால் தலைநகர் நாட்டின் மத்தியில் இருக்க வேண்டும் என்று கருதினார். எல்லாவற்றிற்கும் மேலாக மதுரை தொன்ம சிறப்பும், சமயச் சிறப்பும் வாய்ந்த பெருநகராக இருந்தது. இந்தக் காரணங்களினால் திருமலை திருச்சியிலிருந்து தலைநகரை மதுரைக்கு மாற்றினார்.

**3) திருமலைநாயக்கர்நடத்தியபோர்கள்**

திருமலை நாயக்கர் ஆட்சி பீடம் ஏறியதும் மதுரை நாட்டைப் பாதுகாக்க இரண்டு கோட்டைகளைக் கட்டினார். இருபதாயிரம் வீரர்கள் கொண்ட படையைத் திரட்டினார். திருமலை நாயக்கரின் காலத்தில் இருந்த புகழ் பெற்ற தளபதி இராமப்பையன் மேற்கொண்டு நடத்திய போர்கள் பற்றி 'இராமப்பையன் அம்மானை' என்ற வாய்மொழி இலக்கிய நூல் எடுத்துக் கூறுகிறது.

**a) மைசூர்ப்போர்கள்**

திருமலை நாயக்கர் முதன் முதலில் நடத்திய போர் மைசூர்ப் போர் ஆகும். இப்போர் 1633-ல் நடைபெற்றதாகப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார். அப்போது மைசூரில் பேராசை மிக்க மன்னராக இருந்தவர் சாமராஜ உடையார் என்பவர் ஆவார். இவர் மதுரை நாட்டின் செழிப்பைக் கண்டு பொறாமை கொண்டார். சேலம் உட்பட வடமேற்கில் சில பகுதிகளைக் கைப்பற்ற எண்ணினார். எனவே தனது தளபதி ஹராசுராநந்த ராஜா என்பவரின் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினார். அப்படை திண்டுக்கல் வரை முன்னேறியது. இதனை அறிந்த திருமலை நாயக்கர் இராமப்பையன் தலைமையில் பெரும் படையைத் திரட்டி திண்டுக்கல்லுக்கு அனுப்பினார். கன்னிவாடி பாளையக்காரர்களின் உதவியுடன் மைசூர் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அந்தப் படைகள் மைசூர் வரை விரட்டியடிக்கப்பட்டன. வெற்றி வீரராகத் திரும்பிய இராமப்பையனுக்கு பரிசுகள் அளித்துப் பாராட்டினார் திருமலை

நாயக்கா். இவ்வெற்றியால் நாயக்கரின் படை வன்மையும் ஆட்சித் திறனும் மேன்மையுற்றன.

**b) திருவாங்கூர்மீது படையெடுப்பு**

திருவாங்கூர் ராஜாவாக இருந்த உன்னி கேரளவர்மா வழக்கம் போல் கட்டி வந்த கப்பத்தைக் கட்ட மறுத்துவிட்டார். எனவே, 1634ல் திருமலை நாயக்கர் இராமப்பையன் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இரவிக்குட்டிப்பிள்ளை தலைமையிலான திருவாங்கூர் படைகள் கணியாகுளம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் நாயக்கர் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. வெற்றி வீரனாக நாடு திரும்பினார் இராமப்பையன். இதற்குப் பிறகு திருவாங்கூர் மன்னர் கப்பம் கட்ட ஒப்புக் கொண்டார்.

**c) சேதுபதியுடன்போர்**

இராமநாதபுரத்துச் சீமையை சேதுநாடு என்றும், மறவர் சீமை என்றும் கூறுவர். சேது நாட்டு மறவர் குல மன்னர்கள் சேதுபதிகள் எனப்பட்டனர். சேது நாடு மதுரை நாயக்கர்களுக்கு அடங்கிய நாடாகவே இருந்து கப்பம் கட்டி வந்தது. இந்த மறவர் நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. குட்டன் சேதுபதி (கி.பி.1623-35)யின் மரணத்திற்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் சடையக்கத்தேவர் மன்னரானார். ஆனால் அவரது சகோதரர் தம்பி என்பவர் அரியணைக்குப்போட்டியிட்டார்.

சடையக்கத்தேவர் கப்பம் கட்டுவதை நிறுத்தியதால் திருமலை நாயக்கர் தம்பியை ஆதரித்தார். அவருக்கு ஆதரவாக இராமப்பையன் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்படை இராமநாதபுரம் சென்று அதனைக் கைப்பற்றியது. சேதுபதி தப்பி இராமேஸ்வரம் ஒடிவிட்டார். ஆனால் விரட்டிச் சென்ற நாயக்கர் படைகள் சடையக்கத் தேவரை கைது செய்து மதுரைக்கு அனுப்பி வைத்தன. தம்பி சேதுபதி ஆக்கப்பட்டார். இப்போரில் போர்ச்சுக்கீசியர்கள் நாயக்கரை ஆதரித்தனர். அந்த உதவிக்காக அவர்களுக்கு ஆலயங்கள் கட்டவும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவும் உரிமை வழங்கினார் திருமலை நாயக்கர். வெகு விரைவில் சடையக்கத்தேவர் தம்பியினால் கொல்லப்பட்டார். அதன்பிறகு திருமலை நாயக்கர் மறவர் நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து இராமநாதபுரத்தை இரகுநாதத்தேவருக்கும், சிவகங்கையைத் தம்பிக்கும், திருவாடானையை தணக்கத் தேவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். தனது சகோதரர்கள் மரணத்திற்குப் பிறகு, இரகுநாததேவர் இராமநாதபுரம் முழுமைக்கும் சேதுபதியானார். இவர் திருமலை நாயக்கருக்குப் பல போர்களில் ஆதரவாக உதவி செய்தார்.

**4) விஜய நகருடன் போர்**

விஜய நகருக்கும், பீஜப்பூருக்கும் எதிரான நீண்டதொரு போரில் திருமலை நாயக்கர் ஈடுபட்டார். விஜய நகரப் பேரரசர் மூன்றாம் வேங்கடர் காலத்தில் சிதைவுற்ற விஜய நகரப் பேரரசில் அரசுரிமைப் போட்டி ஏற்பட்டு அரசு பலவீனமடைந்தது. வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்த வேங்கடர் செஞ்சி நாயக்கருடன் தொடர்பு கொண்டார். இதனை விரும்பாத மதுரை, தஞ்சை நாயக்கர்கள் வேங்கடருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். ஆனால் இதில் தோல்வி யடைந்தனர்.

வேங்கடருக்குப் பிறகு கி.பி. 1642-ல் பதவி ஏற்ற மூன்றாம் ஸ்ரீரங்கன் காலத்தில் பேரரசுக்குக் கப்பம் கட்டாமல் முழு உரிமை பெற்ற மன்னராக இருக்க விரும்பினார் திருமலை நாயக்கர். எனவே, பேரரசுக்கு எதிராக செஞ்சி, தஞ்சை நாயக்கர்களுடன் கூட்டுச் சேர்ந்து சதித் திட்டங்கள் தீட்டினார். ஆனால் இந்தத் திட்டத்தை தஞ்சை நாயக்கர் அம்பலப்படுத்தி விட்டார். எனவே பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கன் மதுரை நாயக்கர் பகுதியை நசுக்க தெற்கு நோக்கி படையெடுத்து வந்தார். திருமலை நாயக்கருக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இந்து மன்னர்களின் ஆதரவு கிடைக்காததால், கோல்கொண்டா சுல்தானின் உதவியை நாடினார். அதன்படி கோல்கொண்டா சுல்தான் வேலூரைத் தாக்கத் தூண்டினார். திருமலை நாயக்கர். கோல்கொண்டா சுல்தான் வேலூரைத் தாக்கவே, தனது தலைநகரைக் காப்பாற்றும் பொருட்டு ஸ்ரீரங்கன் வேலூருக்குத் திரும்பினான்.

விஜய நகரப் படைகளுக்கும், கோல்கொண்டா சுல்தானின் படைகளுக்குமிடையே கடுமையான போர் கி.பி. 1646-ல் நடைபெற்றது. தோற்றுப் போன ஸ்ரீரங்கன் முதலில் தஞ்சைக்கும், பின்னர் மைசூருக்கும் ஓடினான். பின் மைசூரிலேயே தங்கினான். இவர் கி.பி. 1672-ல் இறந்தான். ஸ்ரீரங்கனே விஜயநகரத்தின் கடைசி வாரிசு ஆவார்.

கோல்கொண்டா சுல்தானின் வேலூர்ப் படையெடுப்பால் விஜயநகரத்தின் ஆதிக்கத்திலிருந்து திருமலை நாயக்கர் விடுபட்டாலும், தமிழகத்துக்குள் மறுபடியும் முஸ்லிம்களை வரவழைத்த பழி ஏற்பட்டுவிட்டது. வேலூரில் வெற்றி கண்ட கோல்கொண்டா சுல்தானின் படைகள் நாடு திரும்பவில்லை. தொடர்ந்து செஞ்சியை முற்றுகையிட்டன. இச்சமயத்தில் பீஜப்பூர் சுல்தானும் இந்த முற்றுகையில் சேர்ந்து கொண்டார். இந்த பகைக் கூட்டிலிருந்து செஞ்சியைப் பாதுகாக்க திருமலை எடுத்த முயற்சிகள் பலன்தரவில்லை. 1648-ல் செஞ்சியை வெற்றி கண்ட முஸ்லீம் படைகள் தஞ்சையைத் தோற்கடித்தது. மதுரையை அச்சுறுத்தின. ஆனால், திருமலை நாயக்கர் கள்ளர் படையின் ஆதரவுடன் பீஜப்பூர் படைகளை முறியடித்து அவர்களை

விரட்டியடித்தார். ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்குப் பின், முஸ்லீம்களை மறுபடியும் தமிழகத்திற்குள் வரவழைத்த பழியை திருமலை நாயக்கார் பெற்றார்.

**e) மைசூர் மூக்கறுப்புப்போர்**

பேரரசர் ஸ்ரீரங்கனுடன் சேர்ந்து மைசூர் மன்னர் கந்தர்வ நரசராசர் வேலூரை மீட்க முயன்ற போது, மீட்க முடியாதவாறு வஞ்சகச் செயல் புரிந்த திருமலை நாயக்கரை பழிவாங்கத் துடித்தார் மைசூர் மன்னர். எனவே தனது தளபதி அம்பையா தலைமையில் ஒரு படையை, மதுரையை நசுக்க அனுப்பினார். மைசூர் படை சேலம் மாவட்டத்திலுள்ள வளமிக்க சத்தியமங்கலத்தை கி.பி. 1656-ல் எவ்வித எதிர்ப்பும் இன்றி எளிதாகக் கைப்பற்றியது. பின்னர் மதுரையை நோக்கி முன்னேறியது. அப்போது வழியில் உள்ள ஊர்களையெல்லம் கொள்ளையடித்தனர். அதுமட்டுமல்லாது மன்னரின் கட்டளைப்படி, கையில் அகப்பட்ட வீரர்கள் மற்றும் ஆண், பெண் மற்றும் குழந்தைகளின் மூக்குகளை அறுத்து மைசூருக்கு அனுப்பிப் பரிசுகளையும் பெற்றனர்.

அப்போது திருமலை நாயக்கர் வயோதிக நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தார். மைசூர்ப் படையின் தாக்குதலில் இருந்து மதுரையைக் காப்பாற்ற இரகுராத சேதுபதியின் உதவி கேட்டு விண்ணப்பித்தார். அவரும் ஒரு படையை அனுப்பினார். மைசூர் படைகளும், திருமலை மற்றும் சேதுபதியின் கூட்டுப் படைகளும் திண்டுக்கல் அருகே போரிட்டன. இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. மைசூர் படைகள் தோற்று ஓடின. அந்தப் படைகள் மைசூர் வரை விரட்டியடிக்கப்பட்டன. அத்துடன் பழிவாங்கும் பொருட்டு மைசூர் வீரர்களையும் மற்றவர்களையும் மதுரைப் படையினர் மூக்கறுத்தனர். இந்த வெற்றி மதுரையை அழிவிலிருந்து காப்பாற்றியது.

இவ்வாறு திருமலை நாயக்கர் தனது வாழ்நாளில் தொடர்ந்து போரிட்டு வந்தார். எல்லாப் போர்களிலும் வெற்றியையே கண்டார். இதன் மூலம் தனது மக்களுக்குப் பாதுகாப்பளித்து நாட்டில் அமைதியை நிலை நாட்டினார். இது திருமலை நாயக்கரின் பெரும் சாதனையாகும்.

**4) திருமலைநாயக்கரின்பிற பணிகள்- மதுரை கோவில் திருப்பணி**

திருமலை நாயக்கர் தனது வெற்றிகளுடன் கோவில் திருப்பணிகளும், கலைப் பணிகளும் செய்து இறவாப் புகழ் பெற்று விளங்குகிறார். திருமலை நாயக்கர் கடவுள் பக்தி மிக்கவர். இவரது உருவச் சிலைகள் பெரும்பாலானவை ஆண்டவனை வணங்கி நிற்கும் அடியாராகவே இவரைக் காட்டுகின்றன. திருமலை நாயக்கர் மதுரையை தலைநகராக்கியதும் கோவில் பொறுப்புக்களை அபிஷேகப் பண்டாரத்தாரிடம் இருந்து பெற்றார். அப்போது கோவில் பணிகளில் சீர்கேடு காணப்பட்டது. மதுரைக் கோவிலில்

வழிபாடு நடத்தி வந்த விக்கிரம பாண்டிய பட்டர் வகைக்கும், குலசேகரப் பாண்டியர் பட்டர் வகைக்கும் இருந்த வேறுபாடுகளை நீக்கி அவர்கள் செய்ய வேண்டிய செயல்களை வரையறுத்தார். இதன்படி விக்கிரம பாண்டிய பட்டர் வகையினர் கருவறையில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தனர். குலசேகரப் பாண்டிய பட்டர் வகையினர் உற்சவ மூர்த்திகளுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தனர். நாட்டின் வருவாயில் இலட்சம் பொன்னுக்கு ஆயிரம் பொன் வீதம் இறை வழிபாட்டுக்கு எழுதி வைத்தார் திருமலை நாயக்கர்.

**கட்டிடத்திருப்பணிகள்**

திருமலை நாயக்கர் தனது ஆட்சிக் காலத்தில் பல அரிய கட்டிடங்கள் கட்டி பெரும் புகழ் பெற்றார். மதுரையில் ஆட்சி செய்யத் தொடங்கியதும் முதன் முதலாகச் செய்தது மிகப் பெரிய தெப்பக்குளம் வெட்டியதாகும். இது மாரியம்மன் தெப்பக்குளம் என்றும், வண்டியூர் தெப்பக்குளம் என்றும் அழைக்கப்படுகிறது. இதில் அழகிய இயற்கை சூழல் அமைந்த மைய மண்டபம் மற்றும் நான்கு மூலைகளில் விமானத்தோடு அமைந்த நான்கு மண்டபங்களும் அழகாகக் காட்சியளிக்கின்றன. இத்தெப்பக்குளம் தெற்கு வடக்கில் ஆயிரம் அடி நீளமும், கிழக்கு மேற்கில் 950 அடி நீளமும் 950 லட்சம் சதுர அடி பரப்பளவு உடையது. குளத்தைச் சுற்றி கருங்கல்லால் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இத்தெப்பக்குளம்வேலைகள் கி.பி. 1675-ல் முடிவடைந்தது.

நாயக்கர் கட்டிய கட்டிங்களுள் புது மண்டபம் அல்லது வசந்த மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படுகிறது. இது கி.பி. 1628-ல் கட்டத் தொடங்கி கி.பி. 1635-ல் முடிவடைந்தது. இதில் 124 சிற்பத் தூண்கள் உள்ளன. மேல்தளம் கல்லால் மூடப்பட்டுள்ளது. இதன் உள்வரிசைக் கால்களில் திருமலை நாயக்கர் உட்பட பத்து நாயக்கர்களின் உருவங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் குளிர்ச்சியாக இருக்கும் பொருட்டு மண்டபத்தின் தெற்கு, வடக்குப் பக்கங்கள் தண்ணீர் நிரப்பி வைக்கும் பொருட்டு அகழி போல் உள்ளது. தற்போது இந்த மண்டபம் முழுவதிலும் பலவகையான கடைகள் உள்ளன.

## ராணி மங்கம்மாள் (1689-1706)

1689-ல் மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் வைசூரியால் இறந்த போது, அவர் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள். சில மாதங்களுக்குப் பிறகு ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அதன் பிறகு சில நாட்களில் தானும் உயிர் விட்டாள்.

இக்குழந்தை பிறந்த மூன்றாம் மாதத்திலேயே விஜயரங்க சொக்கநாதன் என்ற பெயரில் அரியணையில் அமர்த்தப்பட்டான். அவனுடைய பாட்டியும், சொக்கநாதரின் மனைவியுமான மங்கம்மாள் பகர ஆட்சியாளராக (Reant) பதினெட்டு ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார். வீழ்ச்சிப் பாதையில் விரைந்து கொண்டிருந்த மதுரை நாட்டில் மங்கம்மாள் தான் செய்த நற்பணிகள் மூலமும், பின்பற்றிய கொள்கைகள் மூலமும் நாட்டைக் கட்டிக் காத்து சிதைவைத் தவிர்த்தாள்.

**1) மங்கம்மாளின்கொள்கைகள்**

மங்கம்மாள் சாதுரியமாகப் பின்பற்றிய கொள்கைகளால் மதுரை அழிவிலிருந்து தடுக்கப்பட்டது. எதிரிகளைப் பகைப்பதைக் காட்டிலும் அவர்களிடம் நட்புக் கொள்வது சிறந்தது என்று நினைத்தாள். இதற்கு அரசி கோழை என்பது பொருளல்ல. இக்கொள்கையைப் பின்பற்றியே அரசியல் நெருக்கடிகளைச் சமாளித்தாள். இக்கொள்கை மதுரைக்கு அழிவைத் தரவில்லை, மேலும் இவளது பகைவரும் நண்பராயினர். நாட்டு நடப்புக்குத் தக்கவாறு தம் கொள்கைகளைத் தீட்டினாள். போர்ப் பிரகடனம் செய்யும் முன்பு எதிரியின் பலத்தையும் தம் பலத்தையும் ஒப்புக் நோக்கினாள். மேலும் மங்கம்மாள் ஆட்சி அவள் குடிமக்களுக்குச் - செய்த பல நன்மைகளால் புகழ் பெறுகிறது. மங்கம்மாள் கலையையும், இலக்கியத்தையும் போற்றிய பெருந்தகை ஆவாள்.

**முகலாயர்படையெடுப்பு**

இராணி மங்கம்மாள் காலத்தில் ஔரங்கசீப் பீஜப்பூர், கோல்கொண்டா, செஞ்சி ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு தஞ்சை மராட்டியரை அடிமைப்படுத்தி தென்னகத்து நாயக்கங்களை அடக்க முற்பட்டார். ஔரங்கசீப்பின் தளபதி சுல்பிகர்கான் கி.பி. 1697-ல் இவ்வெற்றிகளைப் பெற்று தெற்கு நோக்கி முன்னேறினான் முகலாயர்களின் வலிமையையும், நாயக்கர்களின் பலவீனத்தையும் உணர்ந்த மங்கம்மாள் முகலாய மன்னருக்குப் பணிந்து திறைசெலுத்த இணங்கினாள். முகலாயத் தளபதிக்கு விலை உயர்ந்த பொருட்களைப் பரிசாக அளித்தாள். இவ்வாறு முகலாயரின் பேராண்மையை பெயரளவில் ஒப்புக் கொண்டதால் மதுரை முகலாயர் தாக்குதலிலிருந்துதப்பியது.

மேலும் இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மராட்டியர்களிடத்தில் இழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டாள். கர்நாடக நவாபாக இருந்த தாதுக்கானின் துணையுடன் உடையார்பாளையச் சிற்றரசன் கைப்பற்றி வைத்திருந்த

பகுதிகளையும் மீட்டார். மராட்டியர் ஏற்படுத்திய தொல்லைகள் யாவும் பணத்தின் துணை கொண்டு தவிர்க்கப் பட்டன.

**3) மைசூர் படையெடுப்பு**

இப்படி தனக்கு இருந்த தொல்லைகளை ஒவ்வொன்றாக நீக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் நாடு பிடிக்கும் பேராசை கொண்ட மைசூர் மன்னர் சிக்கதேவராயர் மதுரையின் எல்லைகளைத் தாக்கினார். சேலம், கோயம்புத்தூர் இரண்டையும் பிடித்த பின்பு திருச்சியையும் கைப்பற்றத் தனது தளபதி குமரய்யாவை அனுப்பி வைத்தான். திருச்சியை குமரய்யா முற்றுகையிட்டார். இச்சமயத்தில் நல்ல காலமாக மராட்டியர்கள் மைசூரைத் தாக்கவே குமரய்யா படைகளை பின்வாங்கிச் சென்றார். இவ்வாறு திருச்சியையும் மங்கம்மாளால் காப்பாற்ற முடிந்தது. மைசூர் தொல்லையும் ஒழிந்தது.

**4) திருவிதாங்கூர்படையெடுப்பு**

அடுத்து மங்கம்மாள் திருவிதாங்கூருடன் போர் தொடுக்க வேண்டியதாயிற்று. அப்போது திருவிதாங்கூர் மன்னராக இருந்த ரவிவர்மன் மதுரைக்கு கப்பம் கட்டவில்லை. மேலும் சதிச் செயலில் ஈடுபட்டு கப்பம் வாங்கச் சென்ற நாயக்கர் படைகளை கல்குளம் என்ற இடத்தில் கொன்று குவித்தான். இந்த அக்கிரமத்துக்கு பழிவாங்கவும், திறைப் பாக்கியைப் பெறவும் நசரப்பையன் தலைமையில் நாயக்கர் படை திருவிதாங்கூரில் புகுந்தது. இரவிவர்மன் தோற்கடிக்கப்பட்டான். எனவே மங்கம்மாளின் மேலாதிக்கத்தை நிபந்தனை இல்லாமல் ஏற்றுத் திறைபாக்கியையும் தீர்த்தான். மேலும் இராணி மங்கம்மாளுக்கு பொன்னும் பொருளும் காணிக்கையாக வைத்தான். பெருமளவு பொருட்களையும் போர்க் கருவிகளையும் பெற்றுக் கொண்டு நாயக்கர் படை நாடு திரும்பியது.

**5) தஞ்சைப்போர்**

தஞ்சையை ஆண்ட மன்னர் ஷாஜி கைப்பற்றிக் கொண்ட சில பகுதிகளை மீட்பதற்காக மங்கம்மாள் 1700-ல் தளபதி நரசப்பையனின் தலைமையில் படை ஒன்றை தஞ்சைக்கு அனுப்பினாள். கொள்ளிடத்தைத் தாண்டிய மதுரைப் படை தஞ்சைப் படையை ஆங்காங்கே தாக்கியது. மதுரைப் படையின் தாக்குதலைப் பொறுக்க முடியாமல் தோற்றுப் போன முதலமைச்சர் பாலாஜி பண்டிதர் மதுரைப் படைகளுக்கு அதிக அளவில் கையூட்டு கொடுத்து தஞ்சையை பகைவரிடமிருந்து காப்பாற்றிக் கொண்டார்.

**6) சேதுபதியுடன்போர்**

மறவர் நாட்டின் கிழவன் சேதுபதி சொக்கநாதர் காலத்திலேயே ஏறத்தாழ முழுச்சுதந்திரம் பெற்றுவிட்டார். திறை செலுத்துவதை நிறுத்தியதுடன் மதுரையை எதிர்க்கவும் துணிந்து விட்டார். எனவே கிழவன் சேதுபதியின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு மங்கம்மாள் கி.பி. 1702-ல் நரசப்பையன் தலைமையில் ஒரு படையை அனுப்பினாள். ஆனால் மறவர் படையிடம் மதுரைப் படை தோல்வியடைந்தது. தளபதி நரசப்பையன் போரில் காயமடைந்து இறந்தார். இதற்குப் பின் மதுரையுடன் தனக்கு இருந்த தொடர்பை அறுத்துக் கொண்டு தன்னாட்சியை ஏற்படுத்தினான் கிழவன் சேதுபதி.

**7) மங்கம்மாளின்சமயப்பொறை**

மறவர் நாட்டிலும் தஞ்சை நாட்டிலும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் பட்டனர். மதுரையில் கிறிஸ்தவர்களுக்கு சமயப்பொறை வழங்கப்பட்டது. கிறிஸ்தவ பாதிரியார்களை மங்கம்மாள் துன்புறுத்தவில்லை. சமயப் பிரச்சாரக் காரணங்களுக்காக சிறை வைக்கப்பட்ட மெல்லோ (Mello) பாதிரியார் விடுதலை செய்யப்பட்டார். தனது தர்பாரில் போசேத் (Bouchet) பாதிரியாரை வரவேற்றாள். கிறிஸ்தவர்களின் விண்ணப்பங்கள் உற்று நோக்கப்பட்டு கேட்டவை வழங்கப்பட்டன. இவை மங்கம்மாளின் சமயப் பெருநோக்கை எடுத்துக் காட்டுகிறது.

**8) மங்கம்மாளின்அறப்பணிகள்**

மங்கம்மாள் நாட்டு மக்களுக்கு செய்து கொடுத்த அறச் செயல்கள் இன்றும் மதுரை நாட்டு மக்களால் பாராட்டப்படுகிறது. மங்கம்மாள் நல்ல சாலைகள் அமைத்து சத்திரங்கள் கட்டினாள். குளங்கள் வெட்டி கால்வாய்களை செப்பனிட்டாள். கி.பி. 1687-லும், கி.பி. 1704-லும் இராணி மங்கம்மாள் உய்யங்கொண்டான் கால்வாயை செப்பனிட்டாள் என்று சாசனங்கள் தெரிவிக்கின்றன. இராமேஸ்வரம் செல்லும் பயணிகளுக்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. அந்த சாலை ஓரங்களில் மரங்களும், சத்திரங்களும், அன்னசச்சாவடிகளும், தண்ணீர் பந்தலும் அமைக்கப்பட்டது. இது பயணிகளின் பயணத்தை இனிதாக்கின. இதனை தெம்மாங்குப் பாடல்கள் ‘மங்கம்மாள் சாலை மலைமேல் சோலை' என்று பாராட்டுகின்றன. கி.பி. 1701-ம் வருட சாசனம் மங்கம்மாள் அன்னச் சத்திரங்களுக்கு நிலங்களைக் கொடுத்ததாகக் கூறுகிறது.

மங்கம்மாள் அழகிய கட்டிடங்கள் கட்டியதாகவும் சொல்லப்படுகிறது. தமுக்கம் விடுதி இவர் கட்டியது என்று ஒருசிலர் கூறுகின்றனர். பழைய இராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம், மத்திய காய்கறி விற்பனையிடம், மதுரைக் கல்லூரி உயர்நிலைப் பள்ளிக்

கட்டிடம், அரசுப் பெண்கள் கல்லூரி கட்டிடம் ஆகியவை மங்கம்மாள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. மங்கம்மாள் சத்திரம் அவரது நினைவுச் சின்னமாகக் கட்டப்பட்டதாகும்.

மங்கம்மாளின் இறுதிக் காலத்தில் மக்களிடம் அவளுக்கிருந்த செல்வாக்கு குறைந்து விட்டது என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணமாக அவள் தளவாய் அச்சய்யாவுடன் கொண்டிருந்த முறையற்ற தொடர்பும், தனது பேரன் விஜயரங்க சொக்கநாதரிடம் ஆட்சியை ஒப்படைக்காமல் இருந்தது ஆகியவை கூறப்படுகிறது. இதனால் மக்கள் வெறுப்படைந்தனர். இவள் அரண்மனை அதிகாரிகளாலேயே சிறை வைக்கப்பட்டு, சிறையிலேயே பசியால் வாடி வருந்தி மாண்டாள் என்று சொல்லப்படுகிறது. கி.பி. 1706-ல் மங்கம்மாள் இறந்தவுடன் அவளது பகர ஆட்சியும் முடிவடைந்தது.

வீழ்ச்சிப் பாதையில் விரைந்து கொண்டிருந்த மதுரையை பல சிக்கலான காலத்தில் கட்டிக்காத்து சிதைவைத் தடுத்தவர் இராணி மங்கம்மாள் ஆவார். பல போர்கள் தவிர்க்கப்பட்டன. சமயப் பணிகள் பல மேற்கொண்டாள். மனிதப் பண்புடன் பிற சமயத்தினருடன் சமயப் பொறையுடன் நடந்து கொண்டாள். சாலைகளும், அன்னச்சாவடிகளும், சத்திரங்களும், தண்ணீர்ப்பந்தலும் அமைத்து புகழ் பெற்றார். மங்கம்மாளின் உருவம் பொற்றாமரைக் குளத்தின் அருகில் இருக்கும் கல்யாண மண்டபத்தில் ஓவியமாகத் தீட்டப்பட்டு அவளுக்கு நினைவுச் சின்னமாகத் திகழ்கிறது.

மங்கம்மாளுக்குப் பிறகு அவளது பேரனும் மூன்றாம் முத்து வீரப்பனின் மகனுமான விஜயரங்க சொக்கநாதன் தனது 17-ம் வயதில் 1706-ல் மதுரை மன்னரானார். இவனது கொடுங்கோன்மை ஆட்சியால் பல தொல்லைகளுக்கு உள்ளானது. பக்தியில் திளைத்த இவன் புத்தியைப் பறிகொடுத்தான். மக்கள் கிளர்ச்சியில் இறங்கினர். மதுரை வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றது. இவர் 1732-ல் காலமானார்.

**6) மீனாட்சி (1732-36)**

விஜயரங்க சொக்கநாதர் இறந்த பின்னர் அவருக்கு வாரிசு இல்லாததால் திருமலை நாயக்கரின் தம்பி குமார முத்துவின் வழிவந்த பங்காரு திருமலையின் மகன் விஜயகுமாரனை தத்து (Adoption) எடுத்துக் கொண்டு விஜயரங்க சொக்கநாதனின் மனைவி மீனாட்சி நாட்டின் ஆட்சியை மேற்கொண்டார். இவளுக்கு ஆசையிருந்தாலும் மங்கம்மாளுக்கு இருந்தது போன்ற ஆற்றல் இல்லை. அரசியல் அறிவும் இல்லை. உலக அனுபவமும் இல்லை. சூழ்ச்சி நிறைந்த அக்கால அரச வாழ்வுக்கு அவள் ஏற்றவளாகவும்

இல்லை. ஆனாலும் பதவி ஆசையால் அரும்புகழ் வாய்ந்த மதுரை நாட்டுக்கு அரசியானார். இவளே மதுரை நாயக்க வம்சத்தின் கடைசி அரசியாவாள்.

**குடும்பக்கலகம்**

மீனாட்சி ஆட்சியிலமர்ந்த காலம் அரசியல் கொந்தளிப்பான காலம். சிற்றரசுகளில் குழப்பமும், அமைதியின்மையும், கர்நாடக நவாபின் அரசியல் நெருக்கடியும் காணப்பட்டகாலம். இந்நிலையில் விஜயகுமாரனின் தந்தையான பங்காரு திருமலைக்கு மதுரை நாட்டு மன்னராகும் ஆசை மனதில் புகுந்தது. தளவாய் வேங்கடாச்சாரியும் அந்த ஆசைக்கு ஆதரவு தந்தார். இருவரும் ஒன்று சேர்ந்து மீனாட்சியை கவிழ்க்க முயற்சித்தனர். முதலில் திருச்சி கோட்டைக்குள் நுழைந்து அரசியை ஆட்சி பீடத்திலிருந்து அகற்ற முயன்றனர். இந்த முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே இருவரும் கூடி அரசுரிமைக்காக கலகம் செய்தனர். வீடு இரண்டு பட்டது. நாட்டில் கலகம் மூண்டது.

**ஆற்காட்டுநவாப்படையெடுப்பு**

நாட்டில் ஏற்பட்ட கலகம் பகைவனுக்கு வசதியாகிவிட்டது. அப்போது ஆற்காட்டை ஆண்டு வந்தவன் நவாப் தோஸ்த் அலிகான். இவன் தக்காணம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர முடிவு செய்தான். மதுரையில் நடந்த உள்நாட்டுக் கலவரத்தைப் பயன்படுத்தி மதுரையைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான். தனது மகன் சப்தர் அலிகான், மருமகன் சந்தா சாகிப் ஆகியோர் தலைமையில் ஒரு படையை அனுப்பினான். இந்தப் படை திருச்சியை அடைந்தது.

அப்போது பங்காரு சப்தர் அலிகானைச் சந்தித்து திருச்சியைப் பிடித்து தனக்குக் கொடுத்தால் முப்பது லட்சம் ரூபய் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் திருச்சி கோட்டை வலுமிக்கமாக இருந்ததால் அதனைப் பிடிக்க முடியாது என்று தெரிந்து கொண்ட சப்தர் அலி சூழ்ச்சியில் இறங்கினான். மீனாட்சிக்கும் பங்காருவுக்கும் மத்தியஸ்தம் செய்து வைப்பதாகக் கூறினான். இதனை மீனட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் பங்காருவுக்கு சாதகமாக சப்தர் அலி தனது முடிவை வெளியிட்டான். அத்துடன் பங்காரு தனக்குக் கொடுப்பதாக வாக்களித்த முப்பது லட்சம் தருமாறு கேட்டு ஒரு படையை திருச்சியில் நிறுத்தினான்.

இச்சூழ்நிலையில் மீனாட்சி சந்தாசாகிபுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கினாள். அமைதி ஏற்படுமாயின் ஒருகோடி ரூபாய் தருவதாகவும் மீனாட்சி கூறினாள். இதற்கிடையில் மீனாட்சிக்கும் பங்காருவுக்கும் நல்லுறவு ஏற்பட்டதாகவும், இதனைக் கண்ட சந்தாசாகிப் ஆற்காடு திரும்பிவிட்டதாகவும்கூறப்படுகிறது.

**மீனாட்சியின்வீழ்ச்சி**

ஆற்காடு திரும்பிய சந்தாசாகிப் 1736-ல் மீண்டும் திருச்சியைக் கைப்பற்ற ஒரு பெரும் படையுடன் வந்தான். மீனாட்சியை தவறான வாக்குறுதிகளால் ஏமாற்றி அரண்மனையைக் கைப்பற்றிக் கொண்டான். கோவிந்தையா ராவணய்யா ஆகியோர் தலைமையில் எண்பதாயிரம் படை வீரர்களை தெற்கு நோக்கி அனுப்பினான். இப்படை திண்டுக்கல்லில் இருந்த பங்காரு நாயக்கரைத் தோற்கடித்து விட்டு மதுரை நோக்கிச் சென்றது. அம்மயநாயக்கனூரில் நடைபெற்றப் போரில் மதுரைப் படை சிதறடிக்கப்பட்டது. சிவகங்கையில் ஒளிந்து கொண்ட பங்காரு இறுதியில் நவாப் அன்வாருதினரின் கைகளாலேயே கொலை செய்யப் பட்டான். மதுரை முஸ்லீம்கள் கையில் வீழ்ந்தது. கொடுத்த வாக்குறுதியை மீறி மீனாட்சியை சிறை வைத்தான் சந்தாசாகிப். வஞ்சகனால் கொலையுண்டு சாவதைப் பார்க்கிலும், நஞ்சுண்டு இறப்பதே மேல் என்று கருதி 1736-ல் நஞ்சுண்டு மாண்டாள் மீனாட்சி. மீனாட்சி அரசியுடன் மதுரை நாயக்கர் பரம்பரையே மறைந்து விட்டது.

இவ்வாறு 207 ஆண்டுகள் நடைபெற்ற மதுரை நாயக்கர்களில் ஆட்சி மீனாட்சி அரசியுடன் 1736-ல் முடிவடைந்துவிட்டது.

## 3. பாளையக்காரர்முறை

ஆட்சிக் நாயக்கர்களின் காலத்தில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதே பாளையக்காரர் முறை ஆகும். விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் நியமிக்கப்பட்டு மதுரையில் முதல் நாயக்கராக விளங்கிய விஸ்வநாத நாயக்கர் தனது தளவாய் அரியநாதரின் அறிவுரையின்படி உருவாக்கிய முறைதான் இந்தப் பாளையக்காரர் முறை ஆகும். இது நாயக்க மன்னர்களுக்குப் பெரிய வலிமையை அளித்தது. நாயக்கர்களின் ஆதிக்கத்தின் கீழ் பணியாற்றிய பாளையக்காரர்கள் தமிழக வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளனர். பாளையக்காரர் முறை தமிழகத்தில் முக்கியமான பொருளாதார, சமுதாய, அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது.

**பாளையக்காரர்முறையின்தோற்றம்**

பாளையம் என்ற சொல் பாளையக்காரரின் நில உடமையைக் குறிப்பிடுகிறது. பாளையத்துக்குத் தலைமை தாங்கியவர் பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டார். பேரரசுக்கு திறை செலுத்ததல், தங்களது பாளையங்களில் நீதி செலுத்துதல் மற்றும்

மன்னருக்குத் தேவையான படைகளைப் பராமரித்தல் போன்ற இவர்களது கடமைகள் மத்திய கால ஐரோப்பாவில் காணப்பட்ட நில மானிய முறையை ஒத்திருந்தது.

இப்போதுள்ள மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களும், திருவாங்கூரில் ஒரு பகுதியும், விஸ்வநாதர் ஆட்சிக்குட்பட்டிருந்த மதுரை நாடாகும். இந்த பரந்த நாட்டில் அரியநாதர் உதவியுடன் 1535ல் பாளையக்காரர் முறையைத் தோற்றுவித்தார். முஸ்லீம் ஆட்சியைப் பரப்பத் தென்னக சுல்தான்கள் எடுத்த முயற்சிகளினாலும் நாடு போர்க்களமாக மாறி நின்றது. அமைதிக் காலம், போர்க்காலம் ஆகிய இரண்டு சூழலுக்கும் பயன்படும் ஆட்சி முறை ஒன்றின் அவசியத்தை விஸ்வநாத நாயக்கரும், அரியநாதரும் உணர்ந்தனர். அதன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆட்சி முறையே பாளையக்காரர் முறை ஆகும். ஆனால் இந்தப் பாளையக்கார முறை விஸ்வநாதரால் கண்டுபிடிக்கப்பட்ட முறை அல்ல. இவருக்கு முன்பே தமிழகத்தில் விஜய நகரப் பேரரசின் ஆட்சியில் ஒருவகை அமரநாயங்கார முறை இருந்து வந்தது. காகத்திய நாட்டை ஆண்ட இரண்டாம் பிரதாபருத்திரன் கடைப்பிடித்த பாளையப்பகுப்பு நெறிகளையும், ஆட்சி முறைகளையும் முன் உதாரணமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. பாளையக்கார ஆட்சி முறை இடைக்கால ஐரோப்பியப் பிரபுக்களின் ஆட்சியின் சாயலைப் போல உள்ளது என்று ஹிராஸ் பாதிரியார் கருதுகிறார். அரசியல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய துறைகளை சீரமைப்பதே இதன் நோக்கமாகும்.

**பாளையக்கார முறையின் அம்சங்கள்**

நாயக்கப் பேரரசு 72 பாளையங்களாகப் பகுக்கப்பட்டது. ஒவ்வொரு பாளையத்திற்கும் 'மரபுரிமை பெற்ற பாளையக்காரர்' பல்வேறு இனங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டு அமர்த்தப்பட்டனர். பாளையங்களை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும், உரிமையும் பாளையக்காரர்களுக்கு அளிக்கப்பட்டன. அமைதி காப்பதும், நீதி வழங்குவதும், வரி வசூலிப்பதும் இவர்களது முக்கியப் பணிகளாகும். பாளையங்களின் அதிகார வரம்புகள் மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டிருந்தன. அவை வருமாறு:

**நிதித்துறை அதிகாரம்**

குடி மக்களிடமிருந்து வரிவசூலிக்கும் முழுப் பொறுப்பும் பாளையக்காரரிடம் விடப்பட்டிருந்தது. அவர்கள் தங்கள் பாளையங்களில் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்கு கொடுக்க வேண்டும். மற்றொரு பகுதியை படை வீரர்களுக்குச் செலவிட வேண்டும். இன்னொரு பகுதியை சொந்த செலவுக்கும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**நீதித்துறைஅதிகாரம்**

பாளையப் பகுதிகளுக்குள் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகளுக்கும் நீதி வழங்கும் தலைமை நீதிமன்றமாகப் பாளையக்காரர்கள் விளங்கினர். பாளையக்காரர்களின் நீதி வழங்கும் அதிகாரங்களில் நாயக்க மன்னர்கள் தலையிடுவதில்லை.

**இராணுவஅதிகாரம்**

பாளையங்கள் தங்கள் வசூல் செய்யும் வரியில் மூன்றில் ஒரு பங்கை இராணுவத்திற்குச் செலவிடும் உரிமை பெற்றிருந்தனர். இதற்கு ஈடாக மைய அரசு வெளியார் தாக்குதலுக்கு உள்ளாகும் போது படை தந்து உதவிட வேண்டும் என பாளையக்காரர்கள் வரன்முறைப்படுத்தப் பட்டிருந்தனர். ஆபத்துக் காலங்களில் படை உதவி அளித்தவர்களுக்கு கப்பத் தொகையில் விலக்கு அளிக்கப்பட்டது. பாளையக்காரர்கள் நாயக்க மன்னர்களிடம் விசுவாசமாக இருப்பதற்காக இவ்வித விலக்கு அளிக்கப் பட்டது.

**பாளையக்காரரின்ஆட்சிப்பகுதி**

பாளையக்காரர்கள் தங்களுக்கென்று ஒரு அரசாங்க அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். இவர்களின் அன்றாட நடைமுறைகள் ஒரு அரசரின் அதிகாரங்களை ஒத்திருந்தன. ஆட்சித் துறையில் தனக்கு உதவியாக 'பிரதானி' என்ற அதிகாரியை வைத்திருந்தார். தனக்கென்று ஒரு அரசவையை அமைத்துக் கொண்டு முக்கியமான வேலைகளில் அரசவையைக் கூட்டினார் பாளையக்காரர். வரிகள் வசூலித்து, நீதி செலுத்தி, அமைதியை நிலைநாட்டி எல்லாவற்றிற்கும் மேலாக தனக்கென்று ஒரு படையும் வைத்திருந்தார். மேலும் பாளையக்காரர் சில பொருளாதாரப் பணிகளையும் மேற்கொண்டனர். தர்மப் பணிகள் செய்தார். நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொண்டார். பாளையத்தின் நிர்வாகியாகவும், படைகளின் தலைவனாகவும் விளங்கினார். நிலமானியப் பிரபுவைப் போன்று பாளையக்காரரும் பொதுவாக மாவட்டத்தின் வளமான நிலப்பகுதியை தனது விவசாயத்துக்கு வைத்துக் கொண்டார். ஏனைய பகுதிகளை ஷெரோக்கள் என பொதுவாக அழைக்கப்பட்ட குடிமக்களின் முக்கியமானவர்களுக்கு பங்கீடு செய்யப்பட்டது. சேர்வைக்காரர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட நிலங்களுக்குப் பதிலாக ராணுவ சேவை செய்ய வேண்டும். இந்த சேர்வைக்காரர்களின் அதிகாரத்திற்குட்பட்டவர்கள் அமைதிக் காலத்தில் நிலங்களில் பயிர் செய்து போர்க்காலங்களில் ஆயுதம் ஏந்தினர். இதன்படிதான் பாளையக்காரர்கள் குறுகிய காலத்தில் போர் வீரர்களைத் திரட்ட முடிந்தது.

நிலத்தைப் பயிரிடும் பொறுப்பு பள்ளர்கள் என்றழைக்கப்பட்ட உழைப்பாளர் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்களை நிலமானிய முறையில் உள்ள நில அடிமைகளுடன் (Serts) ஒப்பிடலாம். இந்தப் புல்லர்கள் பாளையக்காரர்களின் வயல்களில் பயிரிட்டதால் உயிர் வாழ்வதற்காக சிறிதளவு தானியம் பெற்றார்கள். ஆனால் ஷேரோக்களின் வயல்களில் உழைத்தவர்களுக்கு அறுவடையில் ஒரு குறிப்பிட்ட பங்கு கொடுக்கப்பட்டது. இவ்வாறு புல்லர்களின் உழைப்பு சுரண்டப்பட்டது.

**பாளையக்காரரின்படை அமைப்பு**

தங்களது உரிமைகளை நிலைநாட்டவும், சமுதாய அந்தஸ்து பெறவும் படை பரிவாரங்கள் தேவை என பாளையக்காரர்கள் கருதினர். எனவே வருவாயில் படைச் செலவு அதிகம் செய்தனர். பாளையக்காரர்களின் ராணுவத்தில அமரம் சேவகர், கட்டுப்புடி சேவகர் மற்றும் கூலிச் சேவகர் என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். முதல் இரண்டு பிரிவினருக்கு கூலி நிலமாகக் கொடுக்கப்பட்டது. மூன்றாம் பிரிவினர் பணமும் தானியமும் கூலியாகப் பெற்றனர்.

அமரம் சேவகர்கள் மற்றும் கட்டுப்புடி சேவகர்களுக்கு நிலங்கள் பரம்பரை முறையில் அளிக்கப்பட்டன. இது அனுமதியின் பேரில் தான் அளிக்கப்பட்டதே தவிர உரிமை அடிப்படையில் அல்ல. உண்மையில் இவர்கள் ராணுவச் சேவை செய்து குறைந்த அளவு கூலிக்குப் பதிலாக பயனற்ற நிலத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள் சொந்தச் செலவில் ஈட்டி, வெடிகள் போன்றவற்றை வாங்கி பாளையக்காரர்களுக்குப் பணி செய்தனர். நெருக்கடி காலங்களில் மட்டுமே கூலிச் சேவகர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் பாளையக்காரர்கள் இட்ட கட்டளைகளை பணிவுடன் நிறைவேற்றினர். தங்கள் எஜமானர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே கூலிச் சேவகர்களின் நோக்கமாகும்.

**பாளையக்காரர்களின் காவல் முறை**

பாளையக்காரர்கள் தங்கள் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு போர்ப்படையை மட்டுமல்லாமல் ஒரு ‘காவல் முறை'யையும் நடைமுறைப்படுத்தினர். இது போலீஸ் போன்ற அமைப்புடையது. காவல் பணியைச் செய்தவர் காவல்காரர் அல்லது தலையாரி என்று அழைக்கப்பட்டார். இந்தக் காவல் முறை மிகப் பழங்காலம் தொட்டே பின்பற்றப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. கிராமங்களைக் காக்க அவர்கள் மன்னர்களால் பணியில் அமர்த்தப் பட்டனர்.

காவல்காரர்கள் நான்கு பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் முறையே அரசு காவல்காரர்கள், நாடு காவல்காரர்கள், திசைக் காவல்காரர்கள் மற்றும் ஸ்தல'

காவல்காரர்கள் அழைக்கப்பட்டனர். இதில் அரசு என்பது அரசாங்கம், நாடு என்பது மாவட்டம், திசை என்பது பிரதேசம், ஸ்தலம் என்பது கிராமம் என்று பொருள்படும். குடியிருப்போரின் தானியங்கள், கால்நடைகள், வீட்டைச் சார்ந்த பொருட்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பது காவல்காரரது கடமை. ஏதேனும் கொள்ளை நடந்தால் திருடப்பட்ட பொருட்களை மீட்டுத் தருவது காவல்காரரின் பொறுப்பாகும். மீட்கத் தவறினால் இழப்பை அவர் ஈடு செய்ய வேண்டும். காவல்காரர்களின் பணிக்குப் பரிசாக 'ஸ்தலம் காவல்' என்றழைக்கப்பட்ட சம்பளம் அளிக்கப்பட்டது. இந்தக் கூலியானது அவர்கள் பாதுகாத்த தானியத்தின் விளைச்சலில் ஒரு பங்காகவோ அல்லது பணமாகவோ இருந்தது.

**பாளையக்காரர்களின்செல்வாக்குவளர்ச்சி**

பாளையக்காரர்களின் செல்வாக்கு வளர்ச்சிக்கு நாட்டில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலையே காரணமானது. மன்னர்கள் மேற்கொண்ட முடிவற்ற போர்களினால் ஏற்பட்ட அச்சங்களிலிருந்து விடுபட்ட கிராமங்கள் பாளையக்காரர்களின் பாதுகாப்பை நாடின. ஏற்கனவே பாதுகாப்பை ஏற்றுக் கொண்ட, கிராமங்கள் அதற்காக அதிகமான வரியைக் கொடுத்தன. இவைகளால் பாளையக்காரர்கள் தங்கள் அதிகார வரம்பை பெருக்கிக் கொண்டனர்.

மேலும் மத்திய அரசின் வலிமையின்மைதான் மன்னருடைய அதிகாரங்களை அபகரிக்க பாளையக்காரர்களுக்கு உதவின. தங்கள் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு, ராணுவ அமைப்புகளை வலிமைப்படுத்திக் கொண்டனர் பாளையங்களின் எல்லைகளை விரிவடையச் செய்தனர். படிப்படியாக மக்களின் உரிமைகளையும் அபகரித்தனர். இறுதியாக மன்னர்களின் நலன்களுக்கெதிராகத்திரும்பினர்.

**பாளையக்காரர்முறையின்நன்மைகள்**

விஸ்வநாத நாயக்கர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த பாளையக்காரர் முறை அரசு நல்ல முறையில் நடப்பதற்கு பேருதவி புரிந்தது. பிற நாட்டுப் படையெடுப்புகளிலிருந்து மதுரை நாட்டைப் பாதுகாப்பதற்கு பாளையக்காரர்கள் பேருதவி புரிந்ததை பிற்கால வரலாறு நிரூபித்துள்ளது.

பாளையக்காரர் முறை பாரம்பரிய முறையில் அமைந்திருந்ததால் பாளையக்காரர்கள் மன நிறைவும் மதிப்பும் பெற்றிருந்தார்கள். அவரவர்களின் பகுதிகளில் நீதி வழங்கும் உரிமையும், ஆட்சிப் பொறுப்பும் இருந்ததால் சிற்றரசர்கள் போல் விளங்கினார்கள்.

பாளையக்காரர்கள் போர்க்காலங்களில் நாயக்கர்களுக்கு தேவைப்படும் வீரர்களை அனுப்பி வைத்தனர். இதனால் பெரும் படைப் பிரிவை பராமரிக்கின்ற அவசியம் - நாயக்கர்களுக்கு இல்லை.

நாயக்கர் அரசாங்கத்தில் குழப்பம் ஏற்பட்டாலும் அது பாளையங்களைப் பாதிக்கவில்லை. ஏனெனில் பாளையங்களின் ஆட்சித் துறை அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தது.

பாளையக்காரர்கள் ராணுவ வலிமை பெற்று விளங்கினார்கள். இதன் காரணமாகவே பிற்காலத்தில் ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். பாளையக்காரர்களின் எழுச்சி தமிழக வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

**பாளையக்காரர்முறையின்தீமைகள்**

பாளையங்களுக்கு வரி வசூலிக்கும் உரிமையைத் தந்த நாயக்க மன்னர்கள் வசூலிக்க வேண்டிய வரியின் அளவை நிர்ணயிக்கவில்லை, எனவே பாளையக்காரர்கள் சொந்தச் செலவின் பெருக்கத்திற்கேற்ப தங்கள் மனம் விரும்பியபடி. வரி வசூலிக்கும் வாய்ப்பைப்பெற்றிருந்தனர். இதனால் ஏற்பட்ட வரிப்பளு குடிமக்களை நேரடியாகப்பாதித்தது.

ஆட்சிப் பொறுப்பும், நீதிப் பொறுப்பும் பாளையக்காரர்களிடம் சேர்ந்து இருந்ததால் அநீதி இழைக்கப்பட்ட போது அவற்றைத் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போய்விட்டது.

மைய அரசை எதிரி நாட்டினர் தாக்கிய பின் பாளையங்களிலிருந்துபடை கொண்டு உதவச் செல்வது போக்குவரத்து வசதி குறைந்த அந்தக் காலத்தில் சாத்தியக் குறைபாடுடையதாக இருந்தது.

மைய அரசு பலவீனப்பட்ட சூழ்நிலையிலும், பாளையங்களுடன் உறவு நிலை முறியும் நிலையிலும் பாதுகாப்பிற்காக பாளையங்களில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவம் மைய அரசை தாக்கப் பயன்படுவதாக இருந்தது.

பாளையக்காரர் முறையில் வலிமையான மைய அரசு அமைய வாய்ப்பு இல்லை. இராணுவ உதவி, நிதி ஆகியவற்றிற்கு பாளையங்களின் தயவை மைய அரசு எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை இருந்தது. பாளையக்காரர்களின் உள்ளத்தில் இச்சூழல் பேராசையை ஏற்படுத்தியது. இந்த மனநிலை மதுரை ஆட்சி பீடத்தை தானாகவே வலிமை குன்றச் செய்தது.

இவ்வாறு விஸ்வநாதர் ஏற்படுத்திய பாளையக்காரர் முறை அவர் காலத்தில் தேவையானது மட்டுமல்லாமல் இன்றியமையாததாகவும் இருந்தது. பாளையக்காரர்

ஆட்சி முறை அந்தக் காலத்திற்கேற்ற செம்மையான முறை என்று நெல்சன் வர்ணித்துள்ளார்.

**நாயக்கர் கால சமுதாயப் பொருளாதார பண்பாட்டுநிலை**

**1. சமுதாய நிலை**

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து நடைபெற்ற படையெடுப்புகளால் மக்கள் நேரடித் தாக்குதலுக்கு உள்ளானார்கள். எனவே சமுதாய வாழ்க்கை அமைதியற்றதாக இருந்தது. நாயக்க மன்னர்கள் சாதி அடிப்படையிலான சமுதாயத்தை அங்கீகரித்ததால் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் வலுப்பெற்று விளங்கின.

**நாயக்கர் கால அரசியல் நிலை (ஆட்சி முறை)**

மதுரை நாயக்கர்கள் விஜயநகரத்தின் வழி வந்தவர்கள் ஆவர். அவர்கள் விஜயநகரத்தைச் சேர்ந்த வடுகர்களாயினும் அவர்கள் பண்டைத் தமிழரசர் ஆட்சி முறையைத் தழுவியே மதுரை நாட்டை ஆட்சி செய்தனர். விஜய நகரப் பேரரசின் ஆதிக்கம் தமிழகத்து நாயக்கர்கள் மீது முழுமையாக இருந்ததில்லை. திருமலை நாயக்கருக்கு முன் இருந்தவர்கள் விஜய நகரப் பேரரசின் சார்பாளராக ஆட்சி புரிந்தார்கள். திருமலையும் அவருக்குப் பின் வந்தவர்களும் முழு உரிமையுடன் ஆட்சி செய்தார்கள். நாயக்க மன்னர்கள் தங்கள் ஆட்சியில் பழைய மரபுகளைப் பேணிக் காத்தனர். காலத்தின் தேவைக்கேற்ப சில மாறுதல்களை மட்டும் செய்து கொண்டார்கள்.

நெல்சன் எழுதிய 'மதுரை நாடு', ஆர்.சத்தியநாதய்யர் எழுதிய 'மதுரை நாயக்கர் வரலாறு', டி.வி மகாலிங்கம் எழுதிய திருநெல்வேலி வரலாறு' ஆகிய நூல்களும், இராமப்பையன் அம்மானை என்ற நாட்டுப்புறப் பாடலும் நாயக்கர் கால அரசியல் நிலையை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

**1) மைய அரசு : (அரசன்)**

மதுரை நாயக்க மன்னர்கள் மதுரை அல்லது திருச்சியை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். இதுவே மைய அரசாக இருந்தது. மைய அரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட்டது. அவர்களுக்கு பாளையங்கள் கட்டுப்பட்டிருந்தன. மைய அரசு அதிகாரங்களைக் குவித்து வைக்கவில்லை. மாநில ஆட்சியாளர்களின் விவகாரங்களில் தலையிடுவதும் இல்லை. நிதி வசூலித்தல், நீதி வழங்குதல், இராணுவத்தை பராமரித்தல் ஆகிய மிக முக்கியமான அதிகாரங்களை மைய அரசு பாளையங்களுக்கு அளித்திருந்தது. மேலாதிக்கத்துடனான தொடர்பு வைத்துக் கொண்டு பாளையங்களின் துணையுடன் நடந்த ஒரு கூட்டாட்சியாகவே விளங்கியது. விஜய நகர மன்னரே மைய அரசில் முக்கிய இடம்

வகித்தார். இவரிடம் நிர்வாகம், நீதி, சட்டம், படை அதிகாரங்கள் அனைத்தும் குவிந்து கிடந்தது. மன்னரின் விருப்பமே நாட்டின் சட்டம். தமிழகத்து நாயக்க மன்னர்கள் பரம்பரையாக முடிசூட்டிக் கொண்டார்கள். மூத்த மகனே பட்டத்திற்குரியவனாகக் கருதப்பட்டான். ஆனாலும் அரசுரிமைக் கிளர்ச்சிகள் நடந்தன. ஆண் வாரிசு இல்லாமல் அரசர் இறந்து விட்டால் அவரது தம்பியோ அல்லது மனைவியோ முடிசூடிக் கொண்டனர். இவர்கள் பெரிய அரண்மனையில் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தனர்.

நாயக்க மன்னர்கள் நாட்டின் அனைத்து சடங்கு சம்பிரதாயங் களையும் தவறாமல் பின்பற்றினர். அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்தனர். திருவிழாக்களில் பங்கு கொண்டனர். வேட்டையாடுவதிலும், புனிதப் பயணங்களிலும் ஈடுபட்டனர். நாட்டிய இசை நிகழ்ச்சிகளைக் கண்டு ஆனந்தம் அடைந்தனர். அந்தப்புரத்தில் அதிக எண்ணிக்கையில் பெண்களை வைத்தருந்தனர். சமய பக்தியுடன் கோவில்களையும், மண்டபங்களையும் கட்டினர். இவர்கள் அரச குருவையும், புரோகிதரையும் மதித்து நடந்தனர். கொள்கையளவில் நாயக்க மன்னர்கள் அமைச்சர்களின் ஆலோசனை கேட்டு ஆட்சி செய்தனர். ஆனால் இந்த ஆலோசனைகள் வெறும் பரிந்துரைத்தலே ஆகும். அமைச்சர்கள் அரசரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரை பதவியிலிருக்க முடியும்.

**2) மைய அரசின் அதிகாரிகள்**

நாயக்க அரசில் உயர் பதவிகளாக விளங்கியவை தளவாய், பிரதானி, ராயசனம் போன்றவையாகும்.

**a) தளவாய்**

தலைமை அமைச்சர் பதவியும், படைத்தலைவர் பதவியும் இணைந்த பதவியே தளவாய் ஆகும். அதாவது அமைதிக் காலத்தில் நிர்வாகப் பணி, போர்க்காலத்தில் படைத் தலைமைப் பணி ஆற்றி வந்தவர் தளவாய் ஆவார். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதும் இவரது பணியாகும். ஆட்சியில் மிகப் பெரிய அதிகாரியாகத் திகழ்ந்தவர் இவரே ஆவார் விஸ்வநாதர் காலத்தில் அரியநாதர், திருமலை நாயக்கர் காலத்தில் இராமப்பையன், மங்கம்மாள் காலத்தில் நரசப்பையன் ஆகியோர் தளவாய் பதவி வகித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

தளவாய் நடைமுறையில் உண்மை ஆட்சியாளராக விளங்கினார். நாயக்க மன்னர்களின் வெற்றிக்கும் சிறப்புக்கும் இவர்களே காரணமாயினர். பெரும்பாலும் பிராமணர்களே தளவாய்களாக நியமிக்கப் பட்டனர்.

**B) பிரதானி**

அடுத்த முக்கியமான பதவி பிரதானி ஆவார். இது இக்கால நிதி அமைச்சர் பதவியாகும். இவர் வரவு செலவு கணக்குகளை கவனித்தார். இவருக்கு உள் நாட்டு ஆட்சியில் அதிக செல்வாக்கு இருந்தது. சாதாரண அமைச்சரைப் பார்க்கிலும் பிரதானி மேம்பட்டவர். தளவாய் நாட்டில் இல்லாத காலங்களில் பிரதானிக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டது.

**c)ராயசம்**

பிரதானிக்கு அடுத்து ராயசம் என்ற உயர் அதிகாரி இருந்தார். இவர் அரசாங்கத் தலைமை செயலர் ஆவார். நிர்வாக இயந்திரத்துடனும் அரசருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவரும் நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்து வந்த முக்கிய அமைச்சர் ஆவார்.

தளவாய், பிரதானி, ராயசம் ஆகியோர் மன்னரின் ஆலோசனை சபையில் முக்கிய அதிகாரிகளாக விளங்கினர். மன்னர் சிறுவனாக இருந்தாலோ, நோய்வாய்ப்பட்டிருந்தாலோ இவர்களே நாட்டை' ஆண்டனர். ஆனால் இவர்களுக்கிடையே அவ்வளவாக ஒற்றுமை இல்லாமலிருந்தது. வேற்றுமை காரணமாகப் பல நேரங்களில் மோதலும் ஏற்பட்டது.

**4) பிற அலுவலர்கள்**

மேற்குறித்த மூன்று பேரைத் தவிர கணக்கர், தானாதிபதி ஆகிய அதிகாரிகளும் இருந்தனர். அரசாங்க கணக்குத்துறையின் தலைவராக கணக்கர் இருந்தார். தானாதிபதி வெளிநாட்டு வேந்தர்களுடன் விவகாரங்களைக் கவனித்தவர் ஆவார். மேலும் இவர் பாளையங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் இணைப்புப் பாலமாகவும் செயல்பட்டார். இவர்கள் தவிர திருமந்திர நாயகம், அடப்பக்காரன், முதுநிலைப்பணி மக்கள், இளநிலைப் பணி மக்கள் ஆகியோரும் அலுவலர்களாகப்பணிபுரிந்தனர்.

**பாளைபாளையக்காரர்முறை**

உண்மையில் இவர்கள் ராணுவச் சேவை செய்து குறைந்த அளவு கூலிக்குப் பதிலாக பயனற்ற நிலத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள் சொந்தச் செலவில் ஈட்டி, வெடிகள் போன்றவற்றை வாங்கி பாளையக்காரர்களுக்குப் பணி செய்தனர். நெருக்கடி

காலங்களில் மட்டுமே கூலிச் சேவகர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் பாளையக்காரர்கள் இட்ட கட்டளைகளை பணிவுடன் நிறைவேற்றினர். தங்கள் எஜமானர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே கூலிச் சேவகர்களின் நோக்கமாகும்.

**பாளையக்காரர்களின்காவல் முறை**

பாளையக்காரர்கள் தங்கள் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு போர்ப்படையை மட்டுமல்லாமல் ஒரு 'காவல் முறை'யையும் நடைமுறைப்படுத்தினர். இது போலீஸ் போன்ற அமைப்புடையது. காவல் பணியைச் செய்தவர் காவல்காரர் அல்லது தலையாரி என்று அழைக்கப்பட்டார். இந்தக் காவல் முறை மிகப் பழங்காலம் தொட்டே பின்பற்றப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. கிராமங்களைக் காக்க அவர்கள் மன்னர்களால் பணியில் அமர்த்தப் பட்டனர்.

காவல்காரர்கள் நான்கு பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் முறையே அரசு காவல்காரர்கள், நாடு காவல்காரர்கள், திசைக் காவல் காரர்கள் மற்றும் ஸ்தல' காவல்காரர்கள் அழைக்கப்பட்டனர். இதில் அரசு என்பது அரசாங்கம், நாடு என்பது மாவட்டம், திசை என்பது பிரதேசம், ஸ்தலம் என்பது கிராமம் என்று பொருள்படும். குடியிருப்போரின் தானியங்கள், கால்நடைகள், வீட்டைச் சார்ந்த பொருட்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பது காவல்காரரது கடமை. ஏதேனும் கொள்ளை நடந்தால் திருடப்பட்ட பொருட்களை மீட்டுத் தருவது காவல்காரரின் பொறுப்பாகும். மீட்கத் தவறினால் இழப்பை அவர் ஈடு செய்ய வேண்டும். காவல்காரர்களின் பணிக்குப் பரிசாக 'ஸ்தலம் காவல்' என்றழைக்கப்பட்ட சம்பளம் அளிக்கப்பட்டது. இந்தக் கூலியானது அவர்கள் பாதுகாத்த தானியத்தின் விளைச்சலில் ஒரு பங்காகவோ அல்லது பணமாகவோ இருந்தது.

**பாளையக்காரர்களின்செல்வாக்குவளர்ச்சி**

பாளையக்காரர்களின் செல்வாக்கு வளர்ச்சிக்கு நாட்டில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலையே காரணமானது. மன்னர்கள் மேற்கொண்ட முடிவற்ற போர்களினால் ஏற்பட்ட அச்சங்களிலிருந்து விடுபட்ட கிராமங்கள் பாளையக்காரர்களின் பாதுகாப்பை நாடின. ஏற்கனவே பாதுகாப்பை ஏற்றுக் கொண்ட, கிராமங்கள் அதற்காக அதிகமான வரியைக் கொடுத்தன. இவைகளால் பாளையக்காரர்கள் தங்கள் அதிகார வரம்பை பெருக்கிக் கொண்டனர்

மேலும் மத்திய அரசின் வலிமையின்மைதான் மன்னருடைய அதிகாரங்களை அபகரிக்க பாளையக்காரர்களுக்கு உதவின. தங்கள் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு, ராணுவ அமைப்புகளை வலிமைப்படுத்திக் கொண்டனர் பாளையங்களின்

எல்லைகளை விரிவடையச் செய்தனர். படிப்படியாக மக்களின் உரிமைகளையும் அபகரித்தனர். இறுதியாக மன்னர்களின் நலன்களுக்கெதிராகத்திரும்பினர்.

**பாளையக்காரர்முறையின்நன்மைகள்**

1. விஸ்வநாத நாயக்கர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த பாளையக்காரர் முறை அரசு நல்ல முறையில் நடப்பதற்கு பேருதவி புரிந்தது. பிற நாட்டுப் படையெடுப்புகளிலிருந்து மதுரை நாட்டைப் பாதுகாப்பதற்கு பாளையக்காரர்கள் பேருதவி புரிந்ததை பிற்கால வரலாறு நிரூபித்துள்ளது.
2. பாளையக்காரர் முறை பாரம்பரிய முறையில் அமைந்திருந்ததால் பாளையக்காரர்கள் மன நிறைவும் மதிப்பும் பெற்றிருந்தார்கள். அவரவர்களின் பகுதிகளில் நீதி வழங்கும் உரிமையும், ஆட்சிப் பொறுப்பும் இருந்ததால் சிற்றரசர்கள் போல் விளங்கினார்கள்.
3. பாளையக்காரர்கள் போர்க்காலங்களில் நாயக்கர்களுக்கு தேவைப்படும் வீரர்களை அனுப்பி வைத்தனர். இதனால் பெரும் படைப் பிரிவை பராமரிக்கின்ற அவசியம் -நாயக்கர்களுக்கு இல்லை.
4. நாயக்கர் அரசாங்கத்தில் குழப்பம் ஏற்பட்டாலும் அது பாளையங்களைப் பாதிக்கவில்லை. ஏனெனில் பாளையங்களின் ஆட்சித் துறை அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தது.
5. பாளையக்காரர்கள் ராணுவ வலிமை பெற்று விளங்கினார்கள். இதன் காரணமாகவே பிற்காலத்தில் ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். பாளையக்காரர்களின் எழுச்சி தமிழக வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

**பாளையக்காரர்முறையின்தீமைகள்**

1. பாளையங்களுக்கு வரி வசூலிக்கும் உரிமையைத் தந்த நாயக்க மன்னர்கள் வசூலிக்க வேண்டிய வரியின் அளவை நிர்ணயிக்கவில்லை, எனவே பாளையக்காரர்கள் சொந்தச் செலவின் பெருக்கத்திற்கேற்ப தங்கள் மனம் விரும்பியபடி. வரி வசூலிக்கும் வாய்ப்பைப்பெற்றிருந்தனர். இதனால் ஏற்பட்ட வரிப்பளு குடிமக்களை நேரடியாகப் பாதித்தது.
2. ஆட்சிப் பொறுப்பும், நீதிப் பொறுப்பும் பாளையக்காரர்களிடம் சேர்ந்து இருந்ததால் அநீதி இழைக்கப்பட்ட போது அவற்றைத் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போய்விட்டது.

3. மைய அரசை எதிரி நாட்டினர் தாக்கிய பின் பாளையங்களிலிருந்து படை கொண்டு உதவச் செல்வது போக்குவரத்து வசதி குறைந்த அந்தக் காலத்தில் சாத்தியக் குறைபாடுடையதாக இருந்தது.
4. மைய அரசு பலவீனப்பட்ட சூழ்நிலையிலும், பாளையங் களுடன் உறவு நிலை முறியும் நிலையிலும் பாதுகாப்பிற்காக பாளையங்களில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவம் மைய அரசை தாக்கப் பயன்படுவதாக இருந்தது.
5. பாளையக்காரர் முறையில் வலிமையான மைய அரசு அமைய வாய்ப்பு இல்லை. இராணுவ உதவி, நிதி ஆகியவற்றிற்கு பாளையங் களின் தயவை மைய அரசு எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை இருந்தது. பாளையக்காரர்களின் உள்ளத்தில் இச்சூழல் பேராசையை ஏற்படுத்தியது. இந்த மனநிலை மதுரை ஆட்சி பீடத்தை தானாகவே வலிமை குன்றச் செய்தது.

இவ்வாறு விஸ்வநாதர் ஏற்படுத்திய பாளையக்காரர் முறை அவர் காலத்தில் தேவையானது மட்டுமல்லாமல் இன்றியமையாததாகவும் இருந்தது. பாளையக்காரர் ஆட்சி முறை அந்தக் காலத்திற்கேற்ற செம்மையான முறை என்று நெல்சன் வர்ணித்துள்ளார்.

**நாயக்கர் கால சமுதாயப், பொருளாதார, பண்பாட்டு நிலை**

**1. சமுதாய நிலை**

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து நடைபெற்ற படையெடுப்புகளால் மக்கள் நேரடித் தாக்குதலுக்கு உள்ளானார்கள். எனவே சமுதாய வாழ்க்கை அமைதியற்றதாக இருந்தது. நாயக்க மன்னர்கள் சாதி அடிப்படையிலான சமுதாயத்தை அங்கீகரித்ததால் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் வலுப்பெற்று விளங்கின. பழங்கால சமுதாய அமைப்பினை நாயக்கராட்சி பாதித்ததாகத் தெரியவில்லை. சமுதாய மரபுகளைக் காக்க நாயக்க மன்னர்கள் எடுத்த முயற்சிகள் சமுதாய அழுத்த நிலையைச் சற்று தளர்த்தி நின்றது. நாயக்கர் கால சமுதாய நிலையைப் பற்றி டி.வி.மகாலிங்கம் எழுதிய 'விஜய நகரப் பேரரசில் காணப்பட்ட ஆட்சி முறையும், சமுதாய வாழ்வும்' அ.கி.பரந்தாமனார் எழுதிய 'மதுரை நாயக்கர் வரலாறு' ஆகிய நூல்களில் இருந்தும், நூனிஸ், ராபர்ட்-டி-நொபிளி ஆகியோர் எழுதிய குறிப்புகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

**a) சமுதாயத்தில்சாதிப் பாகுபாடுகள்**

பிறப்பிலும், வளர்ப்பிலும் நாயக்கர்கள் வைதீக இந்துக்களாக இருந்த காரணத்தினால் அவர்கள் பழங்கால சாதிப் பாகுபாட்டை ஒப்புக் கொண்டனர். குல, கோத்திர தன்மைகளை முனைந்து நோக்கினர். சாதி அடிப்படையில் சமுதாயத்தில் பிராமணர்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றனர். பல சிறப்புரிமைகளை அனுபவித்தனர். தளவாய், பிரதானி, ராயசம் போன்ற உயர் அரசு பதவிகளை பிராமணர்களே அனுபவித்தனர். இவர்கள் மன்னர்களின் தலைமை ஆலோசகர்களாக இருந்தனர். அவர்கள் வரும் பொருள் உணர்ந்தவர் களாகவும், திருவருள் பெற்றவர் களாகவும் நடந்து கொண்டனர். சமயத்தைப் பேணுவது அரசின் அடிப்படைக் கொள்கையாக இருந்ததால் பிராமணர்களுடன் புரோகிதர் களுக்கும் தனிச் சிறப்பு அளிக்கப்பட்டிருந்தது.

சமுதாயத்தில் அடுத்தபடியாக மதிக்கப்பட்டவர்கள் கம்மாளர் என்று தோன்றுகிறது. கம்மாளர் சாதியிடையே ஐந்து உட்பிரிவு சாதிகள் காணப்பட்டன. அவை தச்சர், கருமார், கன்னார், சிற்பி ஆகியவையாகும். சாதிப் பிரிவுகளிடையே உரிமை தொடர்பாக பூசல்கள் அடிக்கடி எழுந்தன. நாயக்கர்கள் தலையிட்டு அமைதி ஏற்படுத்தியதுண்டு. அரசின் செல்வாக்கைப் பெற்ற கைக்கோளர், கம்மாளர் ஆகிய இனங்கள் மேட்டுக்குடி மக்களாகத் தம்மை காட்டிக் கொள்ள முனைந்தார்கள். பொதுவாக அரசின் ஆதரவைப் பெற்ற இனத்தவர்களுக்கும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும் இருந்த ஏற்றத்தாழ்வுகள் நாயக்கர் காலத்தில் அதிகரித்தது.

தெலுங்கு மொழி பேசிய நாயக்கர் ஆட்சியின் போது கம்மாவர், சுவரா, உப்பிலி, சேணியர், கம்பளத்தார், ஒட்டர், சங்கிலியர்கள், தொம்பர் ஆகிய தெலுங்கு மொழி பேசும் பலவகை இனத்தவரும், திருமலை மன்னரால் குடியமர்த்தப்பட்ட சௌராஷ்ட்டிரரும் தமிழகத்தில் குடியேறினர். இது சாதிப் பாகுபாடுகள் மேலும் பெருக வழிவகுத்தது. நாயக்க அரசால் கலப்பு மணம் பெரிதும் ஆதரிக்கப்படவில்லை. நாயக்க இனங்களிடையே மணக் கலப்பிற்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததாக கி.பி. 1623-ம் வருடக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.

**b) மகளிர் நிலை**

பெண்கள் இல்லற வாழ்க்கையையே நல்லற வாழ்க்கையாகக் கொண்டிருந்தனர். பெண் கல்வி பேணப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். குமாரகம்பணரின் மனைவி, ராணி மங்கம்மாள், மீனாட்சி போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். திருமணத்தின் போது

வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் நடைமுறையில் இருந்தன. குழந்தை திருமணம் நடைமுறையில் இருந்தது. சீதனமாக சொத்தும், நகைகளும் தரப்பட்டுள்ளது.

வர்த்தகத்தாரிடம் பலதார மணம் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாக காணப்பட்டது. நாயக்க மன்னர்களின் அந்தப்புரங்களில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் இருந்தனர். திருமலை நாயக்க மன்னருக்கு 200 மனைவிகள் இருந்தனர். அச்சுதப்பரின் அந்தப்புரத்தில் முன்னூறுக்கும் மேலாகப் பெண்கள் இருந்தனர். உடன்கட்டை ஏறும் பழக்கமும் நடைமுறையில் இருந்தது. அப்படி ஏறாதவர்கள் தலையை மொட்டை அடித்துக் கொண்டு துன்பம் மிகுந்த வாழ்க்கை நடத்தினார்கள். திருமலை நாயக்கர் இறந்த போது அவரது 200 மனைவியரும் உடன்கட்டை ஏறியதாக அறிகிறோம். ஆனால் பொதுமக்களிடம் இப்பழக்கம் காணப் படவில்லை.

பொதுவாகப் பெண்கள் ஆண்களுக்கு இன்பம் தரும் பாவைகள் என்ற அளவிலேயே மதிக்கப்பட்டனர். ஒரு ஆண் தனது மனைவி மீது எவ்வித அக்கரையும் காட்டவில்லை. நாட்டில் விபச்சாரம் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது தேவரடியார்கள் கோவில் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் வேசியர்களாகவே வாழ்ந்தனர். வேசித் தொழில் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது.

**c) உணவு முறை**

உண்ணும் உணவில் அதிக கட்டுப்பாடுகள் இல்லை. அந்தணர்கள் நெய், சர்க்கரை, அரிசி, பால் போன்றவற்றை உண்டனர். தாழ்த்தப் பட்டோர் இறைச்சி, மீன், முட்டை, அரிசி ஆகியவற்றை உண்டனர். அவர்களில் பலர் இறைச்சி, மீன், மரக்கறி விற்பனையாளராகவும் தொழில் புரிந்தனர். உப்பு வணிகர்கள் உப்பு விற்று வாழ்ந்தனர். மன்னருடைய உணவு சூழ்ச்சிக்குப் பயந்து சோதனை செய்யப்பட்ட பிறகே கொடுக்கப் பட்டது. நாட்டில் மது வகைகளும் இருந்தன.

**d) ஆடை அணிகலன்கள்**

நாயக்கர் காலத்தில் சாதாரண மனிதன் சாதாரணத் துண்டுத் துணியையே அணிந்திருந்தான். அதனை இடையில் ஒன்றும் தலையில் ஒன்றுமாகப் போர்த்தியிருந்தான். சாதாரணப் பெண்மணி பொதுவாக வர்ணம் பூசப்பட்ட துணியை அணிந்திருந்தாள். ஆனால் அரச குடும்பத்தினர் பட்டு ஆடைகள், பூக்கள் பின்னப்பட்ட விதவிதமான ஆடைகளை அணிந்தனர். மேம்பட்ட துணிகளை நெய்வதற்காக திருமலை நாயக்கர் மதுரையில் சௌராஷ்டிரர்களை குடியமர்த்தினார் என்று அறிகிறோம்.

பயணம் செய்யும் போது நாகரிகமான பெண்கள் தங்க மோதிரங்களும், வளையல்களும் அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். பெண் தனது முடியை பின்பக்கத்தில் பூங்கொத்தோடு கட்டியிருந்தாள். தாசிகளும், பரத்தையரும் தங்களைப் பல நகைகளாலும் கவர்ச்சியான துணிகளாலும், வண்ணங்களாலும், வாசனைப் பொருட்களாலும் ஒப்பனை செய்து கொண்டனர்.

**e) பொழுதுபோக்குஅம்சங்கள்**

நாயக்கர் காலத்தில் மக்கள் பொழுதுபோக்கு கேளிக்கைளிலும், விளையாட்டுக்களிலும், திருவிழாக்களிலும் ஆடல் பாடல்களிலும் நாட்டம் கொண்டனர். இருவர் சண்டை, வேட்டையாடல், குதிரைப் பந்தயம், சீட்டாடல் போன்றவை சிறந்த பொழுது போக்குகளாக இருந்தன. நாட்டிய, இசை, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திருமணச் சடங்கு, திருவிழா சமயங்களில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். கோலாட்டம், கும்மி போன்ற நாட்டியங்களும் கண்டுகளிக்கப்பட்டன.

**1) சமுதாயமரபுகளும்நம்பிக்கைகளும்**

நாயக்கர் காலச் சமுதாயம் பழைமையிலும், வழிவழி மரபுகளைப் பின்பற்றுவதிலும் நம்பிக்கை கொண்டிருந்தது. பெண்களை கோவிலுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கமும், விழாக்களின் போது தேவரடியார்கள் வீதியில் நடனமாடிச் செல்லும் பழக்கமும் காணப்பட்டது. பிணங்களை ஆடம்பரமாக எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்தது. மதுரையில் புதிதாகக் குடியேறிய சௌராஷ்டிரர்கள் தங்கள் பூணூல் அணியும் மரபை பிராமணர் எதிர்ப்பால் போராடிப் பெறவேண்டியதிருந்தது. நாயக்கர் கால சமுதாயம் குலவேறுபாடு, பொருளற்ற சடங்குகள், எண்ணற்ற சிறு தெய்வ வழிபாடுகள், உயிர்ப்பலிகள் முதலிய கண்மூடிப் பழக்கங்களால் அலைப்புண்டும், பிளவுபட்டும் கிடந்ததாக ஆபிடுபாய் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**II. பொருளாதாரநிலை**

**a) விவசாயம்**

நாயக்கர் காலத்தில் மக்கள் விவசாயப் பணிகளை ஆரம்பிக்க பருவமழையையே நம்பி இருந்தனர். அக்டோபரிலும், நவம்பரிலும் மேற்கு காற்று பலமாக வீசியது. மலைகளிலிருந்து கரைக்கு மணற்காற்று வீசியதால் தங்கள் கண்களைத் திறப்பதற்குக் கூட மக்களுக்கு கடினமாக இருந்தது. கன்னியாகுமரி அருகில் நல்ல மழை பெய்தது. ஆனால் பிற பகுதிகளில் அதிக மழை பெய்யவில்லை. எனவே ஆறுகள், குளங்கள், கிணறுகள் வழியாக விவசாயிகள் நீர்ப்பாசனம் செய்ய முற்பட்டனர். பெரும்பாலா மக்கள் கிராமங்களிலேயே வாழ்ந்து விவசாயம் செய்து வந்தனர். நகரங்களில் வாழ்ந்த

மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்து வந்தனர். மதுரையில் நெசவுத் தொழிலும், தூத்துக்குடியில் முத்து எடுத்தலும் சிறப்பாக நடைபெற்று வந்தன. கால்நடை மேய்த்தல், சாயம் தோய்த்தல் போன்றவை மக்களின் பிற தொழில்கள் ஆகும்.

**b) வாணிபமும்வர்த்தகமும்**

நாயக்க மன்னர்கள் வாணிபத்திற்கும் வர்த்தகத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மக்கள் மிகுந்த அமைதியுடனும், நிதானத்துடனும், சிக்கனத்துடனும் வாழ்ந்து நாட்டின் உற்பத்திக்கேற்ப தங்களது தேவைகளைளச் சுருக்கிக் கொண்டனர். இதன் விளைவாக வியாபாரம் வளரவில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறிதளவு வாணிபமே நடைபெற்றது.

உள்நாட்டு வாணிபத்தை செட்டிகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். ஆனால் பயணத்தில் பாதுகாப்பு இல்லாததாலும் வரிகள் நிர்பந்தமாக வசூலிக்கப்பட்டமையாலும் கஷ்டங்களை எதிர்நோக்கினர். போர்ச்சுக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் வெளிநாட்டு வாணிபத்தை தங்கள் கட்டுப்பாட்டின் வைத்திருந்தனர். மொலூக்கசிலிருந்து கொண்டுவரப்பட்ட வாசனைப் பண்டங்களையும், ஜப்பானிலிருந்து கொண்டு வந்த தோலையும் ஐரோப்பிய வணிகர்கள் விற்றனர். அவர்கள் தஞ்சாவூர் அரிசியையும், வண்ணம் தீட்டப்பட்ட துணிகளையும் மதுரை லினன் துணியையும் கீழ் விலைக்கு வாங்கினர். கோர மண்டல் துணி நிறத்தில் சிறப்பாக இருந்தது மட்டுமின்றி விலையும் மிகக் குறைவாக இருந்தது.

கடற்கரையோர வியாபாரத்திலும், வர்த்தகத்திலும் நாயக்க மன்னர்கள் அதிகம் தலையிடவில்லை. எனவே வர்த்தகர்களுக்கும் மன்னருக்குமிடையே அதிக நெருக்கடிகள் ஏற்படவில்லை. ஆனால் தஞ்சையில் அவர்கள் வர்த்தகம் ஆதிக்க வளர்ச்சியாக மாறிவிட்டது. அந்நிய வர்த்தகத்தால் நாட்டில் செல்வச் செழிப்பு ஏற்படவில்லை. மாறாக அந்நியர் நம் செல்வத்தை கவர்ந்து செல்ல வழி ஏற்பட்டது. நாயக்க மன்னர்களுக்கு திறை மிகக்குறைந்த தொகையே தரப்பட்டது. இது நாயக்கர்களிடம் கடற்படை இல்லாததால் ஏற்பட்ட தீமையே ஆகும்.

**III.கல்வியும், இலக்கியமும்**

**கல்வி**

மதுரை நாயக்கர்கள் பொதுமக்கள் கல்வியைப் பற்றி பெரும்பாலும் கவலைப்பட்டதில்லை. அத்துடன் தமிழ் மொழியை ஆதரித்து வளர்க்கவும் இல்லை. அக்காலத்தில் கல்வி மக்களுக்கு இன்றியமையாத தேவை என்று கருதாததால் அரசாங்கம் பள்ளிக்கூடம் வைத்து நடத்தியதுமில்லை. பெருமக்களால் நடத்தப்பட்ட

பள்ளிகளுக்கு பணஉதவி அளித்ததுமில்லை. ஒவ்வொரு சிற்றூரிலும் தனிப்பட்டவர் முயற்சியினால் திண்ணைப் பள்ளிக்கூடம் நடந்தது. அது திண்ணையிலாவது இருக்கும். பெற்றோர்கள் பணமும், பண்டமும் கொடுத்து ஆசிரியர்களை பேணினார்கள். திண்ணைப் பள்ளியாசிரியர், மாணவர்களுக்கு எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்பித்தார். மாணவர்கள் தாளையோ, கற்பலகையையோ பயன்படுத்தவில்லை. மணலில் எழுதியே கற்றார்கள். ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் பெருமதிப்பு இருந்தது.

ஏசு கழகச் சமயத் தொண்டர்கள் பள்ளிகளை நடத்தினார்கள். ஊழியர்களும், கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவர்களும் அப்பள்ளிகளில் கல்வி கற்பித்து வந்தார்கள். மதுரையில் பெர்னாண்டஸ் பாதிரியார் இந்து சமய மாணவர்களுக்காக ஒரு பள்ளி வைத்து நடத்தினார். அதில் கிறிஸ்தவரான பார்ப்பனர் ஒருவர் ஆசிரியராக இருந்து மாணவர்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுத்தார். பார்ப்பணர்களுக்கு கல்வி கற்பித்த முறை மற்றவர்களுக்கு கற்பித்த முறையிலிருந்து வேறுபட்டிருந்தது. பெரும் புலவர்கள் வேத பாடசாலைகளில் வேதங்களையும், சாத்திரங்களையும் கற்றுக் கொடுத்தார்.

**சமயப் பூசல்கள்**

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பொதுவாக சமயப் பொறை இருந்து வந்தது. என்றாலும் ஆங்காங்கே சில சமயப் பூசல்களும், கொலைகளும் நடந்தன. தஞ்சையில் சைவ சமயத்தவருக்கும், வைணவ சமயத்தவருக்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டன. மதுரையில் வேதாந்த தேசிகரின் சீடர்களுக்கும் மணவாள மாமுனியின் சீடர்களுக்கு மிடையே போட்டி ஏற்பட்டது. கி.பி.1597-ல் சிதம்பரத்தில் சைவ, வைணவ சமயத்தாரிடையே ஏற்பட்ட சமயப் பூசல்கள் பற்றி பிமெண்டா அடிகளார் குறிப்பிட்டுள்ளார். சிதம்பரம் நடராஜர் கோவிலில் பெருமாள் சுவாமியின் உருவத்தை வைப்பதற்கு சைவ சமயத்தவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மதுரையில் இந்த இரு பிரிவினரையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் திருமலை நாயக்கர் வெற்றி பெற்றார். வடக்கத்திய, தெற்கத்திய வைணவர்களுக்கு இடையிலான வேற்றுமைகள் நீக்கப்பட்டன. பல இடங்களில் கிறிஸ்தவ போதகர்கள் அவமானப்படுத்தப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர்.

**நாயக்கர் காலத்தில் கிறிஸ்தவசமயத்தின் வளர்ச்சி**

நாயக்கர் காலத்தை 'கிறிஸ்தவ நடவடிக்கைகளின் பொற்காலமே' என்று வரலாற்றாய்வாளர்கள் வர்ணிக்கிறார்கள். ஏனெனில் நாயக்கர் காலம் சமயப் பொறை மிகுந்த பரந்த நோக்கு கொண்ட காலமாக இருந்து வந்தது. கிறிஸ்தவப் போதகர்களின்

சமயப் பணி எந்த எதிர்ப்பும் இல்லாமல் வளர்ந்தது. முக்கியமாக இயேசு சபையினர் கிறிஸ்தவ சமயத்தையும் தத்துவத்தையும் போதித்ததோடு மக்களை மதமாற்றம் செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டனர். இதன் விளைவாக கிறிஸ்தவ சமயம் பூரிப்படைந்து தமிழகத்தில் வேகமாகப் பரவியது.

இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான புனித தாமஸ் முதன் முறையாக மலபார் கடற்கரைக்கு வந்து அங்கு ஏராளமான மக்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றினார். பின்னர் தமிழகத்திற்கு வந்து மைலாப்பூரில் தங்கி சமயப் பிரச்சாரம் செய்தார். பின்னர் சென்னைக்கு அருகிலுள்ள பரங்கி மலையில் கொலை செய்யப்பட்டார். இக்னேஷியஸ் லயோலாவினால் ஏற்படுத்தப்பட்ட இயேசு சபையைச் சார்ந்தவர்கள் பதினாறாம் நூற்றாண்டில் உலகம் முழுவதிலும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப ஆரம்பித்தனர். அவரது சீடரான பிரான்சிஸ் சேவியர் இந்தியாவுக்கு வந்து மதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

**வீரப்ப நாயக்கர் காலத்தில் கிறிஸ்துவ சமயப் பிரச்சாரத்தின் தொடக்கம்**

இயேசு சபையினர் மலபார், திருவிதாங்கூர், சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் தங்கள் சமயப் பிரச்சாரப் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். இவர்களது இந்தப் பணி மதுரை நாயக்கரான வீரப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் மதுரை நாட்டில் கி.பி. 1592-ல் அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆண்டில் தான் முதன் முதலாக பெர்னாண்டஸ் என்ற போர்ச்சுக்கீசிய பாதிரியாரின் தலைமையில் 'மதுரா மிஷன்' (Madura Mission) என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இவர் வீரப்ப நாயக்கரிடம் தேவாலயம் ஒன்று கட்டவும், திரளான மக்களிடம் போதனை செய்யவும் அனுமதி பெற்றார். இந்த மதுரா மிஷனைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் சமயப் பிரச்சாரம் செய்தனர்.

உயர்குல ஜாதி இந்துக்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றம் செய்ய இச்சபையினர் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. இந்த இந்துக்கள் போர்ச்சுக்கீசியரை 'மாட்டிறைச்சி தின்னும் பறங்கியர்கள் என்று இழிவாகக் கருதி கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு பெர்னாண்டசின் முயற்சி தோல்வியடைந்தாலும், அவருக்குப் பின்னால் வந்தவர்களுக்கு வெற்றியாக முடிந்தது. நாயக்க மன்னர் கிறிஸ்தவ சமயத்திற்கு ஆதரவு தெரிவித்த செய்தி உலகமெங்கும் பரவியது. அத்துடன் வீரப்ப நாயக்கரின் சமயப் பொது நோக்கு நமக்குப் புலனாகிறது.

**ராபர்ட்-டி-நொபிலியும் கிறிஸ்தவ சமயமும்**

இயேசு சபையின் மற்றொரு தலைவரான ராபர்ட்-டி-நொபிலி 1606-ல் முத்துக்கிருஷ்ணப்பர் காலத்தில் மதுரை வந்தார். இவர் மதமாற்றம் செய்ய இந்துக்களை

அணுகுவதில் புதிய முறைகளைக் கையாண்டார், தம்மை 'ரோமானியப் பார்ப்பனர்' என்று கூறிக் கொண்டு புலால் உண்பதை அறவே ஒழித்துப் பாலும் காய்கறிகளும் உண்டு, வடமொழியிலும் தமிழிலும் நன்றாகப் பேசி மக்கள் மனதைக் கவர்ந்தார். உயர்குடி இந்துக்கள் சிலரைக் கிறிஸ்தவராக்கினார். மேலும் மதம் மாறிய கிறிஸ்தவர்களைப் பொட்டு இட்டுக் கொள்ளவும், சந்தியாவந்தனம் செய்யவும், பூணூல் அணிந்து கொள்ளவும், திவசம் கொடுக்கவும் அனுமதித்தார். இப்படியெல்லாம் மதம் மாறிய கிறிஸ்தவர்களைச் செய்யும்படி விட்டதால் கிறிஸ்தவ சமயம் பரவத் தொடங்கியது. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் இதனை வெறுக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை.

மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1682-89) காலத்தில் மதுரை நாட்டிலும், மறவர் நாட்டிலும் கிறிஸ்தவ சமயம் அதிகமாகப் பரவுவதற்குக் இருந்தவர் ஜான்-டி-பிரிட்டோ பாதிரியாவார். இவர் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் ஒரு உயர் குடியில் பிறந்தவர் ஆவார். இவர் அரசியலில் உயர் பதவியடைய விரும்பாமல் சமயத் தொண்டராகப் பணிபுரிய விருப்பம் கொண்டார். கி.பி. 1662-ல் இவர் இயேசு சங்கத்தில் சேர்ந்தார். கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்ய கி.பி. 1673-ல் கோவா வந்தார். கி.பி. 1680-ல் பிரியர்ஸ் பாதிரியாருடன் மதுரை வந்தார். கிறிஸ்தவ சமயத்திற்கு இவர் ஆற்றியத் தொண்டின் காரணமாக 'மதுரா மிஷன்' அமைப்பிற்குத் தலைவரானார்.

பாதிரிமார்கள் யாரும் காலடி எடுத்து வைக்கப் பயந்து போயிருந்த மறவர் நாட்டையே தமது பிரச்சாரத்தின் மையமாக எடுத்துக் கொண்டு தீரமுடன் செயல்படத் தொடங்கினார். வடுகர்பட்டியில் கிறிஸ்தவர்கள் அதிகமாக இருந்தார்கள். முத்து வீரப்பருக்கு அடங்கிய அந்த வடுகர்பட்டி சிற்றரசர் லிங்கரெட்டியார் தனது ஊரில் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம் செய்ய பாதிரிமார்களுக்கு வசதி செய்து கொடுத்தார். ஆனால் திடீரென தனது குருநாதரின் ஆலோசனையின்படி பறங்கியர்களை நாட்டை விட்டு விரட்ட முடிவு செய்தார். தனது பகுதியில் இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்குமாறு தன் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். ஆனால் கிறிஸ்தவர்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்று ஊழியர்கள் சொன்னார்கள். இதைக் கேட்டதும் லிங்கரெட்டியார் சமயப் பெரு நோக்கால் தம் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறிதும் துன்பம் செய்யவில்லை.

ஆனால் மறவர் நாட்டில் நிலை இப்படி இல்லை. பிரிட்டோ பாதிரியார் ஒரு நாள் தம்முடைய உபதேசியாருடன் மறவர் நாட்டிலுள்ள மங்கலம் என்ற சிற்றூருக்கு அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது மறவர் நாட்டு முதலமைச்சரான

குமாரப்பிள்ளையின் கட்டளைப்படி பாதிரியாரும் உபதேசியாரும் பிடிக்கப்பட்டு லிங்கத்தை வழிபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். மறுக்கவே அவர்கள் மரத்தில் கட்டிப் போடப்பட்டனர். அவர்களைக் கொல்லவும் திட்டம் தீட்டினர். ஆனால் சேதுபதி பிரிட்டோவையும், உபதேசியாரையும் இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கிறிஸ்தவ சமயத்தை மறவர் நாட்டில் பிரச்சாரம் செய்யக் கூடாது என்று கடுமையாகக் கட்டளை ளையிட்டுத் துரத்திவிட்டார். பிரிட்டோ பாதிரியார் 1688-ல் போர்ச்சுக்கல்லுக்குச் சென்றார்.

போர்ச்சுக்கல்லிலிருந்து திரும்ப வந்த பிரிட்டோ தனது உயிரை சமயத்துக்காக அர்ப்பணம் செய்யும் உறுதியுடன் மறவர் நாட்டையே தனது சமயப் பணிகளின் மையமாகத் தேர்ந்தெடுத்தார். கள்ளர் தொல்லை, விலங்குகளின் இன்னல், இந்து மக்களின் எதிர்ப்பு இவற்றிற்கு ஒரு சிறிதும் அஞ்சாமல் தொண்டு செய்து பெருவாரியாக இந்துக்களை கிறிஸ்தவர்களாக்கினார். சேதுபதி அரச பரம்பரையைச் சேர்ந்த தடியத் தேவரை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவச் செய்தார். தனால் கிழவன் சேதுபதி கோபம் அடைந்தார். இச்சமயத்தில் இந்துக்களும் கிறிஸ்தவ சமயும் பரவுவதை எதிர்த்தார்கள்.

எனவே சேதுபதி தனது நாட்டில் இருந்த கிறிஸ்தவக் கோவில் களையெல்லாம் இடித்துத்தள்ள கட்டளையிட்டார். பிரிட்டோ கி.பி. 1693 ஜனவரி 8-ம் தேதி சிறைபிடிக்கப்பட்டு இராமநாதபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் கி.பி 1693, பிப்ரவரி 3-ல் ஒரியூருக்கு நாடு கடத்தப் பட்டார். ஒரியூரின் அமைச்சரான முருகப்ப பிள்ளையின் ஆலோசனையின் படி பிரிட்டோ பாதிரியார் கி.பி. 1693-ல் கொலை செய்யப்பட்டார். அவரது உடல் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு கழுகுகளுக்கு எறியப்பட்டது.

இப்படி மறவர் நாட்டிலும், தஞ்சையிலும் கிறிஸ்தவர்கள் துன்பப் பட்டபோது மங்கம்மாள் அவர்களை சுதந்திரமாக வாழவிட்டார். கிறிஸ்தவ சமயத்திடம் பரிவும் காட்டினார். கி.பி. 1691-ல் மறவர் நாட்டு சிறையில் அடைபட்டு சாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்யுமாறு செய்தாள். மதுரையில் கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு மங்கம்மாள் பாதுகாப்பு அளித்தாள். புச்சட் பாதிரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க மதுரை நாட்டில் கிறிஸ்தவர்கள் மீது அன்பு காட்டி பாதுகாப்பளித்தாள்.

**கிறிஸ்தவசமயப்போதகர்களின்சாதனைகள்**

1. ஏராளமான துன்பங்கள் தொல்லைகளுக்கு நடுவே நூற்றுக் கணக்கான உயர் இன இன இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். சமய

மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாக இறையியல், வரலாறு போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. இலவசமாக உணவு, உடை, இருப்பிடங்கள், பாதுகாப்பு முதலியன கொடுக்கப்பட்டன.

2. நாயக்கர் காலத்தில் இருந்த இயேசு சபையினரும், புரட்டஸ்தாந்து சமயத்தினரும் தங்கள் கடிதங்கள் மூலமாக தமிழகத்தின் சமுதாயப் பொருளாதார அரசியல் சமய நிலைகளை எடுத்துக் கூறியுள்ளனர். இது தமிழக வரலாற்றிற்கு பெரிதும் உதவி செய்தது.

3. கிறிஸ்தவ சமயப் போதகர்கள் கல்வி வளர்ச்சிக்கும் வித்திட்டனர். தமிழகத்தில் இலக்கிய வளர்ச்சிக்கும் அடிகோலினர். அச்சு இயந்திரத்தை தமிழகத்தில் முதன் முதலில் புன்னக்காயல் என்ற இடத்தில் அமைத்த பெருமை போர்ச்சுக்கீசியரையே சாரும். பின்னர் ஜெர்மனியைச் சேர்ந்த ஜீகன்பால்க் தரங்கம்பாடியில் அச்சு இயந்திரத்தை அமைத்து ஏராளமான புத்தகங்கள், பத்திரிக்கைகள், பிரசுரங்களை வெளியிட்டார். இம்முறை மாநில மொழிகளின் செல்வாக்கைப் பெருக்கியது.

4. கிறிஸ்தவ சமயப் போதகர்கள் வெளியிட்ட நூல்களினால் இலக்கிய அறிவு பெருகியது. இந்தக் கல்வி சமுதாயத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்த்தியது. மக்கள் பலர் தங்கள் மூடப் பழக்க வழக்கங்களை கைவிட்டனர். மேற்கத்திய நாகரிக முறை தமிழகப் பண்பாட்டில் கலந்தது.

5. கிறிஸ்தவ சமயப் போதகர்கள் தமிழகத்தில் பதிந்திருந்த மூடப் பழக்கங்களைக் கடுமையாகத் தாக்கினர். கண்டனம் செய்தனர். கோவில்களில் இருந்த தேவதாசி முறையைக் கண்டித்தனர். அரசர்கள் அந்தப்புரங்களை வைத்துக் கொள்வதையும் சாடினர். மன்னர் இறக்கும் போது இந்த அந்தப்புர பெண்கள் உடன்கட்டை ஏறி உயிர் துறப்பதையும் கடுமையாக எதிர்த்தனர்.

6. விவிலிய நூல் கருத்துக்கள் தமிழகத்தில் சமுதாயச் சீரமைப்பிற்கு பெரிதும் உதவியது. தமிழகத்தில் நிலவிய பலதார மணம் கண்டிக்கப் பட்டது. பலரிடம் ஆசை நாயகிகளை வைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்ததையும் போதகர்கள் கண்டித்தனர். தமிழகத்தில் ஏராளமான நகரங்களில் இருந்து வந்த விபச்சாரத்தையும் கிறிஸ்தவ மத போதகர்கள் கண்டித்து எழுதினர்.

7. தமிழகத்தில் நிலவி வந்த பல கடவுள்களை வணங்கும் முறை கண்டிக்கப்பட்டது. தமிழ் மக்களை ஒரே கடவுளை வணங்கத் தூண்டினர். இந்து சமயத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அவர்கள் செய்த செயல்களினால் சிறையில் சித்திரவதை, கொலை போன்ற கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.
8. நாயக்கர் கால சமுதாயத்தில் நிலவிய சாதி முறையை கிறிஸ்தவ சமயப் பாதிரியார்கள் கண்டனம் செய்தனர். ஏனெனில் நாயக்க மன்னர்கள் பிராமணர்களை அதிக அளவில் மதித்து, தாழ்த்தப்பட்ட மக்களை சந்திக்கத் தவறினர். இதனால் தங்களால் முடிந்த அளவு இன வேறுபாடுகளைக்களையகிறிஸ்தவ துறவிகள் முயன்றனர்.

## 4. தமிழகத்தில்மராட்டியர்ஆட்சி (1676–1855)

விஜய நகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் இஸ்லாமிய அரசுக்கு எதிராக இந்து சமயப் பண்பாட்டைக் காக்கும் பொறுப்பை மராட்டிய அரசுகள் ஏற்று நின்றன. தக்காணத்திலும், தமிழகத்திலும் மராட்டிய அரசுகள் தோன்றின. தக்காணத்தில் தோன்றிய மராட்டிய அரசு இஸ்லாமிய அரசுகளை நசுக்கி மிதித்து முன்னேறியது. ஆனால் தமிழகத்தில் தோன்றிய மராட்டிய அரசு இதற்கு நேர்மாறாக விளங்கியது. தமிழக மராட்டியத் தலைவர்கள் முஸ்லீம் அரசின் படைத் தலைவர்களாக விளங்கி முஸ்லீம்களுக்காக நாடு பிடிக்கும் பணியில் இறங்கினர். பீஜப்பூர் சுல்தானின் தளபதியான சாஜிபோன்ஸ்லே தஞ்சை, செஞ்சி போன்ற இடங்களைக் கைப்பற்றினார். அப்பகுதிகளின் ஆளுநராகவும் நியமிக்கப் பட்டார். அதன் பிறகு வந்த அவரது மகன் வெங்காஜி பீஜப்பூரின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டு 1676-ல் தஞ்சையின் அரசரானார். இவ்வாறு தஞ்சையில் மராட்டியர் ஆட்சி ஆரம்பமானது. 1865-ல் டல்ஹௌசி பிரபு தஞ்சையை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்துக் கொண்டதுடன் மராட்டிய அரசு முடிவடைந்தது.

### தமிழகத்தில்மராட்டியஆட்சியின்தோற்றம்

தஞ்சை நாயக்கர் விஜயராகவனுக்கும், மதுரை நாயக்கர் சொக்கநாதருக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவாக 1673-ல் விஜயராகவன் கொல்லப்பட்டார். ஆனால் தஞ்சை வீழ்ச்சியடையும் முன்னரே விஜயராகவனின் மனைவி தனது நான்கு வயது மகன் செங்கமலதாஸ் என்பவனை பாதுகாப்புத்தேடி டச்சுக்காரர்களின் குடியேற்றமான

நாகப்பட்டிணத்தில் உள்ள ஒரு பெரும் செல்வந்த செட்டி வணிகரிடம் அனுப்பி வைத்தார். தஞ்சையைக் கைப்பற்றிய சொக்கநாதர் தனது உறவினர் அழகிரியை அங்கு ஆளுநராக அமர்த்தினார். ஆனால் அழகிரி விரைவில் சொக்கநாதரைப் புறக்கணித்து தன்னாட்சியை நிறுவினார்.

இச்சூழ்நிலையில் அழகிரியின் போக்கை வெறுத்த அவரது ராயசம் வெங்கணா, தஞ்சையின் வாரிசாக செங்கமலதாசை அறிவித்து, அழகிரிக்கு எதிராக பீஜப்பூர் சுல்தான் அடில்ஷாவின் படை உதவியைப் பெற்றார். மேலும் மதுரை நாயக்கரின் ஆதரவாளர்களும் செங்கமலதாசுக்கு ஆதரவாகத் தலையிடும்படி பீஜப்பூர் சுல்தானிடம் வேண்டினர். இச்சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அடில்ஷா தனது தளபதி வெங்காஜி (ஏக்கோஜி)யின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். கி.பி. 1675-ல் பீஜப்பூர் படை அழகிரியை அய்யம்பேட்டையில் தோற்கடித்துவிட்டு செங்கமலதாசை தஞ்சையில் அமர்த்தியது. இந்த உதவிக்குக் கைமாறாக வெங்காஜி விலை உயர்ந்த வெகுமதிகளையும், தஞ்சாவூரில் ஜாகிர்களையும் பெற்றார். பீஜப்பூர் சுல்தான் அடில்ஷா கி.பி. 1676-ல் இறந்த போது வெங்காஜி தஞ்சை மீது படையெடுத்து செங்கமலதாசை அகற்றிவிட்டு தஞ்சையின் அரசரானார். இவ்வாறு மராட்டியர்கள் தஞ்சையைப் பெற்று மராட்டிய ஆட்சியைத் துவக்கினர்.

**தஞ்சை மராட்டிய மன்னர்கள்**

**1) வெங்காஜி(கி.பி. 1676-1684)**

வெங்காஜி, ஏக்கோஜி என்றும் அழைக்கப்பட்டார். இவர் ஷாஜி போன்ஸ்லே என்பவருக்கும் அவரது மனைவியான துக்காபாய்க்கும் பிறந்தவர். தனது இளமைக் காலத்தின் பெரும் பகுதியை கர்நாடகத்தில் செலவிட்டார். வெங்காஜி சிவாஜியைப் போலவே தானும் தக்காண சுல்தான்களின் பிடியிலிருந்து விலகி சுதந்திர அரசை அமைக்க விரும்பினார். அப்போது தஞ்சையில் நிலவிய கேவலமான அரசியல் குழப்பத்தின் விளைவாக தஞ்சை நாயக்கர் அரசைக் கைப்பற்றி மராட்டிய ஆட்சியை நிறுவினார்.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய புதிதாகக் கைப்பற்றப் பட்ட பகுதிகளில் வெங்காஜி தனது ஆட்சியை உறுதிப்படுத்தினார். அரசியல் குழப்பங்களுக்கிடையே வெங்காஜியின் செயல்படத் தொடங்கியது. அருகாமையிலுள்ள நாடுகளின் விரோதப்

போக்கினால் தனது நிலை அபாயகரமானது என்று உணர்ந்தார். சொக்கநாத நாயக்கருடன் அவர் மேற்கொண்ட ஒரு போரில் தோல்வியடைந்தார். வடக்கிலுள்ள பல ஆட்சிகள் முஸ்லீம் ஆதிக்கங்கள் அடிக்கடி படையெடுப்புகளை மேற்கொண்டன. எனவே தூரத்திலுள்ள நிலப்பகுதிகளைக் கொடுத்து விட்டு டெல்டாப் பகுதிகளை மட்டும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட வெங்காஜி முடிவு செய்தார்.

மைசூர் சிக்கதேவராயருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு தனது பெங்களூர் ஜாகிரை மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்றார். தனது நிலையை வலுப்படுத்த எண்ணிய வெங்காஜி வடக்கிலுள்ள மராட்டியர் களையும், அந்தணர்களையும் பதவியில் அமர்த்தி நிர்வாகத்தை மாற்றியமைத்தார். விவசாயிகளின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. இப்புதிய எஜமானர்கள் நல்ல நிலங்களைத் தங்களுக்கு வைத்துக் கொண்டு தமிழ் விவசாயிகளை குத்தகையாளர் நிலைக்கு மாற்றினர். பிரிட்டோ பாதிரியாரின் கூற்றுப்படி வெங்காஜி விளைச்சலில் நான்கில் மூன்று பகுதியை வரியாக வசூலித்தார். வரிகளை அதிகரிக்கப் பொருட்களின் விலையை தன்னிச்சைப்படி உயர்த்தி தனக்கென பொக்கிஷங்களை கோவில்களில் ஒதுக்கி வைத்தார். பேராசைமிக்கவரான வெங்காஜி நாட்டின் நலனைப் பற்றிச் சிறிதளவும் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை.

பீஜப்பூர் சுல்தானிடம் சாதாரணப் பணியாளராகச் சேர்ந்த வெங்காஜி படிப்படியாக உயர்ந்து மராட்டிய ஆட்சியை தஞ்சையில் நிறுவியவர் என்று புகழப்படும் அளவுக்கு உயர்நிலையடைந்தார். யாருடைய உதவியும் இல்லாமல் தனித்திருந்து தீரமுடன் செயல்பட்டார். 1684-ல் வெங்காஜி தனது மூத்த மகன் சாஜியிடம் தஞ்சைப் பகுதியை ஒப்படைத்து விட்டு இறந்தார்.

**சிவாஜியின்தென்னிந்தியப்படையெடுப்பு**

தென்னிந்தியாவில் மராட்டியர் வலிமைமிக்க இராணுவ ஆதிக்கமாக எழுச்சி பெற்ற காலம் இது ஆகும். மேற்குக் கடற்கரையில் சதாராவிலும், கோல்காப்பூரிலும் வளர்ந்தோங்கும் பெரும் ஆதிக்கமாக தங்களை நிலைநாட்டிய பின்னர் தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரை ஓரங்களில் அரசியல் வெற்றிகளைப் பெற அவர்கள் முற்பட்டனர். 1676-ம் ஆண்டின் இறுதியில் சிவாஜி பெரும்படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்தார்.

எவ்விதக் கடினமும் இல்லாமல் செஞ்சியைக் கைப்பற்றினார். செஞ்சிக் கோட்டையைப் பழுது பார்த்து அங்கு தனது சொந்த இராணுவ நிர்வாக முறையை ஏற்படுத்தினார். செஞ்சியிலிருந்து ஒரு படையை வேலூருக்கு அனுப்பினார். ஆனால் அதனை பீஜப்பூர் தளபதி அப்துல்லாகான் திறம்படப் பாதுகாத்தார். எனவே சிவாஜி

தஞ்சாவூர் நோக்கி முன்னேறினார். பரங்கிப்பேட்டை, திருவடிகை, தேவனாம் பட்டிணம், புவனகிரி ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு 1677 ஜூலை மாதம் கொள்ளிடம் நதிக்கரையில் திருவாடியில் முகாமிட்டார். தனது ஒன்றுவிட்ட சகோதரன் வெங்காஜியை வரவழைத்து தங்கள் தஞ்சையின் ஜாகீர்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி விவாதித்தனர். ஆனால் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் எவ்வித முடிவும் ஏற்படவில்லை.

எனவே சிவாஜி தனது வெற்றி உலாவைத் தொடர்ந்தார். வெங்காஜிக்கு சொந்தமான கொள்ளிடத்தின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றினார். தமிழ் நாட்டில் பத்து மாதங்கள் தங்கிய சிவாஜி தான்வெற்றி பெற்ற பகுதிகளை நிர்வகிக்கும பொறுப்பை சாந்தாஜியிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பினார். தெற்கிலிருந்து சிவாஜி திரும்பியதும் வெங்காஜி தான் இழந்த பகுதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டார். வெங்காஜிக்கும், சாந்தாஜிக்கும் இடையே ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி தஞ்சையையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மட்டும் பெற்று வெங்காஜி ஆண்டார். 1680-ல் சிவாஜி இறந்த பின்னர் வெங்காஜி தஞ்சாவூரின் சுதந்திர மன்னரானார்.

**2) சாஜி (கி.பி. 1684-1712)**

வெங்காஜிக்குப் பிறகு அவரது மூத்த மகன் சாஜி தஞ்சையின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். இவரது காலத்தில் தமிழகத்தில் அரசியல் நிலை சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டது. மதுரை நாயக்கர் அரசின் பலவீனத்தைப் பயன்படுத்தி அதற்குச் சொந்தமான பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். தக்காணத்தில் சிவாஜிக்குப் பிறகு முகலாயர்கள் மராட்டிய அரசர் ராஜாராமை துரத்தினார்கள். ராஜாராம் செஞ்சியில் தஞ்சம் புகுந்தார். எனவே ராஜாராமுக்கு உதவுவதற்காக சாஜி ஒரு படையை செஞ்சிக்கு அனுப்பினார். இதனைக் கண்ட முகலாயத் தளபதி சுல்பிகர்கான் தஞ்சையைக் கொள்ளையிட்டார். எனவே சாஜி சுல்பிகர்கானுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கப்பம் பட்ட ஆரம்பித்தார்.

இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதிக்கும் மதுரை நாயக்கருக்கும் இடையே நடந்த போரில் சாஜி சேதுபதிக்கு உதவியதால் மதுரை தளவாய் நரசப்பையன் தஞ்சை மீது போர் தொடுத்தார். ஆனால் தஞ்சையின் தளபதி பாலாஜி தளவாய் நரசப்பையனுக்கு ஏராளமான கையூட்டுக் கொடுத்து தஞ்சையைக் காப்பாற்றினார்.

கிழவன் சேதுபதியை மங்கம்மாள் தண்டிக்க முயன்ற போது சாஜி சேதுபதிக்கு எதிராக நின்றதால் 1709-ல் சேதுபதி தஞ்சை மீது படையெடுத்து அறந்தாங்கியைக் கைப்பற்றினார்.

பல தொல்லைகளுக்கு மத்தியிலும் தஞ்சையில் ஆட்சி முறை செவ்வனே நடைபெற்றது. தஞ்சையில் அழகிய அரண்மனைகள் கட்டப்பட்டன. தஞ்சையில் சாஜி ஒரு மருத்துவமனையை அமைத்தார். அதற்கு ஐதராபாத்திலும், அரேபியாவிலிருந்தும் மருத்துவர்களை வரவழைத்தார். சிவில் கிரிமினல் நீதிமன்றங்களை அமைத்து நீதி நிர்வாகத்தை சீர்படுத்தினார். சாஜி சிறந்த கல்விமான். தக்காரை ஆதரித்தார். பல கவிகளும் ஞானிகளும் அவர் காலத்தில் வாழ்ந்தனர். வடமொழி, தெலுங்கு முதலிய மொழி வல்லுநர்கள் தமிழறிஞர்களை விட அதிக ஆதரவு பெற்றனர். சாஜி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார். அவர்களது ஆலயங்கள் நொறுக்கப்பட்டன. கிறிஸ்தவத் துறவிகள் சிறையிலடைக்கப்பட்டனர். சாஜி 1712-ல் தனது 40-ம் வயதில் இறந்தார்.

**3) முதலாம் சரபோஜி (கி.பி. 1712-1728)**

சாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது தம்பி முதலாம் சரபோஜி தஞ்சை மன்னரானார். இவர் வெங்காஜியின் இரண்டாவது மகன் ஆவார். இவரது காலத்தில் சாஜி காலத்தைப் போலவே நாடு கலாச்சார மேம்பாடு அடைந்திருந்தது. சரபோஜி பற்றி பல கல்வெட்டுகள் உயர்வாகக் கூறுகின்றன.

இராமநாதபுரத்தில் விஜயரகுநாதத் தேவருக்குப் பிறகு சேதுபதி ஸ்தானத்திற்குப் போட்டி ஏற்பட்டது. தண்டத் தேவரும், பவானி சங்கரரும் வாரிசுரிமைப் போட்டியில் ஈடுபட்டனர். தண்டத் தேவருக்கு புதுக்கோட்டைத் தொண்டைமானும், பவானி சங்கரருக்கு சரபோஜியும் ஆதரவளித்தனர். சரபோஜி ஒரு பெரும்படையை ஆனந்தராவ் தலைமையில் அனுப்பிவைத்தார். அவர் புதுக்கோட்டைப் படையைத் தோற்கடித்து தண்டத்தேவர் குடும்பம் முழுவதையும் சிறைப்பிடித்து கொன்று விட்டார். வெற்றி பெற்ற பவானி சங்கர் சேதுபதியானார். இவர் சரபோஜிக்கு கொடுப்பதாக வாக்களித்த பாம்பாற்றுக்கு வடப்பக்கம் உள்ள பகுதிகளைக் கொடுக்கவில்லை. எனவே தஞ்சைப் படைகள் மறுபடியும் இராமநாதபுரத்துக்கு அனுப்பப்பட்டது. பவானி சங்கரர் தோற்கடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலேயே உயிர் நீத்தார். இந்த நிலையில் தான். சிவகங்கை ஜமீன் தோன்றியது. முதலாம் சரபோஜி வாரிசில்லாமல் 1728-ல் இறந்தார்

**4) துக்காஜி (கி.பி. 1728-1736)**

முதலாம் சரபோஜி வாரிசில்லாமல் இறந்ததால் வெங்காஜியின் மூன்றாவதும் கடைசி மகனுமான துக்காஜி தஞ்சை மன்னரானார். இவர் தகுதி வாய்ந்தவராகவோ அமைதியை விரும்புபவராகவோ இருக்கவில்லை. பிரச்சனைகளை அணுகுவதில்

கொடூரத்தன்மையும் கிளர்ச்சி எண்ணமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. எதிலும் பேராசை கொண்டவராகக் காட்சியளித்தார். தெற்கே முகலாயப் பேரரசு வளர்ச்சியடைவதைக் கண்ட பின்பும் கவனமற்று இருந்தார். சுதந்திரம் பறிபோய்க் கொண்டிருந்தது. கி.பி. 1732-ல் சப்தல் அலியும், சந்தா சாகிப்பும் தஞ்சை மீது படையெடுத்துச் சென்று சுற்றுப்புறக் கிராமங்களை அழித்தனர், கொள்ளையிட்டனர், பலரைக் கொன்று குவித்தனர். பயமடைந்த துக்காஜி ஏராளமான பணத்தைக் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் துக்காஜி இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை அரசுகளுக்கெதிராகப் படை நடத்திச் சென்றார். ராமநாதபுரம் சேதுபதியாக இருந்த கட்டையத் தேவருக்கு எதிராக படை நடத்தினார். ஆனால் இப்போரில் தோல்வியடைந்து பின்வாங்க நேரிட்டது. இப்போரின் மூலம் துக்காஜிக்கு ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டது.

துக்காஜி திருச்சியிலிருந்து மதுரை நாயக்கத்தை ஆண்டு வந்த மீனாட்சியை அவளது தலைநகரத்தை மீண்டும் மதுரைக்கே மாற்றிக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். ஆனால் மீனாட்சி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு தஞ்சை மற்றும் மதுரைப் படைகள் ஆனந்தராவின் தலைமையில் புதுக்கோட்டை மீது படையெடுத்தன. திருமயம் தவிர ஏனைய கோட்டைகளும் பிரதேசங்களும் அவர்கள் வசமாயின. இந்நிலையில் மறவர் படைகள் தொண்டைமானுக்குத் துணை நின்றன. அவர்களுடைய தாக்குதலைத் தாங்க மாட்டாமல் ஆனந்தராவ் தஞ்சைக்குத் திரும்பிவிட்டார்.

இவ்வாறு பலவாறாகவும் ஆக்கிரமிப்பு நடத்தி வந்த துக்காஜியைப் பற்றி தொண்டைமானும் சேதுபதியும் ஆற்காட்டு நவாபிடம் முறையிட்டனர். தஞ்சை விவகாரங்களில் தலையிட்டு கர்நாடகத்தை காப்பாற்றும்படி வேண்டினர். இந்த வேண்டுகோளுக் கிணங்க சப்தர் அலியும், சந்தாசாகிப்பும் தஞ்சையை முற்றுகையிட்டனர். மராட்டியப் படைகளுக்கு தலைமை தாங்கியவர் ஆனந்தராவ் ஆவார். போரில் ஆனந்தராவ் இறந்து போனார். ஆனால் துக்காஜி ஏராளமான லஞ்சம் கொடுத்து அமைதி ஏற்படுத்தினார்.

**5) பிரதாப்சிங் (கி.பி. 1739-1763)**

துக்காஜியின் இரண்டாவது மனைவியின் மகன் பிரதாப் சிங் கி.பி. 1739-ல் தஞ்சை மன்னரானார். இவரது ஆட்சிக் காலம் தஞ்சை அரசின் நேரடி வீழ்ச்சிக்கு வித்திட்டது. இவர் ஆங்கிலேயரிடம் செல்வாக்குப் பெற்றவராகவோ அல்லது பிரான்சின்

தலையீட்டுக்கு எதிரியாகவோ இல்லை. ஆனால் இவர் எல்லாப் பக்கங்களிலும் எதிரிகளால் சூழப்பட்டு விட்டார். ஆனால் தனது முன்னோரைப் போல எதிரிகளுக்கு லஞ்சம் கொடுத்து காத்துக் கொண்டார். பிரதாப் சிங் திறமையும், அரசியல் நுட்பம் உடையவராகவும், மக்கள் ஆதரவைப் பெற்றவராகவும் விளங்கினார். தஞ்சையை தனது காலத்தில் அழியாமல் பார்த்துக் கொண்டார்.

கி.பி.1732-ல் தஞ்சை மன்னர் ஆற்காட்டு நவாபுக்கு கொடுப்பதாக வாக்குறுதி அளித்த கப்பத்தை பிரதாப் சிங் கொடுக்கவில்லை. இதனால் தஞ்சை அரசியலில் ஆற்காட்டு நவாபின் தலையீடு அதிகரித்தது. எனவே திருச்சியிலிருந்த சந்தாசாகிப் தஞ்சையை எதிர்த்தார். இதனால் பிரதாப் சிங் மராட்டியரின் உதவியை நாடினார். 1739-ல் ராஜிபான்ஸ்லே கர்நாடகப் பகுதியில் நடத்திய படையெடுப்பு தற்காலிகமாக பிரதாப் சிங்கை அழிவிலிருந்து காத்தது. கி.பி. 1742-ல் நிஜாம் உல்முல்க்கினால் தஞ்சை மறுபடியும் பயமுறுத்தப்பட்டது. ஆனால் கலக்கமுற்ற பிரதாப் சிங் ஏழு லட்சம் ரூபாய் கையூட்டு கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார்.

கி.பி. 1749-50-ல் சந்தாசாகிபும், முசபர்ஜங்கும் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் தஞ்சையை முற்றுகையிட்டனர். முற்றுகையாளர்கள் நாற்பது லட்சம் ரூபாய் கேட்டனர். ஆனால் இதைக் கொடுக்க விரும்பாத பிரதாப் சிங் ஆங்கிலேயருடன் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதற்கிடையில் முகமது அலியும் முராரிராவும் தஞ்சைக்குப் படையுடன் வந்து முஸ்லீம் பிரெஞ்சு முற்றுகையிலிருந்து தஞ்சையை விடுவித்தனர். சந்தாசாகிபும் பிரெஞ்சுக்காரரும் ஏமாந்து திரும்பினர்.

காட்டுராஜா என்பவன் மறுபடியும் ஆதிக்கத்தைக் கைப்பற்ற முயன்று 1749-ல் பிரெஞ்சுக்காரர்கள் உதவியை நாடினான். அவர்கள் உதவ முன்வராததால் ஆங்கிலேயர்களை அணுகினான். இதை ஏற்றுக் கொண்ட ஆங்கிலேயர்கள் லாரன்ஸ், கிளைவ் ஆகியோர் தலைமையில் அனுப்பி தேவகோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். மராட்டியப் படைத் தலைவரான மானாஜி எவ்வளவோ முயன்றும் தேவகோட்டையைக் காக்க முடியவில்லை. எனவே பிரதாப் சிங் தேவகோட்டையை ஆங்கிலேயர்களுக்கு விட்டுக் கொடுத்து, காட்டு ராஜாவுக்கு ஆண்டு தோறும் நாற்பதாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். ஆங்கிலேயரின் உதவி வேண்டிப் பெற்றுக் கொள்ளத் தக்கது என்பதை பிரதாப்சிங் உணர்ந்தார்.

இச்சூழ்நிலையில் சந்தாசாகிப் பிரெஞ்சு-முசபர்ஜங் கூட்டுக்கு எதிராக ஆங்கிலேயர் கூட்டில் சேர்ந்தார் பிரதாப் சிங், ஆங்கிலேயரின் நட்பைப் பெற்றார். பிரதாப் சிங் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டார். அறந்தாங்கிப் பிரதேசத்தை

மறவர்களிடமிருந்து கைப்பற்ற இரண்டுமுறை முயற்சி செய்தார். முடியாததால் ஆற்காட்டு நவாபின் உதவியை நாடினார். ஆனால் ஆங்கிலேயர் பிரதாப் சிங்கிடம் இராமநாதபும், புதுக்கோட்டை அரசுகளுடன் சமாதானமாகப் போய்விடும்படி அறிவுறுத்தினர். ஆங்கிலேயரின் அறிவுரையைப் புறக்கணித்த பிரதாப் சிங் தொண்டைமான் நாட்டின் மீது படையெடுக்க தளபதி மானாஜிக்கு உத்தரவிட்டார். ஆனால் ஆங்கிலேயர் ராணுவத் தலையீடு செய்வதாக பயமுறுத்தவே தஞ்சைப் படைகள் பின்வாங்கின.

பிரதாப் சிங் தன் ஆட்சிக் காலம் முழுவதும் ஒரு ஆக்கிரமிப் பாளராகவே காணப்பட்டார். அவரை ஒருவராலும் அடக்க முடியவில்லை. கர்நாடகக் கொந்தளிப்பு ஓரளவு தணிந்த பின்னர் தஞ்சை ஆங்கிலேயர் அரவணைப்புக்குள்ளிருந்தது. 1763-ல் அவர் மங்கும் வரை தஞ்சையில் ஒருமைப்பாடும் விடுதலையும் பேணிக் காக்கப்பட்டிருந்தன.

**6) துல்ஜாஜி (கி.பி. 1763-1787)**

பிரதாப் சிங்கைத் தொடர்ந்து அவரது மகன் துல்ஜாஜி மன்னரானார். இவர் ஆட்சிக் காலத்தில் தஞ்சை மராட்டியர் ஆட்சியின் இறுதி வீழ்ச்சிக்கு அடிகோலப்பட்டது. இவரது ஆட்சி தொடங்கியதுமே ஹைதர் அலியின் கர்நாடகத் தாக்குதல்கள் ஆரம்பித்தன. கி.பி. 1769ல் ஹைதர் அலி தனக்கு நாற்பது லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று துல்ஜாஜிக்கு ஆணையிட்டார். ஏனெனில் கரூரைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர்களுக்கு துல்ஜாஜி உதவி செய்ததேயாகும். அப்படி நஷ்ட ஈடு கொடுக்காவிட்டால் நாடு முழுவதையும் நாசமாக்கி எல்லாக் குடிமக்களையும் அழித்து விடுவதாக எச்சரித்தார். இதனால் பயந்த துல்ஜாஜி நான்கு லட்சம் ரூபாயும் நான்கு யானைகளையும் கொடுத்து ஐதர் அலியை ஓரளவு சமாதானம் செய்தார்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த தளவாய் தாமோதரன்பிள்ளை சிவகங்கைப் படையின் துணையுடன் முன்பு சேதுபதி கீழ் இருந்த நாடு முழுவதையும் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார். இதனால் பகைமை ஏற்பட்டது. கி.பி. 1771-ல் துல்ஜாஜி மறவர் நாட்டின் மீது படையெடுத்தார். இராமநாதபுரத்தில் புகுந்து பல பகுதிகளைக் கைப்பற்றியதுடன் வெற்றி வாகை சூடி பொன்னும் பொருளும் கவர்ந்து வந்தது. நவாபின் துணையை நாடிய சேதுபதிக்கு உதவி செய்யவில்லை. கர்நாடகத்தில் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் எதிரான கூட்டமைப்பு ஒன்றை ஐதர் அலி ஏற்படுத்த முயன்றார். அச்சமடைந்த துல்ஜாஜி ஐதரோடு நட்புக் கொண்டார். இதனால் நவாபும் ஆங்கிலேயரும் துல்ஜாஜியை வெறுத்தனர்.

இச்சூழ்நிலையில் கர்நாடக நவாப் துல்ஜாஜியிடம் 25 லட்சம் ரூபாய் தருமாறு நிர்பந்தம் செய்தார். துல்ஜாஜி மறுக்கவே நவாப் முகமது அலி தனது மகன் உல்தத் உல் உம்ரா தலைமையில் தஞ்சைக்கு ஒரு படையை அனுப்பினார். ஆங்கிலப் படையும் தளபதி ஸ்மித் தலைமையில் உடன் சென்றது. கி.பி. 1771-ல் தஞ்சை முற்றுகையிடப்பட்டது. துல்ஜாஜி பணிந்தார். துல்ஜாஜி 325 லட்சம் இழப்பீடு செலுத்துமாறும், சேதுபதியிடமிருந்து பறித்த பிரதேசங்களையெல்லாம் அவருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டார். இழப்பீட்டுத் தொகை செலுத்தும் வரை மாயவரம், கும்பகோணம் பகுதிகள் நவாபின் அதிக்கத்திலிருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. தஞ்சையில் வசிக்கும் ஆங்கில வணிகர்களை மரியாதையுடன் நடத்தவும் துல்ஜாஜி ஒப்புக் கொண்டார்.

ஆனால் மறுபடியும் நவாப் தஞ்சையைத் தாக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. துல்ஜாஜி மறுபடியும் சிவகங்கை, இராமநாபுரம் விவகாரங்களில் தலையிடலானார். கும்பகோணத்தை டச்சுக்காரர்களுக்கு அடகு வைத்துவிட்டார். கி.பி. 1771-ம் வருட உடன்படிக்கைப்படி இழப்பீட்டுத் தொகை கொடுக்கவில்லை. இக்காரணங்களால் மறுபடியும் ஆங்கிலேயர் உதவியுடன் கி.பி. 1773-ல் தஞ்சையைத் தாக்கிக் கைப்பற்றினார் நவாப். துல்ஜாஜியும் அவர் குடும்பத்தினரும் சிறை வைக்கப்பட்டனர். தஞ்சை ஆட்சியை நவாபே மேற்கொண்டார். கி.பி. 1776 வரை தஞ்சையில் கொடுங்கோலாட்சி நடத்தினார். நாட்டை சீர்குலைத்தார். அளவற்ற செல்வங்களை தஞ்சையிலிருந்து அள்ளிச் சென்றார்.

இதனை அறிந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்கள் விசாரணை செய்து துல்ஜாஜியை மீண்டும் பதவியில் அமர்த்தும்படி கேட்டுக் கொண்டனர். அதற்காக பிகாட் என்ற புதிய கவர்னரை சென்னையில் நியமித்தனர். அதன்படி நவாப் மீண்டும் துல்ஜாஜிக்கு அரசைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினர்.

ஆங்கிலேயர். கி.பி. 1776-ல் துல்ஜாஜி மீண்டும் தஞ்சை மன்னரானார். ஆனால் அதிகாரத்தை இழந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர் ஆனார். தஞ்சையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். ஆங்கிலக் கம்பெனிக்கு துல்ஜாஜி 277 கிராமங்களை எழுதி வைத்தார். தஞ்சையில் ஆங்கிலப் படை ஒன்று வைக்கப்பட்டது. அதன் செலவை தஞ்சை மன்னரே ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தஞ்சை மன்னர் ஆங்கிலேயரின் கைப்பாவை ஆனார்.

துல்ஜாஜி தம் குடும்பத்தைச் சேர்ந்த சரபோஜி என்ற பையனை தத்து எடுத்துக் கொண்டார். அந்தப் பையனை தக்க வயது வந்து மன்னராகும் வரை ஷிவார்ட்ஸ் என்ற

பாதிரியாரிடம் ஒப்படைத்தார். அதுவரை அரசாங்கத்தைக் கவனிக்க அமர்சிங் என்பவரை நியமித்தார். வாழ்நாள் முழுவதும் பல சோதனைகளால் வேதனைப்பட்ட துல்ஜாஜி கி.பி. 1787ல் இறந்தார்.

**7) அமர்சிங் (கி.பி. 1787-1798)**

துல்ஜாஜியின் ஏற்பு மகன் சிறுவனாக இருந்தபடியால் அமர்சிங் என்பவர் பகர ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். இவருடன் ஆங்கிலேயர் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டு மேலும் பல உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றனர். கம்பெனிக்கு ஆண்டுதோறும் நான்கு லட்சம் பகோடாக்கள் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டதால் அமர்சிங் கொடுங்கோல் முறைகளைக் கையாண்டு வரி வசூலிக்கத் தொடங்கினார். ஆங்கிலேயரின் ஆதரவைப் பெற்ற அமர்சிங் அரச பதவி மீது ஆசை கொண்டார். எனவே சரபோஜி மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தி தன்னையே மன்னராக நியமிக்கும்படி கம்பெனியைக் கேட்டுக் கொண்டார். அப்போது சென்னை கவர்னராக இருந்த ஆர்ச்பால்ட் காம்பெல் என்பவர் விசாரணை செய்து அமர்சிங்கிற்கு அரச பதவியை அளித்தார்.

ஆனால் சரபோஜியின் பாதுகாவலர் ஷிவார்ட்ஸ் பாதிரியார் இந்த தீர்ப்பை எதிர்த்து மறுபரிசீலனை செய்யும்படி கார்ன்வாலிசிடம் முறையிட்டார். நடைமுறையை ஆராய்ந்த கவர்னர் ஜெனரல் அமர்சிங்கிற்கு உபகாரச் சம்பளம் கொடுத்து விட்டு 1798-ல் சரபோஜியை மன்னராக்கினார்.

**8) இரண்டாம் சரபோஜி (கி.பி. 1798-1833)**

இரண்டாம் சரபோஜி கி.பி. 1798 ஜூன் மாதம் முதல் ஆட்சியைத் தொடங்கினார். அரச பதவியைப் பெற்ற இவர் அதிகாரத்தைப் பெறவில்லை. 1799-ல் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு ஓய்வூதியம் பெற்று தஞ்சைக் கோட்டைக்குள் ஒதுங்கினார். 1799 அக்டோபரில் தஞ்சைக் கோட்டையையும், வல்லத்தையும் வைத்துக் கொண்டு தஞ்சை நாட்டின் ஆட்சியை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார். தஞ்சை சென்னை மாகாணத்துடன் இணைந்தது. சரபோஜியும், அமர்சிங்கும் மற்றும் குடும்பத்தாரும் ஓய்வூதியம் பெற்றனர். சரபோஜி தான் விரும்பும் வரை படையை வைத்துக் கொள்ள உரிமை பெற்றார். சரபோஜியும் அவரது புதல்வர் சிவாஜியும் மன்னர் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள் இருந்தனர்.

அதிகாரத்தையும் நாட்டையும் இழந்த பின் சரபோஜி கோட்டையில் பொம்மையாக இருக்கவில்லை. அந்தப்புர சுகத்தில் ஆடித் திளைக்கவில்லை. அதற்கு மாறாக கலையையும், இலக்கியத்தையும் போற்றுவதற்கான அவகாசமும் வாய்ப்பும் பெற்றார்.

ஷிவார்ட்ஸ் பாதிரியாரின் மேற்பார்வையால் ஆங்கிலத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். பாதிரியாரின் அன்பு மாணவரான சரபோஜி அறிவுத் தாகம் கொண்டு அருமையான நூலகம் ஒன்றை ஆரம்பித்தார். அதுதான் சரஸ்வதி மகால் நூலகம் ஆகும். வட படமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட இலக்கணம், இலக்கியம், மருத்துவம், தத்துவம், வானியல், உயிரியல், நுண்கலைகள், கட்டிடக்கலை போன்ற பல துறைகளைச் சார்ந்த அரிய நூல்களை சேகரித்து வைத்தார். மேலும் பழங்காலத்தைச் சேர்ந்த 2,200 ஓலைச் சுவடிகளையும் சேகரித்து வைத்தார். இதில் நாயக்கர் காலத்திலும், மராட்டியர் ஆட்சிக் காலத்திலும் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் அடங்கும். இந்த சரஸ்வதி மகால் ஒரு பல்துறை ஆய்வுக் கூடமாக மாறியது. மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்தி பல அரிய மருத்துவ நூல்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டது. எல்லா சமயத்தினரும் இந்த நூலகத்திற்குச் சென்று ஆய்வு நடத்தும் வகையில் நூல்கள் சேகரிக்கப் பட்டு வைக்கப்பட்டன.

இவை தவிர வண்ண ஓவியங்கள், தந்த எலும்புக்கூடு, வான இயல் ஆராய்ச்சிக்கான கருவிகள், பழங்காலத்து நாணயங்கள் போன்றவைகளும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. தஞ்சை சரஸ்வதி மகால் சரபோஜியின் மன்னரின் சாதனைக்கு ஒரு விளக்கமாகும். இந்த அறிஞனின் புகழை சரஸ்வதி மகால் இறவாப் புகழாக்குகின்றது. அறிவைப் பரப்பிடும் பணிக்கு 1805-ல் தஞ்சையில் அச்சுக்கூடம் ஒன்றையும் நிறுவினார் சரபோஜி. தேவநாகரி எழுத்தில் அச்சிடும் தொழில் நடைபெற்றது.

இசையைப் போற்றி வளர்த்த சரபோஜி தஞ்சையை கர்நாடக இசையின் மையமாக்கினார். இசைக் கலைஞர்களைப் பெரிதும் போற்றினார். இவர் காலத்தில் தான் சங்கீத மும்மணிகள் என்று புகழ் பெற்ற தியாகராயர், முத்துச்சாமி தீட்சிதர், சாமா சாஸ்திரியார் போன்றோர் வாழ்ந்தனர். கர்நாடக சங்கீதத்தின் கருவூலமாகத் திகழ்ந்தது தஞ்சாவூர். சரபோஜி ஆங்கில இலக்கியத்தில் தேர்ச்சி பெற்று விளங்கினார். அவருடைய அன்பிற்குரிய ஆசான் ஷிவார்ட்ஸ் பாதிரியார் உயிர் துறந்ததும், சரபோஜி எழுதிய ஆங்கிலக் கவிதை பாதிரியாரின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் சரபோஜி 1833-ல் இறந்தார்.

**9) இரண்டாம்சிவாஜி (கி.பி. 1833-1855)**

இரண்டாம் சரபோஜிக்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் சிவாஜி மன்னரானார். இவர் தாய்க்கு செல்லப் பிள்ளையாக தஞ்சைக்கு பொல்லாப் பிள்ளையாக வளர்ந்தார். அந்தப்புற சுகத்தில் திளைத்தார். இருபது மனைவியர் இருந்தும் ஆண்

பிள்ளையில்லாமல், 1855, அக்டோபர் 27-ல் இறந்தார். அப்போது கவர்னர் ஜெனராக இருந்த டல்ஹௌசி பிரபு வார்சிலிக் கொள்கையைப் பின்பற்றி வாரிசில்லாத தஞ்சை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஆங்கில அரசு தஞ்சை ஆட்சியை நேரடியாக எடுத்துக் கொண்டது. இத்துடன் தஞ்சை மராட்டியர் ஆட்சி முடிவடைந்தது.

சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தஞ்சையில் ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் கொடுங்கோலர்கள்களாகவே திகழ்ந்தனர். சரபோஜி மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தார். மராட்டியர்கள் வடமொழி சார்புடையவர்கள். எனவே தமிழகத்திற்கும் தமிழுக்கும் நாயக்கர்கள் செய்ததைப் போன்ற அழியாத கலைப் பணிகளை செய்யத் தவறி விட்டார்கள். இவர்கள் காலத்தில் மன்னர்களுக்கும் மக்களுக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படவில்லை. அதிகாரிகளின் அதிகாரமும் கெடுபிடியும் எல்லை மீறி காணப்பட்டன. இடைவிடாத போர்களினால் மக்கள் பெருந்துன்பத்திற்கு உள்ளானார்கள். தமிழகத்தைப் பொருத்த வரையில் மராட்டியர் ஆட்சியால் நன்மை ஏதும் விளையவில்லை.

**தஞ்சை மராட்டியர்கால அரசியல், சமுதாயப், பொருளாதார, பண்பாட்டுநிலை**

**1. அரசியல் நிலை**

தஞ்சை மராட்டியர்கள் கி.பி. 1676 முதல் 1856-ம் ஆண்டு வரை தமிழகத்தில் மிகச் செழிப்பான பகுதியை ஆட்சி செய்தனர். ஆனால் அவர்கள் ஆட்சியின் கீழ் மக்கள் அளவற்ற தொல்லைக்கு உள்ளானார்கள். மன்னர்கள் அடிமைகளாகத் தரம் தாழ்ந்திருந்தனர் தன்னைச் சுற்றியிருந்த பிராமண அதிகாரிகளிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு கேளிக்கை களிலும், வடமொழிப் புலவர்கள் குழாத்துடனும் காலம் கழித்தனர். நிர்வாக முன்னேற்றத்திலும், மக்கள் நலன்களிலும் அக்கரை காட்டவில்லை.

**மராட்டிய ஆட்சி முறை**

தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த ஆட்சி முறையை மாற்றியமைக்கவும் இல்லை. அதனை முழுவதும் சரியென்று ஏற்றுக் கொள்ளவும் இல்லை. தங்கள் தாய் நாட்டுப் பழக்கங்களை சிறு மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தினர். தங்கள் ஆட்சியை சீராக வைத்திருக்க மகராஷ்டிராவிலிருந்து திறமையான தளபதிகளையும் வீரர்களையும், சிவில் பணியாளர் களையும் அழைத்து வந்தனர். அவர்களை உயர் பதவியில் வைத்து அதிகாரங்களையும் வழங்கினர். பொதுவாக அதிகாரவரன் முறை செய்யப்பட்ட நிர்வாக இயந்திரம் உருவாக்கப்பட்டது.

தஞ்சை மராட்டிய அரசர்கள் அனைவருமே ஏதேச்சாதிகாரிகளாக இருந்தனர். நாட்டின் நலனில் அக்கரை அவ்வளவாகக் காட்டவில்லை. அரசுக்கு வாரிசு பரம்பரையாக தேர்வு செய்யப்பட்டது. சில நேரங்களில் சுவிகாரம் எடுப்பதன் மூலம் சச்சரவு ஏற்பட்டது. மராட்டியரின் ஆட்சித் துறையில் தளவாய், பிரதானி, மந்திரி, தபீர், தர்மாதிகாரி போன்ற அதிகாரிகள் இருந்தனர். பிரதானி எனப்பட்டவர் திவான் என்று அழைக்கப்பட்டார். அரசர்களைவிட தளபதியும், புரோகிதரும் அதிக அதிகாரங்களைப் பெற்று செல்வாக்குடன் விளங்கினர். போர்ப் பிரகடனம் செய்யவும், அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளவும் எதிரிகளைத் தண்டிக்கவும் உரிமை பெற்றனர். மந்திரி என்ற தலைமை அமைச்சருக்கு சிவில் ராணுவ அதிகாரங்கள் சேர்த்து கொடுக்கப்பட்டன. அரசர்கள் அந்தப்புரங்களை அதிகமாக நாடினர். ஆடம்பரச் செலவுகளினால் பொருளாதாரத்தை விரயம் செய்தனர்.

**நிதி நிர்வாகம்**

மக்களிடம் இருந்து ஏராளமாக வரிப்பணம் வசூலிக்கப்பட்டது. வருவாய் வசூலிப்பதில் ஒரே மாதிரியான சட்டப்படியான கொள்கைகள் பின்பற்றப்படவில்லை. தொடர்ந்து நடைபெற்ற போர்களும் பஞ்சமும் நாட்டை சீர்குலைத்தன. பஞ்ச நிவாரணத்திற்கு எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. நாடு இராணுவ ஸ்திரத்தன்மையை எதிர் நோக்கியே இயங்க வேண்டியதாயிற்று. இராணுவ வீரர்களுக்கு ஒழுங்கான முறையில் ஊதியம் வழங்கப்பட்டது. அப்படி சரியாக வழங்கப்படாத போது கொள்ளையடித்து வழிப்பறியில் ஈடுபட்டனர். இராணுவ சிவில் அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர். போர்களில் ஈடுபட்ட அரசர்கள் பணத்தைக் கொடுத்தே அமைதியை விலைக்கு வாங்கினர். போர் நஷ்ட ஈட்டுத் தொகையாக ஏராளமான செல்வம் கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால் மக்களே வரி செலுத்தி துன்பப்பட்டனர்.

**ஆட்சிப் பிரிவுகள்**

தஞ்சை மராட்டிய அரசர்கள் தங்கள் ஆட்சிப் பகுதிகளை ஐந்து சுபாக்களாகப் பிரித்தனர். அவை பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயவரம், கும்பகோணம், திருவடி ஆகியவையாகும். ஒரு சுபாவின் பொறுப்பிலிருந்த அதிகாரி சுபேதார் என்று அழைக்கப்பட்டார். அவர் ஆட்சித்துறை அதிகாரியாக மட்டுமன்றி இராணுவ அதிகாரியாகவும் செயல்பட்டார். சுபாவின் கீழ் சீமை மற்றும் மாகாணம் ஆகிய பிரிவுகளும் இருந்தன.

கிராமம் என்பது மிகச் சிறிய ஆட்சித் துறை அலகாக இருந்தது. கிராம அதிகாரி கர்ணம் என்று அழைக்கப்பட்டார். தலையாரி என்ற கிராமக் காவலாளரும், காவல்காரர் என்ற கிராம போலீஸ் அதிகாரியும் ஊழல் மலிந்தவர்களாக இருந்தனர். பஞ்சாயத்து என்ற கிராமப் பொதுச் சபை கிராம நிர்வாகத்தைக் கவனித்தது. கிராமத்திலிருந்த நிலங்கள் பற்றிய கணக்கு நாட்டுக் கணக்கு என்று அழைக்கப்பட்டது. கிராம நீதிமுறை ஊழல் நிறைந்ததாக இருந்தது.

**II. சமுதாயநிலை**

**a) பிராமணர்கள்**

மராட்டியர் காலத்தில் தஞ்சையில் பலவகை இனத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பிராமணர்கள் ஆவர். பிராமணர்களில் சித்பவான், ராவ் போன்ற பிரிவினர் புனாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் ஆவார்கள். பிராமணர்கள் கல்வி கற்று வேதங்களை அறிந்தவர்களாக இருந்தனர். சமுதாயத்தில் எல்லோராலும் மதிக்கப்பட்டார்கள். இவர்கள் சமயச் சடங்குகளுக்கும் சம்பிரதாயங் களுக்கும் முக்கியத்துவம் அளித்தனர். மராட்டிய மன்னர்களிடம் பிராமணர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. மன்னர்கள் பிராமணர்களுக்கு நிலங்கள் வழங்கி தானம் செய்தனர். பிராமணர்கள் வாழ்ந்த பகுதியின் அருகே தங்கள் அரண்மனைகளைக் கட்டிக் கொண்டனர். அரசாங்கத்தின் உயர் பதவிகளிலும் ஆலயப் பராமரிப்புப் பணியிலும் பிராமணர்கள் அமர்த்தப்பட்டனர்.

**b) பிற சாதியினர்**

பிராமணர்களுக்கு அடுத்தபடியாக சமுதாயத்தில் செல்வாக்கு பெற்றிருந்தவர்கள் வேளாளர்கள் ஆவார்கள். இவர்கள் பாரம்பரிய வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களில் பலர் நில சுவான்தார்களாக இருந்தனர். இவர்கள் மத்தியில் காராளர் குடியினர், வாழையிலைக் குடியினர், வெற்றிலைப் பேட்டையர் என்ற மூன்று பிரிவினர் காணப்பட்டனர். தஞ்சைப் பகுதியைச் சேர்ந்த வேளாளர்கள் தங்களை சோனிய வேளாளர் என்று அழைத்துக் கொண்டனர். மருத்துவர், வண்ணார், சவரம் செய்வோர் முதலியவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருந்தனர். கைக்கோளர்கள், சாலியர்கள் மற்றும் சோனியர்கள் ஆகிய பிரிவினரும் இருந்தார்கள்.

**c) அந்நியநாட்டினர்**

மராட்டியர் காலத்தில் பல்வேறு அந்நிய நாட்டினர் தஞ்சைப் பகுதியில் குடியேறினர். வாணிப நோக்கங்களுக்காகவும், சமய நோக்கங் களுக்காகவும் இவர்கள் வந்தனர். நாகப்பட்டிணத்தில் போர்ச்சுக்கீசியர்கள் குடியேறினர். காரைக்கால் பகுதியில்

பிரெஞ்சு நாட்டவர் ஆதிக்கம் வளர்ந்தது. இந்த அந்நிய நாட்டவரில் சமயப் பரப்பாளர்கள் இங்கிருந்த மக்கள் போலவே உடை உடுத்தி, இங்குள்ள பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். இந்த ஐரோப்பியர் பின்பற்றிய பழக்க வழக்கங்கள் இங்குள்ள சமுதாய மக்களால் பின்பற்றப்பட்டன. இஸ்லாமியர்களும் கணிசமான அளவில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் ராவுத்தர்கள், லெப்பைகள் என்ற பிரிவினர் இருந்தனர். பொதுவாக இஸ்லாமியர்கள் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர்.

**d) பெண்களும்திருமணமுறையும்**

தஞ்சை மராட்டியர் காலத்தில் பெண்களின் நிலை மோசமாகவே இருந்தது. இயந்திரம் போன்று ஆண்களால் ஆட்டிப் படைக்கப் பட்டார்கள். பலதார மணம் அரசர்கள் மத்தியிலும், செல்வந்தர்கள் மத்தியிலும் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டது. இதனால் பெண்கள் மேலும் அல்லலுற்றனர். மன்னர்கள் அந்தப்புரப் பெண்கள் மத்தியில் காலம் கழித்தார்கள். இக்காலத்தில் சாதாரணப் பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்ததாகவோ, பொது வாழ்வில் ஈடுபட்டதாகவோ குறிப்புகள் இல்லை. விலை மகளிர் நகரங்களிலும், கிராமங்களிலும் மலிந்து காணப் பட்டனர். தேவதாசிகள் இக்காலத்தில் தங்கள் பெருமையை இழந்து விலை மகளிர் ஆயினர்.

மராட்டியர் காலத்தில் திருமணம் ஆரிய முறைப்படி நடந்தது. திருமண வைபவங்களின் காரணமாக அரசியல் குழப்பங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. திருமணச் செலவுகளும், முறைகளும் இனத்திற்கு இனம் மாறுபட்டிருந்தது. ஆண் வாரிசு இல்லாமல் கணவன் இறந்து விட்டால் அவன் சொத்துக்கள் அனைத்தும் மனைவிக்கே சொந்தமாகியது. உடன்கட்டை ஏறும் பழக்கம் உயர் குலத்தவரிடம் காணப்பட்டது. திருமணத்தின் மூலம் குழந்தை இல்லாவிட்டால் தத்து எடுக்கும் பழக்கம் இருந்தது. பிராமணரும் பிற உயர் குலத்தவரும் குழந்தை திருமணத்தைப் பின்பற்றினர். வட இந்தியாவிலிருந்து இப்பழக்கம் தமிழகத்தில் பரவியது.

**e) நீதி முறை**

நீதித்துறையில் மராட்டியர்கள் சில மாற்றங்களைச் செய்தனர். முதன் முறையாக பிரதாப் சிங் காலத்தில் ஒரு உயர் நீதிபதியும், துணை நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். இந்த உயர் நீதிபதியின் தீர்ப்பே இறுதியானது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. மன்னர் கூட இவரது தீர்ப்பை மாற்றும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஆனால் மன்னர் அமர்சிங் காலத்தில் நீதித்துறை சீர்கேடு அடைந்தது. நீதிக்கு விலை பேசுவது பெருகியது. குற்றவாளிகள் பலவகையான தண்டனைகளை அனுபவித்தனர். சித்திரவதை அதிகமாக இருந்தது. குற்றவாளிகளை அவமானப்படுத்துவதற்காக தெருக்களில் கேவலமாக

இழுத்துச் செல்லப் பட்டனர். தர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் சில மன்னர்கள் தீர்ப்பு கூறினர். வரி செலுத்தத் தவறியவர்களுக்கு தண்டனை வழங்க அமீன்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது

**சில பழக்க வழக்கங்கள்**

இக்காலத்தில் உயர்குடியினர் இறைச்சி உண்ணவில்லை. அரச குடும்பத்தினர் பகட்டான பட்டாடைகள் அணிந்தனர். அரசவையில் ஆடம்பரங்கள் அதிகரித்தன. முக்கிய அரசவை நிகழ்ச்சிகளில் வான வெடி பயன்படுத்தப்பட்டது குடிப்பழக்கம் எல்லோரிடத்திலும் காணப்பட்டது. மராட்டிய மன்னர்கள் நாயக்க மன்னர்களைப் போல அறக் காரியங்களுக்கு தாராளமாக நிதிகள் வழங்கினர்.

பொதுவாக மராட்டியர்களின் சமுதாய அமைப்பு நாயக்கர் காலத்தைப் போன்ற அமைப்பையே பெற்றிருந்தது. ஆனாலும் சில வேறுபாடுகள் காணப்பட்டன. ஐரோப்பிய பண்பாடு பரவியதால் தான் இந்த மாற்றங்கள் ஏற்பட்டன.

**III. பொருளாதாரநிலை**

**a) நில வருவாய்**

தஞ்சை மராட்டியர் காலத்தில் அரசாங்கத்திற்கு வந்த வருவாயில் நிலவரியே அதிகமாகும். ஆனால் வருவாய் வசூல் முறை ஒழுங்கு படுத்தப்படவில்லை. மராட்டியர்களால் ஆட்சி செய்யப்பட்ட தஞ்சை நாடு ஏகபோக கிராமங்கள், பர்லபோக கிராமங்கள், பொதுக் கிராமங்கள் என்ற வகையில் பிரிக்கப்பட்டிருந்தது வரி முறைகளில் ரயத்துவாரி முறையும், இனாம் முறையும், ஜமீன்தாரி முறையும் நிலவின.

நிலவரியானது நிலத்தில் அறுவடை செய்யப்படும் தானியத்தின் அளவையும், மதிப்பையும் வைத்து வசூல் செய்யப்பட்டது. பொதுவாக மொத்த விளைச்சலில் 60 முதல் 70 சதவீதம் வரை வசூல் செய்யப் பட்டதாகத் தெரிகிறது. தஞ்சையில் ஒரே மாதிரியான வரிவிதிப்புக் கொள்கை இல்லாததால் வரிக் கொடுமையால் மக்கள் அல்லலுற்றனர். வரி வசூலில் ஊழல் மலிந்திருந்தது. வரி அளவில் பிற்கால மராட்டியர் காலத்தில் மாற்றம் ஏற்பட்டது. பிரதாப் சிங், துக்காஜி, அமர்சிங் ஆகியோர் மக்கள் படும் துன்பத்தைக் கண்டு குறைந்த அளவே வரி, விளை பொருட்களிலிருந்து வசூல் செய்தனர்.

நிலவரி மட்டுமல்லாது பிற வரிகளும் வசூலிக்கப்பட்டன. உப்பு தயாரிப்போரிடமிருந்து உப்பு வரியும், வெளிநாட்டவர் இங்கு வந்து தங்கும் போது அவர்களிடமிருந்து ஒரு வித வரியும் வசூலிக்கப்பட்டது ஏற்றுமதி இறக்குமதி வரி குறைந்த அளவே வியாபாரிகளிடம் இருந்தும் ஓரளவு வரி கிடைத்தது..

**b) தொழில்கள்**

நாட்டில் பாரம்பரியமாக பல்வேறு தொழில்களைச் செய்தவர்கள் இருந்தார்கள். நெசவுத் தொழில் முக்கிய தொழிலாக விளங்கியது. இதில் கைக்கோளர்களும் பட்டு நூல்காரர்களும் ஈடுபட்டிருந்தனர். பொற் கொல்லர்கள் அழகிய வேலைப்பாடுடைய ஆபரணங்கள் செய்தார்கள். இரும்பு வேலை செய்தோர், தச்சு வேலை செய்தோர் ஆகியோர் சமுதாயத்திற்குத் தேவையான பொருட்களைச் செய்தனர். பல்வேறு தொழில்கள் மீது வரி விதிக்கப்பட்டது. கள் இறக்கும் தொழில், மீன் பிடித்தல் தொழிலுக்கும் வரி விதிக்கப்பட்டது.

**c) ஏற்றுமதியும் இறக்குமதியும்**

வெளிநாட்டு வாணிபம் பெரும்பாலும் அந்நிய நாட்டவரிடமே இருந்தது. நாகப்பட்டிணம், காரைக்கால், தரங்கம்பாடி ஆகியவை பெரிய துறைமுகங்களாகும். பல சிறிய துறைமுகங்களும் வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டன. நாகப்பட்டிணம் போர்ச்சுக்கீசியர்களுக்கும், காரைக்கால் பிரெஞ்சுக்காரர்களுக்கும், தரங்கம்பாடி டேனியர்களுக்கும் விடப்பட்டன. தஞ்சை, நாகப்பட்டிணம் ஆகிய பகுதிகள் செல்வம் பெருகும் பகுதிகள் ஆகும். இப்பகுதியிலிருந்து அரிசி, மிளகு, துணி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. தகரம், ஈயம், இரும்பு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. காரைக்கால் துறைமுகத்திலிருந்து வெள்ளி ஏற்றுமதி செய்யப்பட்டதாக டச்சு ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

**d) நாணயங்களும்பொதுச் செலவும்**

தஞ்சை மராட்டியர் ஆட்சியில் பல வகையான நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன. அவைகளில் குறிப்பிடத்தக்கவை சக்ராம் அல்லது பொன், பகோடா, ஸ்டார் பகோடா, பெரிய பணம், சிறிய பணம் போன்றவையாகும். பொதுவாக நாட்டின் வருவாயில் பெரும்பகுதி பலத்தைப் பெருக்குவதிலேயே செலவு செய்யப்பட்டது. மக்களின் நலனுக்காகவும் பெரும்பகுதி செலவு செய்யப்பட்டது. காவிரியின் கரைகளைச் செப்பனிட அதிகப் பணம் செலவு செய்யப்பட்டது. நீர்ப் பாசனத்திற்காகவும் போதுமான அளவு பணம் செலவு செய்யப்பட்டது.

**இசைக்கலை**

முத்துச்சாமி தீட்சிதர், சியாமசாஸ்திரி போன்றோர் இசைக் கலையில் புதுமையைப் புகுத்தினர். துளசிராஜா என்பவர் பல இசை நூல்களை இயற்றினார். அப்பாளச்சாரியார் என்பவர் சங்கீத சிந்தணியை இயற்றினார். சாஜி மன்னரின்

அவைக்களப் புலவரான கிரிராஜகவி வேதாந்தப் பாடல்களுக்கு இசை வகுத்தார். யக்ஷகான வகைத் தெலுங்கு நாடகங்களை இவர் இயற்றினார்.

**ஓவியக்கலை**

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஓவியக் கலையை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டினர். இவர்களது ஓவியத் திறனை தஞ்சை அரண் மனையிலும், சரஸ்வதி மகாலிலும் காணலாம். சுவர்களில் ராமாயணப் பாத்திரங்கள் வரையப்பட்டுள்ளன. கிருஷ்ணபரமாத்மாவின் லீலைகளும், பாமா ருக்மணியுடன் கிருஷ்ணர் இருப்பது போன்ற ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களின் ஆடையிலும் உருவ அமைப்பிலும் மராட்டியப் பண்பினையே காண முடிகிறது. 'தஞ்சை ஓவியங்கள்' என்பது இவர்கள் காலத்தில் சிறப்பாகக் கருதப்பட்டது. இது இன்றும் பிரபலமாக உள்ளது. இதில் கண்ணாடிச் சில்லுகளும் பலவகை வண்ணங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஓவியங்களில் அதிகமாகக் காணப்படுவது வெண்ணை தின்னும் பாலகிருஷ்ணர் உருவங்களே ஆகும்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் கலைத் துறையில் அதிக நாட்டம் கொள்ளவில்லை என்பது தெரிகிறது. இதற்காக அவர்கள் காலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளே காரணமாக இருக்கலாம்.

## இராமநாதபுரம்சேதுபதிகள்

இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் ஆண்டு வந்த சிற்றரசர்கள் மறவர் குலத்தவர் ஆவர். இவர்களில் இராமநாதபுரத்து சிற்றரசர்களுக்கு சேதுபதிகள் என்று பெயர். சேது சமுத்திரம் என்ற இராமேஸ்வரத்தைக் காத்து வந்ததால் இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த மறவர் இனத்தவர் வலிமையான உடலமைப்பும், தைரியமும் கொண்டவர்கள். எல்லாவிதமான போர் முறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள். தொடக்கத்தில் இராமநாதபுரத்தில் குடியேறிய இவர்கள் பின்னர் சிறிது சிறிதாக மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் குடியேறினர்.

பாளையக்காரர்களைப் போன்று சாதாரணத் தலைவர்களாக வாழ்ந்து வந்த இவர்கள் பின்னர் தங்களுக்கென்று சுதந்திரமான புதிய நாட்டை இராமநாதபுரத்தைச் சுற்றி ஏற்படுத்திக் கொண்டனர்.

**சேதுபதிகளின்எழுச்சி**

மதுரை முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609) காலத்திலிருந்து சேதுபதிகளைப் பற்றி நாம் அறிய முடிகிறது. முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் தனக்கு எதிராக கிளர்ச்சி செய்த தும்பச்சி நாயக்கரை அதிக முயற்சிக்குப் பிறகு தான் அடக்க முடிந்தது. தும்பிச்சியைக் கொன்ற பின்புதான் கலகங்கள் அடங்கின. இவ்வாறு பல கீழ்நிலை சிற்றரசர்கள் கலகம் செய்து வந்ததாலும், போர்ச்சுக்கீசியர்கள் கீழைக் கடற்கரை ஓரத்தில் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டு வந்ததும் மதுரை நாயக்கரின் ஆட்சிக்குப் பெரிய இடையூறாக இருந்தது. இவர்களையெல்லாம் அடக்கி ஆளுவதற்கு வன்மை மிகுந்த சிற்றரசு ஒன்று கிழக்குப் பகுதியில் தேவை என்று உணர்ந்தார் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் எனவே புகளூரில் சிற்றசராக இருந்து வந்த சடையத்தேவர் என்பவரை மறவர் நாட்டுக்குத் தலைவராக்கினார். இவர்தான் உடையான் சேதுபதி என்று அழைக்கப் பட்டார் இவ்வாறு சேதுபதிகள் ஆட்சி தொடங்கியது.

**1) உடையான்சேதுபதி(கி.பி. 1605-1622)**

சடயத்தேவர் உடையான் இராமபிரான் அணை கட்டிய சேது நாட்டிற்கு பாதியானதால் சேதுபதி என்று அழைக்கப்பட்டார். சேது என்றால் அணை, பதி என்றால் காவலன் என்றும் பொருள்படும். உடையான் சேதுபதி திறமையும் நேர்மையும் மிக்கவர். இவர் மறவர் நாட்டில் கலகம் செய்து வந்த சிற்றரசர்களை அடக்கி அமைதியை ஏற்படுத்தினார். இராமேஸ்வரம் செல்பவர்களுக்கு காவல் படையை ஏற்படுத்தினார். இதனால் மக்கள் தொல்லையின்றி இராமேஸ்வரம் சென்று கடவுளை வழிபட முடிந்தது. இவர் காளையார்கோவில், பட்டமங்கலம் முதலிய இடங்களில் வலிமை மிக்க ஆட்சியை நிலை நாட்டி, மக்கள் நலிவடையாதவாறு நல்ல திட்டங்களை வகுத்தார். இவர் தன் பெயரில் காசுகள் வெளியிடும் உரிமை பெற்றார். இவர் வழி வந்தவர்களே இராமநாதபுரம் சேதுபதிகள் ஆவர்.

உடையான் சேதுபதிக்குப் பிறகு அவரது மூத்த மகன் கூத்தன் சேதுபதி (கி.பி. 1622-1636) ஆட்சி புரிந்தார். இவரது காலத்தில் குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை.

**2) இரண்டாம்சடையக்கத்தேவர்(கி.பி. 1636-1645)**

கூத்தன் சேதுபதிக்கு மகன் இல்லாததால் அவரது தத்து மகன் சடையக்கத் தேவர் என்பவர் தொடர்ந்து சேதுபதியானார். கி.பி. 1639-ல் இவரது இளைய சகோதரரான தம்பி என்பவர் எதிர்த்தார். அப்போது மதுரையில் ஆட்சி செய்து வந்த திருமலை நாயக்கரிடம் ஆதரவு கேட்டார். அவர் தம்பிதான் மறவர் நாட்டின் உண்மையான வாரிசு எனவும், சடையக்கர் அரசை கைப்பற்றிக் கொண்டவர் என்றும் கருதினார். எனவே திருமலை

நாயக்கர் உடனே திறையை செலுத்த வேண்டும் என்றும் சடையக்கத் தேவரிடம் ஆணையிட்டார். செய்தியைக் கொண்டு வந்த தூதுவர் கேவலமாக நடத்தப்பட்டார். இதனால் ராமப்பையன் தலைமையில் சேதுபதியை அடக்குவதற்கு ஒரு படையை அனுப்பினார் திருமலை நாயக்கர்.

'ராமப்பையன் சடையக்கத் தேவரை இராமேஸ்வரத்திற்கு விரட்டினார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். தம்பி அரியணையில் அமர்த்தப்பட்டார். புதிய சேதுபதி தம்பியினால் நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகளை அடக்க முடியவில்லை. இதனால் சடையக்கத் தேவரின் உறவினர் இரகுநாத தேவர், தனக்கத்தேவர் போன்றோர் புரட்சிக் குரல் எழுப்பினர். சடையக்கத் தேவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தும்படி திருமலை நாயக்கரைக் கட்டாயப்படுத்தினர். எனவே சடையக்கத் தேவர் மீண்டும் அரசுப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். தளவாய் சேதுபதி என்ற பெயர் கொண்ட சடையக்கத் தேவர் 1645-ல் உயிர் நீத்தார்.

மறவர் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சிக்கலைத் தீர்க்க, மறவர் நாட்டை மூன்று பிரிவாகப் பிரித்து இரகுநாதர், தனக்கத் தேவர், தம்பி ஆகியோர்களிடம் கொடுத்தார் திருமலை நாயக்கர். ஆனால் விரைவிலேயே தம்பியும் தனக்கத் தேவரும் இறந்து விடவே, இரகுநாதத் தேவர் மூன்று பகுதிகளையும் இணைத்து புகளூரின் அரியணையில் அமர்ந்தார்.

### 3) இரகுநாத சேதுபதி (திருமலை சேதுபதி) (கி.பி. 1645-1674)

சேதுபதி மன்னர்கள் எல்லோரிலும் இவரே தலை சிறந்தவர் என்று கூறலாம். ரகுநாத சேதுபதியின் பெருமைக்கு முக்கியமான காரணங்கள் அவர் பல மாபெரும் போர்களில் வெற்றி கண்டது, திருமலை நாயக்கருக்கு மாறாத விசுவாசம் உடையவராக இருந்தது, கலையையும் இலக்கியத்தையும் போற்றியது மற்றும் அவரது தனிப்பட்ட பண்புகள் ஆகியவையே ஆகும்.

#### a) ரகுநாத சேதுபதியின் போர்கள்

இவர் தனது ஆட்சியில் தொடக்கத்தில் தம்பியின் உதவியுடன் தஞ்சைப் படைகளைத் தோற்கடித்தார். மன்னார்கோவில், தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூர் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். கி.பி. 1656ல் மைசூரின் உடையார் வம்சம் தமிழகத்தின் பகுதிகளைக் கைப்பற்ற முயன்றது. ரகுநாதர் உடனே படை நடத்திச் சென்றார். இதனால் திருமலை நாயக்கர் சேதுபதியிடமிருந்து வசூலிக்கும் திறையை நீக்கினார். மேலும் அவர் செய்த உதவிக்கு ஈடாக திருப்புவனம், திருச்சுழி, பள்ளிமடம்

பகுதிகள் கொடுக்கப்பட்டன. இதனால் அவர் நிலைமை ஒரு தனி அரசர் நிலைமையாகவே மாறியது.

**குதுப்கானுக்குஎதிரானபோர்**

இரகுநாத சேதுபதி தன் காலம் முழுவதும் நாயக்கர் அரசுக்குப் பணிந்தே செயல்பட்டார். துன்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் நாயக்கர் அரசுக்கு உதவினார். குதுப்கான் என்ற முஸ்லீம் படைத் தலைவர் மதுரையைத் தாக்கியபோது, அவரை எதிர்த்து அடக்குவதில் இரகுநாதர் முக்கியப் பங்கு வகித்தார். இந்த மாபெரும் உதவிக்காக சேதுபதி மன்னர் தம் பெயரில் நவராத்திரி விழாவை நடத்த அனுமதி வழங்கினார் திருமலை நாயக்கர். எட்டயபுரத்துப் பாளையக்காரர் புரட்சி செய்த போதும் அவரை அடக்கினார். இதனால் அவருக்கு மன்னார்கோவில் பகுதிகள் கொடுக்கப் பட்டதுடன் கடற்கரைப் பகுதிகளை காக்கும் பொறுப்பும், முத்துக் குளித்தலில் ஏராளமான வரி திரட்டும் உரிமையும் கொடுக்கப்பட்டன.

**c) மூக்கறுப்புப்போர்**

மைசூரின் கந்தர்வ நரசராய உடையார் என்ற மைசூர் மன்னர் மதுரை மீது படையெடுத்தார். வரும் வழியில் சத்தியமங்கலத்தைக் கைப்பற்றி மதுரையருகே வந்து விட்டார். அப்போது திருமலை நாயக்கர் ரகுநாத சேதுபதியின் உதவியை நாடினார். உடனே ரகுநாதர் ஒரு படையுடன் மதுரை விரைந்தார். மறவர் படை எதிரிப் படைகளை விரட்டியடித்தது. இவ்வாறு மதுரை நாயக்கத்தை இரகுநாத சேதுபதி காப்பாற்றினார். அத்துடன் புறங்காட்டி ஓடிய மைசூர்ப் படைகளை தொடர்ந்து விரட்டி நஞ்சன்கூடு என்ற பகுதியில் வீரர்கள் மற்றும் எதிர்ப்பட்டவர்களை மூக்கறுத்து பழிவாங்கினார். இந்த மூக்கறுப்புப் போருக்குப் பிறகு தான் ரகுநாத சேதுபதிக்கு 'திருமலை சேதுபதி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

**d) சொக்கநாதருக்குஎதிராகப்போர்**

திருமலை நாயக்கரின் பேரன் சொக்கநாத நாயக்கர் தஞ்சைக்கு எதிரான போரில் ஈடுபட்டிருந்த போது அப்போதைய நாயக்க அரசின் தலைநகராக விளங்கிய திருச்சியை பீஜப்பூர் தளபதி வனமியான் முற்றுகையிட்டார். இச்சூழ்நிலையைச் சமாளிக்க சொக்கநாதர் திருமலை சேதுபதியின் உதவியை நாடினார். ஆனால் திருமலை சேதுபதியோ உதவ மறுத்ததுடன், சொக்கநாதருக்குத் திறை செலுத்தவும் மறுத்தார். எனவே சேதுபதிக்கெதிராக சொக்கநாதரே நேரடியாகப் படை எடுத்துச் சென்றார். திருப்பத்தூர், மானாமதுரை, காளையார்கோவில் முதலிய இடங்களைக் கைப்பற்றினார். அதன் பிறகு பிற படைத் தளபதிகளிடம் ஒப்படைத்து விட்டு ஒரு சமய விழாவில் கலந்து

கொள்வதற்காக திருச்சி திரும்பினார். இதற்காகவே காத்திருந்த இரகுநாத சேதுபதி இரண்டு பங்கு வீரத்துடன் போரிட்டு மதுரைப் படைகளைத் தோற்கடித்தார். வேறுவழியில்லாமல் மதுரைப் படைகள் பின்வாங்கின.

**e) ரகுநாத சேதுபதியின் சாதனைகள்**

இரகுநாத சேதுபதி இலக்கிய மேதைகளை ஆதரித்தார். சில கோவில்களைக் கட்டினார். பல கோவில்களைப் புதுப்பித்தார். தனது ஆட்சிக் காலத்தில் பல போர்கள் புரிந்து கொண்டேயிருந்தார் என்றாலும் அமைதிக் காலத்தில் கலைகளைப் போற்றுவதற்கு வேண்டிய வசதியும் காலமும் அவருக்குக் கிடைத்தன. அவரது அவையில் தமிழ் மொழியுடன் தெலுங்கு மொழியும் ஆதரிக்கப்பட்டது. அழகிய சிற்றம்பலக் கவிராயர், அமிர்தகவிராயர் என்போர் அவரால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ப் புலவர்கள் ஆவர். இவர் ஹிரன்யகர்ப்ப யாகங்கள் செய்தார். இதனால் ஹிரன்யகர்ப்பயாஜி என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். இராமேஸ்வரம் கோவிலின் இரண்டாவது பிரகாரத்தைக் கட்டியவர் இவரே என்று கூறப்படுகிறது. தமிழகத்தின் சிறந்த சமயத் துறவியான தாயுமானவர் இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்தார்.

**இரண்டாம் ரகுநாத சேதுபதி (கி.பி. 1671-1710) (கிழவன் சேதுபதி)**

திருமலை சேதுபதி கி.பி. 1671-ல் இறந்தார். அவருக்குப் பின் அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது. அந்தப் போட்டியின் முடிவில் இரகுநாதத் தேவர் என்பவர் கிழவன் சேதுபதி என்ற பெயரில் அரியணை ஏறினார். கிழவன் என்றால் அரியணைக்கு உரிமை உள்ளவர் என்று பொருள்படும். இவர் ஆட்சிக் காலம் அதிக முக்கியத்துவம் உள்ள காலமாகும். இவரது ஆட்சிக் காலத்தில் சிறுவல்லி பாளையத்தின் தலைவர் தடியத் தேவர் இவருக்கு எதிராக செய்ததால் அவரை சமாதானப்படுத்துவதற்காக கிழவன் சேதுபதி தனது ஒன்றுவிட்ட சகோதரியை தடியத்தேவருக்கு மணமுடித்துக் கொடுத்தார். பதவிக்கு வந்தவுடன் தனது நிலையைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

**தனது நிலையை வலுப்படுத்திக்கொள்ளுதல்**

கிழவன் சேதுபதி தனது நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காக மறவர் பகுதியில் அதிக செல்வாக்குப் பெற்ற தனது ஆதரவாளர்களை அடக்கும் பணியில் ஈடுபட்டார். புதுக்கோட்டைப் பகுதியின் தலைவராக இருந்த பல்லவராயன் என்பவரை பதவி நீக்கிவிட்டு இரகுநாதர் என்பவரை புதுக்கோட்டைத் தலைவராக நியமித்தார். இவர் தொண்டமான் என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தார். மேலும் தனது நெருங்கிய உறவினரான பெரிய உடையத்தேவர் என்பவரை நல்லகோட்டைப் பாளையத்தின்

பாளையக்காரராக ஆக்கினார். பின்னர் இராமநாதபுரத்தில் கற்களாலான கோட்டை ஒன்றை கட்டி முடித்தார். அதன்பின் தலைநகரை புகலூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றினார். இந்தக் கோட்டையைச் சுற்றி அகழி வெட்டப்பட்டது. தனது இராணுவத்தை வலிமைப்படுத்தினார். இவ்வாறு தனது நிலையை வலிமைப்படுத்தி மதுரை நாயக்கர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்க முயன்றார்.

**b) ரஸ்தம்கானைத்தோற்கடித்தல்**

மதுரை சொக்கநாதருக்கு அவரது அரசவையிலேயே எதிரிகள் தோன்றினர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ரஸ்தம்கான் என்ற முகமதியத் தலைவன் அரசை தந்திரமாகக் கைப்பற்றினார். சொக்கநாதரை திரைமறைவில் வைத்து தானே ஆட்சிப் பொறுப்பை வைத்துக் கொண்டார். இச்சூழ்நிலையில் கிழவன் சேதுபதி கன்னிவாடியின் கோவிந்தபையன் சின்னகத்தரி நாயக்கர் என்பவரின் உதவியுடன் ரஸ்தம் கானைத் தோற்கடித்து கொன்று சொக்கநாதரை மீண்டும் பதவியில் அமர்த்தினார். இந்த உதவியைப் பாராட்டி சொக்கநாதர், கிழவன் சேதுபதிக்கு 'பரராஜகேசரி' என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்தார். தனது படைத் தளபதி குமாரபிள்ளையின் சேவையையும் அவருக்கு மாற்றினார். ஆனால் கிழவன் சேதுபதி இதற்குப் பிறகு நாயக்கருடனான தனது கொள்கையை மாற்றிக் கொண்டார்.

**c) மதுரைக்கும் தஞ்சைக்கும்எதிரானபோர்**

கிழவன் சேதுபதி மதுரை சொக்கநாதரிடம் காட்டிய விசுவாசத்தை மாற்றிக் கொண்டார். மைசூர்ப் படைகள் மதுரை நாயக்கருக்கு எதிராகத் திருச்சியைத் தாக்கிய போது கிழவன் சேதுபதி, மைசூர் அரசுடன் சேர்ந்து நாயக்கர் அரசை அழிக்க முறபட்டார். தஞ்சை அரசின் உதவியுடன் மதுரைப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். தஞ்சைப் பகுதிகள் சிலவற்றையும் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். சேதுபதியின் இந்த தவறான போக்கைக் கண்ட தளபதி குமாரபிள்ளை இராமநாதபுரத்தில் சேதுபதிக்கு எதிராகக் கலகம் செய்தார். எனவே கிழவன் சேதுபதி இராமநாதபுரம் சென்று குமாரப்பிள்ளையின் கலகத்தை அடக்கினார். இவ்வாறு உள்நாட்டுச் சிக்கல்களிலிருந்து தனது நாட்டைக் காத்துக் கொண்டார். மதுரைக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் தஞ்சை மராட்டியர் கொடுத்த ஆதரவிற்காக பட்டுக்கோட்டையைச் சார்ந்த சில பகுதிகளைக் கொடுத்தார்.

ஆனால் விரைவிலேயே தஞ்சைக்கும், இராமநாதபுரத்துக்கும் இடையே உறவுகள் சீர்கெட்டன. இரு நாடுகளுக்குமிடையேபோர் மூண்டது. போரில் சேதுபதியே வெற்றிகள் பல பெற்று தஞ்சைக்கு சொந்தமான அறந்தாங்கி, திருமயம், பிரான்மலை முதலிய

கோட்டை களையும், அம்பரி அம்பியன் நதிக்குத் தெற்கே உள்ள பகுதிகளையும் கிழவன் சேதுபதி கைப்பற்றினார்.

**d) கிழவன் சேதுபதியும் கிறிஸ்தவ சமயமும்**

ஐரோப்பிய கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் முயற்சியினால் தமிழ் நாட்டின் தென்பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவி வந்தது. மதுரை நாயக்கர் கிறிஸ்தவர்களிடம் சமயப் பொறையுடன் நடந்து கொண்டனர். ஆனால் கிழவன் சேதுபதி காலத்தில் சமயப் பொறை என்பது முற்றிலும் கைவிடப்பட்டு கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்.

மதுரா மிஷினைச் சார்ந்த ஜான்-டி-பிரிட்டோ என்பவரின் முயற்சியால் ஏராளமான தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் மறவர்கள் கிறிஸ்தவர்களாயினர். கிழவன் சேதுபதியின் அதிகாரத்தையும் செயல்களையும் வெறுத்த பலர் தாங்களே கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தனர். கிழவன் சேதுபதியின் நெருங்கிய உறவுப் பெண் ஒருத்தியையும், படைத் தளபதியாக இருந்த பூவரத்தேவர் என்பவரையும் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றினார். இதனால் இந்து மதக் காவலர்கள் என்று கருதப்பட்ட பிராமணர்களும் மற்ற இனத்தவரும் கிறிஸ்தவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு கிழவன் சேதுபதியிடம் கேட்டுக் கொண்டனர். இதே சமயத்தில் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய சேதுபதியின் மைத்துனர் சேதுபதிக்கெதிராகக் கலகம் செய்தார்.

எனவே இந்தக் கலகத்திற்கு ஜான்-டி-பிரிட்டோ காரணமாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார் கிழவன் சேதுபதி. அத்துடன் மறவர் இனத்தில் கிறிஸ்தவ மறவர், இந்து மறவர் என்ற பிரிவினை ஏற்பட்டு விடக்கூடாது என்றும் கருதிய சேதுபதி, ஜான்-டிபிரிட்டோவைக் கைது செய்து அவரை ராமநாதபுரத்திலிருந்து வெளியேறும்படி கட்டாயப் படுத்தினார். இதுவரை கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியவர்கள் தண்டிக்கப் பட்டனர். ஆனாலும் சில காலத்திற்குப் பிறகு திரும்பவும் வந்த பிரிட்டோ மறவர் நாட்டில் மறுபடியும் தனது சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். ஒரு சமயத்தில் பிரிட்டோ எட்டாயிரம் மறவர்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றினார். அரசர் குலத்தைச் சேர்ந்த தடியத்தேவர் என்பவரையும் கிறிஸ்தவராக்கினார்.

தடியத்தேவர் கிறிஸ்தவராகி விட்டதால் தனது ஒரு மனைவி தவிர மற்ற மனைவியர்களை ஒதுக்கி வைத்து விட்டார். அப்படி ஒதுக்கி வைக்கப் பட்டவர்களில் சேதுபதியின் உடன்பிறந்தாளின் மகளும் ஒருவர் ஆவார். வருத்தப்பட்ட சேதுபதியின் இந்த மருமகள் கணவர் தடியத்தேவரின் மனதை மாற்றும்படி கிழவன் சேதுபதியிடம் முறையிட்டாள். சினமடைந்த சேதுபதி பிரிட்டோவைக் கொன்றுவிட தீர்மானித்தார்.

கி.பி. 1693 ஜனவரியில் பிரிட்டோ சிறைப்படுத்தப்பட்டார். பல சமயப் பிரச்சாரகர்கள் கொலை செய்யப்பட்டனர். இறுதியில் பிரிட்டோவும் 1693 பிப்ரவரியில் கொலை செய்யப்பட்டார். ஆனால் கிழவன் சேதுபதி பிரிட்டோவை அரசியல் காரணங்களுக்காகவே கொலை செய்தார் என்றும், அவர் சமய விரோதி அல்ல என்றும் கூறப்படுகிறது.

**e) சுதந்திர அரசராக கிழவன் சேதுபதி**

மதுரை நாயக்கத்தை ஆட்சி செய்த மங்கம்மாள் காலத்தில் முகலாயப் படைத் தளபதி சூல்பிகர்கான், மைசூரியர்கள் ஆகியோரின் படையெடுப்பு நடைபெற்றது. ஆனால் எதிரிப் படைகளுக்கு லஞ்சம் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினாள் மங்கம்மாள். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சுதந்திர மறவர் அரசை உருவாக்க முயன்றார் கிழவன் சேதுபதி. மங்கம்மாள் திருவாங்கூர் படையெடுப்பின் போது கிழவன் சேதுபதி 1698-ல் மதுரை நகரையே கைப்பற்றி சில நாட்கள் வைத்திருந்தார். ஆனால் மறவர் வெற்றி அதிக நாட்கள் நீடிக்கவில்லை. மதுரை தளவாய் நரசப்பையன் மறவர்களைத் தோற்கடித்து நாட்டை விட்டு விரட்டினார். இவ்வாறு மறவர்கள் விரட்டியடிக்கப்பட்டாலும் மதுரை நாயக்கர் அரசு மறவர் நாட்டின் மீதான தனது ஆதிக்கத்தை இழந்தது.

மங்கம்மாள் சேதுபதியை அப்படியே விடாமல் அடக்க நினைத்தாள். எனவே 1702-ல் மறவர் நாட்டின் மீது படையெடுக்குமாறு நரசப்பையனுக்கு ஆணையிட்டாள். நரசப்பையன் தஞ்சையின் சாஜியின் படை உதவி பெற்று சேதுபதியுடன் போர் புரிய மறவர் நாட்டை அடைந்தார். போர் நடைபெற்றது. போரில் நரசப்பையன் இறந்து விடவே எதிரிகளின் படையை சுலபமாக விரட்டியடித்தார் கிழவன் சேதுபதி.

கிழவன் சேதுபதி பெரு வீரர். ஒரே வாரத்தில் நாற்பதினாயிரம் படை வீரர்களைத் திரட்ட வல்லவர். மறவர் படை வீரர்கள் கொடும் போர் புரிவதில் வல்லவர்கள். கொள்ளையடிக்கப் போர் முறையைப் பழகியவர்கள். எனவேதான் களைத்துப் போரிட்ட நரசப்பையனைப் போரில் எளிதாகத் தோற்கடித்தார் கிழவன் சேதுபதி. வெற்றி வாகை சூடிய கிழவன் சேதுபதி கி.பி.1702-ல் மதுரை நாட்டுடன் இருந்து வந்த தொடர்பை அறுத்துக் கொண்டு முழு உரிமை பெற்ற மன்னரானார்.

பஞ்சத்தாலும், புயலாலும், வெள்ளத்தாலும் மறவர் சீமை மாளாத் துயறுற்றிருந்த காலத்தில் தஞ்சை மன்னர் கி.பி. 1709-ல் கிழவன் சேதுபதியுடன் போர் தொடுத்தார். சேதுபதி சாஜியின் படையை வென்றதுடன், தஞ்சைக்குரிய அறந்தாங்கிக்

கோட்டையையும் கைப்பற்றினார். எனவே தஞ்சைப் படைத்தலைவன் சேதுபதியுடன் சமரசம் செய்து கொண்டு நாடு திரும்பினான்.

எல்லையில்லாத் தொல்லை கொடுத்து வந்த கிழவன் சேதுபதியை மங்கம்மாவினால் அடக்கவே முடியவில்லை. மங்கம்மாள் இறப்பதற்கு முன்னரே இராமநாதபுரச் சீமை முழு உரிமை பெற்ற தனி நாடாகி விட்டது. பாண்டியர் காலத்திலிருந்து மதுரைப் பேரரசருக்குப் பணிந்து திறை செலுத்தி வந்த மறவர் நாடு கிழவன் சேதுபதியால் விடுதலை பெற்று தனி நாடாக விளங்கும் சிறப்பை அடைந்து விட்டது.

**1) கிழவன் சேதுபதியின் பிற பணிகள்**

கிழவன் சேதுபதி இந்து சமயத்திற்குப் பல தொண்டுகள் ஆற்றினார். பல மடங்களுக்குப் பண உதவி செய்தார். திருவாடனைக் கோவிலுக்கும், காளையார்கோவிலின் அருகிலுள்ள மற்றொரு கோவிலுக்கும் மானியம் எழுதி வைத்தார். புகலூரிலிருந்து தலைநகரை இராமநாதபுரத்துக்கு மாற்றிய பிறகு அங்கு ஒரு கோட்டை கட்டினார். வைகையைத் தடுத்து அங்கு ஒரு அணையையும் கட்டினார். முகவை ஊரணி என்ற ஏரியை உருவாக்கினார். கீழக்கரையில் மீன் பிடிக்கும் உரிமையை டச்சுக்காரர்களுக்கு வழங்கினார். இவரது காலத்தில் மறவர் நாட்டில் 1706-ல் பெரும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது.

மறவர் நாட்டை முழு உரிமை பெற்ற நாடாக்கி மதிப்புடனும், திறமையுடனும் நாற்பது ஆண்டுகள் மாண்புடன் ஆண்டு மறவர் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கிழவன் சேதுபதி, கி.பி. 1710ல் இறந்தார். இவரது மனைவிமார்களுள் 47 பேர் இவர் இறந்த போது உடன்கட்டை ஏறியதாகச் சொல்லப்படுகிறது.

**விஜயரகுநாதசேதுபதி (கி.பி. 1710-1720)**

கிழவன் சேதுபதி தான் இறப்பதற்கு முன்பே தனது காமக்கிழத்தி மகனாகிய பவானி சங்கரனுக்கு தமக்குப் பின் நாட்டை ஆளும் உரிமையைக் கொடுத்தார். ஆனால் கிழவன் சேதுபதிக்கு தாலி கட்டிய மனைவிக்குப் பிறந்த வடுகநாத தேவர், விஜயரகுநாதத் தேவர் என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். எனவே மறவர் நாட்டு மக்கள் விஜயரகுநாத தேவருக்கு அரச பதவியை அளிக்குமாறு வற்புறுத்தினர். கிழவன் சேதுபதி இறந்ததும் மூத்தவரான வடுகநாதர் மறவர் நாட்டுப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டு, இளையவரான விஜயரகு நாதருக்கு சேதுபதி பதவியை விட்டுக் கொடுத்தார்.

விஜயரகுநாத சேதுபதி அறந்தாங்கியை தலைமைப் பீடமாகக் கொண்டு நாட்டை ஆண்டு வந்தார். மக்களுடைய ஆதரவும் அவருக்கு இருந்தது. இவரது ஆட்சிக் காலத்தில்

பஞ்சம் ஒருபுறம், வெள்ளம் ஒருபுறமாக மக்கள் அதிக தொல்லைக்கு உள்ளானார்கள். சேதுபதி இயன்ற உதவி செய்தாலும் நிலைமை சீர்திருந்தவில்லை. இவர் ரகுநாதசமுத்திரம் என்ற ஏரி ஒன்றை அமைத்தார். நிலங்களை சீர்திருத்தினார். நீர்ப்பாசன வரி வசூலிக்கப்பட்டது. கிராம ஆட்சி முறை திருத்தியமைக்கப்பட்டன. நிர்வாக வசதிக்காக நாட்டை இருபத்திரெண்டு இராணுவப் பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒரு தலைவனின் கீழ் வைத்தார். இவர் பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் கமுதியில் ஒரு கோட்டை கட்டினார். டச்சுக்காரர்களின் உதவியுடன் பீரங்கிப் படைப் பிரிவு ஒன்றைத் துவக்கினார்.

விஜயரகுநாதர் ஆரம்பத்தில் கிறிஸ்தவ சமயத்துக்கு ஆதரவளித்தார். தமது நாட்டுப் பகுதியில் கிறிஸ்தவக் கோவிலைக் கட்ட அனுமதியளித்தார். கோவில் கட்டுவதற்கு வேண்டிய சாமான்களையும் கொடுத்து உதவினார். ஆனால் இவ்வளவு உதவி செய்தும் பாதிரிமார்கள் இவரைக் குறை கூறியதால் பின்னர் கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்தி விட்டார். பிற்காலத்தில் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரியாகி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்.

விஜயரகுநாதர் தீவிரமான சைவர். பல தர்மங்கள் மதுரை திருவனந்தபுரம் கோவில்களுக்கு மானியம் வழங்கினார். இவரது ஆதிக்கம் வடக்கே திருவாரூரிலிருந்து தெற்கே திருநெல்வேலி வரை பரவியிருந்தது. இவர் நாட்டில் அமைதியையும் செல்வத்தையும் பெருக்கினார். இச்சூழ்நிலையில் பவானி சங்கரன் புதுக்கோட்டை மன்னர், தஞ்சை மன்னர் ஆகியோரின் உதவியுடன் அறந்தாங்கியைத் தாக்கினார். பகைவர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த விஜயரகுநாதர் கொள்ளை நோய்க்கு ஆளாகி 1720-ல் இறந்தார்.

**தண்டத்தேவர் (கி.பி 1720)**

விஜயரகுநாதர் வாரிசின்றி இறந்து விட்டதால் மறவர் நாட்டில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. தண்டத் தேவர் என்பவருக்கும், பவானி சங்கரன் என்பவருக்கும் போட்டி ஏற்பட்டது. தண்டத் தேவர் தன்னை சேதுபதி என்று பறைசாற்றிக் கொண்டார். பவானி சங்கரன் அறந்தாங்கிக் கோட்டையைக் கைப்பற்றி அடுத்த சேதுபதி நானே என்று பிரகடனப் படுத்தினார். எனவே தண்டத்தேவர் புதுக்கோட்டைத் தொண்டமான் மற்றும் மதுரை நாயக்கர் உதவியுடன் அறந்தாங்கியை முற்றுகையிட்டார். இதைத் தாங்காத பவானி சங்கரன் தஞ்சை ஓடினார். அங்கிருந்த மராட்டிய மன்னரின் உதவியை நாடினார். தஞ்சை தளபதியான ஆனந்தராவ் தண்டத் தேவரை எதிர்த்து போரிட்டுத் தோற்கடித்தார்.

அத்துடன் தண்டத் தேவரையும், அவரது குடும்பத்தினரையும் சிறைபிடித்து சிறைச்சேதம் செய்து விட்டார். எனவே பவானி சங்கரன் சேதுபதியாகப் பதவியேற்றார்.

**பவானி சங்கரன் (கி.பி 1720-1729)**

பவானி சங்கரரின் ஆட்சி இனிதாக நடைபெறவில்லை. இவருக்கும் சிவகங்கையை ஆண்டு வந்த சசிவர்ணத்தேவருக்கும் தகராறுகள் முற்றின. சசிவர்ணத் தேவரும் மற்ற பாளையக்காரர்களும் இறந்து போன சேதுபதியின் தாய் மாமனான கட்டையத் தேவருடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். இவர்கள் தஞ்சை அரசரையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டனர். ஆனந்தராவ் என்பவரின் தலைமையில 1729-ல் இராமநாதபுரம் தாக்கப்பட்டது. பாம்பாற்றங் கரையிலிருக்கும் உறையூரில் நடந்த போரில் பவானி சங்கரன் தோல்வியடைந்து சிறை பிடிக்கப்பட்டான். பின்னர் சிறையில் அடைக்கப்பட்டு சிறையிலேயே இறந்தார்.

இப்போருக்குப் பின்னர் பாம்பாற்றின் வட பகுதியிலிருக்கும் ஊர்களெல்லாம் தஞ்சையுடன் இணைக்கப்பட்டன. மீதமுள்ள மறவர் நாடு ஐந்தாகப் பிரிக்கப்பட்டு மூன்று பகுதி கட்டையத் தேவருக்கும், இரண்டு பகுதி சசிவர்ணத் தேவருக்கும் கொடுக்கப்பட்டது. கட்டையத்தேவர் குமாரமுத்து விஜயரகுநாத கேதுபதி என்ற பட்டத்துடன் இராமநாதபுரம் சேதுபதியானார். சசிவர்ணத்தேவர் 11730-ல் சுதந்திர சிவகங்கை அரசைத் தோற்றுவித்தார். இராமநாதபுரம் தனது பெருமையை இழந்தது.

**8) குமாரமுத்து விஜயரகுநாதசேதுபதி (கி.பி. 1729-1735)**

இரண்டு பகுதி சசிவர்ணத் தேவருக்கும் கொடுக்கப்பட்டது. கட்டையத் தேவர் குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி என்ற பட்டத்துடன் இராமநாதபுரம் சேதுபதியானார். சசிவர்ணத்தேவர் கி.பி. 1730-ல் சுதந்திர சிவகங்கை அரசைத் தோற்றுவித்தார். இராமநாதபுரம் தனது பெருமையை இழந்தது.

இவருக்கு பெரிய மறவன் என்று பெயர். இவர் ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் படைகள் மறவர் நாட்டின் மீது இருமுறை படையெடுத்தன. இரண்டாம் முறை திருமயத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த போது, தஞ்சை தளபதி ஆனந்தராவ் விரட்டியடிக்கப்பட்டார். கட்டையத் தேவர் பல கட்டிடங்களைக் கட்டினார். கோவில்களுக்கு மானியம் வழங்கினார். அறிஞரைப் பேணினார். இராமலிங்கம் பிள்ளை, வைரவன் பிள்ளை என்ற இரு பணியாளரின் உதவியுடன் நிர்வாகத்தை திறம்பட நடத்தினார்.

**பிற்காலசேதுபதிகள்**

கட்டையத்தேவர் இறந்த பின் அவர் மகன் சிவகுமார முத்து விஜயரகுநாத சேதுபதி என்பவர் அரியணை ஏறினார். இவர் கி.பி. 1735 முதல் கி.பி. 1746 வரை ஆட்சி செய்தார். இவருக்குப் பெரிதும் உதவிய அலுவலர் வெள்ளையன் சேர்வைக்காரன் என்பவராவார். இவர் பல சத்திரங்களைக் கட்டினார். கோவில்களுக்கு மானியம் வழங்கினார். இவருக்குப் பிறகு ரங்கத்தேவர் கி.பி. 1746-ல் சேதுபதியானார். இவருக்குப் பிறகு விஜயரகுநாத சேதுபதி கி.பி. 1748 முதல் கி.பி. 1761 வரை பதவி வகித்தார். இவர் கிழவன் சேதுபதி பரம்பரையில் வந்தவர் ஆவார். இவர் காலத்தில் தான் மதுரை நாயக்கத்தின் வரலாறு முற்றுப் பெற்றது. கி.பி. 1749-ல் தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாப்சிங் மானோஜி என்ற படைத் தலைவனை அறந்தாங்கியைத் தாக்குமாறு அனுப்பினான். போர் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இவர் காலத்தில் தமிழகத்தில் ஆங்கில பிரெஞ்சுப் போட்டிகள் ஆரம்பமாயின.

கி.பி. 1772 முதல் கி.பி. 1780 வரை இராமநாதபுரம் ஆற்காட்டு நவாபின் கட்டுப்பாட்டில் இருந்தது. கி.பி. 1785-ல் ஆங்கிலப் படை சேதுபதி முத்துராமலிங்கத்தை முறியடித்து கைதியாக்கி சென்னைக்கு அனுப்பியது. அங்கு அவர் கி.பி. 1801-ல் மறைந்தார். கி.பி. 1803-ல் இராமநாதபுரம் ஆங்கிலேயருக்கு உட்பட்ட ஜமீனாக மாறியது.

**இராமநாதபுரம்சேதுபதிகளின்ஆட்சி முறை**

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் நிலவிய முக்கியமான அம்சங்களைக் காணலாம்.

**1) சேதுபதி மன்னர்**

சேதுமதி மன்னர்கள் பலர் புகழ் பெற்று விளங்கினர். இவர்கள் தஞ்சை பகுதியில் சிறப்பான ஆட்சி முறையை உருவாக்கினார்கள். நீர்ப்பாசன வசதிக்காக குளங்கள், கால்வாய்களை வெட்டினார்கள். கிராம மக்களின் குடிநீர் உபயோகத்திற்காக ஊருணிகள் வெட்டப்பட்டன. சேதுபதி மன்னர்கள் தமிழ் வளர்ச்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டனர். மன்னர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கோட்டை சிலவற்றைக் கட்டினர். அதைச் சுற்றிலும் அகழி அமைத்துக் கொண்டனர். தங்கள் பெயரில் சில சேதுபதிகள் நாணயங்களை வெளியிட்டனர்.

சேதுபதியின் அரண்மனையில் பல முக்கிய அதிகாரிகள் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் காரியகர்த்தா மற்றும் தானாதிபதி ஆவர். இதில் காரிய கர்த்தர் மன்னரின் அறைவாசலில் அமர்ந்து பணிபுரிந்தார். தானாதிபதி மிகவும் முக்கியமான அதிகாரி ஆவார். இவர் சேதுபதி இடும் கட்டளைகளை நிறைவேற்றி வைப்பார்.

பிள்ளைமார் இனத்தைச் சார்ந்தவர்களே தானாதிபதியாக நியமிக்கப் பட்டனர். இவர்கள் தவிர தண்டேல், நகுதா போன்ற கப்பல் அதிகாரிகளும் காணப்பட்டனர்.

சேதுபதிகள் மிகவும் திறமைசாலிகள். எட்டு நாட்களுக்குள்ளாக முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் படை வீரர்களைத் திரட்டும் ஆற்றல் பெற்றிருந்தனர். எனவே தான் இவர்களைக் கண்டு நாயக்க மன்னர்கள், நவாபுகள் மற்றும் மராட்டிய மன்னர்கள் பயம் கொண்டனர். இராமநாத புரத்தில் இருந்த மண் கோட்டை கல்கோட்டையாக மாற்றப்பட்டது. இந்தக் கோட்டையில் இராமலிங்க விலாசம் என்ற புதிய மாளிகை இரகுநாத சேதுபதி காலத்தில் கட்டப்பட்டது.

**B) சேதுபதியின் ஆட்சி முறை**

சேதுபதி நாட்டில் பெரும்பான்மையினராக மறவர் குல மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் காலத்தில் நாடு இராஜ்யம் என்றழைக்கப் பட்டது. இது மொத்தம் எட்டு வருவாய்த் துறைப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. மேலும் எழுபத்திரெண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை பாளையக்காரர்களால் ஆட்சி செய்யப்பட்டது.

சேதுபதி காலத்தில் கிராம நிர்வாகம் மாணியக்காரகள் என்பவர்கள் கவனிக்கப்பட்டு வந்தது இவர் சேதுபதியின் கட்டளைப்படியே செயல்பட்டார். இவர் தனக்கு உதவியாக கணக்குப்பிள்ளை என்பவரை வைத்துக்கொண்டார். கிராமங்களில் உள்ள நிலங்களைப் பற்றிய தகவல்களை இவர் பராமரித்து வந்தார். மேலும் நிலவருவாய் வசூல் செய்வதிலும் உதவி செய்தார். சேதுபதிகள் நாட்டில் தேவதானம், பிரம்மதேயம், பண்ணைக்கிராமங்கள் ஆகியவைகளும் இருந்தன.

**காவல் முறை**

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள்ன ஆட்சிக் காலத்தில், முக்கியமான அம்சங்களைக் காணலாம். மறவர்கள் பெரும்பாலும் போர் வீரர்களாக இருந்தார்கள். அவர்கள் வீரமுடன் போர் புரிந்து மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டார்கள். இதற்கு ஸ்தலம் காவல் என்று பெயராகும். இந்தக் காவல் பணியில் இருந்தவர்கள் காவல்காரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். காவல்காரர்களின் முக்கியப் பணி கிராம நிலங்களிலிருந்த பயிற்களையும், கால்நடைகளையும், பிற சொத்துக்களையும் பாதுகாப்பது ஆகும். கோவில்கள், சாலைகள் மற்றும் சந்தைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதும் இவர்களது கடமையாக இருந்தது.

இந்த பணிக்காக இவர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த காவல்காரர்களுக்கு ஒரு தலைவர் இருந்தால் அந்தத் தலைவருக்கு காவல்காரர்கள் கட்டுப்பட்டு நடந்தார்கள். பல கிராமங்களை உள்ளடக்கிய

பகுதியின் காவல் தேசக் காவல் எனப்பட்டது. தேசக் காவலுக்குப் பொறுப்பாக இருந்த தலைவர் ஸ்தலக் காவல் தலைவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

**சேதுபதியின்நிதி நிர்வாகம்**

சேதுபதிகள்ன நிதி திர்வாகம் சிறப்பாக நடைபெற்றது. அரசின் மொத்த வருவாயில், நில வருவாயே முக்கியப் பங்காக இருந்தது. இதுதவிர சேதுபதிகள் கடலில் முத்துக் குளிக்கும் உரிமை பெற்றிருந்தனர். அதன் வரும் நாட்டிக்கு வருமானம் கிடைத்தது. அத்துடன் அரசிறை வரி அது இராமேன்வரத்திலிருந்து தூத்துக்குடி வரை உள்ள கத்தகரப் பகுதிகளில் வசூலித்து வந்தனர். சில நேரங்களில் இந்த வரி வசூலிக்கும் உரிமையானது தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவை தவிர கம்பளவரி, களஞ்சிவரி, சுங்கவரி, ஆயவரி, வலங்கை வரி, எழுத்தாணி போன்றவைகளையும் வசூலித்து அரசு வருமானத்தைப் பெருக்கினர்.

**e) சேதுபதிகளின்கோவில் பணிகள்**

சேதுபதிகள் கோவில் பணிகளில் ஈடுபட்டனர். இரகுநாத சேதுபதி சில கோவில்களைக் கட்டினார். பல கோவில்களைப் புதுப்பித்தார். இராமேஸ்வரம் கோவிலின் இரண்டாவது பிரகாரத்தை இவரே கட்டினார் என்று கூறப்படுகிறது. சேதுபதிகள் பல அறக்கொடைகள் செய்தனர். தங்கள் நாட்டிற்குக் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை இராமேஸ்வரம் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். மேலும் திருப்புல்லாணி ராமசாமி கோவிலுக்கும், திருஉத்திரகோசமங்கை கோவிலுக்கும் நன்கொடை அளித்து ஆதரவு தந்தனர்.

கிழவன் சேதுபதி பல மடங்களுக்கு உதவி செய்தார். திருவாடனைக் கோவிலுக்கும் காளையார் கோவிலின் அருகிலுள்ள மற்றொரு கோவிலுக்கும் மானியம் எழுதி வைத்தார். சேதுபதி மன்னர்கள், மதுரை நாயக்க மன்னர்களைப் போன்றே நவராத்திரி திருவிழாவைச் சிறப்புடன் கொண்டாடினார்கள். விஜயரகுநாதர் மதுரை, திருவனந்தபுரம் கோவில்களுக்கு மானியம் வழங்கினார். இராமேஸ்வரம் கோவில் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. கோவிலில் குருக்கள், பட்டன் எனப் பட்டவர்கள் நிர்வகித்தனர். மேலும் தோப்புக்காரர்கள், நந்தவனக்காரர்கள் போன்ற பணியாளர்களும் இருந்தனர். பண்டாரத்தாட்கள் எனப்படுபவர்கள் கோவில் கருவூலத்தைக் காத்து வந்தனர்.

**1) சேதுபதிகள்கால சமுதாயநிலை**

சேதுபதிகள் நாட்டில் பலவகைப்பட்ட சாதி மக்கள் வாழ்ந்து வந்தனர். பெரும்பான்மையோர் மறவர் இனத்தைச் சார்ந்திருந்தார்கள். மேலும் இனத்தவர்களும் வாழ்ந்தனர். முக்கியமாக பாளையக்காரர், சேணியர், தொட்டியர், சலுப்பர், வலசைதிடையர், உள்ளாயக்காரர், பெவமார், ஒண்டக்காரர் போன்ற பிரிவினர் வாழ்ந்தனர். மறவர்களில் சேர்வைக்காரன் என்ற பிரிவு ஒன்றும் இருந்தது. ஆனால் மொத்தத்தில் இந்த எல்லா சாதிப் பிரிவினரும் சத்திரியர், வைசியர், சூத்திரர் போன்ற பிரிவுகளாக வசித்து வந்தனர். ஒவ்வொரு சாதிக்குள்ளும் கிளைப் பிரிவுகளும் இருந்தன. சமுதாயத்தில் சாதிக் கட்டுப்பாடுகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஒவ்வொரு குல மக்களும் தனிப் பிரிவாக வசித்து வந்தனர். அப்படிப்பட்ட தனிக் குலப்பிரிவுகள் என்றழைக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டைக்குள்ளும் ஒரு உறவைச் சேர்ந்த குடும்பங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்தன. சில இடங்களில் பல பிரிவு மக்களும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்ந்தனர். கோட்டைகள்

**g) சேதுபதிகள்காலப் பொருளாதாரநிலை**

சேதுபதிகள் காலத்தில் அடிக்கடிப் போர்கள் நடந்தது. இதனால் பொருளாதார நிலையில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. மேலும் பஞ்சத்தாலும், புயலாலும், வெள்ளத்தாலும் மறவர் சீமை மாளாத் துயரடைந்தது. சேதுபதிகள் காலத்தில் விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்தது. மேலும் பல இடங்களில் கம்பளத் தொழில் வளர்ச்சியடைந்து இருந்தது. செக்கிலிருந்து எண்ணை ஆட்டி எடுக்கும் தொழில் பல இடங்களில் நடைபெற்றது.

பல சேதுபதிகள் நீர்ப்பாசன முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். வைகை நீரை சிறப்பான முறையில் பயன்படுத்தினர். இதற்காகப் வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. இராமநாதபுரத்துக்கு கிழவன் சேதுபதி வைகையைத் தடுத்து ஒரு அணையைக் கட்டினார். முகவை ஊரணி என்ற ஏரியையும் உருவாக்கினார். கீழக்கரையில் மீன்பிடிக்கும் உரிமையை டச்சுக்காரர்களுக்கு வழங்கினார். இவரது காலத்தில் தான் 1706-ல் மறவர் சீமையில் பெரும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது.

b) சேதுபதிகள் கால சமய நிலை இந்துக்கள்

சேதுபதிகள் காலத்தில் மக்கள் சிவன், விஷ்ணு போன்ற கடவுள்களை வணங்கி வந்தனர். சமய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. முக்கியமாக முருகக் கடவுளுக்கு தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இராமேஸ்வரத்தில் ராமர் பூஜையும் மற்றும் தாண்டேஸ்வரர் பூஜையும் நடத்தப்பட்டன. இவை தவிர சிவலிங்க

பூஜை, காளியம்மன் பூஜை, வெள்ளைத் துர்க்கையம்மன் பூஜை, பல்லக்கு நாயக்கர் பூஜை ஆகியவையும் நடைபெற்றது.

ரகுநாத சேதுபதி ஹிரன்யகர்ப்ப யாகங்கள் செய்தார். இதனால் தான் ஹிரன்ய கர்ப்பயாஜி என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். விஜயரகுநாத சேதுபதி ஒரு தீவிரமான சைவர் ஆவார்.

**முஸ்லீம்கள்**

சேதுபதிகள் காலத்தில் முஸ்லீம்களில் மூன்று பெரிய பிரிவினர் இருந்தனர். அவர்களில் முதலாவது பிரிவினர்கள் கடல் வாணிபத்தில் ஈடுபட்டனர். இவர்கள் மரைக்காயர்கள் என்றழைக்கப்பட்டனர். இரண்டாவது பிரிவினர் அரண்மனைகளில் வேலை செய்தனர். போர்த் தொழிலிலும் ஈடுபட்டனர். இவர்கள் இராவுத்தர்கள் என்றழைக்கப்பட்டனர். மூன்றாவது பிரிவினர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர். இவர்கள் லெப்பைகள் என்று அழைக்கப்பட்டனர்.

முஸ்லீம்கள் அதிகமாக கமுதி, பரமக்குடி, இளையாங்குடி ஆகிய ஊர்களில் வசித்து வந்தனர். அவர்கள் பெரும்பாலும் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர். மிளகு விற்பனையில் ஈடுபட்ட முஸ்லீம்கள் மலபார் மாப்பிள்ளைகள் என்றழைக்கப்பட்டனர். முஸ்லீம்கள் ஒரு பகுதிகளில் நெருக்கமாக வசித்து வந்தனர். பல முஸ்லீம்கள் பெரும் பணக்காரர்களாக இருந்தனர். கீழக்கரையில் வசித்து வந்த பெரிய தம்பி மரக்காயர் என்பவர் சேதுபதியுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருந்தார். வேதாளை ஜிம்மா பள்ளிவாசல் என்ற பள்ளிவாசலை முஸ்லீம்கள் கட்டி அதில் தொழுகை நடத்தினர்.

கிறிஸ்தவர்கள்

சேதுபதி மன்னர்கள் காலத்திலும் மறவர் சீமையில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. கிழவன் சேதுபதி காலத்தில் கிறிஸ்தவ சபையினர் சமயத்தைப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. அவர் கிறிஸ்தவ சமயத்தவரைக் கடுமையாகத் தண்டித்தார் என்றும் கூறப்படுகிறது. இவரது ஆணைப்படியே ஜான் பிரிட்டோ கொல்லப் பட்டார். ஆனால் கிழவன் சேதுபதியின் இந்த நடவடிக்கைகள் அரசியல் நடவடிக்கையே என்று சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். மத மாற்றத்தால் ஏற்படும் அரசியல் பிரச்சனைகளைத் தவிர்ப்பவதற்காகவே கிழவன் சேதுபதி இந்த சமய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது.

ஆனால் விஜயரகுநாத சேதுபதி கிறிஸ்தவ சமயத்துக்கு ஆதரவளித்தார். தனது நாட்டுப் பகுதியில் கிறிஸ்தவக் கோவில் கட்ட அனுமதியளித்தார். கோவில் கட்டுவதற்கு வேண்டிய தளவாடப் பொருட்களைக் கொடுத்து உதவினார். ஆனால் தனது

ஆட்சியின் பிற்காலத்தில் இவரும் கிறிஸ்தவர்களுக்கு எதிரியாக அவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தார். வடுகநாத தேவர் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவளித்தார்.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் காலத்தில் தமிழகத்தின் பிற பகுதிகளில் காணப்பட்ட சமுதாய அம்சங்கள் இங்கும் காணப்பட்டன.

## UNIT–IV

### 1. கர்நாடகநவாபுகளின்காலம்

சுமார் ஒரு முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் தக்காணத்தில் தம்மை எதிர்க்கும் சக்தி இல்லை என்ற நிலையை உருவாக்கிய பின் தமிழகத்தைத் தாக்கத் திட்டமிட்டார். அவரது சிறந்த படைத்தளபதி சுல்பிகர்கான் 1698-ல் செஞ்சி கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றினார். அதன்பிறகு கர்நாடகத்தில் தான் கைப்பற்றிய பகுதிகளில் ஆட்சி செய்வதற்காக தாவூத்கான் என்பவரை நவாபாக நியமித்தார் ஔரங்கசீப். தாவூத்கான் செஞ்சிக் கோட்டையை வலிமைப் படுத்தினார். இதர எல்லைப் பகுதிகளையும், முகாம்களையும், படைத் தளங்களையும் வலிமையாக்கிக் கொண்டான். பாலாற்றங் கரையிலுள்ள ஆற்காட்டில் தனது தலைநகரை அமைத்துக் கொண்டார். மராட்டியர்களிடமிருந்து கி.பி. 1707-ல் வேலூரைக் கைப்பற்றினார். இவ்வாறு பிற்காலத்தில் சிறப்படைந்த நவாபுகளின் ஆட்சிக்கு அடித்தளம் இட்டார் தாவூத்கான். இவரைத் தொடர்ந்து கர்நாடத்தில் நவாபுகளின் ஆட்சி ஆரம்பமானது. நூற்றாண்டு காலம் கர்நாடக நவாபுகளின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றது. 1855-ல் கர்நாடக நவாபுகளின் ஆட்சி முடிவுற்றது.

**ஆற்காட்டுநவாபுகள்**

அன்றைய தமிழகத்தில் கிழக்கு கடற்கரைக்கும், அதனைச் சார்ந்த பின்னிலத்திற்கும் ஆங்கிலேயர்கள் கர்நாடகம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நவாபுகள் ஆற்காட்டு நவாபுகள் அழைக்கப்பட்டனர். திருநெல்வேலி, திருச்சி, மதுரை, தஞ்சை, சென்னை போன்ற பகுதிகள் கர்நாடகத்தினுள் அடங்கியிருந்தன என்று கர்நாடகத்தில் முகலாய நவாபாக இருந்த தாவூத்கான் டெல்லி செல்ல வேண்டியதிருந்ததால், அவருக்குப் பதிலாக நவாப்பாக சதத்துல்லாகான் என்பவரை நியமித்தார் ஔரங்கசீப். ஆற்காட்டு நவாபுகள் ஆட்சி இவருடன் ஆரம்பமானது. இதுவே நெவாயத்தர்களின் ஆட்சியுமாகும்.

**1) சதத்துல்லாகான்(கி.பி. 1710-1732)**

ஆற்காட்டு நவாபுகளின் ஆட்சியைத் தொடங்கி வைத்தவர் சதத்துல்லாகான் ஆவார். இவரது ஆட்சிக் காலத்தில் வடக்கே ஒங்கோவிலிருந்து தெற்கே செஞ்சி வரையிலும் ஆற்காட்டின் எல்லை பரவியிருந்தது. இந்த ஆற்காட்டு நவாபு தக்காணத்து சுபேதாரான நைஜாமிற்கு கீழ்ப்படிந்தவர் ஆவார். சுபேதார் தக்காணத்தில் முகலாயப் பேரரசின் ஆணையைச் செலுத்துபவர் ஆவார். சதத்துல்லாகான் ஓரளவு சுதந்திரமாக ஆட்சி செலுத்த விரும்பினார். இவரது முக்கியமான தொழில் வரி வசூல் செய்வது தான். அந்தத் தொழிலையாவதுபாரம்பரியமாகச் செய்ய விரும்பினார்.

எனவே செஞ்சிக்கு தெற்கே உள்ள நிலப்பரப்பில் எண்ணற்ற சிற்றரசர்கள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவற்றை அழித்துவிட ஆற்காட்டு நவாப் விரும்பினார். இந்த நோக்கத்துடன் அந்த அரசர்களின் விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டார் சதத்துல்லாகான். இந்தக் கால கட்டத்தில்தான் செஞ்சியில் இராஜா தேசிங்கு திறை செலுத்த மறுத்தார். மொத்தம் கட்ட வேண்டிய தொகை 70 லட்சம் என்று கணக்கிடப்பட்டது. பேரரசர் பரூக்ஷயர் செஞ்சியைத் தாக்குமாறு சதத்துல்லாகானுக்கு ஆணையிட்டார். தேசிங்கு ராஜன் கதை என்ற நாட்டுப்புறப் பாடல் இந்த வீரனின் தீரச் செயல்களைக் கூறுகின்றன. கி.பி 1713-ல் இராஜா தேசிங்கு போரில் தோற்று வீரமரணம் அடைந்தார்.

**தோஸ்த் அலி (கி.பி. 1732-1740)**

கி.பி. 1732-ல் சதத்துல்லாகான் இறந்த பின்னர் அவரது சகோதரர் தோஸ்த் அலி ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் தன் மகனான சப்தர் அலியையும், மருமகனாகிய சந்தாசாகிபையும் தென்னிந்தியாவைத் தாக்கும்படி கேட்டுக் கொண்டார். படை எடுத்து வந்தவர்கள் சென்னையில் சிறிது காலம் தங்கினர். பின்னர் பாண்டிச்சேரியை அடைந்து தஞ்சையைத் தாக்கிக் கைப்பற்றினர். கோட்டாற்றில் திருவிதாங்கூர் படைகளை முறியடித்தனர். இறுதியில் திருச்சி நோக்கி முன்னேறினர். தமிழக மன்னர்களிடையே ஒற்றுமையில்லாததால் பகைவரை துணிவாக எதிர்க்கவில்லை. மேலும் அரசுரிமைக்காக தஞ்சைக்கும் இராமநாத புரத்துக்கும் இடையே நீண்ட போர் நடந்து கொண்டிருந்தது. கி.பி.1736-ல் மதுரை அரசி மீனாட்சியை ஏமாற்றியதால் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

தஞ்சை மராட்டிய மன்னருக்கு ஆற்காட்டு முஸ்லீம்கள் தொல்லை கொடுத்து வந்ததைப் பொறுக்க முடியாத தக்காணத்து மராட்டியர்கள் பதேசிங், ராகூஜி பான்ஸ்லே ஆகியோர் தலைமையில், கி.பி 1740-ல் கர்நாடகத்திற்கு ஒரு படையை அனுப்பி

வைத்தனர். மராட்டியர்களின் இந்தத் தீடீர்த் தாக்குதல்களை தோஸ்த் அலி எதிர்பார்க்கவில்லை. மராட்டியர்கள் கடப்பையிலிருந்து முன்னேறினர்.

செருவு என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோஸ்த் அலியின் படைகள் அழிக்கப்பட்டன. போரில் தோஸ்த் அலியும் மாண்டார். வெற்றி பெற்ற மராட்டியப் படைகள் ஆற்காட்டுக்கு விரைந்து வந்தது. ஆனால் சப்தர் அலி அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்து சமாதானத்தை விலைக்கு வாங்கினார். சப்தர் அலி பிரெஞ்சுக் கவர்னர் தூமாவின் பாதுகாவலில் இருந்தார். கி.பி. 1741-ல் மராட்டியர் திருச்சியை முற்றுகையிட்டு கைப்பற்றி, சந்தா சாகிபை சிறைப்பிடித்து சதாராவுக்கு கொண்டு சென்றனர்.

**சப்தர் அலி (கி.பி. 1740-1742)**

தோஸ்த் அலியின் மறைவுக்குப் பிறகு அவரது மகன் சப்தர் அலி நவாபானார். ஆனால் அவரால் திறமையாக ஆட்சி நடத்த முடியவில்லை. ஏனெனில் அப்போது மராட்டியர்கள் நாட்டை சூறையாடிக் கொண்டிருந்தனர். இச்சூழ்நிலையில ஆட்சிக்குத் தேவையான வரிகளையும் வசூல் செய்ய முடியவில்லை. இச்சூழ்நிலையில் தக்காணத்தில் முகலாய சுபேதாராக இருந்த நிஜாம் உல் முல்க், சப்தர் அலியை உடனடியாக நவாபாக ஏற்றுக் கொள்ளவில்லை.

சப்தர் அலி ஆட்சிக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதற்கு தாமே முயன்று, வேலூரில் கோட்டையைக் காத்திருந்த படைத்தலைவன் முந்தாசா அலி என்பவரிடம் பண உதவி வேண்டினார். அந்த முந்தாசா அலி என்ற கொடியவன் ஆற்காட்டு நவாப் பதவியைத் தானே கைப்பற்றிக் கொள்ளும் தீய எண்ணத்துடன் சப்தர் அலியைக் கொன்றுவிட்டான். தானே ஆற்காட்டு நவாப் என்று பிரகடனம் செய்து கொண்டு ஆற்காட்டை அடைந்தார். ஆனால் போர் வீரர்களின் எதிர்ப்பு காரணமாக மீண்டும் வேலூருக்கு ஓடிவந்து விட்டார்.

இச்சூழ்நிலையில் சப்தர் அலியின் மகன் சையது முகமது கான் சென்னையில் ஆங்கிலேயரின் பாதுகாவலில் இருந்தார். ஆங்கிலேயர் இவரை நவாபாக அறிவித்தனர். ஆனால் தக்காண சுபேதார் நிஜாம் உல்முல்க் கி.பி. 1743-ல் ஒரு படையுடன் வந்து சையது முகமதுகானை பதவி நீக்கிவிட்டு கோஜா அப்துல்கான் என்பவனை நவாபாக நியமித்தார் ஆனால் இவர் கோல்கொண்டாவில் போர் புரிந்து கொண்டிருந்த போது பாசறையில் கொலை செய்யப்பட்டார். எனவே நிஜாம் உல்முல்க், அன்வாருதீன்கான் என்பவரை ஆற்காட்டு நவாபாக்கினார்.

**அன்வாருதீன்கான்(கி.பி 1743-1749)**

ஆற்காட்டு நவாபாக நியமிக்கப்பட்ட அன்வாருதீன்கான் காலத்தில் தான் தமிழக அரசியலில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக் காரர்களும் தமிழக அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் போட்டியிட்டனர். மொத்தம் மூன்று கர்நாடகப் போர்கள் நடைபெற்றன. முசபர்ஜங், சந்தாசாகிப், டியூப்ளே ஆகியோரின் கூட்டுப் படைகள் ஆற்காட்டு நவாப் அன்வருதீனை எதிர்த்துப் போரிட்டன. 1749-ல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் அன்வாருதீன் இறந்து போனார்.

**முகமது அலி (கி.பி. 1749-1795)**

அன்வாருதீன் இறந்த பிறகு ஆற்காட்டு அரியணைக்குப் போட்டி தொடங்கியது. இந்த அரியணைக்குப் போட்டியிட்ட சந்தாசாகிபை பிரெஞ்சுக்காரர்களும், அன்வாருதீனின் மணப்புற மகனான முகமது அலியை ஆங்கிலேயரும் ஆதரித்தனர். இந்தப் பிரச்சனையில் ஆங்கிலேயர் களும், பிரெஞ்சுக்காரர்களும் கடுமையாக மோதிக் கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற போர்களின் போது முகமது அலியே ஆற்காட்டு நவாபாக இருந்தார்.

முகமது அலிக்கு வாலாஜா என்ற பட்டப் பெயரும் உண்டு. அதுவே இவரது வம்சத்தின் பெயரானது. கி.பி. 1765-ல் கிளைவ் ஏற்படுத்திய அலகாபாத் உடன்படிக்கையின்படி ஆற்காட்டு நவாப் சுதந்திர அரசரானார். ஆனால் அவரது சுதந்திரம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதே யாகும். இவருக்கு வருமானம் போதாமையால் அளவுக்கு அதிகமாகக் கடன் வாங்கி செலவு செய்தார். இதனால் ஆங்கிலேயருக்கு இவர் கொடுக்க வேண்டிய கடன் தொகை அதிகரித்தது.

கி.பி. 1792-ல் கம்பெனிக்கும் முகமது அலிக்கும் இடையே புதிய ஒப்பந்தம் ஒன்று காரன்வாலிஸ் காலத்தில் ஏற்பட்டது. இதன்படி போர்க் காலங்களில் கர்நாடக ஆட்சி முழுதையும் கம்பெனி மேற்கொள்ளலாம். நவாபுக்குச் சேர வேண்டிய கப்பம் கட்டுப்படாவிடில் அதை வசூலிப்பதற்காக குறிப்பிட்ட மாவட்டங்களை கம்பெனியார் ஆட்சி நிர்வாகத்திற்காக மேற்கொள்ளலாம் என்பதேயாகும். இதன்படிதான் மதுரை, திருநெல்வேலி மற்றும் பாளையக்காரர் பிரதேசங்கள் கம்பெனியார் ஆதிக்கத்திற்கு மாற்றப்பட்டன. சென்னை சேப்பாக்கத்தில் ஒரு அரண்மனை கட்டி வாழ்ந்து வந்த முகமது அலி கி.பி. 1795-ல் இறந்தார்.

**உம்: தத்-உல்உம்ரா (கி.பி. 1795-1801)**

முகமது அலிக்குப் பிறகு அவரது மகன் உம்தத் உல்உம்ரா ஆற்காட்டு நவாபானார். இவர் தனது தந்தையைப் போலவே அதிகமாக கடன் வாங்கி செலவு செய்தார். திப்பு சுல்தானுடன் போர் நடைபெற்ற காலத்தில் கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி

சென்னையிலிருந்த போது ஆற்காட்டு நவாபும் திப்பு சுல்தானும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக சதி செய்ததாக கேள்விப்பட்டு நவாபிற்கு உதவித் தொகை கொடுத்து விட்டு, அவரது நாட்டை கம்பெனியார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். உல்தத்உல்உம்ரா 1801, ஜூலை 15-ல் இறந்தார்.

இவருக்குப் பிறகு இவரது மகன் உசேன் அலி இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதால் ஆசிப் உத்தெளலா என்பவரை ஆங்கிலேயர் ஆற்காட்டு நவாபாக்கினர். இவர் வெல்லெஸ்லியின் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதால் ஆட்சி ஆங்கிலேயர் கைக்கு மாறியது. ஆசிப் உத்தெளலா கி.பி. 1820 வரை பட்டங்களை ஏற்று வந்தார். ஆற்காட்டின் கடைசி நவாபான முகம்மது கெளஸ் கி.பி 1855, அக்டோபர் 17-ல் இறந்தார். எனவே கம்பெனியார் நவாப் பதவியை ஒழித்துவிடத் தீர்மானித்தனர். எனவே டல்ஹெளசியின் வார்சிலிக் கொள்கைப்படி கி.பி. 1855-ல், நவாப் பதவி ஒழிக்கப்பட்டது.

**கர்நாடகப்போர்கள்**

கிழக்குக்கடற்கரைக்கும் அதனைச்சார்ந்த பின்னிலத்திற்கும் ஐரோப்பியர் கர்நாடகம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். இந்தப் பகுதிகளில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் பல வாணிப ஸ்தலங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். தங்கள் வாணிப வளர்ச்சியை விரும்பிய இருவருமே கர்நாடக சுதேச அரசர்களின் நட்பை நாடினர். இதனால் சுதேச அரசர்களின் அரசியலிலும், போர்களிலும் தலையிட வேண்டியதாயிற்று. அப்படித் தலையிட்டதின் விளைவாக பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது. ஐரோப்பாவில் இந்த இருநாடுகளுக்குமிடையே போரோ அல்லது சமாதான உறவோ ஏற்பட்டால் அது இந்தியாவிலும் பிரதிபலித்தது. இப்போர்கள் சென்னை மற்றும் பாண்டிச்சேரியைச் சார்ந்த பகுதிகளில் நடைபெற்றதால், அவை கர்நாடகப்போர்கள் அழைக்கப்பட்டன. மொத்தம் நடைபெற்ற மூன்று போர்களின் முடிவில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இந்தியாவில் ஆட்சி செலுத்த பிரெஞ்சுக்காரர்களைவிட ஆங்கிலேயர்களே தகுதியுடையவர்கள் என்பது தெளிவாகியது. கர்நாடகப்போர்கள் இந்தியவரலாற்றில் புகழ்பெற்றவையாகும்.

**முதல்கர்நாடகப்போர் (1746–48)**

**கர்நாடகஅரசியல்நிலை**

18-நூற்றாண்டின் ஆரம்பத்தில் முகலாயப்பேரரசு தென்னிந்தியாவில் ஆதிக்கத்தை இழந்தது. அச்சமயத்தில் கர்நாடகம் தக்காண கவர்னரின்

அதிகாரத்தின் கீழ் இருந்தது. 1724-ல் தக்காண கவர்னராக (சுபேதார்) இருந்த ஆசப்ஷா டில்லியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சுதந்திர அரசனாகப் பிரகடனம் செய்துகொண்டார். அப்போது கர்நாடகம் தக்காண கவர்னரின் அதிகாரத்தின்கீழ் இருந்துவந்தது. கர்நாடகத்தின் தலைநகர் ஆற்காடு. ஆற்காட்டைத் தலைநகராகக்கொண்டு கர்நாடகம் நவாப் என்ற ஆட்சித்தலைவரால் ஆளப்பட்டுவந்தது. அப்போது ஆற்காட்டு நவாபாக இருந்தவர் அன்வாருத்தீன் என்பவராவார். சுதந்திரமாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட ஆசப்ஷா, ஆற்காட்டு நவாப் தனக்குப் பணிந்து நடக்கவேண்டும் என்று கூறியதால் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இவை தவிர வாரிசுரிமைப் போராட்டமும், மராட்டியர்களின் படையெடுப்பும் தெற்கே ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த சாதகமாக இருந்தது. இச்சூழ்நிலையில் தான் முதலாவது கர்நாடகப்போர் நடைபெற்றது.

காரணங்கள்

1) ஆஸ்திரியவாரிசுரிமைப்போர் : (1740-48)

முதல் கர்நாடகப்போரைப் பொறுத்தஅளவில், இது ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் பிரதிபலிப்பேயாகும். 1740-ம் ஆண்டில் ஆஸ்திரிய பேரரசர் ஆறாம் சார்லஸ் இறந்தவுடன் பிரஷ்யாவின் அரசரான மகா பிரடரிக் பேரரசரின் தனிக்கட்டளையை மீறி ஆஸ்திரிய அரசியான மரியதரசாவுடன் போர்தொடுத்தார். இப்போரில் இங்கிலாந்து ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகவும், பிரான்ஸ் பிரஷ்யா பக்கமும் நின்று போர்புரிந்தன. இப்போர் சுமார் எட்டு ஆண்டு காலம் நீடித்தது. இப்போர் இந்தியாவில் இரு கம்பெனிகளுக்கிடையேயும் பகைமையை வளர்த்தது. ஒருவரை ஒருவர் துரத்த நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள் இது குறித்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வால்டர் என்பவர் நமது நாட்டில் முதலாவது வெடித்த பீரங்கிக்குண்டு அமெரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த குண்டுகளுக்கெல்லாம் தீவைத்தது” என்று கூறினார்.

2) வியாபாரப்போட்டி

இந்தியாவில் இங்கிலாந்தும் பிரான்ஸ் நாடும் ஒருவரை ஒருவர் வென்று வியாபாரத்தை விருத்தியடையச் செய்ய நினைத்தன. இந்தியாவில் இருந்த இரண்டு நாடுகளின் கம்பெனி அதிகாரிகள் சமாதானமாகச் செல்ல நினைத்தாலும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்த மேலதிகாரிகள் இதை

ஒப்புக்கொள்ளவில்லை. கம்பெனி நிர்வாகிகள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தனர்.

3) கர்நாடகாவில்நவாபின்சூழ்ச்சி

கர்நாடக நவாபின் நடுநிலையும், அரசியல் தந்திரமும் போருக்குக் காரணமானது. அவர் இருசாராரையும் இந்தியாவில் போரிட்டுத் தமது நாட்டின் அமைதியைக் குலைத்து விடாதபடி கேட்டுக்கொண்டார். ஆனாலும் தந்திரமாக பிரான்சுடன் மறைமுக உறவு வைத்துக்கொண்டார்.

4) டியூப்ளே

1742-ல் டியூப்ளே பாண்டிச்சேரியின் கவர்னரானார். அவர் கர்நாடக அரசியல் நிலையைக் கூர்ந்து கவனித்து வந்தார். பிரெஞ்சு நாட்டின் பெருமையை இந்தியாவில் நிறுவிப் புகழ்பெற வேண்டுமென்று நினைத்தார். ஆங்கிலேயரை அடியோடு விரட்டிவிட்டு பிரெஞ்சு ஆதிக்கத்தைப் பரப்ப நினைத்தார். இந்திய அரசுகள் வேரற்ற மரங்களாக பாழ்பட்டுவிழும் நிலையில் இருப்பதைப் பயன்படுத்தி, புதிய பொலிவுடன் பிரெஞ்சு ஆதிக்கத்தை ஏற்படுத்த நினைத்தார். ஆனாலும் இவர் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இந்தியாவில் பரவுவதை விரும்பவில்லை. போர் ஆரம்பித்தது.

போரின்போக்கு

ஆங்கில அரசாங்கம் பர்னட் (Burnett) என்பவரின் கீழ் ஒரு கப்பற் பிரெஞ்சுக் கடற்படையைக் கைப்பற்றவும், பாண்டிச்சேரியை எதிர்ப்பதில் சென்னைக்கு உதவவும் அனுப்பியது. பிரெஞ்சுக் கவர்னர் டியூப்ளே கர்நாடக நவாபின் உதவியை நாடினார். அன்வாருத்தீனும் தன்னுடைய ஆட்சிப்பகுதியில் ஒருவர் மற்றவரைத் தாக்கக்கூடாது என்று அறிக்கையிட்டார். எனவே பர்னட் பாண்டிச்சேரியைத் தாக்காமல் திரும்பச் சென்றுவிட்டார். இவ்வாறிருக்க, தன்னிடத்தில் போதிய படை இல்லாததால் மொரிஷியஸ் தீவின் பிரெஞ்சு கவர்னரான லாபர்தோனேயின் (Labourdonnais) உதவியை நாடினார் டியூப்ளே. அவர் எட்டு கப்பல்களுடன் வந்து சென்னையை முற்றுகையிட்டார். இப்போது ஆங்கிலேயர் அன்வாருத்தீனின் உதவியை நாடவே, அன்வாருத்தீன் இந்த சென்னை முற்றுகையை எதிர்த்தார். ஆனால் டியூப்ளே தனது ராஜதந்திரத்தினால் அவரை சமாதானப்படுத்த முயன்றார். நவாபிடம் ஒப்படைப்பதற்காக வேதாம் சென்னையைக் கைப்பற்றுவதாகக்கூறி 1742-ல்சென்னையை முற்றுகையிட்டு கைப்பற்றினார். இந்த வெற்றியைப்

பயன்படுத்திக்கொள்வதில் டியூப்ளேக்கும், லாபர்தோனேக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, அதன் விளைவாக லாபர்தோனே பிரான்ஸ் சென்றுவிட்டார்.

**செயின்ட்தாமஸ்போர் 1746 (அடையாறுபோர்)**

தன் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் தன்னை அவமதித்த டியூப்ளேயிடம் அன்வாருத்தீன் கோபம்கொண்டார். உடனடியாக, கைப்பற்றிய சென்னையை விட்டுவிடுமாறு ஆணையிட்டார். டியூப்ளே மறுத்துவிட்டார். எனவே தனது மகன் மாபூஸ்கான் தலைமையில் 10,000 வீரர்கள் அடங்கிய ஒருபடையை அனுப்பி, சென்னையை முற்றுகையிட்டார். பிரெஞ்சுப்படையோ 1,000 படைவீரர்களை மட்டுமே பெற்றிருந்தது. அடையாறுக்கு அருகிலுள்ள சான்தோமில் போர் ஏற்பட்டது. திறமையும், நல்லபயிற்சியும் பெற்ற பிரெஞ்சுப்படை நவாபின் படைகளை மிக எளிதில் தோற்கடித்தது.

சென்னையைக் கைப்பற்றிய பின் செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்ற முற்றுகையிட்டார் டியூப்ளே. முற்றுகை பதினெட்டு மாதங்கள் நீடித்தது. பயனில்லை. அதே நேரம் பாண்டிச்சேரியைக் கைப்பற்ற பாஸ்காவென் (Boscawan) என்ற ஆங்கில தளபதி தலைமையில் ஒரு கப்பற்படை வந்தது. பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டாலும் படையில் போர் திறமையில்லாததால் பாண்டிச்சேரியைப் பிடிக்கமுடியவில்லை. இதற்கிடையில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர்1648-ல் ஏலாசாப்பேல் உடன்படிக்கையின்படி முடிவடைந்தது. அதன்படி சென்னை மீண்டும் ஆங்கிலேயர்களுக்கே கிடைத்தது.

**முதல் கர்நாடகப்போரின் விளைவுகள்**

1) சென்னை ஆங்கிலேயர்கட்கு கொடுக்கப்பட்டபோதிலும் பிரெஞ்சுக்காரர்களின் புகழும் பெருமையும் உயர்ந்தது. வியாபாரப்போட்டியில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு பெருகி வியாபாரம் பெருகியது.

2) பிரெஞ்சுக்காரர்களின் கடல்வலிமையை இந்தியர் புகழலாயினர்.

3) இப்போரினால், 'போரிடுவதில் முகமதியரே சிறந்தவர்கள்' என்ற கருத்து மாற்றப்பட்டுவிட்டது. நவாப் அடைந்த தோல்விஅவரின் ஆற்றலின்மையை வெளிப்படுத்தின. இந்திய தரைப்படையினால் மாத்திரம் ஐரோப்பியரை வெல்ல முடியாது என்பதைக் காட்டியது. போரில் வெற்றிபெற திரளான வீரர்களைவிட, மேலான கட்டுப்பாடும், நவீன போர் ஆயுதங்களும் தேவை என்பதை உணர்த்தியது.

4) கப்பற்படையின்சிறப்பையாவரும்உணரத்தொடங்கினர்

5) டியூப்ளே தமது வாக்கைக்காப்பாற்றாததால், பிரான்ஸ் இந்திய அரசர்களின் நம்பிக்கையை இழக்க வேண்டியதாயிற்று. நவாபின் ஆதரவு இனி ஆங்கிலேயர்களுக்கே என்பது தெளிவாகியது.

6) அன்வாருத்தீனைத் தோல்வியுறச்செய்த நிகழ்ச்சி, டியூப்ளேயின் மனதில் ஆழமான முத்திரையைப் பதித்து, புதிய வழியில் ஏராளமான வெற்றிபெறும் வாய்ப்புகளை எடுத்துக்காட்டியது.

**இரண்டாவதுகர்நாடகப்போர்(1748–54)**

இரண்டாவது கர்நாடகப்போர் இந்தியாவில் ஏற்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் ஏற்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சனைகளில் இரு கம்பெனிகளும் தலையிட்டன. முதல் கர்நாடகப்போரில் சென்னை அருகே நடந்த போரில் அன்வாருத்தீனைத் தோல்வியுறச் செய்த நிகழ்ச்சி டியூப்ளேக்குஏராளமானவெற்றிகளைப்பெறும்வாய்ப்பைஅளித்தது

அதிர்ஷ்டம்அவர்பக்கத்தில்இருந்தது அது அவர் முன் ஓர் அரிய சந்தர்ப்பத்தை அமைத்து அவரது கொள்கையைச் செயலில்காட்டும்படி செய்தது.

**போருக்கானகாரணங்கள்**

1) தக்காண கவர்னரான நிஜாம் உல் முல்க் (ஆசப்ஷா) 1748–ல்இறந்தார். அவர் மறைவுக்குப்பின் அவரது இரண்டாம் மகனான நாஸர் ஜங் நிஜாமானார். ஆனால் நிஜாம் உல் முல்க்கின் பேரனான முஸபர் ஜங் அப்பதவி தமக்கே உரியது என்று போட்டியிட்டார். எனவே இருவருக்குமிடையே அரியணைப் போட்டி ஏற்பட்டது. இச்சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் முஸபர்ஜங்கிற்கு உதவ முன்வந்தனர்.

2) 1741–ல் மராட்டியர்களால் கைது செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் கழித்து சந்தாசாகிப் விடுதலை பெற்றார். டியூப்ளே இதற்காக மராட்டியர்களுக்கு ஏழுலட்சம் ரூபாய் பணயப்பணம் கொடுத்தார். சந்தாசாகிப் ஆற்காட்டு நவாபான அன்வாருத்தீனைத் தொலைத்துக்கட்டிவிட்டு தானே ஆற்காட்டு நவாபாக விரும்பினார். அதற்காக டியூப்ளேயின் உதவியை நாடினார்.

3) டியூப்ளே இருவழிகளில் தம் செல்வாக்கை நிலைநாட்ட விரும்பினார். தக்காணத்தில் முஸபர் ஜங்கை நிஜாமாக்குவது, ஆற்காட்டில் அன்வாருத்தீனை பதவியிறக்கிவிட்டு சந்தாசாகிபை நவாபாக்குவது ஆகியவையாகும். இப்படிச் செய்தால் அந்த இருவரும் பிரான்சுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பர் என்றும், பிரான்சின் வியாபாரம் இந்தியாவில் வளர இது வழிவகுக்கும் என்றும் டியூப்ளே

எண்ணினார். ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்ட இது பெரிதும் உதவும் என்று கனவுகண்டார்.

எனவே 1749-ல் சந்தாசாகிப், டியூப்ளே, முஸபர்ஜங் ஆகிய மூவரும் ஆங்கிலேயர்கட்கு எதிராக ஓர் ரகசிய உடன்பாட்டை செய்தனர். கூட்டுப்படை ஒன்றையும் அமைத்தனர். இந்த ஏற்பாட்டை கேள்விப்பட்ட ஆங்கிலேயர்கள் நாஸர்ஜங்கிற்கும், அன்வாருத்தீனுக்கும் உதவ முன்வந்தனர்.

**போரின்போக்கு (Course of the War)**

சந்தாசாகிப், முஸபர்ஜங், டியூப்ளே ஆகியோரின் கூட்டுப்படைகள் ஆற்காட்டைக் கைப்பற்றச் சென்றன. வழியில் தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர்க்கருகில் உள்ள ஆம்பூர் (Ambur) என்ற இடத்தில 1749 ஆகஸ்ட் 3-ம் தேதி நடைபெற்ற போரில் அன்வாருத்தீனின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அன்வாருத்தீன் போரில் கொல்லப்பட்டார். அவருடைய மகனான முகமது அலி திருச்சிக்கு ஓடிவிட்டார். பிரான்சின் இந்த வெற்றி தங்களுக்கு ஆபத்து என்பதை அறிந்தனர் ஆங்கிலேயர். ஆனால் அவர்களிடம் டியூப்ளேயின் ஆற்றல் இல்லை. ஆனாலும் திருச்சிக்கு ஓடிய முகமது அலிக்கு உதவியாக ஒரு படையை அனுப்பினர்,

இதற்கிடையில் சந்தாசாகிப் தஞ்சாவூரை முற்றுகையிட்டு மூன்று மாதங்களாக அங்கு தனது நேரத்தை வீணடித்துக்கொண்டிருந்தார் அதே நேரம் முஸபர் ஜங் ஒரு பெரும்படையுடன் கர்நாடகத்தினுள் நுழைந்தார். முஸபர் ஜங் கைதியானார். நாசிர் ஜங் ஆற்காட்டில் தங்கியிருந்தபோது அவருக்கெதிராக கடப்பை, கர்னூல், சாவனூர் ஆகிய இடங்களிலுள்ள நவாபுகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி (Bussy) செஞ்சிக் கோட்டையைத் தன் வசமாக்கிக்கொண்டார் அதனை மீட்க முயன்ற நாசிர்ஜங் கொல்லப்பட்டார். கைதியாக இருந்த முசபர் ஜங் விடுதலை செய்யப்பட்டு பிரெஞ்சு ஆதரவில் அரியணையைப்பெற்றார்.

இவ்வாறு டியூப்ளேயின் ஆதரவாளர்களான முசபர்ஜங்கும், சந்தாசாகிபும் முறையே தக்காண கவர்ராகவும் (ஐதராபாத் நிஜாமாக), ஆற்காட்டு நவாபாகவும் பதவியேற்றனர். நன்றியுள்ள நிஜாம் முஸபர் ஜங் கிருஷ்ணாநதிக்கு தெற்கிலுள்ள வடசர்க்கார் பகுதிகளையும், பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள பல இடங்களையும், மசூலிப்பட்டிணம் உட்பட ஒரிசா கடற்கரையில் பல பகுதிகளையும் டியூப்ளேக்கு

வெகுமதியாகக் கொடுத்தார். பிரெஞ்சுக் கம்பெனிக்கு ரொக்கப்பரிசும் கொடுத்தார். 10,000 ரூபாய் வருமானம் உள்ள வழுவாதவூர் ஜாகீரைத் (Val udavur) தானமாக வழங்கினார். புஸ்ஸியின் தலைமையில் ஹைதராபாத்தை நிஜாமின் கீழ்விட்டு வைத்தார் டியூப்ளே. டியூப்ளேயின் நண்பர்கட்கு இவையெல்லாம் 'அற்புதச் செயல்களாகவேபட்டது

டியூப்ளேயின் இந்த வெற்றி இறுதியான தாக்கச் செய்யவேண்டுமானால் திருச்சிக்கோட்டையில் தஞ்சம் புகுந்த முகமது அலியுடன் டியூப்ளே ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும். ஆனால் மிக சாதுரியமாக ஆங்கிலேயர் தடுத்துவிட்டனர். டேவிட் கோட்டையின் புதிய கவர்னரான சாண்டர்ஸ் பிரான்சுக்கு நிஜாமினால் கொடுக்கப்பட்ட இடங்களை அது அனுபவிக்கக்கூடாது என்றார். முகமது அலிக்கு உதவும் நோக்கத்துடன் பிரெஞ்சுக்காரர்களிடம் ஆலோசனை நடத்துவது போல் காலம் கடத்தினார். அதே நேரம் தஞ்சை, மைசூர் மராட்டிய மன்னர்களுடன் சேர்த்து கூட்டு ஒன்றை உருவாக்கினார்.

**ஆற்காடுமுற்றுகை 1751**

இந்த நேரத்தில்தான் இந்திய அரசியல் சதுரங்க ஆட்டத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அச்சமயத்தில் ஆங்கிலக் கம்பெனியில் எழுத்தராகச் சேர்ந்த ராபர்ட் கிளைவ் என்பவர் ராணுவத்தில் சேர்ந்தார். இவர் ஆளுநர் சாண்டர்ஸை அணுகி புதிய போர்த்திட்டம் ஒன்றைக்கொடுத்தார். திருச்சி முற்றுகையைத் தளர்த்தி ஆற்காட்டை முற்றுகையிட வேண்டும் என்பதே அந்தத்திட்டம் ஆகும். கிளைவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. கிளைவ் ஒரு பெரும்படையுடன் சென்று எளிதில் ஆற்காட்டைக் கைப்பற்றினார். திருச்சி முற்றுகையிலிருந்த சந்தாசாகிப் ஆங்கிலேயர் எதிர்பார்த்த படியே தனது தலைநகரை மீண்டும் பிடிப்பதற்காக ஓடிவந்தார். திருச்சி முற்றுகை கைவிடப்பட்டது. சந்தர்சாகிப் கைதுசெய்யப்பட்டார். பிரெஞ்சுப் படைத்தளபதி ஜே.பி. லா ஸ்ரீரங்கத்தில் கைதுசெய்யப்பட்டார். கைதியான சந்தாசாகிப் தஞ்சை அரசரின் தளபதியால் கொலை செய்யப்பட்டார். மிக'லா'வின் தோல்வியைக் கண்டு மனம் தளராத டியூப்ளே திருச்சிக் கோட்டையை முற்றுகையிடத் தீர்மானித்தார். ஆஸ்ட்ரக் (Ast ruc) என்ற பிரெஞ்சுத்தளபதி திருச்சியை முற்றுகையிட்டார். ஆனால் ஆங்கிலத்தளபதி லாரன்ஸ் அவரை துரத்தியடித்தார். தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டது. மிகக்கடினமான சூழ்நிலையில் டியூப்ளே சிக்கித்தவித்தார். திருச்சி டியூப்ளேயின் புகழுக்கும்,

திட்டங்களுக்கும் மட்டுமல்லாது, பிரெஞ்சுக்காரர்களின் மதிப்புக்கும், நலன்களுக்கும் கல்லறையாகஆகிவிட்டது பிரெஞ்சு நலன்கள் இந்தியாவில் மிகமோசமான நிலைக்குச் சென்று கொண்டிருந்ததால் டியூப்ளேயை திரும்ப அழைத்துக்கொள்ள பிரெஞ்சு அரசு முடிவுசெய்தது.

எனவே கோதயூ (Godehew) என்பவரை பிரெஞ்சு ஆளுநராக அனுப்பியது. இவர் டியூப்ளேயின் கொள்கைகளைக் கைவிட்டார். ஆங்கிலேயருடன். சமாதானம் செய்து கொள்வதே அப்போதிருந்த சூழ்நிலைக்குச் சாலச்சிறந்தது என்று உணர்ந்து கொண்ட கோதயூ ஆங்கிலேயருடன் 1754 டிசம்பர் மாதம் தற்காலிக உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டார். இந்த உடன்படிக்கைப்படி, வடசர்க்காரிலும்; ஹைதராபாத்திலும் பிரெஞ்சுக்காரர்களின் மதிப்பு காப்பாற்றப்பட்டது. முகமது அலி கர்நாடக நவாபாக ஒப்புக்கொள்ளப்பட்டார். இந்திய சுதேச மன்னர்களின் உள்விவகாரங்களில் யாரும் தலையிடுவதில்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது இந்த உடன்படிக்கை ஏற்பட்டபோது அவரவர்களிடம் இருந்த இடத்தை அப்படியே வைத்துக்கொள்வது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது இந்த உடன்படிக்கையை டியூப்ளே கடுமையாகத் தாக்கினார். 'பிரான்ஸ் நாட்டுக்கே ஒருஅவமானம்' என்றார். 1754-ல் தாய்நாடு திரும்பினார் டியூப்ளே.

**போரின்விளைவுகள் (Results)**

1) யூப்ளே பிரெஞ்சுக்காரர்களுக்காகப் பெற்ற எல்லா ஆதாயங்களையும் இழக்க நேரிட்டது.

2) இந்திய சுதேச மன்னர்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பிரெஞ்சுக்காரர்கள் இழந்தனர்.

3) தங்கள் நாட்டைக் கைப்பற்றி பிரெஞ்சு நாட்டின் செல்வாக்கை வளர்க்க டியூப்ளே திட்டமிட்டதைக் கண்ட மக்கள் வெறுத்தனர்.

4) டியூப்ளேயின் பதவிபறிக்கப்பட்டது. அவர் பின்பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன.

5) ஆங்கிலேயரின் ராஜதந்திரம் பாராட்டப்பட்டது. சுதேச அரசர்கள் ஆங்கிலேயர்களுடன் உறவுகொள்ள முன்வந்தனர், இங்கிலாந்து வாணிபம் வளர்ந்தது. ஆங்கிலேயரின் படைபலம், பணபலம், கடலாதிக்கம் வளர்ந்தது.

**டியூப்ளேயின் வரலாறு முதற்பகுதி (1697–1742)**

ஜோசப் பிராங்காய் டியூப்ளே என்பவர் பிரான்சில் ‘லாண்ட்ரெசீஸ்' என்னுமிடத்தில் பிறந்தார். இவர் முதலில் கணிதத்துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்தபோதிலும் அமெரிக்கா, இந்தியா சென்று வந்தபின் வாணிபத்தில் ஊக்கம் ஏற்பட்டது. 1720-ல் பாண்டிச்சேரி ஆலோசனைக்குழுவில் இடம் கிடைத்தது. தனிப்பட்ட முறையில் வாணிபம் செய்து பெரும்செல்வந்தர் ஆனார். பொறாமை கொண்ட சிலரின் குற்றச்சாட்டினால் திரும்ப அழைத்துக்கொள்ளப்பட்டார். பின்னர் மீண்டும் 1731-ல் சந்திரநாகூர் பண்டகசாலையின் இயக்குநராக அமர்த்தப்பட்டார்.

**பாண்டிச்சேரி கவர்னராதல் (1743–1763)**

1742-ல் டியூப்ளே பாண்டிச்சேரி கவர்னராக நியமிக்கப்பட்டார். பதவியேற்ற பின் கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை நிலைநாட்ட முடிவுசெய்தார். இதனால் முதலில் நிர்வாகத்தை சீர்திருத்தினார். சிக்கனத்தைக் கையாண்டு நிதிநிலையை உயர்த்தினார். பாண்டிச்சேரியின் பாதுகாப்பை வலிமைப்படுத்தினார்.

**டியூப்ளேயின் கொள்கைகள்**

டியூப்ளே, வாணிபத்தில் பிரெஞ்சுக்காரர்கள் முன்னேறுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். உள்நாட்டு அரசுரிமைப் போட்டிகளில் தலையிடுவதின் மூலம் தனது அதிகாரத்தைப் பெருக்கமுடியும் என்று நினைத்தார். தனது அதிகாரம் பெருக வேண்டுமானால் திருச்சி தன்வசம் இருக்கவேண்டுமென நினைத்தார். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரின் அதிகாரத்தை ஒழிக்க பேரவா கொண்டார்.

**டியூப்ளேயின் இறுதிக்காலம்**

இரண்டாவது கர்நாடகப்போரின் இறுதியில் டியூப்ளே தனது தாய்நாட்டிற்கு திரும்ப அழைத்துக்கொள்ளப்பட்டார். தாய் நாடு திரும்பிய டியூப்ளே மிகவும் துயருற்றார். அவரது வாழ்க்கை இருளிலும், தரித்திரத்திலும், தனிமையிலும் கழிந்தது. ஏழையாக பெருந்துயரத்திற்கு உள்ளாகி டியூப்ளே 1763 நவம்பரில் இறந்தார். இறப்பதற்கு மூன்றுநாட்களுக்கு முன்னர் அவர் எழுதியது: “நான் என்னுடைய இளமை, வாய்ப்புகள், என் வாழ்க்கை முழுவதையுமே தியாகம் செய்தேன். என் பணிகள் யாவற்றையும் கட்டுக்கதைகள் ஆக்கிவிட்டனர். மானிட சமூகத்தில் இழிந்தவனாக மதிக்கப்படுகிறேன். என்னிடமிருந்த சிறிய அளவு செல்வத்தையும் அபகரித்துக்கொண்டனர்”. இந்திய அரசியலில் இணையற்ற

வீரத்துடன் அருஞ்செயல் ஆற்றிப்புகழ்பெற்றுத் தமக்கும், தம் நாட்டுக்கும் சிறப்பைத் தேடித்தந்த டியூப்ளேயின் முடிவு அத்தகையதாயிற்று. "இந்தியர்களைக் கொண்டே இந்தியாவை வெல்லும் நயத்தைத் தொடங்கியவர் டியூப்ளே" என்பது மெக்காலேயின் கருத்து.

**டியூப்ளேயின் தோல்விக்கான காரணங்கள்**

1751-ம் ஆண்டு டியூப்ளே புகழின் உச்சியில் இருந்தார். ஆனால் அவரது சிறப்புகள் 1752-ம் ஆண்டிலிருந்து இறங்குமுகமாயிற்று. அவர் அடைந்த தோல்விக்கு அவரது கொள்கையிலும், தன்மையிலும் காணப்பட்ட குறைபாடுகளே காரணமாகும். அவைகள் பின்வருமாறு:

a) டியூப்ளேயின் கொள்கைகளைப் பிரெஞ்சு அரசாங்கம் புரிந்துகொள்ளவில்லை. எனவே அவரது கொள்கையிலுள்ள திறமையைப் பாராட்டாமலும், தேவையான உதவிகளை அவருக்கு உரிய நேரத்தில் அனுப்பாமல் இருந்ததுமே அவரது தோல்விக்கு முக்கியமான காரணமாகும். இதற்கு டியூப்ளே தான் பொறுப்பாளி. ஏனெனில் டியூப்ளே தனது கொள்கைகளை அரசுக்கு விளக்கவில்லை. மேலதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளத் தவறிவிட்டார். தனது பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் தாம் அடைந்த தோல்விகளைப் பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. எனவே தான் பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த ஆணைகள் டியூப்ளேயின் கொள்கைக்கு முன்னுக்குப்பின் முரணாக இருந்தன.

b) தனது நிலையைக் கடந்த அளவுக்குப் பேராசையைப் பெருக்கிவந்தார். வியாபார விருத்தியைக் குறித்தே எண்ணிய அவர் கம்பெனியின் நிதிநெருக்கடியை அறியார். ஏனெனில் பிரெஞ்சுக்கம்பெனி, இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனியைப் போல தனிக்குழுவாக இல்லாமல், பிரான்சு நாட்டின் பரந்த அரசியல் கொள்கைகள் மீது எழுப்பப்பட்டது ஆகும். எனவே பிரெஞ்சு அரசுக்கு இருந்த பணமுடைகள் நேரடியாக கம்பெனியைப் பாதித்தன. இதனை டியூப்ளே உணரவில்லை.

c) தக்காணமும், கர்நாடகமும் செழிப்பற்ற இடங்களாகும். தக்காணத்தில் டியூப்ளேயின் திட்டங்கள் அதிக செலவிற்கு வழிவகுத்தன.

d) டியூப்ளே அதிக ஆசைப்பட்டு தனது படையைத் தக்காணத்திலும் கர்நாடகத்திலும் பிரித்து வைத்தது மாபெரும் தவறாகும். பிரெஞ்சுப் படைத்தலைவர் புஸ்ஸி ஐதராபாத்தில் இருந்ததால் கர்நாடகத்தில் கிளைவுக்குச் சமமான ஆற்றல்மிக்க படைத்தளபதி இல்லாமல் போய்விட்டது.

c) தக்காணத்திலுள்ள முகலாயப் பகுதிகளுக்கு கவர்னராக இருக்க டியூப்ளே சம்மதித்ததே தவறு ஆகும். இந்தியாவில் பிரான்சுக்கும், பிரிட்டினுக்கும் ஏற்பட்ட போட்டியும், பகைமையும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அந்தநாடுகளுக்கிடையே காணப்பட்ட உறவின் அடிப்படையில் அமைந்தவை என்பதை டியூப்ளே அறியவில்லை.

2) தனது திட்டங்களை மறைக்காமல் வெளிப்படையாக அறிவித்து வந்ததால் அரசியலில் அதிகமான பயிற்சி இல்லாதவர் கூட அதன்விளைவுகளை உணர்ந்து தற்காப்புக்கான முன்னேற்பாடுகளைச் செய்யமுடியும். ஏனெனில் டியூப்ளே பயிற்சிபெற்ற ஒரு படைத்தலைவர் இல்லை. அவர் ஓர் அரசியல்வாதியாவார். படைகளைப் போரில் ஈடுபடுத்தும் ஆற்றல் அற்றவர்.

h) டியூப்ளேயின் குணங்களில் காணப்பட்ட குறைபாடுகளும் அவரது தோல்விக்குக் காரணமாகும். தன்னடக்கம் இவரிடம் கிடையாது. தனக்கு கீழ்ப்பட்ட அதிகாரிகளிடம் சாமர்த்தியமாகப்பழகி வேலை வாங்காமல் அடிக்கடி சண்டையிடுவார். ஒற்றுமை கிடையாது. பின்னால் நடக்கப்போகும் காரியங்களை முன் ஆலோசிக்கும் ஆற்றல் அற்றவராக இருந்தார். தான் நினைத்தது சரி என்று நினைத்ததால் ஏராளமான பகைவர்களைச் சம்பாதித்துக் கொண்டார்.

எனவே ‘அருஞ்செயலாற்றியபெரியார்வரிசையில்அவருக்குஇடமில்லை. டியூப்ளே தவறிழைத்த போதிலும், இறுதியில் வீழ்ச்சியடைந்த போதிலும் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றின் முன்னுரைப் பகுதியில் அவருக்கு சிறப்பானதோர் இடமுண்டு என்பதில் ஐயமில்லை!

**மூன்றாம் கர்நாடகப்போர் (1756–63)**

**காரணங்கள்**

1) டியூப்ளேக்குப்பின் வந்த கோதயூ கர்நாடகத்தில் அமைதிக்கொள்கையைப் பின்பற்றினார். ஆங்கிலேயர்களுடன் தற்காலிக உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டார். ஆனால் இந்த அமைதி ஐரோப்பாவில் ஆரம்பித்த ஏழாண்டுப்போரினால் குலைக்கப்பட்டது.

2) ஐரோப்பாவில் ஏழாண்டுப்போர் ஆரம்பித்துவிட்டாலும் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் விருப்பமின்றியே போரில் ஈடுபட ஆரம்பித்தனர். தஞ்சாவூரைக் கைப்பற்ற பிரெஞ்சு அதிகாரிகள் முயன்றனர்.

3) வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்கட்குச் சொந்தமாக இருந்த சந்திரநாகூரை கிளைவும், வாட்சனும் கைப்பற்றினர். இது போருக்கு முக்கியக்காரணம் ஆகும்.

4) பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவியாக தாய்நாட்டிலிருந்து புதிய உதவிகள் கிடைத்தன. கவுன்ட்டிலாலி (Coun-de-Lal l y) என்பவர் இந்தியாவில் போரை நடத்துவதற்காக அனுப்பப்பட்டார். சிவில் ராணுவ சம்பந்தமான அதிகாரங்கள் இவரிடம் கொடுக்கப்பட்டது. டிஆச் (d Ache) என்பவரின் கீழ் ஓர் கப்பற்படையும் அனுப்பப்பட்டது. லாலியின் நோக்கம் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதேயாகும்.

**போரின்போக்கு**

லாலி சுறுசுறுப்பாக தனது பணியைத் தொடங்கினார். 1758 மே 2-ம் தேதி செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார். தனது னமுடையைத் தீர்க்க தஞ்சாவூரைத் தாக்கினார். ஆனால் உணவு மற்றும் வெடிமருந்து பற்றாக்குறையால் முற்றுகை கைவிடப்பட்டது. இதனால் அவரது புகழ் குறைந்தது. போகாக் (Pocock) என்பவரின் தலைமையில் ஒரு ஆங்கிலக் கப்பற்படை வங்காளத்திலிருந்து கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டது. லாலி தனது அடுத்த செயலாக சென்னையைக் கைப்பற்ற முயற்சி செய்தார். 1758 டிசம்பர் 14-ம்தேதி முற்றுகை ஆரம்பமானது. ஹைதராபாத்தில் பிரெஞ்சுத் தளபதியாக இருந்த புஸ்ஸி என்பவரையும் தனது உதவிக்காக அழைத்தார். புஸ்ஸி ஐதராபாத்தை விட்டு வெளியேறியவுடன் அப்போது நிஜாமாக இருந்த ஜலபத்ஜங் பிரெஞ்சுக்காரர்களிடம் வைத்த நம்பிக்கையை இழந்து ஆங்கிலேயருடன் அமைதி உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி வடசர்க்கார் பகுதிகளை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தார். உடனே வங்காளத்திலிருந்த கிளைவ் காவல் போர்டு என்ற படைத்தலைவரை அனுப்பி வடசர்க்கார் பகுதியிலிருந்த பிரெஞ்சுக்காரரை வெளியேற்றினார்.

பிரெஞ்சுக் கப்பற்படைத் தளபதியான டிஆச் ஆங்கிலக் கப்பற்படைத் தளபதியான போகாக்கிடம் மூன்று முறை தோற்று இந்தியாவை விட்டே ஓடிவிட்டார். 1760 ஜனவரி 22-ல் சர் அயர்கூட் என்ற தளபதியால் லாலி 'வந்தவாசி' என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். புஸ்ஸி கைதியானார். 1750-ல் பாண்டிச்சேரி, செஞ்சி, மாஹி, காரைக்கால் ஆகிய பகுதிகள் மட்டுமே பிரெஞ்சுக்காரர் வசமிருந்தன.

**பாண்டிச்சேரிவீழ்ச்சி**

நம்பிக்கையற்ற இறுதியான முடிவுக்குத் தள்ளப்பட்ட லாலி, பிரெஞ்சுக்காரர்களின் நிலையை உயர்த்த எண்ணி மைசூர் அரசரான ஹைதர் அலியுடன் ஓர் நட்பு உடன்படிக்கையை செய்துகொண்டார். அதன்படி

பிரெஞ்சுக்காரருக்கு உதவியாக ஒரு சிறுபடையை அனுப்பினார் ஹைதர்அலி. ஆனால் அந்தப்படை ஆங்கிலேயருக்கு முன் நிற்க முடியாமல் மைசூருக்கே திரும்பிவிட்டது. பாண்டிச்சேரி ஆங்கிலேயர்களால் 1760 மே மாதம் தரைவழியாகவும், கடல் வழியாகவும் முற்றுகையிடப்பட்டது. படையைப் பராமரிப்பதற்கான பணம் லாலியிடம் இல்லை. இறுதியில் 1761 ஜனவரி 16-ல்பாண்டிச்சேரி பணிந்தது. நிபந்தனையில்லாமல் சரணடைந்தது.

பாண்டிச்சேரி ஆங்கிலேயப்படைகளால் சூறையாடப்பட்டது. ஒரு காலத்தில் அழகும் செழுமையும் கொண்டு விளங்கிய இந்த நகரம், ஒரு சில மாதங்களுக்குள் ஒரு கூரையைப் பார்க்க இயலாத அளவுக்கு அழிக்கப்பட்டது என்று ஓர்ம் (Orme) என்பவர் வருத்தத்துடன் கூறுகிறார். 1761 ஏப்ரலுக்குள் செஞ்சியும், மாஹியும் வீழ்ந்தன. பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்தியாவில் ஒரு இடம் கூட இல்லாது போய்விட்டது. ஐரோப்பாவில் 1763-ல் ஏழாண்டுப்போரை முடித்த பாரிசு உடன்படிக்கைப்படி மூன்றாவது கர்நாடகப்போர் முடிவடைந்தது.

**பிரெஞ்சுக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்**

ஆரம்பத்தில் சிறப்பாக வளர்ந்துவந்த பிரான்சின் ஆதிக்கம் இந்தியாவில் நிலைபெறாமல் அதிசீக்கிரமாக வீழ்ச்சியடைந்தது. பாண்டிச்சேரியில் மாத்திரமே அதன் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. பாண்டிச்சேரி என்பது மாஹி, ஏனாம், காரைக்கால்ஆகியபகுதிகளைஉள்ளடக்கியதுஆகும் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்பட்ட பின்னரும் இவை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழேயே இருந்தன. 1954-ல் தான் இப்பகுதிகள் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டன. 1962 ஆகஸ்ட் 16ல் இந்தியாவின் பகுதியாக அதிகாரப்பூர்வமாக இணைந்தது. அரசியலமைப்பின் ஏழாவது திருத்தத்தின் மூலம் 1963-ல் மத்தியபகுதியானது. பிரான்சின் ஆதிக்க வீழ்ச்சிக் குஅநேககாரணங்கள் உள்ளன.

1) ஐரோப்பாவில் இருந்த இக்கட்டானநிலை

ஐரோப்பா முழுவதையும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து பிரான்ஸ் நாட்டைத் தலைசிறந்த ஐரோப்பிய நாடாக்க வேண்டுமென்ற ஆசைஅக்கால பிரெஞ்சு அரசர்களைப் பிடித்து ஆட்டுவித்தது. இதனால் 'நாடுசேர்க்கும் கொள்கையில்' தீவிரமாக பிரான்ஸ் ஈடுபட்டது. இக்கொள்கையால் ஐரோப்பிய அரசியல் சகதிக்குள் சிக்கித்தவித்தது. ஓயாத போர்களில் ஈடுபட்டது. எனவே பிரான்சால் இந்திய ஆதிக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கமுடியவில்லை.

2) தூரக்குடியேற்ற நாடுகளில்ஆசை

“கூழுக்கும் ஆசைமீசைக்கும் ஆசை”என்பதைப் போல ஐரோப்பாவில் ஏற்பட்ட தொல்லைகளுடன் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேற்றம் ஏற்படுத்தும் ஆசையும் சேர்ந்து கொண்டது. இதனால் இந்தியாவில் ஒருமுகமாக காரியத்தைச் சாதிக்கவாய்ப்பில்லாமல் போய்விட்டது.

3) மோசமானநிதிநிலைமை

ஆங்கிலப்பிரெஞ்சுப் போராட்டம் இந்தியாவில் தொடங்கிய காலத்திலேயே பிரெஞ்சுக் கம்பெனியின் நிதிநிலைமை மோசமாகவே இருந்தது. ஆங்கிலக் கம்பெனிக்கு கிடைத்தது போன்று பிரெஞ்சுக் ! கம்பெனிக்கு வணிகப்பெருஞ்செல்வந்தரின் உதவி கிடைக்கவில்லை. 1 மேலும் டியூப்ளே ஆரம்பத்திலே கர்நாடகத்தில் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தார். எனவே பிரெஞ்சுக்காரர்களின் வாணிபம் செழிக்கவில்லை. ஒரு வணிகக்குழு பேரரசை அமைக்க விரும்பினால் முதலில் அடிப்படைக் குறிக்கோளான வாணிகத்தில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். ஆனால் பிரெஞ்சுக்காரர்களோ பணவலிமை இல்லாமல் போரில் ஈடுபட்டுவிட்டனர்.

4) வலிமையற்றபிரெஞ்சுக்கப்பற்படை

வாணிபப் பெருக்கத்திற்கு கடலாதிக்கம் தேவை. கடலாதிக்கம் கொள்ள வேண்டுமானால் வலிமையான கப்பற்படை அவசியம். ஆனால் பிரெஞ்சுக்காரர்களுக்கோ வலிமையான கப்பற்படை இல்லை. இருந்த படையையும், ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போரில் இழந்தது. எனவே இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்குத் தேவையான கடற்படை பலம் இல்லாமல் போய்விட்டது. எனவே கடற்படை வலிமை கொண்ட ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களை எளிதில் தோற்கடித்தார்கள்.

5) தரைப்படை வலிமையின்மை

தரைப்படையில் இருசாராரும் ஒரே வலிமையில் இருந்தாலும், பிரெஞ்சுப்படையின் வலிமை ஆங்கிலப்படையின் வலிமையைவிட ஒருபடி குறைவாகவே காட்சியளித்தது. அத்துடன் படைத்திட்டங்கள் சீரானதாக இல்லை. கர்நாடகத்தில் போர் நடந்துகொண்டிருக்கும்போது சிறந்த பிரெஞ்சுப் படைத்தலைவரான புஸ்ஸி ஐதராபாத்தில் இருக்க வேண்டியதாயிற்று. மேலும் அவருக்கும் லாலிக்கும் மனக்கசப்பு வேறு. மூன்று கர்நாடகப்போர்களிலும் பங்கு கொண்ட பிரெஞ்சுப் படைத் தலைவர்களிடம் ஒற்றுமை என்பதே கிடையாது.

எனவே பிரெஞ்சு ராணுவம் திறமையாகவும், வலிமையாகவும் போரிட முடியவில்லை.

6) கம்பெனி ஆட்சிமுறை அமைப்பில் காணப்பட்ட முறைகள்

பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கத்தின் ஒரு தனி இலாக்காவாகவே செயல்பட்டுவந்தது. மொத்தப் பங்குத்தொகையான 55 லட்சம் லிவர்களில் 35 லட்சம் அரசாங்கத்தினுடையது. எனவே தனியார் நிறுவனத்தில் காணப்படும் ஆற்றலும் ஊக்கமும் கம்பெனியிடத்தில் இல்லை. அரசரே கம்பெனியின் நிர்வாக அங்கத்தினர்களை நியமித்தார். அரசாங்கமே பங்குதாரர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் லாபப் பங்கீடு கொடுத்தது. 15 ஆம் லூயியின் அரசாங்கம் இந்திய அலுவலல்களை ஒழுங்காக கவனிக்கவில்லை. மேலும் குடியேற்ற முறையை எதிர்த்த அரசியல் கட்சியும், தலைவர்களும் தோன்றினர். முக்கியமாக வால்டர் மிகவும் குறைகூறினார். "பாரிசில் உள்ள ஒரு சிலருக்காக காப்பி, வாசனைப்பொருட்கள், மூக்குப்பொடி போன்றவற்றைப் பெறுவதற்காகப் போரிடுவதும் இரத்தம் சிந்துவதும் முட்டாள்தனமானது" என்ற கருத்து நிலவியது. எனவே தான் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி, அரசாங்கத்தின் முழுஆதரவைப் பெறமுடியவில்லை.

7) வங்காளத்தில் ஆங்கியேலர்களின் வெற்றி

பிளாசிப்போரே உண்மையில் இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களின் தலைவிதியை நிர்ணயித்தது என்று கூறலாம். கர்நாடகப் போர்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் பிளாசிப்போரில் வெற்றியடைந்தார்கள். இது நெருக்கடி காலத்தில் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர்கட்கு உதவி கிடைக்க ஏதுவாயிற்று. மீர்காசிமிடமிருந்து பெற்ற பணம் பாண்டிச்சேரி முற்றுகைக்குப் பயன்படுத்தப்பட்டது.

"வங்காளத்தைப் பெற்று கடலாதிக்கம் செலுத்தும் ஓர் அரசுடன் பாண்டிச்சேரியைத் தளமாகக்கொண்டு, இந்தியப் பேரரசை ஏற்படுத்துவற்கு மகாஅலெக்சாந்தர், மாவீரன் நெப்போலியன் ஆகியவர்களால் கூட இயலாது".

ஆங்கிலேயரின்வெற்றிக்கானகாரணங்கள்

1) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இங்கிலாந்து அரசின் அனுமதியைப்பெற்ற ஒரு தனியார்குழு. இக்கம்பெனியில் இருந்த அனைவரும் சுயநன்மையைக் கருதி உழைத்தனர். கம்பெனியின் வாணிப வளர்ச்சியும் பெருமையும் தங்களுக்கு அதிக லாபத்தைக்கொடுக்கும் என்று எண்ணி கம்பெனியின் நிர்வாகக்குழு

அங்கத்தினர்களும் இதர பணியாட்களும் தங்கள் வேலைகளில் தீவிரமாகவும் உண்மையாகவும் ஈடுபட்டனர்.

2) கம்பெனி நல்ல முறையில் இயங்கி நல்ல லாபம் அடைந்து அரசாங்கத்திற்கே கடன் கொடுக்கக்கூடிய திறமை பெற்றிருந்தது. எனவே போதிய நிதிவசதியிருந்ததால் போரைத்திறமையாக நடத்தமுடிந்தது.

3) கர்நாடகப்போர்களில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு அவர்களின் கடலாதிக்கம் முக்கியக்காரணமாகும் வழிநெடுகிலும் ஆங்கிலேயரின் கடற்படைகள் இருந்தன. எனவே தடையின்றி அவர்களின் படைகள் வரமுடிந்தது. மத்திய தரைக்கடலின் முக்கியத் துறைமுகங்கள் ஆங்கிலேயர்வசமிருந்தது

4) மேலும் இந்தியாவின் வாயில் எனப்படும் பம்பாய் ஆங்கிலேயரின் கடற்படைத்தளமாக இருந்தது. அங்கிருந்து வேண்டிய இடங்களுக்குப்படை அனுப்பவும், கப்பல்களை அங்கேயே பழுது பார்க்கவும் வசதி இருந்தது. உடனடி நடவடிக்கைகளுக்கு இது உதவியது. இது தவிர இந்தியாவின் முக்கோணங்களிலுள்ள சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய முக்கிய இடங்கள் ஆங்கிலேயர் வசமாயின. இதனால் ஆங்கிலேயர் ஓர் இடத்தில் தோல்வியடைந்தாலும் மற்ற இடங்களிலிருந்து போருக்கு ஆயத்தம் செய்யவும் உதவி அனுப்பவும் வாய்ப்பு இருந்தது.

5) ஆங்கிலக்கம்பெனியின் நிர்வாகக்குழுவினர் வியாபார விருத்திக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்தார்கள். தேவையான போதுமாத்திரம் சுதேச அரசர்களின் உதவியை நாடினார்கள். ஆங்கில அரசும் கம்பெனிக்கு இடையூறு செய்யவில்லை. நாட்டின் நலனுக்கான காரியங்களைச் செய்யும் தலைவர்கள் தோன்றி குடியேற்றங்களை அமைப்பதில் உற்சாகமூட்டினர். கிழக்கே சென்ற தம் நாட்டினருக்கு துன்பம் நேராமல் காப்பாற்ற வேண்டுமென உறுதியுடன் இருந்தனர்.

6) தந்திரமும், திறமையும் படைத்ததலைவர்கள் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றினர். சர்அயர்கூட், லாரன்ஸ், ஸாண்டர்ஸ், போகாக், பர்னட், பஸ்கோவென், ராபர்ட்கிளைவ் போன்றோர் திறமைசாலிகள். போர்தந்திரம் நிறைந்தவர்கள் பிரெஞ்சுப் படைகளின் தோல்விக்கு இவர்களின் திறமையே காரணம்.

7) ஐரோப்பாவில் ஆதிக்கம் இழந்த எந்த நாடும் கீழ்த்திசையில் உயர்நிலை பெறமுடியாது என்று கூறலாம். எனவே ஐரோப்பாவில் வலிமையாக விளங்கிய இங்கிலாந்து வலிமையற்ற மற்றநாடுகளின் மீது வெற்றிகண்டது.

8) எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய அரசர்களின் ஒற்றுமையின்மையும், போட்டியும் ஆங்கிலேயர் வெற்றியடைய முக்கியக்காரணமானது. இந்திய மக்களிடம் காணப்பட்ட அதிருப்தியும், தங்கள் ஆட்சியாளர்கள் மீது கொண்ட வெறுப்பும் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது.

**ஆற்காட்டுநவாபுகளின்ஆட்சியின்முக்கிய அம்சங்கள்**

**1) ஆட்சி முறை**

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தின் முக்கிய ஆட்சியாளர் களாக விளங்கியவர்கள் ஆற்காட்டு நவாபுகள் ஆவர். இவர்கள் தமிழகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் தங்கள் மேலாண்மையைச் செலுத்தினர். ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டிருந்த நவாபுகள் 1710-ம் ஆண்டு முதல் 1801-ம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். இக்காலத்தில் நவாபுகள் போர்களில் பெரிதும் ஈடுபட்டனர். ஆளப்பட்டவர்களின் நலன்களை அலட்சியம் செய்தனர். சீரான வருவாய் நிர்வாகத்தையோ அல்லது நீதி நிர்வாகத்தையோ செயல்முறைப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

முகலாயப் பேரரசரின் கட்டுப்பாட்டின் கீழ் ஐதராபாத்தில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு நிஜாம் என்று பெயர். இவருக்குக் கட்டுப்பட்டவராகவே ஆற்காட்டு நவாப் இருந்தார். பாலாற்றின் கரையில் அமைந்துள்ள ஆற்காடு நவாபின் தலைநகராகும். இவர் தனது ஆட்சிப் பரப்பை ஆற்காடு, திருச்சிராப்பள்ளி என்ற இரு சுபாக்களாகப் பிரித்திருந்தார். ஆற்காடு சுபா நெல்லூர், செங்கல்பட்டு, ஆற்காடு ஆகிய மாவட்டங்களையும், திருச்சி சுபா திருநெல்வேலி, திருச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி இருந்தது. ஒவ்வொரு சுபாவும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. மாவட்டங்கள் பர்கானாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

நவாபின் ஆட்சித் துறையில் கணுங்கோ, முஸ்தாபி, பேஷ்கார், காஜி, பௌஜ்தார், அமுல்தார் போன்ற அதிகாரிகள் இருந்தனர். இதில் அமுல்தார் வருவாய் நிர்வாகத்திற்கு தலைமை வகித்தார். இராணுவ நிறுவனத்தின் தலைமையை பௌஜ்தார் பெற்றிருந்தார். அமுல்தார் வருவாயை வசூலிக்கும் சிர்க்காருக்கும், வரிகொடுக்கும் மக்களுக்கும் இடையே மத்தியஸ்தர் ஆவார். வரி வசூலை செயல்முறைப்படுத்துவது மட்டுமின்றி சில வேளைகளில் படைகள் மீதான கட்டுப்பாட்டையும் பெற்றிருந்தார். இவர் தனது கச்சேரி அல்லது அலுவலகத்தை மாநில தலைமையகத்தில் கொண்டிருந்தார்.

நவாப் பரம்பரை உரிமைப்படியே அதிகாரத்தைப் பெற்றார். அவர் வரைமுறையற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார். நாட்டின் கொள்கையை வகுக்க கலந்தாலோசிக்கப்படுகிற ஆலோசனைக் குழு நவாபுக்கு உதவியது. நவாபின் அதிகாரிகளும் அதிக அதிகாரம் பெற்றிருந்தனர். மதுரை ஆளுநரான மாபுஸ்கான், சிவில் ராணுவ அதிகாரங்களைப் பெற்றிருந்தார். இத்தகைய வாய்ப்புகள் நாட்டில் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு வழிவகுத்தன. எவ்வாறாயினும் நிர்வாக அமைப்பின் அடித்தளத்தில் பிரதானிகளையும் குழுவையும் கொண்ட கிராம அமைப்புகள் நாட்டின் ஜனநாயக முறைகளைக் காத்து வந்தன.

**2) கிராம நிர்வாக முறை**

மக்கள் குடியிருப்புப் பகுதியைக் கொண்ட கிராமமானது, வார்டுகளையும், விவசாய நிலங்களையும், தரிசு நிலங்களையும், நீரோடை களையும், கோவில்களையும் கொண்டிருக்கும் விதத்தில் அமைக்கப் பட்டது. குடியிருப்புப் பகுதியில் கிராம மக்கள் வீடுகளைக் கட்டினர். இந்த கிராமமே ஆட்சித் துறையின் மிகச் சிறிய அலகாகும். ஒவ்வொரு கிராமமும் ஒரு நாட்டாண்மைக்காரரையும், கீழ்நிலை அதிகாரிகளையும், தலக்குழுவையும் கொண்டிருந்தது. நாட்டாண்மைக்காரர் பதவி பாரம்பரியப்படி அமைந்திருந்தது. அவர் கிராமத்திற்கும் அரசுக்கும் இடையே நடுவராகப் பணியாற்றினார். இந்த நாட்டாண்மைக்காரர் நவாப் ஆட்சிக் காலத்தில் பொட்டேல் என்று அழைக்கப்பட்டார்.

கிராம கணக்கரான கர்ணம் பொட்டேலுக்கு உதவியாக இருந்தார். இரு பிரிவைச் சேர்ந்த கர்ணம்கள் இருந்தனர். குடிகர்ணம் என்பவர்கள் கிராம அதிகாரிகளாகவும், சிர்க்கார் கர்ணம் என்பவர்கள் அரசு ஊழியர் களாகவும் இருந்தனர். ஒருவர் பெற்றிருக்கும் நிலம் பற்றிய விபரங்கள் அடங்கிய ரோஷம் அல்லது பதிவேட்டை கர்ணம் வைத்திருந்தார். வேளாண்மை, வருவாய், கிராமத்தவர் மேற்கொண்ட வணிக விவகாரங்கள் பற்றிய செய்திகளைக் கர்ணம் பதிவு செய்தார். அத்துடன் அரசு ஒழுங்கு முறைகள் பற்றிய விவரங்களை கிராமத்தவருக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார்.

காவல்காரர்கள் அல்லது தலையாரிகள் போலீஸ் பணிகளைச் செய்தனர். இரவில் காவல் புரிந்து மக்கள் வருவது போவது பற்றி எழுதி வைத்து பொட்டேலிடம் தெரிவித்தனர். கொள்ளையடித்தோரைப் பிடித்து பொட்டேலிடம் ஒப்படைத்தனர். ஆனால் இப்படிப்பட்ட இந்த காவல் முறையானது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அழிந்து போனது. வழக்குகளைத் தீர்க்க பொட்டேல் ஒரு பஞ்சாயத்தைக் கூட்டினார். இதில் கிராமத்தில் உள்ள பல்வேறு இனத்தவர்களும் இடம் பெற்றனர். இந்த

பஞ்சாயத்தார் முறையீடுகளைக் கேட்டு அதனை விரிவாக விசாரித்து தண்டனை வழங்கினர். தல வழக்குகளை நன்றாகத் தெரிந்து கொண்டு கிராமத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டபஞ்சாயத்தானதுசிறிய வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தக்கவகையில் தகுதி வாய்ந்ததாக இருந்தது. போலீஸ் நிதி நிறுவனங்களைத் தவிர மேலும் அநேக ஊழியர்களும் இருந்தனர். கிராம ஷ்ராப் (Shrofl) அனைத்து வசூலையும் வகைப்படுத்தினார். கிராம சோதிடர் நல்ல நாட்களைக் குறிப்பிட்டார். இதோடு புரோகிதர்களும், மருத்துவர்களும், நடன ஆசிரியர்களும், நாட்டிய சிறுமிகளும், தாரை வாசிப்போரும், நாவிதர்களும், தோட்டிகளும் இருந்தனர். தல ஊழியர்களுக்கு ஒரே சீரான ஊதியம் வழங்கும் முறை நடைமுறையில் இல்லை. நிலமாகவோ, பணமாகவோ அல்லது தானியமாகவோ ஊதியம் வழங்கப்பட்டது.

**3) வருவாய்நிர்வாகம்**

நவாப் ஆட்சியில் பொது வருவாய்க்கான மூலங்களாக விளங்கியவை நில வருவாய், கப்பம், பரிசுகள், சர்வாதீன உரிமைகள் ஆகியவையாகும். நில வருவாய் முக்கியமானதாகவும், நிரந்தர வருவாயாகவும் இருந்தது. தானியங்கள் மீதான வரி, குத்தகைப் பணம், புன்செய் நிலவரி, கரும்பு வரி, வெற்றிலை, வாழை போன்றவை பயிரிட வரி, காட்டு நிலங்களில் கால்நடைகளை மேயவிட வரி, வீட்டுவரி போன்றவை முக்கிய வரியாக அமைந்தது.

நவாப் ஆட்சி புரியும் பகுதியிலுள்ள மாவட்டங்களில் மறைமுகமாகவே அல்லது நேரடியாகவோ வசூலிக்கப்பட்டது. முதல் முறையில் குடிக்கூலியாளர் வரியை வசூலித்து ஒரு நிலையான தொகையைச் செலுத்தினார். இரண்டாவது முறையில் அமுல்தார் வரியை வசூலித்து அதனை கஜானாவில் செலுத்தினார். நெல் சாகுபடி செய்தவுடன் அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள், விஸ்தீரணம் ஆகியவற்றின் அடிப்படையில் வரி மதிப்பீடு பாரபட்சமில்லாமல் சரியாக அமைந்தது. மேலும் அரசின் தேவைகளின் அடிப்படையில் வரி மதிப்பீடு அமைந்திருந்தது. அறுவடை செய்த பின்னர் தானியங்களை விற்பதற்கு குடியானவர்கள் அனுமதிக்கப்பட்டனர். வரி விதிப்பில் சலுகை வேண்டும் என்று குத்தகைதாரர்கள் கோரிக்கை விடுத்தால் அது பரிசீலிக்கப்பட்டது.

நிலத்தின் மீதான வரி மதிப்பீட்டு முறையானது காலத்திற்குக் காலம் வேறுபட்டது. முகமதிய சட்டம் விளைச்சலில் பாதியை பங்காகப் பெற்றுக் கொள்ளவும், நம்பிக்கையற்ற பிற மதத் தலைவரிடமிருந்து அதற்கு மேலும் பெற்றுக் கொள்ளவும் மன்னர்களுக்கு உரிமை வழங்கியது. என்றாலும் பதினெட்டாம் நூற்றாண்டு கர்நாடக

நிர்வாகத்தில் சில வேளைகளில் தான் இம்முறையானது பயன் தரும் விதத்தில் பயன்படுத்தப்பட்டது. விளைச்சலில் சரிபாதியை பங்கிடுவதுதான் கொள்கையாக இருந்தது. அறுவடைக்காக ஐந்து சதவீதத்தைக் கழித்த பின்னர் இம்முறையானது பின்பற்றப்பட்டது.

வரிகள் எதேச்சதிகாரமான முறையில் வசூலிக்கப்பட்டதால் மக்கள் துன்பத்திற்குள்ளாயினர். வரிகளை வசூலிப்பதில் ஈடுபட்ட வருவாய் ஊழியர்கள் செல்வாக்கான மக்களுக்கு சலுகைகள் வழங்கி ஏழைகள் மீதான வரியைக் கூட்டினர். அரசு ஆணைகளைத் தவறாக நடைமுறைப்படுத்தினர். ஒவ்வொரு பொது அலுவலகத்திலும் மக்கள் மீது சவுக்குகளும், சாட்டைகளும், விரல் திருகுகளும் மற்றும் கடும் சோதனைகளும் பயன்படுத்தப்பட்டன. குடியானவர்களும், உழவர்களும், உற்பத்தியாளர்களும், கைவினைஞரும், பிற மக்களும் கொடிய முறையில் வரிகளை வசூலிக்கும் அதிகாரிகளின் தயவில் வாழ்ந்தனர்.

வரி விதிப்பதிலும், வரி வசூலிப்பதிலும் காணப்பட்ட முறை கேடுகள் ஊழல்கள் காரணமாக எதிர்ப்பு ஏற்பட்டது. மக்களின் எதிர்ப்பானது அமைதியானதாகவும், ஆத்திரம் மிகுந்ததாகவும் இருந்தது. எனவே பயிரிடுவதைப் புறக்கணித்து வரி கொடுப்பதில் ஏமாற்றுவதையும், மோசடி செய்வதையும் பின்பற்றினர். இதன் விளைவாக நாடு வருவாயில் பெரும் பகுதியை இழந்தது. சில நேரங்களில் மக்கள் தங்கள் எதிர்ப்பை மிகக் கொடுமைமிக்கதாக வெளிப்படுத்தினா.

4) **நீதி நிர்வாகம்**

ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் நீதிமன்றங்கள் இருந்தன. அதில் முகமதியர்களுக்கிடையிலான அனைத்து வழக்குகளையும் காஸி விசாரித்து தீர்ப்பு கூறினார். இந்துக்களுக்கிடையிலான வழக்குகளில் பிரதானிகளும், அமுல்தாரர்களும் நீதி வழங்கினர். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமுல்தாரின் உறவினர்களும் அவரைச் சார்ந்தவர்களுமே ஏராளமானவர்கள் இருந்ததால் அவர்களின் நலன்களே அவரிடம் வந்த வழக்குகளில் பலவற்றில் சம்பந்தப்பட்டிருந்தன. நவாப் நிலப் பகுதிகளில் பௌஜ்தாரும் அவரது உதவியாளர்களும் கிரிமினல் வழக்குகளைத் தீர்த்தனர், மாஜிஸ்டிரேட்டின் அதிகாரங்களையும், செசன்ஸ் நீதிபதியின் அதிகாரங்களையும், பெருங்குற்ற வழக்குகளையும் விசாரித்து குற்றவாளி களுக்குத் தண்டனை வழங்கினார். அவரது தீர்ப்பு பற்றி நவாபுக்கு முறையீடு செய்யலாம். அவரது தீர்ப்பு நவாபின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

தங்களது வழக்குகளை நீதிமன்ற அதிகாரிகளிடம் விளக்குவதற்காக துபாஷ் என்றழைக்கப்பட்ட விளக்குநர்களை நியமிக்கும் உரிமையை வழக்கில் ஈடுபட்டிருந்தவர்கள் பெற்றிருந்தனர். கிரிமினல் குற்றங்களைப் பொதுவாக அபராதங்கள் வழியாக ஈடு செய்தனர். ஆனால் சொத்து சம்பந்தமான வழக்குகள் தீர்ப்புகளால் முறையாக தீர்க்கப்பட்டது. சிறைத் தண்டனை பொதுவானது. சில வேளைகளில் மரண தண்டனை வழங்கப் பட்டது.

நவாப் ஆட்சிக் காலத்தில் நீதி நிர்வாகத்தில் ஊழல் காணப்பட்டது. அதிகாரத் துஷ்பிரயோகங்களும் இருந்தன. இதனால் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கொள்கையானது புறக்கணிக்கப்பட்டது. எதேச்சதிகாரக் கொடுமையிலிருந்து ஏழைகளுக்கு பாதுகாப்பு மறுக்கப் பட்டது. மக்கள் உரிமைகளுக்கு எத்தகைய மதிப்பும் இல்லாத வேளையில் நீதி நிர்வாக முறையானது வருவாயோடு பிணைக்கப்பட்டிருந்தது. சட்டத்தில் திறமை பெற்றிறாதவர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். அமைச்சர்கள் நீதிமன்றத் தீர்ப்புகளில் தங்கள் செல்வாக்கைச் செலுத்தினர். 1784-ல் இஸ்லாமிய சட்ட முறைப்படி ஒரு நீதிபதி சரியாக நீதி வழங்கிய போது அவர் நவாபின் அதிருப்தியைச் சம்பாதித்ததுடன் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். நீதித்துறையில் காணப்பட்ட இத்தகைய ஊழல்களால் மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

**5) சமுதாயநிலை**

நவாபுகளின் ஆட்சிக் காலத்திலும் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் தொடர்ந்து காணப்பட்டது. அத்துடன் பல புதிய சாதிகளும் தோன்றின. தமிழகத்தில் நவாபுகளின் காலத்தில் பல முஸ்லீம்கள் வந்து நிரந்தரமாகக் குடியேறியதால் அவர்களது பழக்கவழக்கங்கள் தமிழ் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின. இங்குள்ள மொழிகள் கலந்த உருது மொழியைப் பேசினர். அரசுப் பதவிகள் பலவும் உருது பெயர் பெற்றன. நகர்ப்புறங்களிலும், கடலோரப் பகுதிகளிலும் அந்நிய நாட்டவரின் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இவர்களது வாழ்க்கை முறை மேம்பட்டும், கிராம மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டும் காணப்பட்டது.

சமுதாயத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இயேசு சபையினரின் மதப் பிரச்சாரத்தால் மேலும் மேலும் மக்கள் கிறிஸ்தவர்களாயினர். கிறிஸ்தவர்களின் பழக்க வழக்கங்களும் மற்ற மக்களிடமிருந்து சிறிது மாறுபட ஆரம்பித்தன. சமுதாயத்தில் குறிப்பிட்ட மொழி பேசுவோர் ஒவ்வொரு இடத்திலும்

மொத்தமாக வாழ்ந்தனர். சில இடங்களில் மாற்று மொழி பேசுவோர் கலந்தும் வாழ்ந்தனர்.

நவாப் ஆட்சிக் காலத்தில் சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் தொடர்ந்து மேலோங்கிய நிலையிலேயே இருந்தது. சமுதாயத்தில் பல நம்பிக்கைகளும் நடைமுறைகளும் தோன்றின. மக்களிடம் மத சகிப்புத் தன்மை காணப்பட்டது. கலப்புத் திருமணங்கள் தடை செய்யப் பட்டிருந்தன. பல ஐரோப்பியக் கம்பெனிகள் வேலைக்காக ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து சேர்த்தனர். பொதுவாக ஐரோப்பியர்களின் பழக்க வழக்கங்களும், முஸ்லீம்களின் சமுதாயப் பழக்கங்களும் தமிழக சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின.

**6) பொருளாதாரநிலை**

நவாபுகளின் காலத்தில் தமிழகத்தில் வேளாண்மையே சாதாரண மக்களின் முக்கியமான தொழிலாக இருந்தது. பாளையக்காரர்கள் மொத்தமாக நிலங்களின் மீது உரிமை அளிக்கப்பட்டனர். சில கிராமங்களில் மக்கள் விவசாய நிலங்களை தங்களுக்குள் பங்கீடு செய்து கொண்டனர். அத்தகைய கிராமங்களில் வரியைச் செலுத்தும் பொறுப்பை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். பருவம் ஆரம்பித்த போது விவசாயிகள் ஒன்றுகூடி குளத்திலுள்ள தண்ணீர் அளவை நிர்ணயித்து ஒருவர் பெற்றிருக்கும் நிலத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொண்டனர்.

பொதுவாக கிராமம் காடுகளால் சூழப்பட்டிருந்தது. அவை எதிரிகளுக்கு அரண்களாகவும், விறகுகள் கொடுப்பனவாகவும், மேய்ச்சல் நிலங்களாகவும் பயன்பட்டன. கோவில்கள் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்தன. அது காலையிலும் மாலையிலும் வழிபடும் இடமாகவும், அனைத்து ஆபத்துகளிலிருந்து காக்கவும், உணவளிக்கும் இடமாகவும் விளங்கியது. நவாபுகள் காலத்தில் அமுல்தார்கள் எனப்பட்ட வருவாய் அதிகாரிகள் வரிவசூல் செய்தனர். இவர்கள் விவசாயிகளை ஏமாற்றி துன்புறுத்தினர். இதனால் விவசாயிகள் பெரிதும் அல்லல்பட்டனர். வருவாய் ஆட்சித்துறை ஊழல் நிறைந்ததாகவும், மக்கள் நலனுக்கு எதிராகவும் இருந்தது.

நவாபுகள் காலத்தில் பாரம்பரியமாகச் செயல்பட்டு வந்த தொழில்கள் நடைபெற்று வந்தன. அந்நிய வாணிபத்தில் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக் காரர்கள் மேலாதிக்கம் செலுத்தினர். இவர்களது வருகை காரணமாக பல உள் நாட்டுத் தொழில்கள் நசிய ஆரம்பித்தன. ஐரோப்பிய வாணிபர்களின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்தக் காலத்தில் சென்னை நகர் வளரத் தொடங்கியது.

நவாப் ஆட்சிக் காலத்தில் பஞ்சமும் கொள்ளை நோயும் நாட்டைத் தாக்கின. 1732, 1762-68, 1784-85, 1788-99 ஆகிய ஆண்டுகளில் பெரும் பஞ்சம் நாட்டைத் தாக்கியது. பருவமழை தவறியதாலும், போர்களினாலும் பஞ்சங்கள் தோன்றின. குழந்தைகள், முதியோர்கள், இளைஞர்கள் செத்து மடிந்தனர். பசியின் கோரத்தினால் மக்கள் எலும்பும், தோலுமாகக் காட்சியளித்தனர். குடும்பம் குடும்பமாக மக்கள் தெருக்களில் செத்து மடிந்தனர். இதேபோல கொள்ளை நோயும் பேரழிவை ஏற்படுத்தியது. நவாபின் அரசாங்கம் இவைகளைப் பற்றிக் கவலைப் படவும் இல்லை. மக்களுக்கு உதவி செய்ய முன்வரவும் இல்லை. இவ்வாறு ஏற்பட்ட பஞ்சங்களும், கொள்ளை நோயும் பொருளாதார நிலையை வெகுவாகப் பாதித்தன.

**UNIT– V**

**கான்சாகிப்(KHAN SAHIP)**

பின்பு ஆற்காட்டு நவாப் அன்வாருதீன் மதுரை நாட்டின் மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட ஒரு பெரும் படையை தனது மூத்த மகன் மாபுஸ்கான் தலைமையில் அனுப்பி வைத்தார் மதுரை கைப்பற்றப்பட்ட அங்கு கவர்னராக மாபுஸ்கான் நியமிக்கப்பட்டார். இந்த மாபுஸ்கான் ஆட்சிக் காலத்தில் அவருக்கு எதிராக சூழ்ச்சிகளும், கலகங்களும் ஏற்பட்டன. திருநெல்வேலி பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். பாளையக்காரர்களை அடக்குவது கடினம் என்பதை உணர்ந்த நவாப் கம்பெனியின் உதவியை நாடினார். சென்னை ஆளுநர் பிகாட் கான் சாகிப் என்ற யூசுப்கான் தலைமையில் ஒரு அனுப்பினார். கான்சாகிப் பாளையக்காரர்களின் கிளர்ச்சியை அடக்கி தமிழகத்தின் தென்பகுதியில் கம்பெனியின் ஆதிக்கம் வளர்வதற்குக் காரணமானார். இறுதியில் கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வீழ்ச்சி அடைந்தார்.

**கான்சாகிபின்எழுச்சி**

கான்சாகிபின் இயற்பெயர் மருதநாயகம்பிள்ளை ஆகும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பனையூர் என்ற ஊரில் வாழ்ந்து வந்த மருதமுத்து பிள்ளையின் மகன் தான் இந்த மருதநாயகம். இளமையிலேயே முரட்டுத்தனமும் மூர்க்க குணமும் படைத்தவர். பிழைப்பதற்காக சென்னை சென்றார். பரட்டன் என்ற ஆங்கிலக் குடும்பத்தில் பணி செய்யத் தொடங்கினார். ஆங்கிலத்தை சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டார். அதன்பின் ஆங்கிலப் படையில் போர் வீரராகச் சேர்ந்தார். இவர் கிளைவின் திருச்சிராப்பள்ளி முற்றுகையின் போது தனது திறமையை வெளிப்படுத்தி ஆங்கில அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தார். திருநெல்வேலியின் பாளையக்காரர்களின் கிளர்ச்சியை அடக்க மாபுஸ்கானுக்கு உதவியாக அனுப்பப்பட்டார்.

கான்சாகிப் நெல்லையின் பெருஞ் செல்வந்தரான தாதரப்ப முதலியின் உதவியுடன் கப்பம் கட்ட மறுத்தோரை வென்று கப்பம் பெற்றார். இவ்வாறு கம்பெனியின் செல்வாக்கை தென் தமிழகத்தில் நிலை நாட்டினர். எனவே 1759 மே மாதம் நவாபின் அனுமதியுடன் சென்னை கவுன்சில் மதுரை ஆளுநராக கான்சாகிபை நியமித்தது. முதலில் ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். பின்னர் இந்தப் பதவிக் காலம் மூன்றாண்டுகள் என்று நீட்டிக்கப்பட்டது. இதனால் கான்சாகிப் கம்பெனிக்கு நம்பிக்கை உடையவராக இருந்தார்.

**கான்சாகிப்பாளையக்காரர்களின்கிளர்ச்சியைஅடக்குதல்**

கான்சாகிப் பதவிக்கு வந்தவுடன் தன் நாட்டில் அமைதியை நிலைநாட்டத் திட்டமிட்டார். அப்போது ஆட்சி செய்தவர் நவாபாகவும், வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தது கம்பெனியாகவும் இருந்ததால், இச்சூழ்நிலையைப் பயன்டுத்தி பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். கட்டபொம்முவின் தலைமையில் கிழக்கு - பாளையக்காரர் களும், பூலித்தேவன் தலைமையில் மேற்குப் பாளையக்காரர்களும் கூட்டு அமைத்துக் கொண்டனர். மேற்கு பாளையக்காரர்களுக்கு ஹைதர் அலியும் பிரெஞ்சுக்காரர்களும் உதவி செய்தனர்.

இந்தப் பாளையக்காரர்களுக்கு எதிராக கான்சாகிப் போரைத் தொடங்கினார். 1760-ல் கட்டபொம்மு ஒட்டப்பிடாரத்தைக் கைப்பற்றினார். ஆலந்தியர் ஆழ்வார் திருநகரியையும், மணப் படையையும் தாக்கினர். மேலும் ஆலந்தியர் இலங்கையிலிருந்து தங்கள் கடற்படைப் பிரிவு ஒன்றை தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் கான்சாகிப் இராமநாதபுரம், சிவகங்கை ஆட்சியாளர்களின் உதவியுடன் ஆலந்தியரை விரட்டியடித்து கிழக்குப் பாளையக்கரர்களின் கலகத்தை

ஒடுக்கினர். 1760-ல் அக்டோபரில் எல்லைப் பகுதியிலிருந்த ஹைதர் அலியின் படைகள் கொள்ளையடித்ததால் அவைகளைத் துரத்தியடித்தார்.

1760 டிசம்பரில் மேற்கு பாளையக்காரர்களுக்கு எதிராகப் படையை அனுப்பினார் கான்சாகிப். பூலித்தேவரின் நெல்கட்டும் செவல் கோட்டை முற்றுகையிடப்பட்டது. 1761 மே மாதம் பூலித்தேவர் சரணடைந்தார். மேற்குப் பகுதியிலுள்ள அவரது பல அரண்கள் கைப்பற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து சிவகிரி, வாசுதேவநல்லூர் பாளையக்காரர்கள் சரணடைந்தனர். இவ்வாறு திருநெல்வேலி பாளையக்காரர்களின் கிளர்ச்சியை ஒடுக்கினார் கான்சாகிப். இதன் மூலம் கம்பெனியின் செல்வாக்கு பெருகியது. கம்பெனியிடமிருந்து கான்சாகிப் பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டார். நவாப் கான் சாகிப்புக்கு பொன்னும், பொருளும், வாளும் பரிசாக அனுப்பினார்.

**கான்சாகிபின்சீர்திருத்தங்கள்**

அடங்காத பாளையக்காரர்களை ஒடுக்கிய பின்பு உள்நாட்டுச் சீர்திருத்தத்தில் தனது கவனத்தைச் செலுத்தினார் கான்சாகிப். போர்களால் சிதைவுற்ற பொருளாதாரத்தை சீரமைக்க முற்பட்டார். குழப்பமான சூழ்நிலையில் கிராமங்களை விட்டு ஓடிய குடிமக்களை மீண்டும் வந்து குடியேறச் செய்தார். விவசாயத்திற்கு முன் பணம் அளித்தார். வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டது. சாக்கடைகள் கற்களால் கட்டப்பட்டன. நீர்ப்பாசன வசதி மேம்படுத்தப்பட்டது. கான்சாகிபின் இந்த நடவடிக்கைகள் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவியது. வணிகர்கள் வாணிகமும் உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டன. இளைப்பார தங்கும் விடுதிகள் கட்டினார். சாலைப் போக்குவரத்தை மேம்படுத்தி பயணப் பாதுகாப்பு தந்தார்.

நெசவாளர்களுக்கு கடன்கள் வழங்கி உதவினார். கோவில்களுக்கு மானியங்கள் வழங்கியும் வழிபாட்டு சடங்கு முறைகளைப் புதுப்பித்தும் அவர் இந்துக்களுடன் சமாதானம் செய்து கொண்டார். வெடிமருந்து மற்றும் போருக்கான பொருட்களைத் தயாரிப்பதில் அவர் மக்களுக்குப் பயிற்சி அளித்தார். கான்சாகிப் நீதிக்குத் தலை வணங்கினார். ஒரு தலைப் பட்சமான நீதி அவரிடம் இல்லை. தவறு செய்தவர்கள் தண்டிக்கப் பட்டனர். வரிகளை ஒழுங்காக வசூலித்து ஆங்கிலக் கருவூலத்தில் கட்ட வேண்டிய பணத்தை ஒழுங்காகக் கட்டினார்.

கான்சாகிபின் சீர்திருத்தங்கள் அனைத்தும் நடைமுறையில் காணப்பட்ட தீமைகளைச் சரிபடுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. தொழிலாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் ஊக்கம் அளித்தார். நாட்டின் பற்றாக்குறை நிர்வாகம்

சீரமைக்கப்பட்டு உபரி வருவாயாக்கப்பட்டது. இவ்வாறு கான்சாகிபின் நிர்வாகம் திறமை மிக்கதாகவும் நலம் பயப்பதாகவும் விளங்கியது. மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

**கான்சாகிபின்கிளர்ச்சிக்கானசூழ்நிலை**

கான்சாகிபின் சீர்திருத்தங்களால் நாட்டில் அமைதி ஏற்பட்டது. ஆனால் இந்த அமைதி குறுகிய காலமே நீடித்தது. திருவிதாங்கூர், சிவகிரி, பாஞ்சாலங்குறிச்சி மன்னர்கள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தினர். இந்த கூட்டுப் படைகள் திருநெல்வேலி மீது படையெடுத்தன. உடனே கான்சாகிப் மறவர் படையின் ஆதரவுடன் ஆக்கிரப்புப் படைகளை வடகரையில் தாக்கினார். ஆக்கிரமிப்புப் படைகள் பின்வாங்கின. இதன் பின்னர் கான்சாகிப் தனது படை வலிமையைப் பெருக்கிக் கொண்டார். கான்சாகிபின் செயல்களில் சந்தேகம் கொண்ட ஆங்கிலேயர் அவரை சென்னைக்கு வருமாறு கேட்டுக் கொண்டது. ஆனால் கான்சாகிப் எதிரிகளை விரட்டியடித்து விட்டுக் கம்பெனி ஆணையை ஏற்பதாகக் கூறினார்.

கான்சாகிப் தனது படைகளுடன் ஆரல்வாய்மொழி வழியாக திருவிதாங்கூர் சென்றார். திருவிதாங்கூர் மன்னர் தர்மராஜாவுக்கு பாஞ்சா சாலங்குறிச்சி, வடகரை மற்றும் சிவகிரியைச் சேர்ந்த பாளையக்காரர்கள் உதவி செய்தனர். ஆனால் கான்சாகிபின் படைகள் ஆரல்வாய் மொழியைக் கைப்பற்றி நெய்யாற்றின் கரை வரை சென்றது. திருவிதாங்கூர் பகுதிகள் பல சூறையாடப்பட்டன. பல கிராமங்கள் தீக்கிரையாகின. திருவிதாங்கூர் முழுவதையும் கைப்பற்ற நினைத்தார். எனவே திருவிதாங்கூர் ராஜா 1763 பிப்ரவரி 21-ல் கான்சாகிபுடன் சமாதானம் செய்து கொண்டார்.

இந்த சமாதான உடன்படிக்கைப்படி கான்சாகிபிற்கு களக்காடு கிடைத்தது. வெளிநாட்டவர் படையெடுப்பிலிருந்து ஒருவருக்கொருவர் உதவி செய்ய ஒப்புக் கொண்டனர். இந்த உடன்படிக்கைக்குப் பிறகு மதுரைக் கோட்டையையும் எல்லைப் புறங்களையும் காக்கும் முயற்சியில் ஈடுபட்டார் கான்சாகிப். திருவிதாங்கூர் மோதல் தொடர்பாக நவாபிடமோ கம்பெனியிடமோ அனுமதி பெறாததால் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. இதுவே கம்பெனிக்கெதிராககான்சாகிபின் கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.

**கான்சாகிபின்கிளர்ச்சி**

கம்பெனியோ அல்லது நவாபோ கான்சாகிப் மீது கட்டுப்பாடு வைத்துக் கொள்ளவில்லை. அவரது படை வலிமையைத் தடை செய்ய வேண்டும் என்றோ அல்லது அவர் பிற ஆதிக்கங்களுடன் மேற்கொண்ட தொடர்பை கட்டுப்படுத்த வேண்டுமென்றோ முற்படவில்லை. எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல்

கான்சாகிப் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டார். மக்களின் நல் ஆதரவையும் பெற்றார்.

கான்சாகிபின் வளர்ச்சியை நவாபினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே கான்சாகிபுக்கும் கம்பெனிக்கும் இடையே வெறுப்பை ஏற்படுத்த தொடர்ந்து முயன்றார். பிகாட் பிரபுவுக்கு அவர் எழுதிய கடிதத்தில் கான்சாகிப் நத்தத்தில் கோட்டைகள் கட்டுவதாகவும், மறவர்கள், தஞ்சாவூர் டேனியர்கள் மற்றும் டச்சுக்காரர்களின் ஆதரவுடன் கிளர்ச்சி செய்ய ஆயத்தமாக இருப்பதாகவும் குற்றம் சாட்டினார். எனவே சென்னை கவர்னர் பிகாட் கான்சாகிபை நவாபின் நிர்வாகத்தின் கீழ் வைக்க முடிவு செய்தார். இதுவரை கம்பெனியிடம் நேரடியாக குடிக்கூலி செலுத்தி வந்த கான்சாகிப் இனிமேல் குடிக்கூலியை நவாபிடம் செலுத்துமாறு கட்டளையிட்டார் பிகாட் தற்பெருமையும், தன்மான உணர்வும் மிக்க கான்சாகிப் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆங்கிலேயர்களுக்கெதிராக கான்சாகிப் கிளர்ச்சி செய்ய முக்கியக் காரணம் ஆகும்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக கான்சாகிபை சென்னை திரும்ப கட்டளையிட்டது கம்பெனி நிர்வாகம், ஆனால் திருவிதாங்கூர் படைகளை விரட்டியடித்துவிட்டு வருவதாகத் தெரிவித்தார் கான்சாகிப். ஆனால் திருவிதாங்கூர் போருக்கு கம்பெனியிடமிருந்தோ நவாபிடமிருந்தோ அனுமதி பெறாததை பிகாட் கண்டித்தார். கான்சாகிப் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்தார் பிகாட் இதனை எதிர்பார்த்த கான்சாகிபும் ஆங்கிலேயரின் ராணுவ நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தத் தேவையான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தார். திருவிதாங்கூர் மன்னர் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

**கம்பெனிக்கெதிரானகான்சாகிபின்போர் நடவடிக்கைகள்**

கி.பி 1763-ல் கம்பெனிக்கெதிராக தனது வலிமையைப் பெருக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார் கான்சாகிப். மதுரைக் கோட்டையைச் செப்பனிட்டார். வடக்கு எல்லைப் பகுதியை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்த நாட்டின் உண்மையான உரிமையாளர்கள் இந்துக்களே என்று பிரகடனப்படுத்தினார். பதவியிலிருந்து நீக்கப்பட்ட மதுரை நாயக்கர் வசம் நாட்டை ஒப்படைத்து விட்டு அவரது அமைச்சராகப் பணியாற்ற விரும்புவதாக அறிவித்தார். தனது நிலையை மேலும் வலிமைப்படுத்திக் கொள்ள இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்களை தன் பக்கம் சேர்த்துக் கொண்டார். ஹைதர் அலி, நிஜாம், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற முயற்சி செய்தார்.

ஆனால் காலத்தின் விளையாட்டால் நிலைமை மாறியது. 1763 ல் ஆங்கிலேய பிரெஞ்சுப் போர் முடிவடைந்ததால் பிரெஞ்சுக்காரர்கள் தங்களது அதிகாரப்பூர்வ ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டனர். இதற்கிடையே மைசூரின் நிலைமை குழப்பமுற்றிருந்ததால் கான்சாகிப் உதவிக்கு ஹைதர் அலி பெரும் படையை அனுப்ப முடியவில்லை. விரைவிலேயே சிவகங்கை, மறவர் அரசுகளின் ஆதரவையும் இழந்தார் . இதற்குக் காரணம் அறிவீனமாக சிவகங்கையை கான்சாகிப் சூறையிட்டதேயாகும் எனவே இறுதியில் ஆங்கிலேயர், நவாப் கூட்டும் படைகளுக்கு எதிராக கான்சாகிப் தன்னந்தனியே போராட வேண்டி நிலை ஏற்பட்டது.

**கான்சாகிப்கிளர்ச்சியின்தோல்வி**

கான்சாகிபின் கிளர்ச்சியை அடக்க கம்பெனியும் நவாபும் ஒரு பெரிய படையை தயார்படுத்தினர். 1763 ஆகஸ்ட் மாதம் கர்னல் பின்சனின் தலைமையிலான பிரிட்டிஷ் படை மதுரைக்குள் நுழைந்தது. நவாபின் படை நத்தத்தை அடைந்தது. அது கான்சாகிப்புக்கும் மைசூருக்கும் இடையே இருந்த உறவைத் துண்டித்தது. மதுரை தொடர்ந்து முற்றுகை யிடப்பட்டது. இதற்கிடையே பிரஸ்டன் தலைமையிலான கம்பெனிப் படை ஒன்று-1764 ஏப்ரலில் நெல்லைக்குள் புகுந்தது. பல ராணுவ நிலைகள் அழிக்கப்பட்டன. கிளர்ச்சியாளர் களின் படை ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையை விட்டு வெளியேறியது. இந்த கோட்டையின் வீழ்ச்சியானது மேற்கு பாளையக்காரர்களை பீதிக்குள்ளாக்கியது. எனவே அவர்கள் கான்சாகிபின் நலன்களைப் புறக்கணித்துவிட்டு, நவாபின் பக்கம் சேர்ந்து கொண்டனர்.

1764 ஜூன் மாதம் பம்பாயிலிருந்து வந்த படையுடனும் தன் படையுடனும் மதுரை வந்தார் நவாப். பாளையக்காரர்களால் கைவிடப்பட்ட கான்சாகிப் ஆங்கிலேயரிடம் சமாதானமாக இருக்க முன் வந்தார். தன்னை மதுரை ஆளுநராக இருக்க அனுமதி அளிக்குமாறும், அதற்காக ஆண்டுக் குடிக்கூலி ஏழு லட்சம் ரூபாய் தருவதாகக் கூறினார். ஆனால் தளபதி பிரஸ்டன் நிபந்தனையின்றி கான்சாகிப் சரணடையும்படி கூறினார். எனவே போர் தொடர்ந்தது: 1764-ஜூன் மாதம் மதுரை முற்றுகையை தீவிரமாக்க உத்தரவிட்டார் டொனால்ட் காம்ப்பெல். மதுரை முற்றுகை தொடரவே கிளர்ச்சியாளர்கள் உணவு கிடைக்காமல் அவதிப்பட்டனர்.

இச்சூழ்நிலையில் கான்சாகிபிடம் பணியாற்றிய மார்ச்சந்த் என்ற பிரெஞ்சு அதிகாரி திண்டுக்கல்லுக்கு தாங்கள் பாதுகாப்பாகச் செல்ல அனுமதியளித்தால் மதுரையை விட்டு வெளியேறுவதாகக் கூறினார். இதனை நவாபும், கம்பெனியும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன. 1764 அக்டோபர் 13-ல் கான்சாகிப் கைது செய்யப்பட்டார். 14-ம்

தேதி மதுரை கோட்டையில் முகமது அலி தனது கொடியைப் பறக்கவிட்டார். கான்சாகிபின் குடும்பத்தினரும் கைது செய்யப் பட்டனர். 1764 அக்டோபர் 15-ல் மதுரை சம்மட்டிபுரத்தில் நவாப் கான்சாகிபின் தலையைத் துண்டித்து தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார். கான்சாகிபின் ஆதரவாளர்கள் மீது கம்பெனி தளபதி காம்ப்பெல் முழுமையான வெற்றி பெற்றார்.

இவ்வாறு ஆங்கிலேயரின் உண்மையான விசுவாசமான ஊழியரான கான்சாகிப் தனது திறமையின் மூலம் பதவி உயர்வு பெற்றார். பிற குறுகிய காலத்தில் மக்கள் ஆதரவுடன் மதுரை கவர்னரானார். வரி வசூலிப்பதிலும், படைகளுக்கு ஆள் எடுப்பதிலும், ஆதிக்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதிலும் சுதந்திரமாகவே செயல்பட்டார். ஆனால் இவர் செய்த சில தவறான அவசரமான நடவடிக்கைகளால் ஆங்கிலேயர்களின் கோபத்திற்குள்ளானார். ஆங்கிலேயருக்கெதிராக தனது கிளர்ச்சிக்கு ஆதரவைப் பெறுவதிலும் பல தவறுகளைச் செய்தார். எனவே இறுதியில் நவாப் மற்றும் கம்பெனியின் வலிமையான உடன்பாட்டினால் தோல்வியடைந்தார் கான்சாகிப்.

**பூலித்தேவன்**

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே முதன் முதலாக வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் புரட்சிக் குரல் எழுப்பிய மறவர் குல மாணிக்கம் பூலித்தேவன் ஆவார். வீரபாண்டிய கட்டபொம்மன் விடுதலைப் போரைத் தொடங்குவதற்கு நாற்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தென்பாண்டிச் சீமையில் விடுதலைப் போருக்கு வித்திட்ட மூத்த குடி மறவன் பூலித்தேவன் ஆவார். வெள்ளை ஆட்சியை வேரறுக்க போர்ப்படை உயர்த்திய முதல் தளபதி. போராடும் ஆற்றலுடன் அரசியல் நுட்பங்களை அலசி ஆராயும் இணையற்ற அறிவு படைத்தவர். தாழ்த்தப் பட்டோரையும் தீண்டத்தகாதவர்களையும் அரவணைத்துக் கொண்டார். ஈரமும் வீரமும் நிறைந்தவர். ஆன்மீகத்தில் ஆழ்ந்தவர். அறக்கொடைகள் பலவற்றை அள்ளிக் கொடுத்தவர். மானத்தைக் காக்க உயிரையும் பொருட்படுத்தாமல் போரிட்ட வீரமகன், நெற்கட்டான் செவல் பாளையக்காரர் பூலித்தேவன் ஆவார்.

**இளமைக்காலம்**

நெற்கட்டான் செவல் என்ற ஊர் சங்கரன்கோவிலுக்கு வடமேற்கே பத்து கி.மீ தொலைவிலும், வாசுதேவநல்லூருக்கு கிழக்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள அழகான ஊராகும். நெற்கட்டான் செவல் தோன்றுவதற்கு முன்பு இந்த ஊர் ஆவுடையாபுரம் என்று அழைக்கப்பட்டது. நெற்கட்டான் செவல் என்ற பாளையத்தின் தலைவராக விளங்கியவர் சித்திரபுத்திரத்தேவர் பூலித்தேவன் ஆவார். இவர் நாயக்கர்

காலத்தில் பாளையத் தலைவராகப் பொறுப்பேற்றார். மக்களின் செல்வாக்கைப் பெற்று சிறப்பாக ஆட்சி நடத்தினார்.

செந்தமிழ் வித்தகர் சித்திரபுத்திரத் தேவருக்கும் சிவஞான நாச்சியாருக்கும் 1715 செப்டம்பர் 1-ம் தேதி காத்தப்பராச பூலித்தேவன் பிறந்தார். காத்தப்பராசன் பிறந்த போது பெற்றோர் ஏழைகளுக்கு அன்னதானம் செய்து மகிழ்ந்தனர். ஆலயங்களில் ஆராதனைகள் செய்யப் பட்டன. ஆறு வயது ஆன போது காத்தப்பராசன் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் பாடம் பயின்றார். பின்னர் இலஞ்சியிலுள்ள சுப்ரமணிய பிள்ளை என்ற தமிழ் ஆசிரியரிடம் கல்வி பயின்றார். இதனால் கன்னித் தமிழ் கவிதை பாடும் ஆற்றலையும் பெற்று விளங்கினார் காத்தப்பராச பூலித்தேவன்.

மாவீரன் பூலித்தேவன் பார்வைக்கு உயர்ந்தும், வலிமைமிக்க புஜங்களையும், கைகளையும் கொண்டு ஆறடிக்கு மேற்பட்ட உயரம் உடையவராக இருந்தார். வைரச்சிலை போன்ற உடற்கட்டுடையவராக இருந்தார். காளப் பருவத்தை அடைந்த பூலித்தேவன் தனது மாமன் மகள் கயற்கண்ணி என்பவளை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு கோமதிமுத்து என்ற மகளும், சித்திரபுத்திரத்தேவன், சிவஞான பாண்டியன் என்ற ஆண் மக்களும் பிறந்தனர். பூலித்தேவனின் வீரத்தையும், விவேகத்தையும், தீரத்தையும் கண்ட பெற்றோர்கள் 1726-ல் அவருக்கு பட்டம் சூட்டி மன்னராக்கி மகிழ்ந்தனர்.

**சிவகிரி பாளையக்காரனுடன்போர்**

நாட்டுக் காவல் பொறுப்பை ஏற்றதுமே பூலித்தேவனுடைய வீரத்துக்கு ஒரு சவால் பிறந்தது. பொதுவாக மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியிலிருந்த பாளையங்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைக்க பூலித்தேவனையே அழைப்பார்கள். நேர்மையின் அடிப்படையில் பூலித்தேவன் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார். ஒரு முறை இலவந்தூர், ஈராட்சி பாளையங்களுக்கிடையேஏற்பட்ட எல்லைத் தகராறை தீர்க்க பூலித்தேவன் சென்றார்.

இதனைக் கேள்விப்பட்ட சிவகிரி பாளையத்தான் நெற்கட்டும் செவலுக்கு வந்து கால்நடைகளைக் கவர்ந்து சென்றார். இதனைக் கேள்விப்பட்ட பூலித்தேவன் சீறி எழுந்தார். தனது வீரர்களுடன் சிவகிரிக்கு விரைந்து வந்தார். சிவகிரிப் படைகளை சீவி எறிந்தார். பூலித்தேவனின் வீராவேசத்தைக் கண்ட சிவகிரிப் படைகள் சிதறி ஓடின. சிவகிரிப் போரில் வேங்கை பூலித்தேவனுக்கு வெற்றி மங்கை மாலையிட்டாள்.

**புலியைக்கொன்றபூலி**

மாவீரன் பூலித்தேவனின் வீரத்தை விளக்கும் நிகழ்ச்சி ஒன்று செவிவழிச் செய்தியாகச் சொல்லப்படுகிறது. மதுரையில் உள்ள சொக்கர் மீனாட்சியம்மன் கோவிலுக்கு வடக்கே பெருங்காட்டில் பதினாறு அடி வேங்கை ஒன்று பதுங்கி இருந்தது. இந்தக் காட்டின் வழியே செல்லுகின்ற வழிப்போக்கர்கள் அந்தப் புலிக்கு இறையானார்கள். எனவே திருக்கோவிலுக்கு வரும் அடியார்கள் அச்சம் கொண்டனர்.

அப்போது ஆட்சியிலிருந்த சொக்கநாத நாயக்கர் புலியை அடக்குவதற்கு பாளையக்காரர்களின் உதவியை நாடினார். மாவீரன் பூலித்தேவன் வேங்கையை வீழ்த்த வீருகொண்டு மதுரை சென்றார். காட்டுக்குள் சென்று புலியைக் கொன்றார். மன்னர் மகிழ்ச்சி அடைந்தார். புலித்தேவன், வடக்கத்தான் என்ற சிறப்புப் பட்டங்களையும் வழங்கினார். இப்படித்தான் பூலித்தேவன், புலித்தேவன் ஆனார்.

**பூலித்தேவன்கட்டியகோட்டை**

மாவீரன் பூலித்தேவன் முதலில் ஆட்சி புரிந்த இடத்திற்கு ஆவுடையார்புரம் என்று பெயர். இங்கிருந்த பழைய கோட்டை ஒன்றை பீரங்கிப் படையினர் தகர்த்து மண்ணோடு மண்ணாக்கினர். எனவே அருகிலுள்ள நெற்கட்டான் செவல் என்ற இடத்தில் ஒரு கோட்டை கட்ட முடிவு செய்தார் பூலித்தேவன். பனை ஓலை, பனை நார், சுண்ணாம்பு போன்றவற்றை மண்ணுடன் கலந்து பிசையப்பட்டது. அந்த சேற்றுக் கலவையில் வரகு, குதிரைவாலி போன்ற தானியங்கள் கலக்கப்பட்டது. பின்னர் கடுக்காயைப் பொடியாக்கிக் கலக்கப்பட்டது. அத்துடன் பதனீரும் சேர்க்கப் பட்டது. இத்தகைய முறையில் கலந்த சேற்றுக் கலவை இன்றைய சிமிண்ட் கலவையை விட பன்மடங்கு வலிமையானது. இப்படி செய்யப்பட்ட கலவையைக் கொண்டு கோட்டை கட்டப்பட்டது. கோட்டைக்குள் போர் வீரர்கள் பகுதி, போர்க் கருவிகள் செய்யப்படும் பகுதி, பொது மக்கள் வசிக்கும் பகுதி என்று பிரித்து வைத்தார் பூலித்தேவன். கோட்டையில் பகைவர்களால் அழிக்க முடியாத வலுவான கதவுகள் அமைக்கப்பட்டன. இந்தக் கோட்டைக்கு வீரபாண்டியன் கோட்டை என்ற பெயரைச் சூட்டினார் புலித்தேவர்.

இதைத்தவிர களக்காடு என்ற பகுதியிலும் ஒரு வலிமையான கோட்டையைக் கட்டினார். வாசுதேவநல்லூரிலும் வலிமைமிக்க கோட்டையைக் கட்டினார் இதற்கு குணசேகரன் கோட்டை என்று பெயர். இவ்வாறு தென்பாண்டி நாட்டில் பல கோட்டை கட்டிய பெருமை கோமான் பூலித்தேவனையே சாரும்.

**பூலித்தேவனின்அறப்பணியும், திருப்பணியும்**

மாவீரன் பூலித்தேவன் இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாத இதயம் படைத்தவர். பசி என்று வந்தவரைப் புசி என்று சொல்லிப் பசி போக்கியவர்

மானங்காக்கத் துணியும் வாழ்வதற்கு வீடும் வழங்கிய வள்ளல். தன்னிடம் பணி புரிந்தவர்கள் அனைவரையும் உடன் பிறப்பாகக் கருதினார். திருமணம் செய்ய முடியாமல் தவிக்கின்றவர்களை அழைத்துத் திருமணம் செய்து வைத்தார். நோயுற்றவர்களை நேரில் கண்டு நலம் விசாரித்தார்.

மாவீரன் பூலித்தேவன் மகேசனிடம் பக்தி கொண்டார். எனவே மகேசனின் கோவில்களுக்கு காணிக்கைகளை அள்ளி வழங்கினார். அப்பெருமானை அர்ச்சிக்கும் அந்தணர்களுக்கு நிலங்களை மானியமாக வழங்கினார். ஆண்டுதோறும் சிவரத்திரியை சிறப்பாகக் கொண்டாடினார். சங்கரன்கோவிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார். அக்கோவிலுக்குள் குளம் ஒன்றை வெட்டினார். அக்குளத்தின் நடுவே நீராளி மண்டபத்தைக் கட்டினார். கோமதி அம்மன் பவனி வருவதற்கு பல்லக்கு ஒன்றைச் செய்தார். கோவிலுக்கு நடுவே தியான அறை ஒன்றையும் கட்டினார்.

மேலும் கரிவலம்வந்தநல்லூரிலுள்ள பால்வண்ணநாதர் கோவில் முன் மண்டபத்தையும், மடைப்பள்ளியையும் கட்டினார் பூலித்தேவன். இக்கோவிலுக்கு பனையூரில் உள்ள நஞ்சை நிலங்களை அறக்கொடையாக வழங்கினார். சீவலப்பேரியின் அருகில் உள்ள மருவாத்தலை என்ற ஊர் மலை உச்சியில் உள்ள கோவிலுக்கு மண்டபம் ஒன்றைக் கட்டினார்.

நெடுஞ்சாலையில் கோடைகாலத்தில நடைப் பயணம் செய்யும் வழிப் போக்கர்களின் துன்பத்தை அறிந்த பூலித்தேவன் சங்கரன்கோவிலில் இருந்து நெற்கட்டான் செவல் செல்லும் பாதையில் இடமலைத் தொண்டு என்ற இடத்தில் வழிப்போக்கர் இளைப்பாறுவதற்காக மண்டபம் ஒன்றைக் கட்டினார். மண்டபத்தில் தங்கி இளைப்பாறும் மக்களின் தாகம் தீர்ப்பதற்கு நீர்மோர் வழங்கினார். வெயிலில் களைத்து வரும் மக்கள் நீராடி மகிழ்வதற்கு மண்டபத்திற்கு அருகில் கிணறு வெட்டினார். நந்தவனம் ஒன்றும் உருவாக்கினார். இதைப் போன்று நெற்கட்டான் செவலிலிருந்து தர்காபுரம் செல்லும் வழியிலும் பதினாறு கால் மண்டபம் ஒன்றைக் கட்டினார். அங்கு வரும் மக்களின் பசி தீர அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்தார். நெற்கட்டான் செவலுக்கு அருகில் உள்ள மூவர் இருந்தாளி என்ற ஊரில் கண்மாய் ஒன்றை வெட்டினார். பூலித்தேவன் கண்மாய் என்ற பெயருடன் ன்றும் அந்தக் கண்மாய் மக்களின் தாகம் தீர்த்து வருகிறது.

**விடுதலைப்போரில் முதல் முழக்கம் செய்தவர் பூலித்தேவனே**

1799-ல் விடுதலைப் போரை நடத்திய வீரபாண்டிய கட்டபொம்மன், 1772-ல் விடுதலை வேண்டி வீரமுழக்கமிட்ட முத்துவடுக நாதர், வீரமங்கை வேலுநாச்சியார்

ஆகியோர்களுக்கு முன்பாக விடுதலை முழக்கமிட்டவர் பூலித்தேவன் ஆவார். 1755-லேயே ‘இந்த மண்ணில் பிறந்த மைந்தனாகிய நான் யாருக்கும் வரி கொடுக்க மாட்டேன்' என்று கூறி முதன் முதலில் வெள்ளையரை, நவாபை, நாயக்கர்களை எதிர்த்து முதல் முழக்கம் செய்த புரட்சி வீரன் காத்தப்பராச பூலித்தேவனே ஆவார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் பிறப்பதற்கு முன்பே பூலித்தேவன் வெள்ளையரை மட்டும் எதிர்க்கவில்லை. பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், மதவெறி பிடித்தவர்கள், ஐந்தாம் படைக்கூலிகள் ஆகிய பலவகை ஆதிக்கங்களை எதிர்த்து விடுதலைப் போரில் முதல் முழக்கம் செய்த இந்தியர் பூலித்தேவனே ஆவார். பூலித்தேவனின் போராட்டம் தமிழரின் உரிமைப் போராட்ட மாக திகழ்ந்தது.

**பூலித்தேவனின்விடுதலைவேட்கை**

மதுரையை ஆட்சி செய்த விஸ்வநாத நாயக்கர் பாண்டிய நாட்டை 72 பாளையங்களாகப் பிரித்தார். அதில் 16 பாளையங்களுக்கு மறவர்களையும், மீதி 56 பாளையங்களுக்கு தெலுங்கர்களையும் பாளையக்காரர்களாக நியமித்தார். இராமநாதபுரம், புதுக்கோட்டை, வடகரை, ஏழாயிரம்பண்ணை, நெற்கட்டான் செவல், ஊத்துமலை, சிவகிரி, சேத்தூர், சிங்கம்பட்டி, தலைவன்கோட்டை, கொல்லம் கொண்டான், அழகாபுரி, ஊர்க்காடு, சுரண்டை, உடம்பூர், மணியாச்சி என்ற 16 பாளையங்களில் மறவர்கள் பொறுப்பேற்றனர்.

ஆனால் இந்த 16 பாளையத் தலைவர்களின் உள்ளங்களிலும் நாட்டுப் பற்று கொழுந்துவிட்டு எரிந்தது. இவர்களுக்குள்ளேதான் பூலித்தேவன் என்ற அக்னி குஞ்சு எழுந்தது. 'நாம் தமிழர் கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றி மூத்த குடியில் பிறந்தவர்கள். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட நாடு இந்த தென்நாடு, இத்தகைய வீரம் செறிந்த நாட்டில் அந்நியர் ஆட்சி புரிவதை ஏற்க முடியாது' என்று கொக்கரித்தார் பூலித்தேவன். ஆங்கிலேயரை மட்டுமல்லல, டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள் ஆகியோரையும் நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

தெலுங்கு மொழி பேசும் நாயக்கரையும் நாட்டை விட்டு துரத்த நினைத்தார். முகமதியர் ஆட்சிக்கும், நாயக்கர் ஆட்சிக்கும் வெடி வைப்போம் என்று வீறுகொண்டு பேசினார். இதுவே மாவீரர் பூலித்தேவன் செய்த முதல் விடுதலை முழக்கமாகும். பூலித்தேவன் தலை சிறந்த அரசியல் சாணக்கியர். நிகரற்ற போர் வன்மை படைத்த மறவர் சிங்கம். போர் செய்வதற்குரிய களங்களை எப்படி அமைப்பது என்பதில் தீர ஆராய்ந்து முடிவு எடுக்கும் ஆற்றல் படைத்தவராக இருந்தார். ஒரே நாளில் ஐம்பது

மைல் தூரம் யுத்த தளவாடங்கள் சகிதம் களைப்பில்லாமல் நடக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

மாற்றானை நாட்டை விட்டு விரட்ட பதினாறு பாளையங்களையும் ஒன்று திரட்ட முயன்றார் பூலித்தேவன். இதற்காக அவர்களிடம் சூழ்நிலையை விளக்கிப் பேசினார். இவரது வாக்கு வன்மை அவர்களை வென்றது. இவரது எழுச்சி மற்ற மறவர்களை மகிழ்ச்சியடையச் செய்தது. பாளையக்காரர் அனைவரும் ஒன்று திரண்டு பூலித்தேவனுக்குத் தோள் கொடுக்க முடிவு செய்தனர். இவ்வாறு பாளையக்காரர்களை ஒன்று திரட்டி கூட்டணி அமைத்தது பூலித்தேவனின் விடுதலை வேட்கையை வெளிப்படுத்துகிறது

**வெள்ளைத்தளபதியைவிரட்டியபூலித்தேவன்**

இவ்விதம் நவாபுக்கு எதிராக வரிகொடாப் பிரகடனம் செய்த பூலித்தேவனை பாளையங்கள் பெரிதும் ஆதரித்தன. வரிகொடா இயக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பாளையக்காரர்களுக்கு ஒற்றர்கள் மூலம் ஓலை அனுப்பினார். நவாபையும், கம்பெனிப் படையை எதிர்க்கவும், கப்பமோ தீர்வையோ செலுத்தக்கூடாது என்று தெரிவித்தார். இவ்வாறு தென் தமிழகம் வரிகொடா இயக்கத்தை பூலித்தேவன் தலைமையில் நடத்தியது.

பாளையக்காரர்கள் கப்பம் கட்டமறுத்ததை அறிந்த நவாப் ஒரு படையை 1751-ல் திருநெல்வேலிக்கு அனுப்பினார். இப்படையை தளபதி ரஹ்மானுடன் வழிநடத்தி வந்தவர் இன்னீஸ் என்ற ஆங்கிலேயர் ஆவார். இவர்தான் திருநெல்வேலிக்கு வந்த முதல் ஆங்கிலேயர் ஆவார். படை நடத்தி வருவதைக் கேள்விப்பட்ட பூலித்தேவன் பாளையக்காரர் அனைவரையும் ஒன்று திரட்டினார். இப்படையைக் கண்ட இன்னீஸ் படையெடுக்கப் பயந்து மதுரைக்கு சென்றுவிட்டான். இவ்விதம் வெள்ளைத் தளபதி ஒருவரை தென்பாண்டிச் சீமையிலிருந்து விரட்டிய முதல் வீரன் பூலித்தேவனே ஆவார்.

**பூலித்தேவனிடம்தோல்வியடைந்தமாபூஸ்கான்**

களக்காடு கோட்டை வரலாற்றில் மிகவும் புகழ் பெற்றது. இங்குதான் பாண்டியரும் சேரரும் அடிக்கடி களம் கண்டார்கள் அதனால் தான் இதற்கு களக்காடு என்று பெயர் வந்தது. இந்தக் கோட்டை திருவிதாங்கூர் மன்னரால் விலைக்கு வாங்கப்பட்டது. ஆனால் முகலாயத் தளபதி மாபூஸ்கான் ஒரு பெரும் படையுடன் வந்து இதனைக் கைப்பற்றினார். ஆனால் அங்கு தங்காமல் மதுரை சென்று விட்டான். இதனைக் கேள்விப்பட்ட பூலித்தேவன் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டனுடன் சேர்ந்து

கோட்டையைக் கைப்பற்றினார். இதனைக் கேள்விப்பட்ட மாபூஸ்கான் பெரும் படையுடன் வந்தான், ஆனால் பூலித்தேவனின் படைகளும் திருவிதாங்கூர் படைகளும் சேர்ந்து களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபூஸ்கானின் படைகளை விரட்டியடித்தன.

இந்த வெற்றிக்குப் பிறகு மாவீரர் பூலித்தேவன் தனது வலிமையைப் பெருக்கிக் கொள்ள முயன்றார். களக்காடு வெற்றிக்குக் காரணம் கூட்டணியின் வலிமைதான் என்றுணர்ந்து தனது கூட்டணியை மேலும் விரிவுபடுத்த முயன்றார்.

மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் இடையே இருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கோட்டை ஆற்க்காட்டு நவாபின் தம்பி ரஹீம் என்பவரின் ஆளுகையில் இருந்தது. 1755-ல் ஒரு நாள் மாவீரன் பூலித்தேவன் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டை படையெடுத்து ரஹீமை விரட்டியடித்தார். இந்தக் கோட்டை பூலித்தேவனின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**ஆங்கிலத்தளபதி ஹெரான்தோற்கடிக்கப்படுதல்**

திருநெல்வேலி பாளையக்காரர்களிடம் கப்பம் வாங்குவது கடினம் என்று கண்டு கொண்ட நவாப், நெல்லைச் சீமையில் கப்பம் வசூல் செய்வதற்கு கம்பெனியிடம் 1755-ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தமே இந்திய நாட்டை அடிமை ஆக்குவதற்கு செய்து கொள்ளப்பட்ட முதல் சாசனம் ஆகும். இவ்வாறு கப்பம் வசூலிக்க உரிமை பெற்ற கம்பெனி தளபதி அலக்சாந்தர் ஹெரான் என்பவரை வரிவசூல் செய்ய ஒரு படையுடன் அனுப்பியது.

ஹெரான் 1755-ல் திருச்சியிலிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டான். வழியில் திண்டுக்கல், பாஞ்சாலம்குறிச்சி பாளையங்கள் பணிந்தன. கப்பம் கட்ட மறுத்த பூலித்தேவனின் கோட்டையைப் பிடிக்க நெற்கட்டான் செவல் வந்தான் ஹெரான். கோட்டையை முற்றுகையிட்டு குண்டு மழை பொழிந்தான். ஆனால் கோட்டையில் ஒரு சிறிய துளைகூட ஏற்படவில்லை. படைபலம் குறைந்து, உணவுக்கும் வழியில்லாமல் போகவே வேறுவழியில்லாமல் வெட்கத்துடனும், வேதனையுடனும் தோல்வியைச் சுமந்து 1755 மே 22ம் தேதி திரும்பினான். பூலித்தேவரின் இந்த வெற்றி மற்ற பாளையக்காரர்களுக்குத்தெம்பூட்டியது.

**ஆங்கிலேயர்களுக்குஎதிரான கூட்டணி**

ஆங்கிலத் தளபதி ஹெரானை விரட்டியடித்த பிறகு பூலித்தேவன் நெற்கட்டான் செவல் கோட்டையை மேலும் பலப்படுத்தினார். வாசுதேவநல்லூரிலும் ஒரு வலிமையான கோட்டையைக் கட்டினார். ஹெரான் மீண்டும் தன்னைத் தாக்க வருவான்

என்ற கருதிய பூலித்தேவன் போர் முறையை மாற்றியமைத்தார். மேலும் தென்னாட்டில் உள்ள எல்லாப் பாளையக்காரர்களையும் ஒன்றிணைத்து விட்டால் கம்பெனிப் படையை எளிதில் முறியடித்து விடலாம் என்று நினைத்தார்.

எனவே முதலில் மேற்குப் பாளையங்களை ஒன்று திரட்ட முயன்றார் பூலித்தேவன். இதற்காக ஒரு கூட்டம் கூட்டினார். இக்கூட்டத்தில் சேத்தூர், கொல்லம் கொண்டான், ஊத்துமலை, தலைவன் கோட்டை, சுரண்டை, ஊர்க்காடு, வடகரை, சிங்கம்பட்டி பாளையங்கள் கலந்து கொண்டன. சிவகிரிப் பாளையம் கலந்து கொள்ளவில்லை. மேலும் மதுரைப் பாளையக்காரர்களும், திருவாங்கூர் மன்னரும் இந்தக் கூட்டணியில் சேர்ந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டணியுடன் கிழக்குப் பாளையக்காரர்களும் சேர்ந்து கொண்டால் இதனை யாரும் வெல்ல முடியாது என்று கணக்குப் போட்டார் பூலித்தேவன். எனவே கிழக்குப் பாளையக்காரர் அனைவரும் தன்னுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரன் ஜெகவீர பாண்டியன் கட்டபொம்மனும், அதனைச் சார்ந்திருந்த எட்டயபுரத்தானும் கூட்டணியில் சேர மறுத்து விட்டனர். இதனைக் கண்ட கிழக்கு பாளையத்து நாயக்கர்கள் ஒட்டுமொத்தமாக பூலித்தேவன் கூட்டணியில் சேர மறுத்துவிட்டனர். இந்தக் கோழைகளின் செயல் விடுதலை வேங்கைக்கு வெடிவைத்தது.

**பூலித்தேவனின்முதல் வீழ்ச்சி**

ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையைக் கைப்பற்றிய மாவீரன் பூலித்தேவன் திருநெல்வேலியையும் தனதாக்கிக் கொள்ள விரும்பினார். எனவே கூட்டணிப் படையுடன் மாபூஸ்கான் இருக்கும் நெல்லையை நோக்கிப் படை நடத்தினான். 1756, மார்ச் 21-ல் போர் தொடங்கியது. மாபுஸ்கானுக்கு கம்பெனியும், கிழக்குப் பாளையக்காரர்களும் ஆதரவளித்தன. இப்போரில் பூலித்தேவனின் நூற்றுக்கணக்கான வீரர்கள் மடிந்தனர். பூலித்தேவனின் பாசமிக்க முடேமியா என்பவர் கொல்லப் பட்டார். போரை நிறுத்தி விட்டு நெற்கட்டான்செவல் திரும்பினார் பூலித்தேவன். காட்டிக் கொடுத்தவர்களாலும், கூலிப் படையினராலும், கூட்டணி சேர மறுத்தவர்களாலும் தான் பூலித்தேவன் தோல்வியைச் சந்தித்தார்.

**பூலித்தேவனுக்குஎதிராககான்சாகிபின்தாக்குதல்கள்**

தென்பாண்டிச் சீமையில் தோன்றிய கான்சாகிப் என்ற மருதநாயகம் ஆங்கிலேயரின் நம்பிக்கைக்குரிய போர்த் தளபதியாக உயர்ந்தான். பூலித்தேவனை அடக்க கான்சாகிபை அனுப்ப முடிவு செய்தனர் ஆங்கிலேயர். கான்சாகிப் ஒரு பெரும்

படையுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக திருநெல்வேலி வந்தான். திருநெல்வேலிக் கோட்டையை பூலித்தேவன் படைகள் காத்து நின்றன. ஆனால் கூலிப் படைகளின் உதவியுடன் கான்சாகிப் திருநெல்வேலியைக் கைப்பற்றினான். பின்னர் கான்சாகிப் கொல்லம்கொண்டான் வந்தான். அதனைப் பிடித்த பிறகு மற்ற பாளையக்காரர்களை அடக்கப் புறப்பட்டான் கான்சாகிப்.

மாவீரன் பூலித்தேவனை வீரத்தால் வெற்றி கொள்ள முடியாது என்று கான்சாகிப் நினைத்தான். எனவே மறவர்களை விலை கொடுத்து வாங்க முயன்றான். முதலில் நடுவக்குறிச்சி பாளையத்தான் கான்சாகிபுக்கு விலை போனான். பொருளாசையும் பதவி ஆசையும் பல மறவர்களை கைக்கூலியாக்கின. இச்சூழ்நிலையில் கான்சாகிப் 1760 டிசம்பரில் நெற்கட்டான் செவல் கோட்டையைத் தாக்கினான். இறுதியாக வலிமைமிக்க வேங்கையை வஞ்சகர்கள் வீழ்த்தினார்கள் 1761 மே மாதம் கடுமையாகப் போரிட்ட போதும் கான்சாகிபிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. பூலித்தேவன் ராமநாதபுரம் தப்பிச் செல்ல கான்சாகிப் அனுமதித்தான். பின்னர் மற்ற தலைவர்களையெல்லாம் அடக்கி நவாபின் ஆட்சியை நெல்லையில் நிலைக்கச் செய்தான். ஜோதியில் கலந்தார் என்று நாட்டுப்பாடல் ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் காட்டிலேயே தங்கி தள்ளாத வயதில் மாண்டு போனாரா அல்லது கம்பெனிப் படை சித்திரவதை செய்து கொன்றதா என்ற செய்திகள் வரலாற்று உலகில் இன்றைக்கும் இருட்டாகவே அமைந்துள்ளது.

இந்திய மண்ணில் அந்நிய ஆட்சியே இருக்கக் கூடாது என்று எதிர்த்த மாவீரன் பூலித்தேவன், நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட முதலாவது விடுதலை வீரர் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் ல்லை.

### வீரபாண்டியகட்டபொம்மன்(Virapandia Kattabomman)

ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பாளையக்காரர்களை ஒன்று திரட்டி பாளையக்காரர் கிளர்ச்சிக்கு வித்திட்டவர் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவார். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான இவர் சுதந்திர வேட்டை அதிகமாகக் கொண்டிருந்தார். கி.பி. 1792-ம் வருட கர்நாடக உடன்படிக்கைப்படி பாளையக்காரர்கள் மீது நிர்வாக ஆதிக்கம் செலுத்தும் உரிமை பெற்றனர் ஆங்கிலேயர். எனவே பாளையக்காரர்கள் மீது அடிக்கடி படையெடுத்தோ அல்லது தாக்குதல் நடத்தியோ பெருந்தொகையை வசூலித்தனர். ராணுவ வலிமையையும், கோட்டைகளையும்

கொண்டிருந்த இந்தப் பாளையக்காரர்கள் தங்கள் உரிமைகள் ஆக்கிரமிக்கப்படுவதை எதிர்த்தனர். இதன் விளைவாகவே 1798-ல் திருநெல்வேலிப் பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயரை எதிர்த்து கிளர்ச்சி செய்தார் வீரபாண்டிய கட்டபொம்மன். ஆனால் இறுதியில் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

**வீரபாண்டியகட்டபொம்மனின்வாழ்க்கைக்குறிப்பு**

வீரபாண்டிய கட்டபொம்மன் 1761-ல் ஜெகவீரபாண்டிய கட்டபொம்முவிற்கும், ஷண்முகக்கனியம்மாளுக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். இவர் தெலுங்கு பரம்பரையைச் சேர்ந்தவர். வீரபாண்டிய கட்டபொம்மனின் இயற்பெயர் கருத்தையா ஆகும். இவர் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு முப்பதாம் வயதில் 1791-ல் பாஞ்சாலம்குறிச்சி பாளையக்காரன் ஆனார். இவருக்குப் பிறவியிலேயே திக்குவாயாக இருந்த குமாரசாமி என்ற ஊமைத்துரையும், துறைசிங்கம் என்பவரும் சகோதரர்கள் ஆவர். ஈசுவரவடிவு, துரைக்கண்ணு ஆகிய சகோதரிகளும் இருந்தனர். வெள்ளையத்தேவர், சிவத்தையா ஆகியோர் கட்டபொம்மளின் முக்கிய தளபதி ஆவர். சிவசுப்ரமணியம் பிள்ளை என்பவர் அமைச்சராக இருந்தார்.

**ஆங்கிலேயருக்கெதிராணகிளர்ச்சி**

ஆரம்பத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயர்களுக் கெதிராக எத்தகைய விரோத எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை. திறைப்பணத்தை ஒழுங்காக செலுத்தியே வந்தார். 1792-ம் வருட கர்நாடக உடன்படிக்கைப்படி நவாப் கப்பம் வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர் களுக்கு அளித்தார். கம்பெனி கலெக்டர்களை நியமித்து இந்த வரிகளை வசூலித்து வந்தது. இந்தக் கலெக்டர்கள் பாளையக்காரர்களை ஏளனம் செய்ததுடன், கொடிய முறையில் வரி வசூலித்தனர். பல பாளையங்கள் கம்பெனிக்கு அடிபணிந்து இயங்கின. இவ்வாறு வரி வாங்கும் முறையில் இரு தரப்பினருக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. இதுவே கிளர்ச்சிக்கு வித்திட்டது.

**கலெக்டர்ஜாக்சனின்அடக்குமுறைநடவடிக்கை**

1798-ம் ஆண்டு செப்டம்பர் முதல் பாஞ்சாலம் குறிச்சியிலிருந்து வரும் திறை ஒழுங்காக வரவில்லை. எனவே இறுமாப்புடனும், மூர்க்கத் தனத்துடனும், கண்டித்தும், எச்சரித்தும் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதங்கள் எழுதினார். 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது உனக்கேன் நாங்கள் தரவேண்டும் வரி, வட்டி, கிஸ்தி' கட்டபொம்மன் பதிலுக்கு கர்ஜித்தார். எனவே கட்டபொம்மனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்ப ஜாக்சன் விரும்பினார். இதற்கு இணங்காத சென்னை நிர்வாகம்

கட்டபொம்மனை ராமநாதபுரத்தில் இருந்த கம்பெனி கலெக்டரைப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டது. என்று இரண்டு வாரத்திற்குள் தன்னை வந்து பார்க்கும்படி 1798, ஆகஸ்ட் 18-ல் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினார். இக்கடிதத்தை அனுப்பிய பிறகு கலெக்டர் திருநெல்வேலிக்குப் பயணமானார். குற்றாலம் சென்ற போதும் கட்டபொம்மனை பார்க்க மறுத்துவிட்டார். பின்னர் திறைப் பணத்துடன் கலெக்டர் சென்ற சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர், ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களுக்கும் கட்டபொம்மன் பின் தொடர்ந்து சென்றார். ஆனால் இராமநாதபுரத்தில் தான் ஜாக்சனை சந்திக்க முடியும் என்று கூறப்பட்டது. அவமானத்தைத் தாங்கிக் கொண்ட கட்டபொம்மன் 23 நாட்கள் பயணம் செய்து 1798, செப்டம்பர் 19-ம் தேதி இராமநாதபுரத்தை அடைந்தார்.

கட்டபொம்மனும், அமைச்சர் சிவசுப்ரமணிய பிள்ளையும் கலெக்டரைச் சந்திக்க அனுமதி பெற்றனர். ஆனால் ஜாக்சன் இவர்களை நாணயமற்ற முறைகளில் நடத்தினார். சந்திப்பின் இறுதியில் இருவரையும் கைது செய்யத் திட்டமிட்டார். இதனை மறைவில் இருந்து கவனித்த ஊமைத் துரையின் உதவியுடன் கட்டபொம்மன் தப்பித்தார். அமைச்சர் மட்டும் கைதானார். நடைபெற்ற மோதலில் பல காவலர்கள் வெட்டி வீழ்த்தப் பட்டனர். பலர் காயமுற்றனர். இதனைக் கண்டித்து கட்டபொம்மன் செனை கவுன்சிலுக்கு கடிதம் எழுதினார். விசாரித்த சென்னை கவுன்சில் ஜாக்சனை பதவி நீக்கம் செய்து லூஷிங்டன் என்பவரை நியமித்தது.

**ஆங்கிலேயருக்கெதிராணகட்டபொம்மனின்நடவடிக்கைகள்**

தனது சுயமதிப்புக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் அவமானம் ஏற்பட்டதால் கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தார். அப்போது நிலவிய அரசியல் சூழ்நிலை கட்டபொம்மனுக்கு சாதகமாக அமைந்தது. இச்சமயம் சிவகங்கை மருதுபாண்டியனும், திண்டுக்கல்லின் கோபால நாயக்கரும், ஆனைமலை யாதுல் நாயக்கரும் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்கெதிராக தென்னிந்தியக் கூட்டணியை அமைக்கப் பாடுபட்டனர். மக்கள் அனைவரும் இணைந்து ஆங்கிலேயரை வெளியேற்றுவோம் என்ற மருதுபாண்டியனுக்கு கட்டபொம்மன் ஆதரவளித்தார். இருவரும் சந்தித்து ஒருவருக் கொருவர் ஆலோசனை நடத்தினர்.

அப்போது மைசூருக்கு எதிராக ஆங்கிலேயர் போரில் ஈடுபட்டனர். தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள கட்டபொம்மனுக்கு இது தேவையான வாய்ப்பை அளித்தது. நாகலாபுரம், மன்னார்கோட்டை, பௌவாலி, கோலார்பட்டி, சென்னல்குடி பாளையக்காரர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டை அமைத்துக் கொண்டனர். இந்தக் கூட்டை வலிமைப்படுத்த முற்பட்டார் கட்டபொம்மன். இதனுடன் சாப்டூர், ஏழாயிரம்பண்ணை,

காடல்குடி, குளத்தூர் ஆகிய பாளையக்காரர்களையும் சேரும்படி வேண்டினார். இந்தக் கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பில் சிவகிரி பாளையக்காரர் சேர மறுத்துளவிட்டார். எனவே அவரது மகனின் உதவியுடன் சிவகிரியில் தனது செல்வாக்கை நிலை நாட்ட முயன்றார் கட்டபொம்மன்.

**பாஞ்சாலம்குறிச்சிமீது பானர்மேனின்தாக்குதல்**

சிவகிர் பாளையக்காரர் கம்பெனிக்கு ஒழுங்காக திறை செலுத்தக் கூடியவராக இருந்தார். எனவே சிவகிரி கோட்டையில் ஆதிக்கம் கொள்ள முற்பட்ட கட்டபொம்மனின் நடவடிக்கைகளை கம் பென் தனது அதிகாரத் திற்கெதிரான சவால் என்று கருதியது கட்டபொம்மன் ஆங்கிலேயர் களுக்கு எவ்விதத் தீங்கிழைக்காத போதும் கம்பெனி அவர் மீது பழி வாங்கத் துடித்தது கட்டபொம்மனின் இராணுவ வலிமையை ஒடுக்கப் படைகளை அணி வகுத்துச் செல்ல கம்பெனி ஆணையிட்டது

அப்போதைய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு கட்டபொம்மனுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தளபதி மேஜர் பானர்மேன் என்பவருக்கு உத்தரவிட்டார். இது ஏற்கனவே பாளையக்காரர் முறையை ஒழிக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்டிருந்த கொள்கையை நடைமுறைப் படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டவட்டமான முயற்சியாகவே இதனைக் கருதலாம். 1799, மே மாதம் மைசூர் போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றியினால் அதிகப் படைகளை கட்டபொம்மனுக்கு எதிராக அனுப்ப முடிந்தது.

பாஞ்சாலங்குறிச்சிக்கு எதிரான படையெடுப்பில் பானர்மேன் தலைமை வகித்தார். இராமநாதபுரம் வழியாக முன்னேறிச் சென்ற படை திருநெல்வேலியில் முகாமிட்டது. 1799, செப்டம்பர் முதல் தேதி தன்னை பாளையங்கோட்டையில் வந்து பார்க்கும்படி கட்டபொம்மனுக்கு செய்தி அனுப்பினார் பானர்மேன். கட்டபொம்மனின் பதில் ஏற்புடையதாக இல்லாததால் செப்டம்பர் 5-ம் தேதி பாஞ்சாலம் குறிச்சி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார். பாஞ்சாலங்குறிச்சிகோட்டை முற்றுகையிடப் பட்டது.

கட்டபொம்மனின் கோட்டை ஐநூறு அடி நீளமும், முன்னூறு அடி அகலமும் கொண்ட மண்ணால் கட்டப்பட்ட வலிமையான கோட்டை யாகும். கோட்டையை வந்தடைந்த ஆங்கிலப் படைகள் முதலில் கோட்டைக்கும் வெளியிலுமுள்ள செய்தித் தொடர்பைத் துண்டித்தன. கோட்டையைக் காப்பாற்ற கிராமங்களிலிருந்து வந்த வீரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். கம்பெனியிடம் சரணடையுமாறு கூறுவதற்கு இராமலிங்க முதலியார் என்பவரை பானர்மேன் கட்டபொம்மனிடம் அனுப்பினார். கட்டபொம்மன்

இந்த வேண்டுகோளை நிராகரிக்கவே கோட்டையின் வலிமையற்ற பகுதி பற்றிய ரகசியங்களை இராமலிங்க முதலியார் சேகரித்து ஆங்கிலேயர்களிடம் தெரிவித்தார்.

ஆங்கிலப் படைகள் பீரங்கித் தாக்குதல்களை ஆரம்பித்தன. ஆனால் கோட்டைக்குள் இருந்த கிளர்ச்சியாளர்கள் பெரும் வீரத்துடன் போராடியதால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. கூரிய ஈட்டிகளினால் எதிரிகளைச் சேதப்படுத்தினர். எனவே பெருமளவு வீரர்களின் வருகைக்கு ஏற்பாடு செய்தார் பானர்மேன். செப்டம்பர் 16-ம் தேதி அதிகமான வீரர்கள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து இறங்கினர். பகைவர்களின் குண்டு வீச்சால் கோட்டை தகர்க்கப்பட்டது. கோட்டையைக் காலி செய்து விட்டு கட்டபொம்மனும், படையினரும் தப்பி ஓடினர். காளார்பட்டியில் நடந்த மோதலில் சிவசுப்பிரமணியபிள்ளை கைது செய்யப்பட்டார். இதன் பிறகு நாகலாபுரம் கோட்டை பிடிக்கப்பட்டது. பிரிட்டிஷ் படையினர் தொடர்ந்து வெற்றி பெற்றனர். இதற்குப் பிறகு மேற்குப் பகுதி பாளையக்காரர்களும் அடிபணிந்தனர்.

**வீரபாண்டியகட்டபொம்மன்தூக்கிலிடப்படுதல்**

தப்பி ஓடிய கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் களப்பூர் காடுகளிலிருந்து பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கை எல்லையில் பிடிபட்டனர். கைது செய்யப்பட்ட கட்டபொம்மன், 1799 அக்டோபர் 16-ம் தேதி விசாரனைக்கு உட்படுத்தப் பட்டார். விசாரித்த பானர்மேன் கட்டபொம்மனுக்கு மரண தண்டனை விதித்தார். அக்டோபர் 17- தேதி கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் ஒரு முக்கிய இடத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். ஒரு பெருமை மிக்க விடுதலை வீரராக மரணமடைந்தார் கட்டபொம்மன். இதன் பிறகு கிளர்ச்சியாளர்களின் பாளையங்கள் பறிமுதல் செய்யப்பட்டு கம்பெனியின் நேரடி ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

1. **தென்னிந்தியப்புரட்சி (SOUTH INDIAN REBELLION, 1800-1801)**

பல வருட ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கெதிராகத் தோன்றிய மிகப் பெரிய எதிர்ப்பே 1800-ம் தென்னிந்தியப் புரட்சியாகும், தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலையால் ஆங்கிலேயர் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். கர்நாடகப் போர்களும், மைசூர் போர்களும் தமிழகத்தில் அவர்களின் அரசியல் ஆதிக்கத்தை உறுதி செய்தன. ஆங்கிலேயரின் இந்த ஏகாதிபத்திய வளர்ச்சியினால் மக்கள் மத்தியில்

வெறுப்புணர்வு ஏற்பட்டது. எனவே மக்கள் அந்நிய ஆதிக்கத்திற்கெதிராக புரட்சி செய்யத் திட்டமிட்டனர். சிற்றரசர்களும் பாளையக்காரர்களும் ஒன்றிணைந்து ஆங்கிலேயர் களுக்கெதிராக பல கூட்டிணைப்புகளை ஏற்படுத்தினர். சிவகங்கை மருது சகோதரர்கள் மற்றும் திண்டுக்கல், கோயம்புத்தூர், மலபார் ஆட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயருக்கெதிராக கிளர்ச்சித் திட்டம் வகுத்தனர். இதுவே புகழ்பெற்ற தென்னிந்தியப் புரட்சியாகும். தனை முதலாவது சுதந்திரப் போர் என்று கூறுகிறார் டாக்டர் இராஜய்யன். 1800-ம் வருட தென்னிந்தியப் புரட்சியானது பொதுமக்களின் திட்டவட்ட முயற்சியின் உச்சகட்டமாகும். இந்தக் கிளர்ச்சி பிரிட்டிஷ் பிடியிலிருந்து ஜம்புதீபகற்பத்தை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தியாவின் பிற பகுதிகளில் ஐரோப்பிய ஆதிக்க வீழ்ச்சியை முன்னறிவிப்பதாக அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி எறிவதற்கு ஒரு வலிமைமிக்க கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சிவகங்கை மருதுபாண்டியர், திண்டுக்கல் கோபால நாயக்கர், கோயம்புத்தூர் கான்-இ-ஜகான், மலபார் கேரளவர்மா, மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர், மராட்டிய தூன்டாஜிவாக் ஆகியோர் சேர்ந்து க்கூட்டமைப்பை உருவாக்கினர்.

**கிளர்ச்சிக்கானகாரணங்கள்**

**1. அரசியல் காரணங்கள்**

a) தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு உள் நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட்டு ஆங்கிலேயர் செல்வாக்குப் பெற்றனர். ஆங்கில ஆட்சியின் தலையீட்டை எதிர்த்த அரசுகள் ஒடுக்கப்பட்டு சீரழிக்கப்பட்டன. திண்டுக்கல், சேலம், கோயம்புத்தூர், வேணாடு, மலபார், கனரா போன்ற பகுதிகள் அடங்கிய பெரும் நிலப்பரப்பை இணைத்துக் கொண்டனர். இப்படி இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த இந்திய ஆட்சியாளர்கள் புரட்சியில் ஈடுபட தயாராயினர்.

b) ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்ட சிற்றரசுகளும் தங்கள் பழைய அந்தஸ்தை இழந்தன. இந்த அரசுகளின் ஆட்சியாளர்களை நாய்கள் போல் நடத்தினர். கம்பெனியிடம் பணிந்து தங்கள் அந்தஸ்தை நிலை நாட்டினர். வெறும் பொம்மைகள் போன்றே நடத்தப்பட்டனர். இந்த சிற்றரசுகளின் பாதுகாப்பிற்கு கம்பெனி உத்திரவாதம் அளித்தது. ஆனால் அதற்குப் பதிலாக கம்பெனியின் இராணுவச் செலவுகளை இந்த சிற்றரசுகள் ஒத்துக் கொண்டன. இதனால் இந்த சிற்றரசுகள் தாங்கள் இழந்த உரிமைகளையும், அந்தஸ்தையும் மீண்டும் பெற ஆங்கிலேயரை எதிர்க்க முற்பட்டனர்.

c) ஆற்காட்டு நவாப் முகமது அலி தன்னை எதிர்த்த சிற்றரசுகளை ஒடுக்குவதற்கு கம்பெனியின் உதவியை நாடினார். 1787-ல் கம்பெனியுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டு ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டார் தனது கோட்டைகளை எல்லாம் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். ஆங்கில அரசு நடத்தும் எந்தப் போருக்கும் தனது வருவாயில் ஐந்தில் ஒரு பகுதியைத் தருவதாக ஒப்புக் கொண்டார். 1793-ல் முகமது அலி பாளையக்காரர்களிடமிருந்து நேரடியாக வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கியேலர்களுக்குக் கொடுத்தார். தனால் பாளையக்காரர்கள் பெரும் துன்பத்திற்குள்ளானார்கள் இது தென்னிந்தியப் புரட்சிக்கு முக்கிய காரணம் ஆகும்.

d) தஞ்சை அரசியல் விவகாரத்தில் ஆங்கில அரசு தேவையில்லாமல் தலையிட்டது. 1790-ல் தஞ்சை அரசின் வருவாய் நிர்வாகத்துறையை ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர். அதேபோல் பெரும்பான்மையான பாளையக்காரர்களையும், பாளையங்களையும் தங்களது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அவர்களது கோட்டைகள் அழிக்கப்பட்டன. இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் மூலம் கன்னியாகுமரி முதல் கிருஷ்ணா நதி வரை தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர் ஆங்கிலேயர். இவர்கள் நிர்வாகத்தில் ஊழலும் நிர்வாகச் சீர்கேடுகளும் பெருகின. நாட்டுப்பற்று மிகுந்த பாளையக்காரர்கள் குறுநிலத் தலைவர்கள் போன்றோர் ஆங்கிலேயர்களின் வருவாய்த் துறை, இராணுவத்துறை கொள்கைகளை எதிர்த்தனர்.

**2. பொருளாதாரக்காரணங்கள்**

1. நடைமுறையிலிருந்த வரிவசூல் முறையை நிராகரித்து ஆங்கில அரசு தன்விருப்பப்படி கிராமங்களிலிருந்து ஏராளமான வரிவசூல் செய்தது. தாமதமாக வரி செலுத்திய விவசாயிகள் துன்புறுத்தப் பட்டனர். லஞ்சமும், ஊழலும் வருவாய் நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் ஊடுருவியிருந்தன. கம்பெனியின் குத்தகைதாரர்களான நவாபுகள் பணம், தானியம் ஆகியவற்றை வசூலிப்பதில் எத்தகைய நீதிமுறையையும் கடைப்பிடிக்கவில்லை. உயிர் வாழ்வதற்கு வைத்திருந்த தானியம் முழுவதையும் கூட எடுத்துச் சென்றனர். வீட்டிலிருந்த பாத்திரங்களைக் கூட அள்ளிச் சென்றனர். இதனால் ஆங்கிலேயர் மீதான நம்பிக்கையை இழந்த மக்கள் புரட்சி செய்யத் தயாராயினர்.
2. கம்பெனியில் இருந்த சிவில், இராணுவ அதிகாரிகள் இந்திய சிற்றரசர்களுக்கும், குறுநிலத் தலைவர்களுக்கும் தாங்கள் சட்ட விரோதமாகத் திரட்டிய ஏராளமான செல்வத்தைக் கடனாகக் கொடுத்தனர்.

இதற்காக அதிக வட்டி வசூலித்தனர். எனவே வாங்கிய தொகையை யாரும் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் ஆங்கிலேயர் தாங்கள் செய்த போர்களுக்கான செலவுகளை தமிழக மக்களிடமிருந்தே பிரித்துக் கொடுக்குமாறு பாளையக் காரர்களை கட்டாயப்படுத்தினர். எனவே தங்களது தாயகத்தில் இருந்து கொண்டே தங்களைச் சுரண்டும் ஆங்கிலேயர்களைறரசர்களும் தலைவர்களும் எதிர்க்கத் தொடங்கினர்.

3. தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஆங்கிலேயர் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்காங்கே இராணுவத்தை நிறுத்தி வைத்திருந்தது. தங்கள் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்ள இராணுவத்தையே நம்பியிருந்தனர். இதனால் சிற்றரசுப் பகுதிகளில் நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டது. வரி வசூலிக்க இராணுவ உதவி நாடப்பட்டது.
4. வாணிபத்திலும் ஆங்கிலேயர் தலையிட்டு சுயலாபம் தேட முற்பட்டனர். கடல் வழியாக தானியங்கள் இறக்குமதி செய்யத் தடை விதித்தனர். தாங்கள் சேமித்து வைத்திருந்த தானியங்களையே விற்க முற்பட்டனர். இதன் விளைவாக தானியத்தின் விலை அதிகரித்தது. உற்பத்தியாளர்கள் கம்பெனிக்கே தங்கள் பொருட்களை விற்க வேண்டும் என்று கூறியதுடன் அவர்களுக்கு குறைந்த விலையே கொடுத்தனர். ஏற்கனவே பஞ்சத்தாலும் நோயாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் அதிக வரி வசூலாலும், வாணிபத்தாலும் மேலும் அல்லலுற்றனர்.
5. அரசியல் பொருளாதாரச் சிக்கல்களுடன் சமுதாய சமயக் கோட்பாடுகளும் தடைப்படுத்தப்பட்டன. மக்கள் தங்கள் சமுதாய விழாக்களையும் உரிமைகளையும் செயல்படுத்தவிடாது தடுக்கப் பட்டனர். இவ்வாறு தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் தீமைகளும், பாழான பொருளாதாரத்தில் ஏற்பட்ட அதிகப்படியான கொடுமை களும் அமைதியின்மையை ஏற்படுத்தின. மனக்குறைவு கொண்ட மக்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கவும், பழம் சிறப்போடு பழைய அரசு நிறுவனங்களை மறுபடியும் அமைக்கவும் தீர்மானித்தனர். எனவே மக்களும் பாளையக்காரர்களும் சேர்ந்து ஆங்கிலப் பேரரசு ஆதிக்கக் கொள்கையை எதிர்க்க முற்பட்டனர்.

**புரட்சியின்போக்கு**

1800-ம் வருட தென்னிந்தியப் புரட்சியானது பொதுமக்களின் திட்டவட்ட முயற்சியின் உச்சகட்டமாகும். இந்தக் கிளர்ச்சி பிரிட்டிஷ் பிடியிலிருந்து ஜம்புதீபகற்பத்தை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தியாவின் பிற பகுதிகளில் ஐரோப்பிய ஆதிக்க வீழ்ச்சியை முன்னறிவிப்பதாக அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி எறிவதற்கு ஒரு வலிமைமிக்க கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சிவகங்கை மருதுபாண்டியர், திண்டுக்கல் கோபால நாயக்கர், கோயம்புத்தூர் கான்-இ-ஜகான், மலபார் கேரளவர்மா, மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர், மராட்டிய தூன்டாஜிவாக் ஆகியோர் சேர்ந்து க்கூட்டமைப்பை உருவாக்கினர்.

திண்டுக்கல்லில் சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டு 1800-ம் ஆண்டு ஜூன் மூன்றாம் தேதி ஆயுதம் தாங்கி கோயம்புத்தூரைத் தாக்கினர். இக்கிளர்ச்சியானது வடக்கில் ஷோலாப்பூரிலிருந்து தெற்கில் நாங்குநேரி வரை பரவியது. இப்பெரிய போராட்டத்தில் தமிழர்கள் அதிகம் பங்கேற்றனர். கோயம்புத்தூர் படையெடுப்பைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் கிளர்ச்சி பரவியது. திருநெல்வேலியில் இக்கிளர்ச்சி வலிமையாக நடைபெற்றது.

1801, ஜனவரி 30-ல் மருதுபாண்டியர் தலைமையிலான புரட்சியாளர்கள் விருப்பாட்சியிலிருந்த ஆங்கிலப் படையைத் தாக்கித் தோற்கடித்தனர். பிப்ரவரியின் ஆரம்பத்தில் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்ட கட்டபொம்மன் உறவினர்களை விடுவித்தனர். புரட்சியாளர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டு சிவத்தையா என்பவரை ஆட்சியாளராக நியமித்தனர். கலகக்காரர்கள் வெடிமருந்து, பீரங்கிகளை கடற்கரைப் பகுதியிலுள்ள பரதவர்களிடமிருந்து பெற்றனர். ஊமைத்துரையின் தலைமையில் இயங்கிய கலகப்படையினர் திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டு ஆங்கிலேய இராணுவ நிலைகளை அழித்தனர். தூத்துக்குடி கோட்டை முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டது.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்க கம்பெனி காலின் மெக்காலே என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பியது. இவர் ஒரு பெரிய இராணுவத்தைத் திரட்டி கலகக்காரர்களை எச்சரித்தார். புரட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகளை மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளை மையமாக வைத்து செயல்படத் தொடங்கினர். தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆட்சியாளர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவளித்தனர். கோவில்பட்டிக்கு தளபதி அக்னியூ தலைமையில் அனுப்பப்பட்ட ஆங்கிலப்படை ஒன்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கி அழித்தது. அக்னியூ பிடிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களைக் கொலை செய்தார். இத்தோல்விக்குப் பிறகு

கிளர்ச்சியாளர்கள் திருநெல்வேலியிலிருந்த தங்கள் அனைத்து அரண்களையும் காலி செய்தனர். எனவே ஆங்கிலேயர் தங்கள் கவனத்தை சிவகங்கை மீது திருப்பினர்.

அதிருப்தி அடைந்த தளபதிகளை ஒருங்கிணைத்தும் அவர்களது மாவட்ட மக்களைத் திரட்டியும் மருது பாண்டியரும் அவரது நண்பர்களும் ஒரு வலிமைமிக்க படையைத் திரட்டினர். அவர்கள் முத்துக்கருப்பத் தேவரை இராமநாதபுரத்தின் கிளர்ச்சித்தலைவராகப் பிரகடனப்படுத்தினர். 1801-மே மாதம் சிவகங்கையில் கம்பெனிப் படைக்கும் உள் நாட்டவருக்கும் மோதல் எற்பட்டது. நத்தம், திருப்பத்தூர் போர்களில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்து மதுரை நோக்கி புரட்சிக்காரர்கள் விரைந்தனர். ஊமைத்துரை மதுரைக்கு அருகாமையிலுள்ள பாளையநாட்டைக் கைப்பற்றினார். ஜூன் மாதம் கிளர்ச்சி காவேரிக் கரைக்கும் பரவியது. சின்னமருதுவும், செவத்தையாவும் இணைந்து பல ஆங்கிலேய இராணுவ முகாம்களைத் தகர்த்தனர். இராமநாதபுரத்துக்கும் ஒரு படை அனுப்பப்பட்டு சேதுபதியின் பெரும்பான்மைப் பகுதிகள் விடுவிக்கப்பட்டன. இவ்வாறு தென்னிந்தியப் புரட்சி பல இடங்களுக்கும் பரவத் தொடங்கியது. புரட்சியாளர்கள் எல்லாப் பகுதிகளிலும் பெற்ற வெற்றிச் செய்தி சென்னையைச் சென்றடைந்தது.

**அக்னியூவின் அறிக்கை**

புரட்சியாளர்களுக்கு மக்கள் பேராதரவு அளித்தால் ஆங்கில ஆட்சிக்கு உலைவைத்து விடுமோ என்று அஞ்சும் நிலை ஏற்பட்டது. எனவே 1801, ஜூன் 12-ம் தேதி ஒரு அறிக்கையை அக்னியூ வெளியிட்டார். இதுவே அக்னியூ அறிக்கை எனப்பட்டது. இந்த அறிக்கை மருது சகோதரர்களின் புகழைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கதுடன் வெளியிடப்பட்டது. மருதுபாண்டியர் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. மருது சகோதரர்களுக்கு ஆதரவளிக்கும் மக்களையும் எச்சரித்தது இந்த அறிக்கை. சட்ட ரீதியான ஆட்சியாளரே சிவகங்கையில் அமர்த்தப்படுவர் என்று இந்த அறிக்கை கூறியது.

**மருதுபாண்டியரின்திருச்சிராப்பள்ளிபிரகடனம்**

அக்னியூவின் அறிக்கைக்கு எதிராக மருதுபாண்டியரின் பெயரில் திருச்சிராப்பள்ளி கோட்டையில் பெரிய வாயிற்கதவு ஒன்றில் எதிர் அறிக்கை ஒன்று 1801, ஜூன் 16-ல் ஒட்டப்பட்டது. இதன் மூலம் தென்னிந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதில் கம்பெனியின் கொள்கைகள் கண்டிக்கப்பட்டன. கம்பெனி இந்திய மக்களை நாய்கள் போல நடத்துகிறது. இந்தியாவில் பல இனத்தவர் வாழ்ந்து வருவதால்

அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. மக்கள் அந்நியரான ஆங்கிலேயருக்கு அடிபணிந்து செயல்பட வேண்டியுள்ளது. பரம்பரை மன்னர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும், அதிகாரங்களையும் மீண்டும் பெற்றுக் கொள்வது அவர்கள் உரிமையாகும். அந்நியரை விரட்ட மக்களிடமுள்ள ஒரே ஆயுதம் புரட்சியாகும் என்று திருச்சி பிரகடனத்தில் கூறப்பட்டிருந்தது.

மருதுபாண்டியரின் இந்த அறிக்கை தமிழக அரசியல் வரலாற்றில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராளிகள் அணியிலிருந்து வெளியிடப்பட்ட முதல் வேண்டுகோளாகும். மேலும் இந்த அறிக்கை அக்கால கட்டத்தில் நவாப் தீவு எனப்படும் தென்னிந்திய மக்களின் சமூக அமைப்பையும், அதை ஆண்ட மன்னர்களின் தவறுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல் அரசியல் அறிவற்ற மக்களை எப்படி யெல்லாம் தட்டி எழுப்பி வீர உணர்வு கொள்ளச் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்வதற்காகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் நோக்கம் வீணாகவில்லை. பட்டி தொட்டிகளிளெல்லாம் இருந்த பாமர மக்கள் கூட பங்கு கொள்ளும்படி செய்து அதை மக்களின் போராட்டமாக மாறச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**புரட்சியின் இறுதிக்கட்டம்**

கர்னல் அக்னியூவின் படை தொண்டைமான் படைகளுடன் சேர்ந்து கொண்டு திருப்பத்தூர் கோட்டை, சிவகங்கையிலுள்ள ஒக்கூர் ஆகியவற்றைக் கைப்பற்றிய பின்பு 1801, ஜூலை 30-ம் தேதி மருது சகோதரர்களின் அரண்மனைச் சிறுவயல் கிராமத்தை அடைந்தது. அங்குள்ள அத்தனை வீடுகளும் கொளுத்தப்பட்டன. அங்கிருந்த மக்கள் தெற்கே உள்ள அடர்ந்த காட்டுக்குள் ஓடிவிட்டனர்.

பின்னர் கர்னல் ஸ்டுவர்ட் தலைமையில் பிரான்மலை முற்றுகை டப்பட்டது. இது ஆங்கிலேயர்களுக்குச் சாதகமாக அமைந்து. இதற்கிடையில் ஊமைத்துரையின் தலைமையில் ஒரு படை மதுரைக் கோட்டையைப் பிடிக்கச் சென்று தோல்வியடைந்தது. மற்றொரு படை சின்னமருதுவின் மகன் சின்னத்தம்பியின் தலைமையில் முன்னேறியது. ஆனால் இந்த முன்னேற்றம் ஆங்கிலத் தளபதி பிளாக்பர்ளின் தாக்குதலால் தடைபட்டது.

1801, ஜூலை 21-ல் வெள்ளை மருதுவின் தலைமையிலான படைப்பிரிவு கமுதிக் கோட்டையைத் தாக்கியது. அதனை தளபதி மெக்காலே முறியடித்தார்.

**காளையார்கோவில்முற்றுகை**

அரண்மனைச் சிறுவயலைக் கைப்பற்றிய ஆங்கிலப் படை காளையார்கோவிலை முற்றுகையிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பதினெட்டு அடி உயரமுள்ள கற்கோட்டையால் சூழப்பட்ட அழகு பொருந்திய காளையார் கோவிலில், மருது சகோதரர்களின் தலைமையில் புரட்சியாளர்கள் ஆங்கிலேயர்களின் தாக்குதலை எதிர் நோக்கியிருந்தனர்.

இதனிடையே தங்கள் வசமிருந்த கடலோரப் பகுதிகளை ஆங்கிலேயர்களிடம் மருது சகோதரர்கள் இழந்தனர். ஆங்கிலேயர் மேற்கொண்ட சூழ்ச்சிகளின் விளைவாக மருதுவின் படைப்பிரிவில் இருந்த ஒற்றுமை தகர்க்கப்பட்டது. பலர் படையிலிருந்து விலகி ஓட ஆரம்பித்தனர். பல சிற்றரசர்கள் ஆங்கிலேயரின் சூழ்ச்சிக்கு இறையாகி மருதுவுக்கு எதிராக ஆங்கிலேயர்களிடம் சேர்ந்து கொண்டனர். இந்நிலையில் காளையார்கோவிலுக்குச் செல்லும் ரகசிய வழிகளை அறிந்து வைத்திருந்த முகமது கலீல் என்பவரை தம் வசப்படுத்திக் கொண்டனர் ஆங்கிலேயர்.

**காளையார்கோவில்வீழ்ச்சி**

காளையார் கோவிலுக்குச் செல்லும் வழிகளை துரோகி முகமது கலீல் மூலம் அறிந்து கொண்ட ஆங்கிலேயர் தாக்குதல் நடத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்தனர். காளையார் மீது பன்முனைத் தாக்குதல் 1801, செப்டம்பர் 30-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. தளபதி அக்னிய யூ, இன்னஸ், கர்னல் ஸ்பிரே, மேஜர் ஷெப்பர்ட் பிளாக்பர்ன் ஆகியோர்களின் தலைமையில் நான்கு புறங்களிலிருந்தும் காளையார்கோவில் தாக்கப் பட்டது. விடுதலைப் படையுடன் வெள்ளையர் படை முப்பது நாள் போராட வேண்டியதிருந்தது.

காளையார்கோவில் கோட்டைக்கு உள்ளும் வெளியிலும் கிளர்ச்சிக்காரர்கள் சேர்த்து வைத்திருந்த ஆயுத இருப்புகளை ஆங்கிலப் படை தேடிப்பிடித்து அழித்தது. எஞ்சியிருந்த வீரர்களும் மருது சகோதரரும் சுரங்கப்பாதை வழியாக கோட்டைக்குத் தெற்கே உள்ள காட்டுப் பகுதிக்குள் ஓடிவிட்டனர். மருது சகோதரர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குபரிசு வழங்குவதாக ஆங்கிலேயர் அறிவித்தனர். ப

ஆனால் ஆங்கிலப் படை காட்டுப்பகுதியில் புகுந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது. வழியில் பிடிபட்டவர்களை ஆங்காங்கே தூக்கிலிட்டு மகிழ்ந்தது. வெள்ளை மருதுவின் மகன்களான கருத்த தம்பியும், மோலிக்குட்டித் தம்பியும் தூக்கிலிடப்பட்டனர். இறுதியில் 1801, அக்டோபர் 19-ம் தேதி சோழபுரம் காட்டுப் பகுதியில் பெரிய மருதுவையும், சின்னமருதுவையும் பிடித்தனர் ஆங்கிலேயர். அக்டோபர் 24-ம்

தேதி திருப்பத்தூர் கோட்டையில் மருது சகோதரர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டனர். மற்றும் பல தலைவர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

மருது சகோதரர்களின் இந்த தியாகப் போராட்டம் பாமர மக்களின் உள்ளத்தில் முதன் முதலாக தேசிய உணர்வை விதைத்தது. ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதற்காக நடத்தப்பட்ட போர்களில் மருது சகோதரர்களின் இந்த தென்னிந்தியப் புரட்சியை முதல் சுதந்திரப் போர் என்று வர்ணிக்கிறார் டாக்டர் இராஜய்யன்.

**புரட்சியின் தன்மை**

இப்புரட்சி சரியானபடி திட்டமிட்டு நடத்தப்படாததால் தோல்வியடைந்தது. ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் புரட்சி தோன்றவில்லை. பல இந்திய சிற்றரசர்கள் முக்கியமாக கர்நாடகம், மைசூர், தஞ்சாவூர், ஹைதராபாத், திருவிதாங்கூர் மன்னர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவு அளித்தனர். புரட்சியாளர்கள் கொரில்லா போர் முறையைப் பின்பற்றாததாலும் தோல்வியடைந்தனர். மேலும் கிளர்ச்சியாளர்களிடம் போதுமான செய்தித் தொடர்பு வசதிகள் இருக்கவில்லை. இறுதியாக ஆங்கிலேயரின் ராணுவ வலிமை கிளர்ச்சியின் தோல்விக்கு முக்கிய காரணமாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலேயே 1800-ம் வருட கிளர்ச்சி நடத்தப்பட்டது. பரந்த பகுதிகளுக்குப் பரவ ஒரு மக்கள் இயக்கத்தின் தன்மையைப் பெற்றது. புகழ் பெற்ற தலைவர்கள் முக்கியமாக மருதுபாண்டியர் இப்புரட்சியை முன்னின்று நடத்தினர். இந்தக் கிளர்ச்சியின் போது ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் தாங்களாகவே முன்வந்து கிளர்ச்சியில் பங்கு பெற்றனர். ஆனாலும் கம்பெனியின் இராணுவ வலிமை, சிற்றரசர்களின் ஆதரவு, மூலவளங்கள் ஆகியவற்றினால் கிளர்ச்சி நசுக்கப்பட்டது.

**மருது சகோதரர்கள்**

மருது நடவடிக்கைகள் சகோதரர்களின் புரட்சி கட்டபொம்மன் செய்த புரட்சியின் தொடர்ச்சியே என்று கருதலாம். சிவகங்கைச் சீமை மன்னர்களின் கீழ் பணிபுரிந்த மொக்கைப் பழனி சேர்வைக்காரர் பொன்னாத்தாள் ஆகியோரின் இரு புதல்வர்கள் தான் மருது சகோதரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் மூத்த சகோதரர் பெரிய மருது அல்லது வெள்ள மருது என்றும் இளைய சகோதரர் சின்ன மருது என்றும் அழைக்கப்பட்டனர்.

மருது சகோதரர்கள் இருவரும் பேராற்றலும், போர்த்திறனும் மிக்கவர்களாக விளங்கினர். வாள் வீசிப் போரிடுவதிலும், விளரித்தண்டை எறிந்து விரும்பிய

இலக்கைத் தாக்குவதிலும் சிறந்து விளங்கினர். எதிரிகளின் பலவீனங்களை விரைவாகப் புரிந்து கொள்ளுதல், அவைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுதல், தமக்கு நல்லது என்று நம்புவதை எதிர்விளைவு கருதாது துணிந்து செயலாற்றுதல் போன்ற போற்றுதலுக்குரிய பண்புகள் சின்ன மருதுவிடம் காணப்பட்டன.

சின்னமருது சிறந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அப்போது தமிழகத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைக்கான காரணத்தை அவர் தெளிவாக எடை போட்டார். அரசர்கள் பின்பற்றிய முட்டாள் தனமான கொள்கையைக் கண்டித்தார். மக்களிடையே ஏற்பட்ட உணர்வு, ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை, அதிகாரத்திற்கு கீழ்படியும் மக்களின் மனப்பாங்கு ஆகியவை அரசியல் சீர்கேடுகளுக்கு வழிவகுத்தன என்று கருதினார். ஆங்கிலேயருக்கு ஆதரவளித்த இந்திய அரசர்களைக் கண்டனம் செய்தார். பல இந்திய அரசர்களுக்குக் கடிதம் எழுதி அவர்களின் ஆதரவைத் திரட்டினார். தென்னக அரசுகளின் கூட்டமைப்பு அமைக்கப்படுவதற்கு இவர் முக்கிய காரணமாவார்.